stered as a news paper. பக்கங்கள்: ஐம்பத்திரண்டு விலை: ரூபா10.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்





கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா

ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1428) T.P.-2223565


02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 03 (01.10.2003) புதன்கிழமை இதழ்:01

## இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து

# ...யர்லாந்தில் இரு அமர்வுகளாக ஆலோசனை;

# ...லிகளின் பிரதிநிதிகள் வெள்ளியன்று புறப்படுவர்!

(கிளிநொச்சி)

**...ர்லாந்தின் டப்ளின் நகரில் இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள- ...க்கால நிர்வாக திட்டவரைபு குறித்து ஆராயும் உயர்மட்டக் கலந்துரை ...ல் பங்கேற்பதற்காக, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் ...தலைமையிலான குழுவினர் நாளைமறுநாள் வன்னியிலிருந்து பய ...தை மேற்கொள்ளவுள்ளனர்.**

...நாச்சியிலிருந்து புறப்படும் ...குழுவில் அரசியற்துறைப் ...ாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ...ளபதி கேணல் கருணா, ...செயலகப் பணிப்பாளர் புலித் ...ட்ட ஆலோசகர் உருத்திர ...ஆகியோர் உட்பட பாரிஸ் ...புணர்கள் மாநாட்டில் பங் ...முனைவரும் இடம்பெறவுள்

இவர்கள் டப்ளின் நகரில் ஒரு வாரகாலம் தங்கியிருந்து இடைக் கால நிர்வாக திட்டவரைபு தொடர்பாக அறிஞர்கள், சட்டவல்லுநர் களுடன் இரண்டு அமர்வுகளாக ஆலோசனைகளில் ஈடுபடவுள்ளனர்.

முதல் அமர்வு இரண்டு நாட்கள் இடம்பெறும். இந்த அமர்வில் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள், ஏற்கனவே பாரிஸ் சட்டநிபுணர்கள் மாநாட்டில் பங்கேற்ற நிபுணர் குழுவினருடன் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இதன்பின்னர் இரண்டாவது அமர்வில் ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் சட்டநிபுணர்களுடன் புலிகள் முதன்முறையாகக் கலந்துரையாடல்களை நடத்தவிருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா, இந்தியாவுக்கு பிரதமமந்திரி ரணில் விஜயம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத நடுப்பகுதியில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா செல்லவுள்ளார்.

அமெரிக்கா செல்லும் பிரதமர் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள், சுதந்திர வர்த்தக வலய விஸ்தரிப்புக்கள், திறந்த பொருளாதாரக் கொள்கையின் அனுகூலங்கள், வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் ரணில், புஷ்ஷுடன் பேச்சு வார்த்தை நடத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இம்மாதம் 20 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ள பிரதமர் ரணில் அங்கு பிரதமர் வாஜ்பாயை

(4 ஆம் பக்கம் பார்க்க)

...ண்ணாணம் ...விநாசியர்





## மகளிர் விளையாட்டுப்போட்டியில் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு!

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் நேற்று வன்னியில் சிறப்பாக இடம்பெற்றன. இந்த விளையாட்டுப் போட்டியில் தேசியத் தலைவர் பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்.மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டும், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை மூத்த தளபதி கருணா ஏற்றிவைத்தார். போட்டிகளில் சோதியா படையணி முதலாவது இடத்தையும், அன்பரசி படையணி இரண்டாவது இடத்தையும் , மாலதி படையணி மூன்றாவது இடத்தையும் பெற்றன.

### சிறப்பிதழ் இணைப்பு!

**நமது ஈழநாட்டின் இன்றைய பதிப்பு 52 பக்கங்களுடன் - முதலாம் ஆண்டுச் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. சிறப்பிதழ் இணைப்பைத் தவறாது கேட்டு வாங்குங்கள்.**

### ...ரின் இடைக்கால நிர்வாக யோசனை

## ...ட்டம் கையளித்த பின்னர் ...தானப் பேச்சு ஆரம்பம்!

### ...கை தெரிவிக்கிறார் நோர்வே தூதுவர்

...தமது இடைக்கால நிர் ...சனைப் பிரேரணையைச் ...தும் சமாதானப் பேச்சு ...கள் மீண்டும் ஆரம்பமாகும் ...கூறுகள் தென்படுவதாக ...தூதுவர் தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டச் ...தில் அரசசார்பற்ற பிரதி ... சந்தித்தபோதே அவர் ...தெரிவித்தார்.

...கை இனப்பிரச்சினைக்கு ...ர்வு காண்பதற்கு உதவ நோர்வே முன்வந்துள்ளதென்றும் முதலில் ஜனாதிபதியால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமாதான முயற்சிகள் தொடர்ந்து தாமதமடையக்கூடுமாகையால் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமென்றும் கூறிய அவர்,

நாட்டுக்கு கிடைக்கின்ற நிதியுதவி வடக்குக்கு மாத்திரமல்ல ஏனைய பகுதிகளுக்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதால் ஜே.வி.பியுடன் எப்பாடுபட்டாவது கூட்டணி!

### அமைப்போம் என்கிறார் அனுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலம் மூன்று வருடங்களில் முடிவடைய இருப்பதால், ஏதோவொருவிதத்தில் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பியுடனான கூட்டை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் தேசத்துரோகமென்று எதிர்த்து வருகின்றபோதும், அவர்களைப் புறக் கணிக்கப்போவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவருக்கு அதற்கான வலுவும் இல்லை. இதனால், தடைகள் உள்ளபோதிலும் கூட்டணி அமைக்கும் பணி முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் முன்பு பல கூட்டமைப்பை அமைத்திருக்கிறார்கள். கூட்டணியை அமைத்து ஐக்கிய தேசிய முன்னணியை தோற்கடிப்பதே தமது இறுதிநோக்கமென்றும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அர்த்தனகலையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

## ...நொச்சியில் மனித எலும்புக்கூடுகள்; ...கழ்வுவேலையின்போது கண்டுபிடிப்பு!

(கிளிநொச்சி)

...நொச்சி மாவட்ட பிரதி ... சுகாதாரசேவைப் பணி ...ணாகத்தில் கட்டடப் பணி ...கொள்ளும் பொருட்டு, மண் ... வேலைகள் இடம்பெற்ற ..., கட்டட இடிபாடுகளுக்குள் ... சிதைவுற்ற நிலையில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு மண்ணகழ்வு நடந்து கொண்டிருந்தபோது இந்த வைத்திய சாலையின் சேதமடைந்த கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிதைவுற்ற நிலையில் தடயப் பொருட்களுடன் இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

பெண்கள் அணியும் சிவப்புநிற மேலங்கி, உள்ளாடை மற்றும் வாய்ப்பகுதி கட்டிய நிலையில் உரப்பை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற தமிழீழ காவற்துறையினர் தடயங்களைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

## பேச்சில் முஸ்லிம்களுக்கும் சமபங்கு; புதிய அமெரிக்க தூதரிடம் வலியுறுத்து!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களும் சமபங்காளிகளாக இருக்க வேண்டும். எந்தவிதமான அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப் படும்போதும் இந்த நாட்டில் வாழும் சகல இனைக்களும் பயனடையக் கூடிய விதத்தில் அது அமைய வேண்டும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் புதிய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்ஸ்ரீட்டைச் சந்தித்த போது, இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாக எடுத்துக் காட்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பற்றி கவலை தெரிவித்த அமைச்சர், சிலர் கூறுவதைப்போல இங்கு, முஸ்லிம்கள் மத்தியில் ஆயுதக் குழுக்கள் இருக்கின்றதென்ற கூற்றையும் மறுத்தார்.

இவற்றைக கேட்டறிந்த அமெரிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவ....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 012360290 012360291



எக்ஸ்போஎயார்

வான் வெளியில்

# அம்பாறையில் தமிழ்-முஸ்லிம் பிணக்கு விடுதலைப் புலிகளால் தீர்த்துவைப்பு!

அக்கரைப்பற்று நகரில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலை விடுதலைப் புலிகளின் தலையீட்டினால் சுமுகநிலைக்கு கொண்டுவரப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது. அக்கரைப்பற்று நகரிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தைச் சுற்றி வட்டவடிமாக அமைக்கப்பட்ட சீமெந்து தரையை - வீதி திருத்த வேலை செய்யும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அகற்ற வேண்டுமெனக் கூறினர்.

கடந்த ஞாயிறு இரவு அந்தப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள்- எவருக்கும் தெரியாமல், இந்த சீமெந்துத் தரையை உடைத்துள்ளனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இது தொடர்பாக அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினருக்கு தெரியப்படுத்தினர்.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று, முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடிய பின்னர், நிலைமை சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்த பிரதேசத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (07)

## பல்கலை.முதலாம் வருட மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த சில தினங்களில் சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற முரண்பாடுகள் காரணமாக, கடந்த இரு தினங்களாக கனிஷ்ட பிரிவு மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமூகமளிப்பது குறைந்துள்ளதாகவும் எனவே, இவர்களை வழமைபோல் விரிவுரைகளுக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், முதலாம் வருட மாணவர்களின் - இரண்டாம் பருவம் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் முடிவடைவதால், முதலாம் வருட மாணவர்களை வழமையான விரிவுரைகளுக்கு சமூகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சிறிதரன் கேட்டுள்ளார்.

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் கால் இறுதி ஆட்டம் இன்று ஆரம்பம்

வலிகாமம் கல்விவலயம் நடத்தி வரும் பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின், கால் இறுதியாட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டிகள் யாவும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், இன்று காலை 8.30 மணிக்கு 16 வயதிற்குட்பட்ட பிரிவில் - மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மோதவுள்ளது.

18 வயதுப் பிரிவில் - கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மோதவுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில், 16 வயதிற்குட்பட்ட பிரிவில்- அளவெட்டி அருணோதயக் கல்லூரியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும், 18 வயதுக் குட்பட்ட பிரிவில் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள - 18 வயதிற்குட்பட்ட பிரிவில் - மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

## சிறுவர்கள் - முதியோர்கள் தினவிழா

(சுதுமலை)

சிறுவர் - முதியோர் தினநாளான இன்று - கியுடெக் நிறுவன உயிர்ப்பூட்டல் குழுவினரால் சிறுவர் முதியோர் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

சுதுமலை, புதுமடம், சாவற்கட்டு ஆகிய இடங்களில் உள்ள சிறுவர் முதியோர் இன்று சுதுமலை யுவசக்தி சனசமூக நிலைய முன்றலில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

உயிர்ப்பூட்டல் குழு ஊக்குவிப்பாளர் சுபோதினி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் சிறுவர்கள், முதியோர்களுக்கு மலர்மாலை அணிவித்தல் நிகழ்வும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பற்தூரிகைகள், பற்பசை அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் உள்ள ஐந்து பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த, 104 மாணவர்களுக்கு - கடந்த புதன்கிழமை சென். அன்ரனீஸ் பாலர் பாடசாலையில் வைத்து பற்தூரிகை, பற்பசை என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஊர்காவற்துறை சுகாதார வைத்தியப் பொறுப்பதிகாரி இராஜதுரை மற்றும் நெடுந்தீவுப் பொதுச் சுகாதார பரிசோதகர் க.அருந்தவராசா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கியதுடன், செயல்முறை விளக்கமும் அழிக்கப்பட்டது.

இதனை அன்பளிப்பாக வழங்கிய நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பதில் பொது முகாமையாளர், கோபாலப்பிள்ளை வைபவரீதியாக மாணவர்களுக்கு வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் - பெற்றோர்களும், பாலர் பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு தலைமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர். தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி பட்டறை இன்று, யாழ்.கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கியின் பிராந்திய தலைமையகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

வாழ்வியல், ஆளுமை விருத்தி, மாணவர் சேமிப்புப் பழக்கமும், பாலியல் நலம், தலைமைத்துவம், தொழில வழிகாட்டல் ஆகிய விடயங்களில, துறை சார்ந்தவர்களின் உரையும் இந்த நிகழ்வில் இடம்பெறவுள்ளது.

# வட-கிழக்கு மாகாணங்களில் சர்வதேச சிறுவர் தின விழா

சர்வதேச சிறுவர் தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி சிறுவர்களைக் கௌரவிக்கவுள்ளது.

இதன்படி, வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி சிறுவர்களின் நிகழ்வானது, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த, முன்பள்ளிச் சிறுவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பங்குபற்றும் சிறுவர்கள் வேம்படி மகளிர் கல்லூரி சந்தியிலிருந்து, நிகழ்வு இடம்பெறும் இடமான வீரசிங்கம் மண்டபத்திற்கு, ஊர்வலமாக அழைத்து வரப்படுவர். இந்த நிகழ்விற்கு அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஐந்து மாவட்டங்களிலிருந்து வரும் பெற்றோர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை - கிழக்கு மாகாணத்திற்கான சிறுவர் தின நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள முன்பள்ளி சிறார்களை ஒருங்கிணைத்து சிறுவர்தின விழா முதன்முதலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை - வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, இன்று மானிப்பாய் மகளிர் கல்லூரி மைதானத்தில், பாடசாலை அதிபர் தலைமையில் மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் - சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் தனபாலசிங்கம் பிரதமவிருந்தினராகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை, சங்கானை மருத்துவமனையை சேர்ந்த விக்கினேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (91)

# போக்கறுப்பு - கேவில் வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள கேவில் கிராமத்தில் வசிக்கின்ற மக்களின் போக்குவரத்து பாதை போக்கறுப்பு சந்தியிலிருந்து கேவில் வரையான 3 கி.மீற்றர் பாதை மிக மோசமான நிலையிலுள்ளதால் கேவில் மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

130 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்கின்றனர். இவர்கள் பனை வளத்தையும், விவசாயத்தையும் முக்கிய தொழிலாக கொண்டுள்ளதால் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கேவில் கிராமத்தில் திலீபன் மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. சாதாரண நோய்களுக்கே அந்த நிலையத்தில் சிகிச்சையளிக்க முடியும். ஆனால், மேலதிக சிகிச்சையளிப்பதற்கு யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சி கொண்டு செல்லவேண்டுமாயின் கேவிலிலிருந்து போக்கறுப்புச் சந்தி வரை 3 கி.மீ. கால் நடையாகவே வந்து, மாமுனை - சுண்டிக்குளம் பாதையை வந்தடைந்துதான், தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ளமுடியும். இதற்குள் நோயாளி மிகமோசமான நிலையையும் அடைவதுண்டு.

ஆகவே, இந்த மூன்று கி.மீ. நீள வீதியை எவராவது செப்பனிட உதவ மாட்டார்களா என்று இங்குள்ள மக்கள் அங்கலாய்பபு வெளியிட்டுள்ளனர். (17)


## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

கனடாவில் நிரந்தர பிரஜாவுரிமையுடன் வசிக்கும் பல்கலைக்கழக மாணவிக்கு பெற்றோர் 31-35 வயதிற்கு இடைப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். மணமகன் பொறியியலாளர் அல்லது கணக்காளராக இருப்பது விரும்பத்தக்கது. தொடர்புக்கு:- S.சிவநாதன், மே/பா K.செல்வகுலசிங்கம், புதுவளவு வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (494)

### வீடு விற்பனைக்கு

243, கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- S.சிவநாதன் மே/பா செல்வகுலசிங்கம், புதுவளவு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (495)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய்,ரம்பா, குஷ்பு நடித்த

மின்சாரக் கண்ணா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) (சி-1618)

STRATEGIC COMMAND

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்

சத்தியராஜ், விஜயலட்சுமி, நடித்த

ரொம்ச்சந்திரா

நாளை முதல் பிரசாந், கிரண் நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே) (சி-1619)

## நல்லூர் பிரதேச சபை

### ஞானபண்டித வித்தியாசாலை வீதி சந்தைக் கடைகள் கேள்வி அறிவித்தல் வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் படிவம் வழங்கும் திறக்கும் காலஎல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது (வாடகைக் காலம் நவம்பர் மாதம் முதல்)

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை 23.09.2003 ஆம் திகதி ஈழநாடு, உதயன், தினக்குரல் பத்திரிகையிலும், நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தின் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் விநியோகம் | 07.10.2003 திங்கட்கிழமை 12 மணி வரை. |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி | 08.10.2003 செவ்வாய்க்கிழமை 10 மணி வரை. |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | 08.10.2003 செவ்வாய்க்கிழமை 2 மணி வரை. |

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்
நல்லூர் பிரதேசசபை.

30.09.2003 (சி-1624)

## முக்கிய அறிவித்தல்

### வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,நீர்வேலி

மேற்படி சங்கத்தில் 31.05.2003 இற்கான கிராமிய வங்கிகளின் மீதிகளை கணக்காய்வாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், குறிப்பிட்ட கிராமிய வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்போர் பின்வரும் திகதிகளில் நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய் கிராமிய வங்கிகளில் கையேடுகளை சமர்ப்பித்து கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்ப டுகின்றீர்கள், வழமைக்கு மாறாக இந்நடவடிக்கை மூன்று வங்கிகளிலும் சமகாலத்தில் இடம்பெறுவதைக் கவனத்தில் கொள்ளவும்.

| காலம் | | நேரம் |
|---|---|---|
| 06.10.2003 | திங்கள் | 9.00- 3.30 |
| 07.10.2003 | செவ்வாய் | 9.00 -3.30 |
| 08.10.2003 | புதன் | 9.00 -3.30 |
| 10.10.2003 | வெள்ளி | 9.00 -3.30 |

அ.க.த.கிருஷ்ணராசா, தலைவர். (சி-1600) த.தவலீலா, கணக்காய்வாளர்.



# அமெரிக்க இராணுவ அணி மீது பக்தாத்தில் குண்டு தாக்குதல்!

## ஒரு சிப்பாய் பலி; இருவர் காயம்!

(பக்தாத்)

பக்தாத்தின் தென்பகுதியில் - கபனியா நகரில் அமெரிக்கப் படையின் தொடர் அணி ஒன்றின் மீது மறைந்திருந்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலிலும், துப்பாக்கிச் சூட்டிலும் ஒரு அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் புதிய அரசியல் தொடர்பான அதிகாரியாக நியமிக்கப்பட்ட, ஈராக்கிய 'ஜலால் உல்டின் அல் சாஹிர்' காயங்கள் எதுவும் இன்றித் தப்பித்துக்கொண்டார். இவர் ஈராக்கில் அமெரிக்காவால் அமைக்கப்பட்ட, ஈராக்கிய அரசியல் நிர்வாகத்தின் தாக்குதலுக்கு உட்பட்ட இரண்டாவது அதிகாரி ஆவார்.

எதிர்வரும் திங்கட்கிழமை திட்டமிட்டவாறு நடைபெறும் அரசியல் அமைப்பு தொடர்பான கூட்டத்தில், சாஹிர் பங்குகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



வேறொரு சம்பவத்தில் - ஹிர்குக்குவின் தென்பகுதியில், குழந்தையொன்று அமெரிக்கப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், 25 வயதுடைய ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் - சதாம் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றில் நிகழ்ந்ததாக, ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## உலக நோக்கு

## ஆப்கானில் தாக்குதல்; அமெரிக்க சிப்பாய் பலி!

ஆப்கானிஸ்தானில் - பக்ரிதா மாகாணத்தின் சிகின் நகரில் நடைபெற்ற தாக்குதலில் - அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாவும் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் - கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இதில் இரு தலிபான் போராளிகள் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அண்மைக் காலத்தில் மீண்டும் அரசைக் கைப்பற்றும் நோக்கில், அமெரிக்கப் படைகளுக்கு எதிராக, தலிபான் முஸ்லிம் தீவிரவாதிகள் போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

## புலனாய்வுத்துறை அலுவலகத்தில் அதிகாரி நடத்திய துப்பாக்கிச் சூடு!

தென்கிழக்கு சேபிய நகரான நிஷ்ஷில் - சேபிய புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர், தனது கூட்டாளிகள் நால்வரைத் தனது புலனாய்வுக் காரியாலயத்தில் கொலை செய்ததுடன் மூவரை காயப்படுத்தியுமுள்ளார். இறந்த அதிகாரிகளில் ஒருவர் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 1999 ஆம் ஆண்டு சேபியப் படைகள் வெளியேறும் வரை, பிரிஸ்ரினாவில் உள்ள புலனாய்வு அலுவலகத்தில் கடமைபுரிந்ததாகவும், உயர் மட்டத்தில் உள்ள புலனாய்வு அதிகாரி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானின் ஜனாதிபதி முஷாரப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்

## அல் - கொய்டா அனுப்பிய வீடியோ பிரதியில் தெரிவிப்பு

அல் - கொய்டா இயக்கத்தின் துணைத் தலைவர், ஜமன்-அல் - சவாரியினால் அனுப்பப்பட்டதாகக் கருதப்படும் வீடியோப் பிரதியொன்றில், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வெஷ் முஷாரப் பதவியில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பயமுறுத்தலால், அல் - கொய்டா அமைப்பிற்கெதிரான தமது பிரசாரத்தை நிறுத்திவிட முடியாதென, முஷாரப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, அராபிய தொலைக்காட்சியில் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டிருந்தது. இஸ்லாமிய மதத்தை பாகிஸ்தான் ஜனாதிபதி வஞ்சித்து விட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாகிஸ்தான் - பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடி வருவதாகவும், அல் - கொய்டா ஒரு பயங்கரவாத இயக்கம் என்பதால், தாம் தொடர்ந்து அதற்கெதிராகப் போராடவுள்ளதாகவும் - பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் மசூன்கான் தெரிவித்தார். இதனிடையே பாகிஸ்தானின் எதிர்க்கட்சி, அல்-கொய்டா அமைப்பிற்கு, பாகிஸ்தானின் உள் விவகாரங்களில் தலை யிடுவதற்கு உரிமையில்லையெனத் தெரிவித்திருந்தது.



# ஈராக்கிலுள்ள ஐ.நா. பணியாளர்கள் எண்ணிக்கை குறைக்க நடவடிக்கை!



(பக்தாத்)

ஈராக்கில் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச பணியாளர்களின் எண்ணிக்கையை, மேலும் குறைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 50 இற்குக் குறைவான பணியாளர்களைத் தவிர மிகுதிப் பேரை வெளியேற்றுவதற்கு, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்கு செய்துவருகிறது.

முன்னர் 600 இற்கும் மேற்பட்ட ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் கடமையாற்றியிருந்தனர். ஆகஸ்ட் 19 ஆம் திகதி பக்தாத்தில், ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பில், 22 பேர்வரை கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் உணவு, எரிசக்தி தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி 'பெரோன் செவன்' தெரிவிக்கும் போது, தமது பணிகளை மீண்டும் ஈராக்கில் உள்ள அமெரிக்க அதிகாரிகளிடம் கையளிக்கவுள்ளதாகவும், ஆனால் தொடரும் வன்முறையும், ஐக்கிய நாடுகளின் பணியாளர்களின் பற்றாக்குறையும், உடன் செயற்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், நவம்பர் 21 உடன் தமது திட்டங்களை நிறுத்திவிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் - அரேபிய நாடுகள் அதிகாரங்களை மீண்டும ஈராக்கிடம் வழங்கிவிடுமாறு அறிவித்துள்ளதும், தமது வெளியேற்றத்துக்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயத்தில் சென்ற வாரம் நடைபெற்ற இரண்டாவது குண்டுத் தாக்குதலின் பின், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர், மேலும் எண்ணிக்கையைப் குறைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்.

## ஊர்சுற்றி எழுதுவது

வவுனியாவில் நடந்த பொங்குதமிழ் நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து, தங்கள் மனஎழுச்சியை உணர்வுபூர்வமாக எடுத்துக் காட்டினர்.

இந்த பொங்குதமிழ் நிகழ்ச்சியை நடத்தவிடாமல் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது வெற்றியளிக்காது என்று தெரிந்தும், பல்வேறு காரணங்கள் சொல்லிப் பலதரப்பினரையும் இதில் கலந்து கொள்ளாமல் தடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது. இதுவும் நிறைவேறாது என்று தெரிந்தது. இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறக்கூடாது என்பதில், சில சிங்கள, ஆங்கில ஊடகங்களும் தங்கள் பங்களிப்பைச் செய்தன.

ஆனால், பொங்குதமிழ் நிகழ்ச்சி மிகப்பெரிய வெற்றியாக நிறைவெய்தியது. இந்த நிகழ்ச்சி முடிந்த பின் ஒரு ஆங்கிலத் தினசரி வெளியிட்ட செய்தியில், வவுனியாவில் நடந்த புலிகளின் பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆட்களே வரவில்லை. பாடசாலைப் பிள்ளைகளைத்தான் கொண்டுவந்து இறக்கினார்கள். அவர்களும் விழா முடிவதற்குமுன் நழுவிச் சென்று விட்டனர் என்று எழுதியது. ஆங்கிலப் பத்திரிகையே இப்படிச் செய்தி வெளியிட்டதென்றால், அதன் சகோதரப் பத்திரிகையான சிங்களப் பத்திரிகை எப்படிச் செய்திகளை வெளியிட்டிருக்குமென்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்த ஆங்கிலத் தினசரியும், மற்றொரு ஆங்கிலத் தினசரியும் - கிழக்கிலிருந்து கிடைக்கும் தீயசெய்திகளெல்லாவற்றையும் விடுதலைப் புலிகளுடன் முடிச்சுப்போட்டே வெளியிட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்று, இன்னமும் இவை சிங்கள மக்களுக்குக் காட்டவே முயற்சி செய்கின்றன. இந்தப் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது - ஆட்கடத்தல், கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு வேலையே இல்லையென்று நினைக்கத்தோன்றும்!

இரண்டொரு மாதத்துக்கு முன்னர்கூட, ரூபவாஹினியில் மூன்று நான்கு தினங்கள் ஒரு நாடகம் ஒளிபரப்பானது. தமிழ்ப் போராளிகள் (புலிகள்) ஒரு குடும்பப்பெண்ணை அவரது பெரியவன் விரும்புவதாக கூட்டிச்செல்ல முற்படுகிறான். அவள் மறுக்கவே அவளை, அவளது குழந்தை முன்பாக சுட்டுக்கொன்று விட்டுப் போவதாகக் காட்டினார்கள். இது முன்பு ஒளிபரப்பப்பட்ட நாடகத்தின் மறு ஒளிபரப்பாம். சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட நாடகத்தின் தமிழ் வடிவம் தமிழில் ஒளிபரப்பப்பட்டது.

ரூபவாஹினியிலேயே இது ஒளிபரப்பப்பட்டதென்றால், மற்றைய ஊடகங்கள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

வடக்கிலும் - கிழக்கிலும் உள்ள உண்மை நிலைமைகளை மறைத்து, சிங்கள மக்களை இருட்டில் வைத்திருக்கவே சிங்கள, ஆங்கில ஊடகங்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றன. இதே ஊடகங்கள் - ஐக்கிய இலங்கையில் மூவின மக்களும் நாட்டில் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் வாழ வேண்டுமென்று அறிவுரையும் கூறுகின்றன.

சாத்வீகப் போராட்டத்தை வன்முறைகளுக்கு வித்திடும் போராட்டமென்றும், சமஷ்டியைப் பிரிவினையென்றும், அரசியல்வாதிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்து நாட்டில் இனவெறியைக் கிளப்பிவிட்டதில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கே பெரும் பங்குண்டு.

1958 ஆம் ஆண்டில் இனக்கலகம் தொடங்கியதும், பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க - கலகத்தை அடக்குவதற்கோ, அகதிகளான தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுக்கவோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதேன்றே அவர் அறிக்கைவிட்டுக் கொண்டிருந்தார். ஏரிக்கரைப் பத்திரிகைகள், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்துக்கொண்டிருந்தன. அப்பொழுது வெளிவந்துகொண்டிருந்த மோர்னிங் ரைம்ஸ் (Morning times) என்ற ஆங்கிலத் தினசரியின் ஆசிரியர், அதன் முதல் பக்கத்தில் ஒரு தலையங்கம் எழுதினார்.

ரைம்ஸ் கட்டடத்தின், பத்திரிகை ஆசிரிய பீடம் அமைந்துள்ள இரண்டாவது மாடியிலிருந்து கொழும்புக் கோட்டையின் கண்ணுக்குத் தெரிந்த இடங்களில் தமிழர் பட்ட அவலங்களை, அவர் இந்தத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டி இதுதானா கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிலைமை? என்று கேட்டிருந்தார். இதன்பின் பண்டாரநாயக்க சிறிது யோசிக்கத் தொடங்கினார்.

இதன்பின் சிறிது காலத்தில் அந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தமுடியாமல் நிறுத்தப்பட்டது.

இனவாதத்தைக் கிளப்பிய பத்திரிகைகளே தொடர்ந்தும் வெளிவந்தன.

இன்றும் இனவாதத்தைக் கிளப்பி - அரசியலிலும் ஊடகத்துறையிலும் வெற்றிபெறலாம் என்று இனவெறியர்களும், பதவிவெறியர்களும், அதிகாரவெறியர்களும் நினைக்கலாம்.

ஆனால், இது 1958 அல்லவென்று நினைவூட்டுகிறார் அனுபவசாலியான எனது நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு விவகாரம்; ஜனாதிபதி-அரசுக்கிடையில் முறுகல்!

## சட்டத்திருத்தமும் தட்டிக்கழிப்பு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதிக்கும், அரசுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழு குறித்து - ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆணைக் குழுவின் புதிய அங்கத்தவர் ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுங்கள். பின்னர் சட்டத்திருத்தங்கள் குறித்து ஆலோசிக்கலாம் என, ஜனாதிபதி கூறிவருகின்றார். அதே வேளை, சட்ட திருத்த மூலம் மட்டுமே ஆணைக்குழு செயற்படமுடியும் என அரசாங்கம் கூறுகின்றது.

ஆணைக்குழுவின் அங்கத்தவர் என்.அபயசேகரா - கடந்த பெப்ரவரி மாதம் மரணமடைந்ததையடுத்து, ஆணைக்குழு செயலிழந்துள்ளது.

இதுவரை 12 அமைச்சர்களின் நடவடிக்கை தொடர்பாக, லஞ்ச ஊழல் தடுப்பு அணைக்குழுவிற்கு புகார்கள் கிடைத்துள்ளன. ஆனால், ஆணைக்குழு செயற்படாத காரணத்தினால், அந்தப் புகார்கள் குறித்து ஆணைக்குழுவால் விசாரணை நடத்த முடியவில்லை.

ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர் ஒருவரை நியமிக்காமல், அரசாங்கம் அமைச்சர்கள் மீதான புகார்களை மூடிமறைக்க முற்படுகின்றது என, ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேள்ள, லஞ்சஊழல் ஆணைக்குழுச் சட்டத்தில் - அவசரமாகத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எடுத்த முயற்சிகள், ஜனாதிபதியின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், 1994 ஆம் ஆண்டு லஞ்சஊழல் ஆணைக் குழு பற்றிய சட்டமூலத் திருத்தத்தை அவசியத் தேவையாகக் கருதி, ஆலோசனைக்காக 2003 செப்ரெம்பர் 24 ஆம் திகதி அமைச்சரவைச் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் தொகையை மூன்றிலிருந்து ஐந்தாக அதிகரிப்பதற்குக் கொண்டு வரப்பட்ட சட்டமூலத் திருத்தம் யதார்த்தபூர்வமானது அல்ல என்பதையும், அதுபற்றி தங்களுடன் முதலில் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி பிரதமருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத் திருத்தங்கள் தொடர்பாக, நாடாளுமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் மின்னல் தாக்கம் அதிகரிக்குமென எச்சரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மின்னலின் தாக்கம் இடம்பெறலாமென, வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடகீழ் பருவப் பெயர்ச்சிக்காலம் காரணமாக, இந்த மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கலாமென, வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை - மின்னலின் தாக்கத்திற்குள்ளாகி இதுவரை இருவர் இறந்துள்ளதாகவும், எனவே மக்களை பாதுகாப்பாக இருக்குமாறும், வானிலை அவதான நிலையம் கேட்டுள்ளது.

மரங்களின் கீழேயோ, வெளியான இடங்களிலோ உயர்ந்த இடங்களிலோ ஒருவரையும் நிற்கவேண்டாமென்றும் - வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை மின்னலின் தாக்கம் இருக்குமென்றும், 4 மணி தொடக்கம் 6 மணிவரை மின்னலின் தாக்கம் அதிகமாக இருக்கலாமென்றும், வானிலை அவதானநிலையம் அறிவித்துள்ளது.

# ஜெயலலிதாவைச் சந்திக்கும் மிலிந்தவின் முயற்சி தோல்வி!

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்திக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் முயற்சி கைகூடவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அமைச்சர் மிலிந்த மொறகொட- அமெரிக்காவிற்குச் சென்று, பின்னர் இலங்கைக்குத் திரும்பும் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்கும் முயற்சியை சில தினங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருந்தார். இந்த முயற்சியே தற்போது கைகூடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திப்பதற்கு, அமைச்சர் மிலிந்த மொறகொட ஏற்கனவே நான்கு தடவைகள் முயற்சி செய்துள்ளார்.

தற்போது அமைச்சர் மிலிந்த மொறகொட செய்த முயற்சியானது, அவரின் ஐந்தாவது முயற்சியாகும்.

இலங்கைக்கும் -இந்தியாவுக்கும் இடையே பாலம் ஒன்றினை அமைத்துக் கொள்வது இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பான விவகாரம் ஆகிய இரு விடயங்கள் தொடர்பாக ஜெயலலிதாவுடன், அமைச்சர் மிலிந்தமொறகொட பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்தார்.

கடந்த காலங்களில் முதலமைச்சர் ஜெயலலிதா இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகக் கடும்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றார். மேற்படி இரு நாடுகளுக்கும் பாலம் அமைப்பது தொடர்பாக ஜெயலலிதா கடும் எதிர்ப்பையே தெரிவித்து வருகின்றார்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் பாலம் அமைக்கப்பட்டால், இலங்கையிலிருந்து விடுதலைப் புலிகள் இந்தியாவிற்கு வருவது இலகுவாக்கப்படும். புலிகளின் ஊடுருவல் தமிழகத்தில் அதிகரிக்கலாம் என்பதோடு, இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வருவோரின் எண்ணிக்கை பெருகிவிடும் என்பதும், ஜெயலலிதா மிலிந்த மொறகொடவோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தமைக்குரிய காரணங்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்க...

சந்திப்பதுடன், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகவும், இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகள் தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்துவார்.

### அயர்லாந்தில்...

பதாகவும் தெரியவருகிறது.

இந்தக் கலந்துரையாடலில் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவையும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும், கேட்டவுனில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடல்களை அடுத்து புலிகள் தரப்பின் இடைக்கால நிர்வாக திட்டவரைபு யோசனைகள் இம்மாத நடுப்பகுதியில் அரசாங்கத்திடம் - நோர்வே அரசாங்கத்தின் மூலம் கையளிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை ஒன்று கூடுமாறு அழைப்பு

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் வேலைவாய்ப்புத் தொடர்பாக, யாழ்.அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதால், இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், பிறவுண் வீதியிலுள்ள பிறைற்மன் கல்வி நிலையத்தில், அனைத்து டிப்ளோமாதாரிகளையும், கற்கை நெறியிலுள்ள - முதலாம், இரண்டாம் வருட மாணவர்களையும் சமூகமளிக்குமாறு - டிப்ளோமா தாரிகளின் சங்கத் தலைவர் ப.தர்மகுமரன் கேட்டுள்ளார்.

அத்துடன், அனைத்து டிப்ளோமா தாரிகளின் பதிவுகளும், இன்றைய தினம் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## சர்வதேச முதியோர் தினம்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, இன்று நீராவியடி சைவ பரிபாலனசபை மண்டபத்தில், வண்ணார் பண்ணை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால், காலை ஒன்பது மணி முதல் முதியோருக்கான சலப் பரிசோதனையும்,உயர்குருதியமுக்கப் பரிசோதனையும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, "முதியோரைக் கனம் பண்ணுவோம்" எனும் தலைப்பில் கருத்துரையும் இடம்பெறும்.

## அடிக்கல் நாட்டும் விழா!

புத்தூர் மத்திய மருந்தகத்துக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டும் விழா, இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை, வைத்திய அதிகாரி முத்துக்குமாரசாமி நாட்டிவைப்பார்.

புத்தூர் கிழக்கில் அமைந்துள்ள இந்த மருந்தகம் இடியும் நிலையில் இருப்பதையடுத்து, இந்த வைத்திய சாலையின் அபிவிருத்திச்சங்கம் நிதி சேகரித்தமை குறிப்பிடத்தக்கது (110)

# முச்சக்கரவண்டி உரிமையாளர் வேலைநிறுத்தத்துக்கு முஸ்தீபு!

(கொழும்பு)

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பஸ்சேவையின் தலைவர் கெமுனு விஜயரத்ன முச்சக்கர வண்டிகளின் பாவனையால் வீதி விபத்துக்கள் அதிகரித்துவருவதாகவும், தனியார் பஸ்களின் வருமானம் குறைவடைந்துவருவதாகவும் விடுத்த - அறிக்கையினை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கோரியே, இரத்தினபுரி முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் போராட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் கெமுனு விஜேயரத்ன தனது கருத்தை வாபஸ் பெறவில்லையானால், இலங்கைத்தீவு தழுவியதாக முச்சக்கரவண்டி உரிமையாளர் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - தனியார் பஸ்களின் உரிமையாளர் சங்கத் தலைவர் தன்னுடைய கருத்தை வாபஸ் பெறப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். (01)

# இராணுவ ட்ரக் மோதியதில் பதின்மூன்று பேர் படுகாயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளிப் பகுதியில், நேற்றுமுன்தினம் இரவு இராணுவ ட்ரக் வண்டி மோதியதில் 13 பேர் படுகாயமடைந்தனர்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் குடும்பமொன்று சம்மாந்துறைக்கு சென்று திரும்பி வருகையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் - 5 குழந்தைகளும், 3 ஆண்களும், 5 பெண்களும் அடங்குவர்.

இராணுவச் சாரதியில்லாமல், படைச்சிப்பாய் ஒருவர் வாகனத்தை ஓட்டிச்சென்றதாலேயே, இந்த விபத்து இடம்பெற்றது.

படுகாயமடைந்த அனைவரும், மட்டக்களப்பு - வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். (07)

# பொ.ஐ.மு அரசை நிறுவுவதற்கு ஏற்றவகையில் செயற்படுங்கள்

## ஜனாதிபதி சந்திரிகா பணிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து கவிழ்த்து, பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய அரசாங்கத்தை அமைக்கும் வகையில் செயற்படுமாறு, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

நேற்று தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை அழைத்து, ஜனாதிபதி மாளிகையில் நடத்திய கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுததுள்ளார்

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசை கவிழ்ப்பது, தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் கொழும்பில் முக்கியமான வீதிகளை மறித்து, பாரிய பேரணிகளை நடத்துவது என்றும், இரு பிரதான இடங்களில் அரசாங்கத்துக்கு எதிரான பொதுக் கூட்டங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## மாணவர்கள் மோதல்

கொழும்பு சட்டக் கல்லூரியில் இரு மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் 20 பேர் காயமடைந்தனர். அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்களான மாணவர்குழுவுக்கும், அரசியல் கட்சியைச் சாராத மாணவர்குழுவுக்குமிடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதமே கைகலப்பில் முடிவடைந்தது. (01)

### பேச்சில்...

கத் தூதுவர், இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை விரும்பும் அமெரிக்கா, இந்த நாட்டு நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்தார்.






## மஹஜன சம்பத பெறுபேறுகள்

| சீட்டிழுப்பு இல: | 1551 | திகதி: | 30.09.2003 | | | |
|---|---|---|---|---|---|---|
| வெற்றி இலக்கங்கள் | | | | | | |
| L | 1 | 9 | 8 | 6 | 3 | 7 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

முதலாம்
ஆண்டு
சிறப்பிதழ்



01.10.2003

முழுக்குடும்பத்திற்கும் ஏற்ற முழுமையான முதல்தர நாளிதழ்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி*
*எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## கடந்து வந்த தடங்களில்...

நமது ஈழநாட்டின் ஓராண்டு நிறைவு நாள் இன்று. புத்தெழுச்சியூட்டும் இந்த நாளில் கடந்து சென்ற 364 நாட்களை நினைக்கப் பார்க்கும் போது பூரிப்பாகவும், பெருமிதமாகவும் இருக்கிறது. தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ் என்று கம்பீரமாகவும், பெருமையாகவும் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டு, மக்களுடனான தனது ஊடக உறவுகளை ஆரம்பித்தபோது, எமது நம்பிக்கையானது - மக்கள் ஆதரவு என்ற ஒரே சக்தியின் மீதே மையங்கொண்டிருந்தது ஏற்கனவே பல்வேறு இலக்குகளை மைய நோக்காகக் கொண்ட தமிழ்த் தினசரிகள் மக்களிடையே நீண்டகாலமாகவே தமது தேவையை விஸ்தாரமாக நிலைப்படுத்தியுள்ள நிலையில், நமது ஈழநாட்டின் வருகையானது எத்தகைய வரவேற்பைப் பெறும் அல்லது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற எண்ணமும் அந்தவேளையில் எழவே செய்தது.

ஆனாலும், பாரம்பரிய பெருமைகளை அதற்கேயுரிய தனித்துத்துவத்துடன் பேணிப் பாதுகாக்கும் அதேவேளை - புதியனவற்றையும், புதுமையையும், அறிவு பூர்வமான சிந்தனையுடன் வரவேற்கும் மனோபாவம்கொண்ட தமிழ் மக்கள் "நமது ஈழநாட்டின்" ஊடக உலகப் பிரவேசத்தைப் பெருவிருப்புடன் அங்கீகரிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எமக்குள் எழாமலில்லை.

அந்த உணர்வே, நமது ஈழநாட்டின் ஆத்ம பலமுமாகியது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், முதலாம் திகதி "நமது ஈழநாடு" வெளியானபோது, அறிவுசார் தமிழ் மக்களின் பேராதரவு இந்தளவுக்கு இருக்குமென, நாம் எண்ணவில்லை.

நல்லவற்றையேற்று, அல்லனவற்றைப் புறந்தள்ளி நிராகரிக்கும் தமிழர் மனோமரபானது. ஈழநாட்டை இருகரம் நீட்டி வரவேற்று, பாராட்டி ஏற்றுக்கொண்டது.

புதியதோற்றம், ஆணித்தரமான, அழுத்தமான - அதே சமயம் நடுநிலை தவறாத செய்திகள், விமர்சனங்கள், ஆய்வுகள்.... ஒவ்வொருநாளும் குடும்பத்தின் சகல தரப்பினருக்கும் ஏற்ற விடயங்கள், கலை இலக்கிய படைப்புகள் எனப் பல்சுவை அம்சங்களையும் தாங்கிய மாறுபட்ட தினசரியாக "நமது ஈழநாடு", மக்களால் இனங்காணப்பட்டது.

குடாநாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழ்களிடையே தனித்துவமான, முதற்தரமான தினசரியென வெளிப்படையாகவே பலராலும் பாராட்டப்பட்டபோது, எமது இலக்கு வெற்றிபெறத் தொடங்கிவிட்டதை உணர்ந்தோம்.

வெறுமனே ஒரு வர்த்தக நோக்குடன் கூடிய பத்திரிகையாக "நமது ஈழநாட்டை" நாம் வெளியிட விரும்பவில்லை. மாறாக தமிழ்மக்களின் அபிலாஷைகளை, இலட்சிய நோக்கங்களை, போராட்ட உணர்வுகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவர்களின் சமகால அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் மற்றும் சமாதான நகர்வுகளில் அவர்களது நியாயங்களை எதிரொலிக்கும் சக்தியாக, அவர்களுக்குப் பின்பலமாக இயங்கவே "நமது ஈழநாடு" விரும்பியது. இன்றுவரை அந்த இலக்கிலும், இலட்சியத்திலும் தவறாது தன் ஊடகப் பணியை நிறைவுசெய்து வருகிறது என்பதில், "நமது ஈழநாடு" திருப்தி கொள்ளவே செய்கிறது.

அரசியல் மற்றும் சமூக உயர்வுகளில் மட்டுமல்லாது, தமிழ் பேசும் மக்களின் - கல்வி, பொருளாதாரம், அறிவியல், விளையாட்டு ஆகிய துறைகளில் ஆழமான ஆர்வமும், அக்கறையும் கொண்ட "நமது ஈழநாடு", இத்துறைகளின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களில் தன்னையும் இணைத்துக்கொண்டு செயற்பட்டதை வாசகர்கள் அறியவே செய்வர்.

நாம் ஒரு வரலாற்றின் - தமிழ்மக்களின் போராட்ட வரலாற்றின் - ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். இது ஒரு திருப்புமுனையை எதிர்கொள்ளும் காலகட்டம். இதில் தனக்கான பங்கு என்ன என்பதையும், எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைப்பொறுப்பு என்ன என்பதையும் "நமது ஈழநாடு" தீர்க்கமான முறையில் வரையறை செய்துகொண்டே தனது பணியைத் தொடர்கின்றது.

சமாதான நகர்வுகள் ஆரம்பமான காலகட்டத்தில்- தனது மக்கள் பணியை ஆரம்பித்த "நமது ஈழநாடு" கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் தனக்கான பாதையை தனித்துவமாக தொடர்ந்து வருகிறது. எம்முன்னே எதிர்காலப் பணிக்கான திட்டங்கள் நிறைந்தே உள்ளன. மக்கள் ஆதரவு எம்பக்கம் வளர்ந்துகொண்டே போவது, "நமது ஈழநாட்டின்" எதிர் காலம் பிரகாசமாக இருக்கப்போவதற்குக் கட்டியம் கூறுவதாகவுள்ளது.

கடந்த ஓராண்டு கால ஊடகச் சேவை பயணத்தில் தன்னோடு ஒன்றிணைந்து, உணர்வுபூர்வமாக, நம்பிக்கையோடு நெருக்கடிகள், இடர்களுக்கு மத்தியிலும் பணியாற்றிய சகல துறைசார் ஊழியர்கள், படைப்பாளிகள், கல்விசார் சமூகத்தவர்கள், கலைஞர்கள் மற்றும் வர்த்தகர்கள், விளம்பரதாரர்கள், ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கிய பெரியோர்கள், விற்பனையை ஊக்கிவித்துவரும் முகவர்கள், எல்லாவற்றிலும் மேலாக பல்லாயிரக்கணக்கிலான வாசகர்கள் அனைவரையும் "நமது ஈழநாடு" பெருநன்றியுடன், இந்நாளில் நினைவுகூருகின்றது.

வாசகர்களின் ஆதரவுப் பலமே "நமது ஈழநாட்டின்" ஆத்ம பலம். இந்த ஓராண்டு கால அனுபவ வெற்றிகள், அடுத்த நூறாண்டு கால சாதனைகளுக்கு உரமாகும் என்ற தளரா உறுதியுடன், அடுத்த ஆண்டில் காலடி வைக்கும் "நமது ஈழநாடு" என்றும் உங்கள் 'ஈழநாடாக" உலாவருமென உறுதி கூறுகிறோம்.




## காற்று சொன்ன சேதியும்; நேற்று வந்த தகவலும்!



பகற்பொழுதின் அனற்காற்றின் வெம்மையைத் தணிக்கும் நோக்குடன், தென்னங்கீற்றிடை நுழைந்து, மாவிலைகளினூடே சலசலத்தபடி முற்றத்து மல்லிகைப்பூ வாசத்தில் முகந்துடைத்து வரும காற்று வாடையா, சோளகமா என நினைக்கும் மனோபாவமில்லை.

சாளரத்தைத் திறக்கவும், அனுமதியின்றி நுழைந்து -உடல்பரவி, அறை நிரப்பும் அந்தக் காற்றுக்கு- எதிர்பார்ப்பென எதுவும் இல்லை. அதன் இயற்கை சுபாவமும் அது தான.

இன்னும் நள்ளிரவாகவில்லை. அதற்கு இன்னும் நேரமிருக்கிறது. சாளரத்தினூடாக ஊடுருவி, காட்சியை விழுங்க எத்தனிக்கும் பார்வையுள் - அந்த தொலை தூர மொட்டைப் பனை மரங்கள் கோடிட்டவாறு கறுப்புருக் கொண்டு நிமிர்ந்து நிற்பது தெரிகிறது.

அதற்கப்பால் முகில் மறைப்பினுள் முகம் புதைக்கும் முழுநிலாவின் மௌன சோகம் பற்றி யாருக்குத் தெரியும்?

அந்த மொட்டைப் பனைமரங்கள் - தம் சொந்தச் சோகங்களை அந்த நிலவுக்குத் தெரிவித்திருக்குமோ?

ஒவ்வொன்றும் மௌன தவம் இயற்றும் நிலையிலும், காற்று மட்டும் காதோரம் ஏதேதோ கதை சொல்லிப் போகிறது.

அந்த மொட்டை பனைமரங்களின் நிலையிடக்கூடலின் சொந்தக்காரி கூனிக்கிழவியை- அந்தக் கிராமம் அறியும். அந்தக் கிராமத்தின் கதையைக் கூனிக் கிழவியும் அறிவாள்.

அவளின் பனை மரங்கள் மொட்டையாகுமுன்னேயே, அவள் - அவளுக்குப் பிடித்தமான அந்தக் கூடலின் நடுவே இருந்த குடிசைக்குள்ளேயே, ஒருநாள் அதிகாலைப் பொழுதில் - அலுமினியப் பறவை ஒன்று பீச்சிய 'குண்டு'க்கு சமாதியாகிவிட்டாள். ஊரில் யாரும் தங்கவில்லை.

பனைகளும், தென்னைகளும் மொட்டையாகத் தொடங்கின. அப்போதெல்லாம் காற்றில் சாம்பல் துகள்களும், தூசுகளும் அதிகம் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

பின்பு, காற்றில் வேறு சமிக்ஞைகளும், மொழிகளும் கலந்து நஞ்சூறியதாகவும் சொன்னார்கள்.

கூனிக்கிழவியின் பனங்கூடலைச் சிலகாலத்தின் பின்னர், யாரோ சிலர் அசுரபலத்துடன் வந்து பிடுங்கிச் சென்றார்கள் என்றும், மிஞ்சிய மொட்டைப் பனைகள் ஒன்றிரண்டு மட்டும் அநாதையாக நிற்பது தொலைதூரத்தில் தெரிவதாகவும் சிலர் கூறினர்.

அவ்வளவுதான் தெரியும். பின்னர், பலகாலம் எவரும் அந்தப் பிராந்தியத்திற்கே செல்லவில்லை.

காற்றில் அந்நியத்தன்மையை உணாவதாகவும், சுவாசிக்கச் சந்தேகமாக இருப்பதாகக் கூறவும் பலர் பயந்தனர்.

மொட்டைப் பனையில் கூடு கட்டி சில காலம் இருந்த கிளிகளுக்கு என்னவாயிற்று என்பது புரியவில்லை.

அந்தப் பகுதியில் கிளி இறைச்சி சமைக்கும் வாசம் மிதப்பாகக் காற்றில் வந்த சேதி கூறியது.

அதன் பின்னர், காற்றுக்கு எதுவும் சொல்லத் தெரியாது போயிற்று. அதிர்வுகளையும், அனலையும், அவலத்தையும் மட்டும் விருப்பமின்றி சுமந்து சலித்தது.

இதுவே ஒரு வழமையாயிற்று.

அரைத் தசாப்தத்திற்கும் மேலாக இதுவே தொடர்ந்தது.

பின்னர், ஒரு நாட்புலர்வின்போது, வந்த காற்று புதிய செய்தியுடன் வந்தது.

கூனிக் கிழவியின் பனங்கூடல் பக்கம் போய் வந்ததாகவும், மொட்டைப் பனைகளில் பல அப்படியே நிற்பதாகவும், அந்தப் பக்கம் இருந்து வந்த ஒரு புறா, மொட்டைப் பனையொன்றில் தரித்திருந்ததாகவும் யாரோ சமாதானம் வருகிறது என்று பாடிக்கொண்டு இருந்ததாகவும் அந்தச் செய்தி கூறியது.

அவ்வளவுதான் -

பனங்கூடல் பக்கம் பயந்து பயந்து போன சிலர், கூனிக்கிழவியின் குடிசைப் பக்கம் போனபோது, எலும்புத் துண்டுகளும், மண்டையோடொன்றும் கிடந்ததாகக் கூறினர். அந்தப்பகுதியில் நிறையக் கிளிகளின் இறகுகள் காணப்பட்டதாகவும் கூறினர். தூரத்தில் நின்று மொட்டைப் பனைகளைப் பார்த்துப் பெரு மூச்சு விட்டதாகவும் கூறினர்.

காற்றைக் கேட்டால் சாட்சி சொல்லும் என்றனர்.

சற்று எட்டத்தில் அந்நிய அசுமாத்தம் இருக்கிறது என அஞ்சுவதாகவும் தெரிவித்தனர்.

கதைகள் நிறையவே வந்தன.

காற்றுத் தான் அத்தனையையும் சுமந்து வந்தது.

அந்த இடத்தில் கண்ணிவெடி இருக்கும் என எச்சரித்தது காற்று.

கறள்பிடித்த முட்கம்பிச் சுருள்கள் ஆங்காங்கே வேலிகளாகி நின்றன. மிதி வெடி அபாயம் என்ற எச்சரிக்கைப் பல கைகளையும் சுற்றி முட்கம்பிகள் காணப்பட்டன.

மண் அணைகள் மலைத் தொடராக நீண்டன.

"உயர்பாதுகாப்பு வலயம்" என்றது காற்று.

"யாருக்கு?" எனக் கேட்டபோது, மக்களுக்கல்ல எனப் பதில் சொல்லியது காற்று.

மண் அரணுக்கு மத்தியில் முட்கம்பி சுருள்கள் சூழ இருந்த மொட்டைப் பனையில் சமாதானத்தை வரவேற்பதாகக் கூறும் அறிவிப்பு காணப்பட்டது. அண்ணாந்து பார்த்த போது, மொட்டைப் பனைப் பொந்திலிருந்து தலை நீட்டிய ஒரு கிளி, தன் குஞ்சை நோக்கிக் கூறியது.

"கீழே எட்டிப்பார்க்காதே, சமாதானம் உன்னைக் காப்பாற்றாது."

எல்லாம் இயல்பாக இருப்பதான தோற்றம்கூட, அச்சமூட்டுவதாகவே இருக்கிறது என எண்ணவும்...

சாளரத்தில் நுழைந்த காற்று, நியாயமான சந்தேகம்தான் என்றது.

**நிருத்தன்**

நிமிர்ந்து பார்த்தேன்.

மீண்டும் காற்றுக் கூறியது.

'பொந்திலிருந்த குஞ்சைக் காணவில்லை'

'ஏன்...?'

'தெரியவில்லை...'

'அப்படியென்றால்?'

'கீழே முட்கம்பி வளையத்தினுள் பச்சைநிற சிறகுகள் கிடக்கின்றன...'

'நீ கிட்டப்போய் பார்த்தாயா?'

'அங்கே போகமுடியாது, அது உயர் பாதுகாப்பு வலயம'

"அப்படியென்றால்"

"அங்கே போவது, எந்த உயிருக்கும் பாதுகாப்பில்லை..."

- சாளரத்தை அடித்து மூடினேன் நேற்று விடிந்தபோது

- சாரளத்தைத் திறவுங்கள் சமாதானக் காற்று சந்தோஷமாக வருகிறது.

என்றன பல அந்நியக்குரல்கள்.





**ஏசுவார்கள், எரிப்பார்கள்**
**உண்மையை எழுதுங்கள்**
**உண்மையாய் எழுதுங்கள்**
**-யோகர் சுவாமிகள்**

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



அன்புள்ளவர்களுக்கு,

நம் நாட்டில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றாகிய "நமது ஈழநாடு" - தனது முதலாவது அகவையினைப் பூர்த்தி செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஈழத்தமிழர்களின் தனித்துவமான பத்திரிகையாக, நீண்ட காலம் நம் நாட்டில் வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று மக்களின் முக்கிய தேவைகளில் பத்திரிகை முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் செய்திகளை உடனுக்குடன் வழங்குவது பத்திரிகையின் பணியாகும். இதனை நிறைவாகச் செய்து கொண்டிருக்கும் பத்திரிகைகளில் "நமது ஈழநாடு" செயற்திறன் மிக்கது. இதன் செய்திகளான - ஆசிரியர் தலையகங்கம் முதல் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகள் - பிறந்தநாள் வாழ்த்து, வர்த்தக, விளையாட்டு, கல்விச் செய்திகள் அனைத்தையும், அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றவகையில் வழங்கி வருகின்றமை சிறப்புக்குரியது. இன்றைய அரசியல் செய்திகளை எல்லோருக்கும் விளங்கக் கூடிய வகையில் பிரசுரிப்பது ஆசிரியர் பீடத்தினது புலமையினைப் புலப்படுத்துகின்றது. ஒருவருடமாக மக்களுக்கு நிறைவான பணியினை வழங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பத்திரிகை இன்னும் பல்லாண்டு காலம் சிறப்பாக வெளிவரவும், இந்தப் பணியினைச் செய்து கொண்டிருக்கும் ஆசிரியர், செய்தித் தொகுப்பாளர்கள், நிருபர்கள், ஊழியர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி



அன்புச் சகோதரர்களே,

வலைப்பின்னல் யுகத்தில் இணையத்தின் எழுச்சி - தகவல்த்தொடர்புத் துறையில் பண்பாட்டுப் புரட்சிக்கு வரலாற்றில் வழிவகுத்தது. இலத்திரனியல் ஊடகங்கள் தகவல் பரிமாற்றத்தில் புதிய பரிமாணத்தைக் கொண்டுள்ள போதிலும், அச்சு ஊடகத்துறையான பத்திரிகையியல் தனது வரலாற்றுத் தனித்துவத்தையோ, வாசகர்களின் ஆதரவையோ இழந்துபோனதாகச் சொல்லமுடியாது. ஊடகத்துறையின் சிறப்பான கடப்பாடு, மக்களின் காவல் நாய்கள் (Watch Dogs) என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இப்பின்னணியில் - எமது மண்ணில் நடைபெற்ற அழிவுப்போக்கிலும், புனரமைப்புப் பணிகளிலும் 'மக்களின் விழிகள் போன்று' பத்திரிகைகள் செயலாற்ற வேண்டும். விழிப்புணர்வுப் பணியில் தடம் பதித்த "நமது ஈழநாடு" பத்திரிகையை மனமாரப் பாராட்டுகின்றேன். சத்தியசோதனையான பத்திரிகைப் பணி சிறக்க - பிரதம ஆசிரியரையும், துணையான ஆசிரியக் குழுவையும் வாழ்த்தி சத்தியத்தின் வழி நிற்க எனது மன்றாட்டுக்கள்.

**இறைபணியில் உங்கள் ஆயர்**
**பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ்.ஆயர்.**

## ஆசிச்செய்தி



பல்லாண்டு காலமாக ஈழவள நாட்டின் தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழாக தமிழ் பேசும் மக்களின் கரங்களில் நாள்தோறும் தனது பணிகளை செவ்வன செப்பனிட்ட ஈழநாளிதழே. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரின் கரங்களில் உலாவி திரியும் ஈழநாடே எம்மிதயத்தைக் கவர்ந்த ஈழநாடு பத்திரிகையே?

யுத்த சூழ்நிலை காரணமாக தடைபட்டிருந்தமை கவலைக்குரிய விடயமாகும். சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின் மீண்டும் மலரத் தொடங்கி ஒருவயது பூர்த்தியடைவதையிட்டு நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கும் இன மத பேதமின்றி சகல இன மக்களுக்கும் சேவையாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதோடு இலங்கை வாழ் முஸ்லிம்களின் சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.

-வஸ்லாம் - நன்றி -

**மௌலவி பாஹிர்**

## துர்க்கா துரந்தரியின் ஆசியுரை



பத்திரிகா தர்மம் மிக மிக மேலானது. இதனைப் பேணி வெளிவருகின்ற நமது மண்ணின் செய்தி இதழ்களில் ஒன்று 'நமது ஈழநாடு' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஒரு வருடமாக வெளிவருகின்ற இந்த இதழை - எமது தேவஸ்தானம் தினமும் காலையில் படித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். கௌரவ ஆசிரியர் அவர்கள் தமது எழுதுகோலை நடுவு நிலைமையோடு பாவித்து, மேலும் பத்திரிகா தர்மத்தை வளர்க்க வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி.**

## தென்னிந்திய திருச்சபை பேராயரின் வாழ்த்து



"நமது ஈழநாடு" ஆரம்பமாகி, ஒக்ரோபர் முதலாம் திகதியுடன், ஒரு வருடம் பூர்த்தியாகின்றது என்றறிந்து மிக்க மகிழ்சியடைந்தேன். இனி, குழந்தை தப்பிவிடும் - ஆரோக்கியமாக வளரும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

ஜே.பார்ட்டன் என்ற அறிஞர் - "பத்திரிகைகள்தான் மக்கள் பல்கலைக் கழகங்கள்" உலகில் அரைவாசிப் பேர் பத்திரிகைகளுக்கு மேல் எதனையும் வாசிப்பதில்லை" என்று குறிப்பிட்டார் 'நமது ஈழநாடு' - இந்தப் பணியைத் திறம்படச் செய்கின்றது. பத்திரிகைகளின் பெருக்கம், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு அறிகுறி.

நேர்மையான விமர்சனம், காய்தல், உவத்தலற்ற ஆராய்ச்சி, செய்திகளை வெளியிடுவதில் தூய்மை என்பன, பத்திரிகா தர்மத்தின் முக்கிய அம்சங்கள் "நமது ஈழநாடு" இந்தத் தர்மங்களை வளர்க்கின்றது.

இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் "நமது ஈழநாடு" தொடர்ந்து வளர்ச்சிபெற்று, உலகனைத்துமுள்ள தமிழ்மக்களின் ஆதரவைப்பெற்ற பத்திரிகையாகத் திகழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வண.பிதா .எஸ்.ஜெபநேசன்.**

## ஆசிச் செய்தி



'நமது ஈழநாடு' தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில், எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டு தசாப்தங்கள் தொடர்ந்த கொடிய போரில், உறுதியான, சமாதானத்திற்குமான பாதைக்கு 'ஈழநாடு' அரிய பணியைச் செய்துள்ளது.

சமாதானம், ஒற்றுமை ஆகியவற்றைக் கொண்ட ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கு - இங்குள்ள சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இனங்களுக்கு 'ஈழநாடு' தைரியத்தைக் கொடுத்துள்ளது.

இறுதியாகப் பத்திரிகை என்ற முறையில் - சமநிலையான, உண்மையான செய்திகளைப் பிரசுரித்து - சமாதானம், செல்வம், பிரிவினையற்ற சமுகம் ஆகியவற்றை உருவாக்கக் கூடியவாறு செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும். இவற்றின் மூலம் முழுமையான, பிரகாசமான எதிர்காலத்தை அடையமுடியும்.

கடந்தகாலங்களிலும் இவற்றை 'நமது ஈழநாடு' நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

**வண.மீகஹஜந்துரே கீர்த்தி ஸ்ரீ நந்தாராம ஞானரத்ன தேரர்**

## வாழ்த்துரை



ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத்துறையின் வரலாறு ஒரு நூற்றாண்டைத் தாண்டியுள்ளதை அனைவரும் அறிவர். ஈழத்திலே குறிப்பாக, யாழ்ப்பாணத்திலே - 19 ஆம் நூற்றாண்டிலே இருபதுக்கு மேற்பட்ட தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவந்தன என்று கூறப்படுகின்றது. வருட, மாத, வார, நாள் இதழ்களாக வெளிவந்த இந்தப் பத்திரிகைகளினூடு - எமது சமூகத்தின் அரசியல், சமூக, பண்பாட்டு வேர்களையும், விழுதுகளையும் இன்றும் கண்டுகொள்ளமுடியும்.

இத்தகையதோர் பின்னணியிலே உருவான எமது பத்திரிகைத்துறை இன்று நன்கு வளர்ந்துள்ளது என்றே கூறவேண்டும்.

எமது பிரதேசத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஏதோவொருவகையிலே, ஏதோவொரு முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளன என்றே கருதவேண்டும்.

பத்திரிகைத்துறையின் வளர்ச்சியின் வெளிப்பாடாக இன்று வடதமிழ் ஈழத்திலே - நான்கு தினசரிப் பத்திரிக்கள் வெளிவருகின்றன. எழுத்தறிவுப் பாரம்பரியம் மிக்க ஒரு சமூகத்திலே பத்திரிகைகளின் பெருக்கமும், பயன்பாடும் மிக அதிகமாகவே இருக்கும்.

நமது பிரதேசத்தின் வாழ்வியலை உறுதிப்படுத்தும் வகையிலே வெளிவரும் 'நமது ஈழநாடு' இன்று முதலாவது அகவையைக் கொண்டாடுவதை அறிந்து, மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். அமைப்பிலும், வடிவிலும், உள்ளடக்கத்திலும் உன்னதமாக அமைந்திருக்கும் 'நமது ஈழநாடு' இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, நமது மக்களின் அபிலாசைஷகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

எல்லாவகையிலும் சிறப்புற அமையும் 'நமது ஈழநாடு' என்றும் நின்று நிலைத்துப் பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**நமது ஈழநாட்டின் பணிகள் தொடர வாழ்த்தும்**
**பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



**எஸ்.எம்.கோபாலரத்தினம்**

# 'ஈழநாடு' அந்தக் கால நினைவுக் குறிப்புகள்...

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தமுடியுமா?

'ஈழநாடு' பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்து தினப்பத்திரிகையாக வெளிவருவதற்கு முன்னர், பலர் இந்தக் கேள்வியைக் கேட்டனர்.

'ஈழநாடு' பத்திரிகையைத் தொடங்கிய அபூர்வ சகோதரர்களான - கே.சி.தங்கராஜா, அவர் தம்பி டொக்டர் கே.சி.சண்முகரத்தினம் ஆகியோரும் கூட, இக்கேள்வியைக் கேட்டுக் கொண்டுதான் தினசரிப்பத்திரிகையைத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முப்பது, நாற்பது ஆண்டுகளாக சிறப்புற வெளிவந்து கொண்டிருந்த வாரப் பத்திரிகையான 'ஈழகேசரி' - தமிழ்மக்கள் வாழும் இடங்களிளெல்லாம் நற்பெயர் பெற்றிருந்தது. தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்து சென்ற அறிஞர்களெல்லாம் இப்பத்திரிகையைப் போற்றிப்பாராட்டினர். இப்படி நற்பெயர் பெற்று செல்வாக்குடன் திகழ்ந்த 'ஈழகேசரி' நின்றபின், புதிதாகத் தொடங்கும் பத்திரிகை நிலைக் குமா? நீடிக்குமா? என்ற ஐயம் எழுந்ததில் ஆச்சரியமில்லை.

1959 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம், ஒன்பதாம் திகதி 'ஈழநாடு' வாரப்பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்தது.

முதல் இதழில் பத்திரிகையின் கொள்கை பற்றி அதிபர் கே.சி.தங்கராஜா விளக்கமாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார். விரைவில் இதைத் தினப பத்திரிகையாக்கும் நோக்கத்தையும் குறிப்பிட்டிருந்தார். வாரப் பத்திரிகையல் செய்திகளுக்கும் சிறிது இடமளிக்கப்பட்டிருந்தாலும், இலக்கியஇதழாகவே வெளிவந்தது.

'ஈழகேசரி' வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்த இராஜஅரியரெத்தினம் அவர்கள் ஈழநாடு வாரப்பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

இதேசமயம் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த கே.பி.ஹரன் அவர்கள், 'வீரகேசரி' நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து உருவாகிய பதவிப்போட்டிகளால் அதிலிருந்து வெளியேறியிருந்தார். இதனால் கே.பி.ஹரன் அவர்களை திரு.தங்கராஜா இழுத்து, 'ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பைக் கொடுத்தார்.

1960 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம், 11 ஆம் திகதி தொடக்கம் 'ஈழநாடு' வாரம் இருமுறை வெளிவரத் தொடங்கியது.

1960 ஆம் ஆண்டு, மே மாத இறுதியில் 'வீரகேசரி' ஊழியர்கள் - சம்பள உயர்வு மறறும் சில கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். நிர்வாகம் ஊழியர்களை வெளியேவிட்டுக் கதவடைப்புச் செய்தது.

என்னையும் வெளியேவிட்டு, வீரகேசரி நிர்வாகம் கதவைப் பூட்டியதால், நான் வேலை இழந்தேன். 'வீரகேசரி'யின் கதவு திறக்கும் என்று ஊழியர்கள் பலரும் காத்திருந்தனர். குடும்ப நிலைமையைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. 'ஈழநாடு' எனக்குக் கதவு திறந்தது.

1960 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம், 25 ஆம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி ஆசிரியராகப் பொறுப்பேற்றேன்.

'ஈழநாடு' செய்தி ஆசிரியராகப் பொறுப் பேற்ற மறுதினம், நிர்வாக இயக்குநர் கே.சி. சண்முகரெத்தினம் அலுவலகம் வந்து பேசுகையில்- யாழ்ப்பாணத்திலிருந்து தினசரிப் பத்திரிகையை வெளியிட்டால், வெற்றியளிக்குமா? என்று கேட்டார்.

சந்தேகமில்லாமல் வெற்றியளிக்கும். இந் தக கிழமையே தினப்பத்திரிகையாகக் கொணடு வருவோம் என்றேன்.

"கோபி, அவசரப்படக்கூடாது கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்து, அதற்குத் தயார் செய்து கொண்டு தொடங்கலாம்" என்றார் டொக்டர்.

'வீரகேசரி' எங்களை வெளியேற்றிவிட்டுக் கதவடைத்ததால், அதன்மீது எனக்கு ஆத்திரம்! 'ஈழநாடு' பத்திரிகையைத் தினப்பத்திரி கையாக வெளியிட்டு, வீரகேசரியை முறியடிக்க வேண்டுமென்ற எனது இளமைத் துடிப்பு!.

வாரமிருமுறையாக பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கையிலேயே நல்ல செய்தி கிடைத்ததும், பிந்திய பதிப்பு என்று மேலும் ஒருதினம பத்திரிகையை வெளியிட்டேன்.

1960 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில்- அமைச்சர்கள் ரி.பி.இலங்கரத்தினாவும், பதியுதன் மாமூத்தும் யாழ்ப்பாணம் வந்தனர். ஒருநாள் பருததித்துறையில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளையொன்றை அமைச்சர் இலங்கரத்தினா திறந்துவைத்தார்.

இவர்களின் வருகையை எதிர்த்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையில்- தமிழரசுக கட்சித் தொண்டர்கள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை என்று ஞாபகம். டொக்டர் சண்முகரெத்தினம் தமது ஈஎன் 9151 என்ற பச்சைவர்ண கொன்சல் காரைப் பருத்தித்துறை செலவதற்குத் தந்துதவினார். அன்று கார்ச் சாரதி வரவில்லை. டொக்டரின் உதவியாளர் குப் புச்சாமி காரைச் செலுத்தினார். நான் போய் நின்றேன். அமைச்சர்கள் வந்திறங்கியதும் அமிர்தலிங்கமும், தொண்டர்களும் கோஷமிட்டபடி மறைத்து வைத்திருந்த கறுப்புக்கொடிகளை வீசியவாறு முன்னேற முயன்றனர். பொலிஸார் இவர்கள் மீது பாய்ந்து, அடிதது்க் கலைத்தனர். அமிர்தலிங்கத்துக்கும் அடிவிழுந்தது. பின்னர், நான் - அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது உடல்நிலை பற்றிக்கேட்டேன். அப்படிப் பெரிதாகத் தமக்கு அடிவிழவில்லை என்றார்.

அன்று மாலையில் யாழ்ப்பணம் பெரியகடையில் காங்கேசன்துறை வீதியில் முற்ற வெளிக்குச் சமீபமாக சி. எஸ்.கே ஆலைக்கு எதிர்ப்பக்கம் ஒரு கட்டடத்தில் மக்கள்வங்கிக்கிளை திறப்பு. அமைச்சர்கள் வருவதற்கு முனனர் அமிர்தலிங்கம், வி.ஏ. கந்தையா மற்றும் தொண்டர்களும், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் பெண்களும் கறுப்புக்கொடிகளை மறைத்து வைத்துக் கொண்டு, அங்குள்ள கடைகளின் படிக்கட்டுகளில் நின்றனர். பொலிஸாரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.



அந்தக்கால ஈழநாட்டுப் பணியாளர்கள்

அமைச்சர்களின் கார்கள் வந்ததுதான் தாமதம், படிகளில் நின்றவர்கள் வீதியின் குறுக்கே பாய்ந்து, கறுப்புக்கொடிகளை வீசியவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர், கோஷமிட்டனர். பொலிஸார் இவர்கள் மீது பாய்ந்து தாக்குதல் நடத்தினர். தீவுப்பகுதி எம்.பி.வி.ஏ. கந்தையா பொலிஸ் காரரின் தாக்குதலில் கீழே விழுந்துவிட்டார். அவரது கண்ணாடியும் கழன்று விழுந்துவிட்டது. இதனால், அவர் நன்றாகப் பாதிக்கப்பட்டார்.

ஆர்ப்பாட்டம் செய்த பெண்கள்மீது தாக்குதல் நடத்துவதற்குப் பொலிஸார் ஓடிச்சென்ற போது, உதவிப் பொலிஸ் அதிபர் ஏ.எஸ்.மரியநாயகம் தடுத்துவிட்டார். பின்னர், வி.ஏ.கந்தையா அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அன்றிரவு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். உடலாலும், உள்ளத்தாலும் அவர் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தார். 1958 ஆம் ஆண்டில் இவர் சில மாதங்கள் தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த ஆர்ப்பாட்டச் செய்திகளைப் பிந்திய பதிப்பாகவும், விசேட பதிப்பாகவும் 'ஈழநாடு' வெளியிட்டு, மக்களுக்கு விபரமாகக் கொடுத்தது.

'ஈழநாடு' பிந்திய பதிப்புக்களையும், விசேட பதிப்புக்களையும் வெளியிட்டுச் செய்திகளை உடனுக்குடன் கொடுக்கத் தொடங்கியதும், இனிக கொழும்புப் பத்திரிகைகளை நம்பியிருக்கத் தேவையில்லை என்ற உணர்வு யாழ்ப்பாண வாசகர்களுக்கு ஏற்பட்டது.

பத்திரிகையின் வெற்றிக்கு அதன் நம்பகத் தன்மைதான் முக்கியம், மூலவேர். பத்திரிகையில் வரும் செய்திகளையோ, கட்டுரைகளையோ, கருத்துக்களையோ வாசகர்கள் நம்ப முடியாமல் போனால், பத்திரிகை மீது வைத்த நம்பிக்கையை வாசகர்கள் இழந்துவிடுவார்கள். பிந்திய பதிப்பு, விசேட பதிப்புக்கள் மூலம், 'ஈழநாடு' கொடுத்த செய்திகள், தகவல்கள் பத்திரிகை மீது வாசகர்களுக்கு அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறுவதற்கு, தமிழரசுக்கட்சி நடத்திய மக்கள் எழுச்சியாகப் பரிணமித்த சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளையும் சொல்லாம்.

1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க கொண்டுவந்த சிங்களம் மட்டும் என்ற சட்டததைப் பூரணமாகச் செயற்படுத்தவும், வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களிலும் சிங்களத்தை அமுல்செய்யவும் சிறிமாபண்டாரநாயக்காவின், சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி முன்வந்தது.

இதை எதிர்த்துத் தந்தை செல்வா தலைமையில் - இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணம், கச்சேரி முன்பாகவும், அரசாங்க அதிபர் தமது வாசஸ்தலத்திலிருந்து வெளியேறாதவாறு தடுப்பதற்காகவும் பழைய பூங்கா வாசலிலும் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். கிட்டத்தட்ட ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்த பின்னரே, சத்தியாக்கிரகம் தொடங்கியது.

'ஈழநாடு' தினப்பத்திரிகையாக வெளிவரத் தொடங்கிப் பத்து அல்லது பதினைந்து நாட்களாகியிருக்கலாம். காலை 7 மணிக்கு வானொலிச் செய்திகளைக் கேட்டு, எழுதிக் கொடுத்து விட்டு சத்தியாக்கிரகத்தைப் பார்ப்பதற்காக டொக்டரின் மோட்டார் காரில் கச்சேரியடிக்குச் சென்றேன்.

கச்சேரி பிரதான வாசலில் தந்தை செல்வா நடுவில் அமர்ந்திருக்க, அமிர்தலிங்கமும் எம்.பிக்களும் தொண்டர்களும் அவரைச்சூழ உட்கார்ந்தும், படுத்தும் கிடந்தனர். இதேசமயம் பழைய பூங்கா வாசலில் டொக்டர் இ.மு.வி. நாகநாதன், வி.என்.நவரெத்தினம் மற்றும் எம்.பிக்களும், தொண்டர்களும் வாசலின் குறுக்கே படுத்துக் கிடந்தனர்.

இரண்டு இடங்களிலும் பொலிஸார் குவிந்து நின்று சத்தியாக்கிரகம் செய்பவர்களின் கால்களைப் பிடித்து இழுப்பதும், அவர்களுக்கு அடிபதுமாக இருந்தனர். இவர்களை வெளியே இழுத்துவிட்டதும், மீண்டும் அவர்கள் அதே இடத்தில் ஓடிச்சென்று படுப்பதுமாக இருந்தனர்.

பொலிஸார் தங்களிடமுள்ள பேட்டன் பொல்லால் கடுமையாகத் தாக்கினர். நாகநாதனைத் தாக்கியபோது, பேட்டன் பொல்லே முறிந்தது!

இந்தச் சம்பவங்களைப் பார்த்ததும், முன்கூட்டியே நான் கூறியபடி பிந்திய பதிப்பு வெளியிட வேண்டுமென்று உறுதிசெய்தேன். உடனடியாக நான் அலுவலகம் திரும்பினேன். இதற்கு முன் நமது நிருபராகக் கடமையாற்றிய ஸி.ரி.சொலமன் (மாஸ்ரர்), வீரகேசரி செல்லத்துரை, நடராஜா மாஸ்ரர் ஆகியோரிடம் ஏதும் வித்தியாசமாக நடந்தால், எனக்குத் தொலைபேசியில் தெரிவிக்குமாறு சொல்லியிருந்தேன்.

அலுவலகம் வந்து, நான் கச்சேரியடியில் பார்த்தவற்றைச் செய்தியாக எழுதிக் கொடுதது முதறபக்கத்தையும், கடைசிப் பக்கத்தையும் தயார் செய்யும் படியும் சொன்னேன். இதற்கிடையில கச்சேரியடியில் உள்ள ஹொட்டேல் ஒன்றுடன் தொடர்பு கொண்டும் நிலைமைகளை விசாரித்தேன்.

பின்னர், செல்லத்துரையும் சொலமன் மாஸரரும் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியதாகவும், ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுத் தீர்த்ததாகவும் சொன்னார்கள். சத்தியாக்கிரகம் நண்பகலுடன் ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

நான் எழுதிக் கொடுத்தவற்றுக்கு மேலாக இச்செய்திகளைப் போடும்படி எழுதிக்கொடுத்து, முதல் பக்கத் தலைப்பையும் கொடுத்தேன். அவசர அவசரமாகப் பக்கம் போடுவதற்கு நானும் அருகே நின்று உற்சாகப்படுத்தினேன். பிந்திய பதிப்பு அடிக்கத் தொடங்கியதும், முதலில் கொஞ்சப் பத்திரிகைகளை பஸ் நிலையத்துக்கு அனுப்பும்படி சொன்னேன்.

கச்சேரியடியில் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டவர்களுடன், வேடிக்கை பார்க்கச் சென்றவர்கள் அடித்து விரட்டப்பட்டு அங்கிருந்து பஸ் நிலையம் வந்தனர். பஸ் நிலையத்தில் 'ஈழநாடு' அந்தச் செய்திகளைச் சுடச்சுடப் பிரசுரித்திருந்ததைக் கண்டதும், அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் திகைப்பும் ஏற்பட்டது.

'ஈழநாடு' மீது மக்களுக்கு நம்பிக்கை அதிகரித்தது. அன்று மாலையில் தந்தை செல்வாவைச் சந்திப்பதற்காக யாழ்.வாடிவீட்டுக்குச் சென்றேன். அவர் பிந்திய பதிப்பை வைத்து, தமது விரலால் தொட்டுத் தொட்டுப் பார்த்து 'ஈழநாடு' செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தார். மறுநாள் பதிப்புக்கு அவரைப் பேட்டி கண்டு செய்தி வெளியிட்டேன்.

வீரகேசரி செல்லத்துரை பத்திரிகைப் பணியில் அசகாயசூரன். அவரே ஒரு பத்திரிகை நிறுவனம்! 'ஈழநாடு' யாழ்ப்பாணத்தில் வெளிவரத் தொடங்கிய பின், 'வீரகேசரி'க்குச் சிறிது தாக்கம் ஏற்பட்டது. இதனால், கொழும்பில் வரவு - செலவுத்திட்ட வரிவிதிப்பால் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படும்; இச்சந்தர்ப் பத்திலும் யாழ். மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவரும் சமயத்திலும், 'ஈழநாடு' பத்திரிகைக்கு ஈடாக யாழ்ப்பாணத்திலேயே இவற்றை அச்சிட்டுக் கொழும்பிலிருந்து வரும் 'வீரகேசரி' பத்திரிகைக்குள் அதை வைத்து விநியோகிக்கச் செல்லத்துரை ஏற்பாடு செய்தார்.

இந்த ஏற்பாடு எனக்குத் தெரியவந்ததும், 'ஈழநாடு' பத்திரிகையில் இச்செய்திகளைப் பெரிதாகப் போடுவதற்கு ஒழுங்குசெய்து, மறுநாள் பத்திரிகையை முதல்நாள் நள்ளிரவே விற்பனைக்குவிட ஏற்பாடு செய்தேன். சினிமாத் தியேட்டர்களில் சிலைடுகள் எழுதிப்போட்டு நள்ளிரவே தியேட்டர் வாசலில் பத்திரிகைகளை விற்க ஏற்பாடு செய்தேன். நானும் பத்திரிகைகள் விற்றேன். மா விலை ஏறுது என்று கூவி விற்றவர்களுக்குக் கேலியாக, சில பேர்வழிகள் எந்த மா விலை என்ன ஏறுது என்று கிண்டல் செய்ததும் உண்டு.

வாசகர்களின் நம்பிக்கையை இழந்தால், பத்திரிகை விற்பனை வீழ்ச்சிகாணும். இதற்கும் 'ஈழநாடு' மற்றோர் உதாரணம்.

'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் ஹரன் இலகுவில் உணர்ச்சிவசப்பட்டு விடுவார். பொதுவாகப் பத்திரிகையாளர்கள் , நானுட்பட அப்படித்தான் என்று சொல்லலாமா?

மீரிகமையில் வித்தகம் என்றொரு சிறுமி ஆவி உலகத்துடன் தொடர்புகொண்டு பேசுவதை, யாரோ சொல்ல ஆசிரியர் ஹரன் அங்கு சென்று பார்த்தார், உணர்ச்சிவசப்பட்டார். அதை முழுமையாக நம்பினார். வித்தகம் மூலம் ஆவியுலகில் தொடர்புகொண்டு ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன் போன்ற தலைவர்களைப் பேட்டிகண்டு, 'ஈழநாடு' ஞாயிறு வாரமலரில் முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக, சிலவாரங்கள் வெளியிட்டுவந்தார்.

ஆவிஉலகத் தொடர்பை ஆசிரியர் ஹரன முழுமையாக நம்பினார். ஆனால், வாசகர்கள் நம்பவில்லை. விற்பனை வீழ்ச்சி கண்டது. அந்த ஆவியுலகத் தொடர்புப் பேட்டிகளை ஆசிரியர் நிறுத்தவேண்டியதாயிற்று.

வாரமிருமுறை வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பிந்திய பதிப்பு, விசேட பதிப்புக்கள் வெளியிட்டதன் மூலம், வாரத்தில் நான்கைந்து தினங்களுக்கு மக்கள் கைகளில் உடனுக்குடன் வந்த செய்திகளுடன் கிடைத்தது. மக்களின் ஆதரவும் அதிகரித்தது. இதனால், 'ஈழநாடு' தினப்பத்திரிகையாக வெளிவரவேண்டு மென்ற விருப்பம் எல்லோருக்கும் மேலோங்கியது.

இன்றுபோல கணினி வசதிகள் அன்று கிடையாது. வீரகேசரியிலாவது 'ரெலிபிறின்ரர்' என்ற இயந்திரங்கள் இரண்டும் - உலகச் செய்திகள், இந்தியச் செய்திகள் யாவற்றையும இரவு, பகலாக அடித்துத் தள்ளிக் கொண்டே யிருக்கும். அவற்றைப் பார்த்துத் தேவையானவற்றைப் பிரித்து மொழிபெயர்த்து, தலைப்புப் போட்டு அச்சுக் கோர்க்கக் கொடுக்கலாம். 'ஈழநாடு' அலுவலகத்தில் பாவிக்கப்பட்ட பழைய வானொலிப்பெட்டி ஒன்று இருந்தது. இந்த வானொலியிலிருந்துதான் உலகச் செய்திகள், கொழும்புச் செய்திகள் யாவும் சில சமயங்களில் உள்ளூர் செய்திகள்கூட, இந்த வானொலிப்பெட்டியின் மூலம் தந்துதவின. சுருக்கமாகச் சொன்னால், காற்றைக் கயிறாகத்திரித்துச் செய்திகளைப் பிழிந்து எடுத்தோம்! இப்பொழுது; கணினியில் அச்சடிப்பது போல் அன்று இருக்கவில்லை. ஒவ்வொரு எழுத்துக் கோர்த்து நீளமாக அடுக்கி, அவற்றை வைத்துப் பக்கம் அடிக்கவேண்டும்.

இன்று சகல செய்திகளும், கட்டுரைகளும் கூட கணினியிலிருந்து எடுக்கலாம். இன்ரநெற் எனறும், ஈ மெயில் என்றும், :.பக்ஸ் என்றும் செய்திகள் எடுப்பதற்கு வசதிகள் பல இருக்கின்றன. அன்று உள்ளூர்ச் செய்திகளுக்கும், வெளியூர்ச் செயதிகளுக்கும் நிருபர்களை நியமித்துக் காத்திருப்போம்! அலுவலக நிருபர்களும் நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவரே, நீதிமன்ற வழக்குச் செய்திகளை எடுப்பதற்கு நியமிக்கப்பட்டார்.

பிந்திய பதிப்பு, விசேட பதிப்பு ஆகியவைகளை வெற்றிகரமாக வெளியிட்டதால், தினப் பதிப்பையும் உடனடியாகவே வெளியிடலாம் என்ற துணிச்சலுடன், பெப்ரவரி 11 இல் தினப் பத்திரிகை வெளிவருமென்று அறிவித்துவிட்டேன். கொழும்பிலிருந்து அனுபவமுற்ற பத்திரிகையாளர்கள் இருவருடன், நிர்வாக ஆசிரியர் ஹரன் அவர்கள் வருவதாகவும் தகவல் வந்தது. பத்திரிகை வெளிவரும் என்று அறிவிக்கப்பட்ட அன்று, அவர்கள் வந்து சேரவில்லை. மறுநாள் வந்தனர். பக்கம்போடும் அச்சகப்பகுதியிலும் ஒருவரைத் தவிர, தினப்பத்திரிகையில் வேலை செய்த அனுபவசாலிகள் இல்லை. முதல்நாள் காலை ஏழு மணிக்கு அலுவலகம் சென்ற நான், மறுநாள் காலை 4 மணிக்கு வீட்டுக்குத் திரும்பிச் சென்று சாப்பிடுவதற்காக உட்கார்ந்ததும், என் பின்னாலேயே ஒரு பையன் வந்து கூப்பிட்டான். சாப்பிடாமலேயே சென்று வேலையைத் தொடர்ந்தேன்.

முதல்நாள் பத்திரிகை காலையில் வெளிவராமல், மதியம் தான் வெளிவந்தது. இப்படிச் சில மாதங்கள் ஓய்வின்றிப் பலரும் உழைத்தோம். கொழும்பிலிருந்து அனுபவப்பட்ட உதவி ஆசிரியர்கள் வந்தனர். ஆனால், அவர்களுக்கு யாழ்ப்பாணம் புதிது. இதன்பின் இருவாரங்க ளில் தமிழரசுக கட்சியின் - வரலாறு படைத்த மக்கள் எழுச்சியான சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கியது. இச்சமயத்திலும், முதல்நாள் பிந்திய பதிப்பு வெளியிட்டு மக்களுக்கு முந்திச்செய்தி கொடுத்து, அவரகளின் பாராட்டையும் ஆதரவையும் பெற்றோம்.

பின்னர், கோகிலாம்பாள் கொலை வழக்கு விசாரனையும் 'ஈழநாடு' பெயர் பெறக்காரணமாக அமைந்தது. இனி விரித்துச் சொல்லத்தேவையில்லை! தமிழீழத்தின் முதல் தமிழ்த் தினப்பத்திரிகை என்ற பெயரை 'ஈழநாடு' பெற்றது. தமிழீழத்தின் முதல் தினப்பத்திரிகையாளன் நான்தான் என்பதையும் பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும். ஒரு தினப்பத்திரிகையை வெற்றிகரமாக வெளிக் கொணர முடியுமா என்று கேட்ட, யாழ்ப்பாணத்திலிருந்துதான், இன்று நான்கு தினப்பத்திரிகைகள் வெளிவந்து வெற்றி நடைபோடுகின்றன. தங்கராஜா - சண்முகரெத்தினம் என்ற அபூர்வ சகோதரர்களுக்கு இப் பத்திரிகைகள் நன்றி சொலல வேண்டும்.

'நமது ஈழநாடு' மறுபிறவி எடுத்து வந்த 'ஈழநாடு' என்றே சொல்லலாம். பழைய 'ஈழநாடு' கடைசிக் காலத்தில் பல்வேறுபட்ட நிர்வாகச் சிக்கல்கள், நெருக்கடிகள் காரணமாக அதன் செல்வாக்கை இழந்தது. இன்று மறுபிறவி எடுததுள்ள 'நமது ஈழநாடு' சிறந்த நிர்வாகத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வாழ்க நமது ஈழநாடு! ★



மணிசேகரன்

# 'ஈழநாடு' பிற்கால நினைவுக் குறிப்புரை

ஈழநாட்டின் இறுதிக்காலம் இருண்ட காலத்தோடு தொடங்குகின்றது. 1992 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத் தடை வடக்கு - கிழக்கு மக்களின் கழுத்தைப் பிடித்து நெருங்கியகாலம்.

இந்தக் காலத்தில் அநேக வீடுகளில் அழுகையும், கண்ணீருமாகக் கரைந்த காலம். வீடுகளும் இருள்மயமான கோலம். மண்ணெண்ணெயின் விலை ஒரு லீற்றர் 300 ரூபா விற்பனையானதால், ஜாம் போத்தல் சிக்கன விளக்குகள் வீடுகளில் ஒளிபரப்பிய நேரம். வாகனங்கள் எல்லாம் மண்ணெண்ணையில் ஓடுவதற்கான விஞ்ஞான கண்டுபிடிப்பிற்குரிய காலம்.

இந்தச் சூழ்நிலை நிலவிய காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து தினசரிப் பத்திரிகை வெளிவிடுவது என்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை - ஈழநாடு வெளிவந்ததை ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த நேரத்தில் ஈழநாடு ஆசிரிய பகுதியை அலங்கரித்தவர்கள் மகாதேவன், யோகநாதன், சிவகணேசன் பெஞ்சமின், துரைசிங்கம் போன்றவர்கள் பொறுப்பாளராக இருந்தார்கள்.

நிர்வாகப் பகுதி முகாமையாளராக திருச்சிற்றம்பலம் கடமை புரிந்தார். கண்டிப்பானவர். நிர்வாகத்தைச் சட்டப்படி நடத்தியவர். இதனால், பல எதிர்ப்புக்களைச் சம்பாதித்தவர்.

இந்தக் காலத்தில் கோட்டையிலிருந்து ஷெல் நகரை அண்டிய பிரதேசங்களில் விழுந்து வெடிக்கும். வேலை பார்த்த நாம் எல்லோரும் கட்டடத்தின் மாடிப்படிகளுக்குக் கீழே மறைந்திருந்துவிட்டு, மீண்டும் வேலை தொடங்கி, பத்திரிகையை உருவாக்குவதில் ஈடுபடுவோம்.

பத்திரிகைத் தாளும் அந்தக் காலத்தில் ஒரு றீம் 3000 ரூபாவாகவும், அதுவும் எங்கேயாவது தேடிப்பிடித்து விலைக்கு வேண்டவேண்டும். பத்திரிகைத்தாள் யாழ்ப்பாணத்தில் கிடைக்காததினால் ஒருகாலத்தில் பாடசாலை மாணவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட சீ.ஆர். கொப்பிகள், பிறவுண் பேப்பர், தடித்த மட்டைகள் ஈழநாடு அச்சடிப்பதற்குப் பாவிக்கப்பட்டது என்ற பஞ்சமான காலத்தை எப்படி மறக்கமுடியும்.

அப்பொழுது பத்திரிகைகளுக்குச் செய்தி சேகரிப்பது என்றால், வானொலிதான் முக்கிய பங்கு வகித்தது. எமது நிறுவனத் தில் அன்று மூன்று வானொலிப் பெட்டிகள் இருந்தன. ஒன்றில் பூபாலசிங்கம் என்பவரும் அடுத்த வானொலிப்பெட்டியில் கணேசராசாவும், மற்றதில் நானுமாக இருந்து செய்திகளை எழுதிக்கொடுப்போம். அவ்வப்போது விமானங்கள் குண்டுபோடும். இந்த அவலங்களும் செய்தியாக அடுத்த நாள் பத்திரிகையில் வெளிவரும்.

சிலநாட்களில் அடுத்த நாளுக்குரிய பத்திரிகை முதல்நாள் 12 மணிக்கு முன்பே அச்சிடப்பட்டும் இருக்கின்றன.

அந்தக் காலத்தில் வெளிவந்த ஈழநாடு பத்திரிகையைப் பார்த்தபோது, அந்தக் காலத்துக்குரிய வரலாறுகளை எடுத்தியம்பும் எழுத்துக்கள் எல்லாம் தேய்ந்து ஒரே கருமை நிறமாக இருந்து எழுத்துக்கள் கொழும்பிலிருந்து கொண்டு வரமுடியாது.

பின்பு சொற்பகாலத்துக்குப் பின்பு ஊழியர்களால் ஈழநாடு வெளியிடப்பட்டது. இந்த நேரத்தில் காசாளராக இருந்த கனகசபாபதி ஐயர் முகாமையாளராகவும், அச்சகப் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கமும் பொறுப்பேற்று நடத்தினார்கள். பின் பட்டயக் கணக்காளர் செல்வேந்திரா ஈழநாட்டைப் பொறுப்பேற்று நடத்தினார். இந்தக் காலகட்டத்தில் பிரதம ஆசிரியராக இருந்தவர் சட்டத்தரணி தியாகராசா ஆவார். செல்வேந்திரா அவர்களால், அவர் காலத்தில் ஈழநாடு வாரமலர் வெளிவந்தது. அதற்கு நான் பொறுப்பாக இருந்தேன். வெளியிட்ட பத்திரிகை ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட தொகையோடு ஐந்நூறு, ஐந்நூறுக்குக் கூடுதலாக விற்பனையாகி வந்தது. மக்களிடையே பெரும் வரவேற்பும் இருந்தது.

இதன்பின்பு - 30 ஆம் திகதி, ஒக்டோபர் மாதம், 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலம் வருகின்றது. இயந்திரங்களையும், உடைமைகளையும் விட்டு விட்டுத் தப்பியோடிய நாங்கள் ஒரு சந்தர்ப்பத்தில் எல்லோரும் வந்து இயந்திர உபகரணங்களை எடுத்துக் கொண்டு - சாவகச்சேரி, கெருடாவில் அ.த.க. பாடசாலையில் பத்திரிகையை வெளியிடுவதற்கான ஒழுங்குகள் செய்து வெளியிட்டோம். அந்த நேரத்தில்கூட, முன்பு கடமையாற்றிய ஆசிரிய பகுதி ஊழியர்கள் தான் கடமை பார்த்தார்கள். பத்திரிகைகளைக் குறைவாக அச்சிட்டு சில மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்புவோம்.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி இராணுவம் தென்மராட்சிக்கு வந்தபோது, பல இடர்களைச் சந்தித்தோம். பத்திரிகையில் கடமை புரிந்தவர்கள் ஆங்காங்கே சென்றுவிட்டார்கள். கெருடாவில் அ.த.க.பாடசாலையில் அச்சியந்திரமும் மற்றும் உபகரணங்களும் அப்படியே கிடந்தன. இருந்தபோதிலும், 200 யார் தூரம் இராணுவம் நிலைகொண்டிருந்தும், அந்த அச்சு இயந்திரங்களைக் கழட்டி, கிளாலியூடாக வன்னிக்குக் கொண்டு வந்து, முருகண்டி அ.த.க.பாடசாலையில் மெசினைப் பூட்டிப் பத்திரிகை அடித்தோம். இந்த நேரத்தில் ராதேயின், கணேசலிங்கம் ஆகியோர் ஈழநாட்டில் இணைந்து, பல புதுமைகளைப் புகுத்தி, ஈழநாட்டின் வளர்ச்சிக்கு உந்துகோலாக இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் முல்லைத்தீவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளின் கையில் விழ, போர் உக்கிரமாக இடம்பெற்றது. அந்த நேரத்தில ஈழநாடு - சில நாட்களில் காலைப் பதிபபோடு, மாலைப் பதிப்பும் வந்து, மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்ததென்பதை நினைக்கும்போது, மனதில் ஒருவித சந்தோ'ம் குடிகொள்கிறது. இதன்பின்பு, இலங்கை இராணுவம் கிளிநொச்சியைக் கைப்பற்றுகிறது. அங்கிருந்து வரும் ஷெல்கள், விமானக் குண்டுகள் மத்தியில் நாம் பத்திரிகை வெளியிட்டிருந்தபோதும், மீண்டும் இடப்பெயர்வு.

இதனால் மாங்குளம், பனிக்கங்குளம் பகுதியில் எமது பத்திரிகையை அச்சடிப்பதற்கு ஒழுங்கு செய்தோம்.

எமது அலுவலகம் அடர்ந்த காட்டுப் பகுதியில் - ஐந்தாறு ஓலைக் கொட்டில்களை நிறுவி எமது ஈழநாடு பத்திரிகையை அச்சிட்டோம். அந்த நேரங்களில் 100 யார் தூரத்துக்கப்பால், யானைகள் சென்று கொண்டிருக்கும். சிறுத்தைப் புலிகள் எமது நிறுவனத்தை எட்டிப் பார்த்துவிட்டுச் செல்லும். நச்சுப்பாம்புகள் எமது கால்களுக்கக் கீழே ஓடிக்கொண்டிருக்கும்.

இதைவிட, முக்கிய பிரச்சினை சக்கரைப் பாண்டியனின் தொல்லை. மின்சார வெளிச்சத்துக்குக் கடகக் கணக்கில் வந்து குவியும். மெசின் ஓடுவதற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும். அங்கு கடமை பார்த்தவர்கள் காதுகளுக்குள் கடதாசியை அடைத்துவிட்டு, கடமைகளை மேற்கொண்ட சம்பவங்கள் மறக்க முடியாதவை.

இந்த நேரத்தில் தான் இராணுவத்தின் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது. எமது ஈழநாடு பத்திரிகை புதுக்குடியிருப்பு நோக்கி இடம்பெயர்ந்தது. வேரவில் என்ற காட்டுப் பகுதயில் அங்கு வேலை பார்த்த ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து, பல வசதிகளைச் செய்து, அங்கிருந்து பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. இறுதியில் ஒரு கட்டத்தில் ஈழநாடு தினசரி நிறுத்தப்பட்டு, ஈழநாடு வாரமலராக வெளிவந்தது. இருந்தபோதிலும், 'நமது ஈழநாடு' தற் போது வெளியாவதால், பழைய ஈழநாடு கவலைகள் மறந்து, ஒரு திருப்தியை என்னால் இப்போது காணமுடிகிறது. ★

## பொருளாதாரம்

# வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்தியும் சிறு கைத்தொழில் துறையின் முக்கியத்துவமும்

சுபோதினி இராஜகோபால்

**இக்கட்டுரையானது மிகச் சுருக்கமாக வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் சிறுதொழிற்துறையின் முக்கியத்துவத்தையும், நேரடியாக அவதானிக்கப்பட்ட பிரச்சினைகளையும் முன்கொணரமுனைகின்ற அதேசமயம், முறையான திட்டமிடலுக்கு பிரதேசரீதியான புள்ளிவிபரங்களும் தனித்தனியாக ஆராய்ந்து, அதற்குரிய வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே இத்துறையை வளர்த்தெடுக்க முடியுமென வலியுறுத்துகின்றது.**

ஆரம்பத்தில் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பின்பற்றி, தங்களுடைய நாட்டின் அபிவிருத்தியில் பாரிய தொழிற்துறைக்கே முதலிடம் கொடுத்தன. ஆனால், உண்மையில் பிறிதொரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை, எவ்வித மாறுதல்களுமின்றி நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியப்படாத ஒன்றாகவே இருப்பதுடன், அத்திட்டங்கள் காலப் போக்கில் கேள்விக்குறியாகும் என்பதும் வெளிப்படை.

ஏனெனில் சமூக, பொருளாதார பாகுபாடுகள், மனித மூலவள வேறுபாடுகள், தொழிலாளர்களின் திறமை, தொழில்நுட்ப அறிவு, மனோபாவம், மூலதனத்தின் அளவு போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனாலேயே இவ்வாறு நிகழ்கின்றது.

அத்துடன், குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஏற்படுத்தக்கூடிய தொழிற்துறைகளில் சில வளர்ந்துகொண்டு செல்ல, ஏனையவைகள் பின தங்கிவிடுவதையும் அல்லது வளர்ச்சி வேகம் குறைவடைகின்றமையும் தொழிலுக்குத் தொழில் மட்டுமல்ல, நாட்டுக்கு நாடுகூட வேறுபட்டே காணப்படுகின்றது.

இந்த வகையில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களை எடுத்து நோக்குவோமாயின், இப்பிரதேசம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக **தொழிலின்மை,**

**வறுமை இருப்பதனை நாம் அவதானிக்கமுடியும். இவ்விரு பிரச்சினைகளுடன்,**

**வளங்கள் பிரதேசமெங்கும் பரந்துபட்டு அமைந்திருப்பது,**

**மூலதன அளவு குறைவாக இருப்பது,**

**பருவகால வேலையின்மை,**

**தொழிலாளர்களின் பெரும்பகுதி விவசாயம், கடற்தொழில் வியாபாரத்திற்கு இடையே பிரிக்கப்பட்டிருப்பது,**

**சந்தையின் அளவு குறைவாக இருப்பதனால், உற்பத்தியின் அளவு குறைவாக இருப்பது,**

**உள்ளூரில் உற்பத்தி மேற்கொள்ளக்கூடிய பொருட்களைப் புறக்கணித்து அல்லது அவற்றுக்கு சலுகைகள் வழங்காமல், இறக்குமதி செய்யப்படுவது.**

**தொழிலாளர்களின் - தொழில்பயிற்சி திறமை** போன்ற விடயங்களைக் கருத்தில் எடுக்கும்பொழுது, சிறுதொழில் துறையே எமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்குப் பொருத்தமான துறையாகக் கொள்ளமுடியும். ஏனைய துறைகளைவிட, புரட்சிகரமான மாறுதல்களுக்கு சாத்தியமான ஒரு துறையாகவும், தேசிய உற்பத்திக்கு, வேலைவாய்ப்பிற்கு, வருமானப் பகிர்விற்கு வளங்களின் முழுமையான பயன்பாடு போன்றவைகளுக்கு பெரும் பங்களிப்பு வழங்கமுடியுமாகையால், அபிவிருத்தி மீது சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தவல்ல ஒரு துறையாக நாம் சிறுகைத் தொழிற்துறையைக் கருதமுடியும்.

பொருளாதாரத்தின் தாக்கங்களை ஏற்படுத் தக்கூடிய இத்துறையின்,

**பங்கினைப் பற்றிய தெளிவான பார்வை.**

**இத்துறையின் முக்கியத்துவம்.**

**தற்போதைய நிலை.**

**அதனுடைய பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதுடன்,**

இத்தொழிற்துறையை ஏற்று நடத்தும் தொழில் முயற்சியாளர்களின் பங்கு, பிரச்சினைகள் பற்றியும் அறிந்துகொள்வது இத்துறையை முன்னேற்றுவதற்கும், பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் அடிப்படையாக அமையும்.

உண்மையில், சிறுதொழில் துறைக்கு வரைவிலக்கணம் வழங்கமுடியாவிட்டாலும், அதனை எடுத்து விளக்கமுடியும். இதற்குக் காரணம் - கைத்தொழிலுக்கான சூழல், முதலீட்டின் அளவு, ஈடுபடுத்தப்படும் இயந்திரங்களும் தொழில்நுட்பங்களும், மனித உழைப்பின் தேவை, முதலிடப்பட்ட சொத்துக்களின் அளவு, எதிர்பார்க்கப்படும் புரள்வு போன்றவை வேறுபடுவதே ஆகும். எனினும், பொருளாதார வார்த்தையில் விளக்குவதாயின், குறைந்த வளவு சந்தைவாய்ப்பைக் கொண்டது. உரிமையாளரின் கருத்துக்களே, முகாமைத்துவத்தின் சகல பகுதிகளிலும் வியாபித்திருக்கும் திட்டமிடப்படாத முகாமைத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும். முக்கிய முடிவுகளில் வெளித்தலையீடுகளற்ற நிலை என விளகக முடியும்.

ஒரு சிறுகைத்தொழில் முயற்சியை ஆரம்பித்து- அபிவிருத்தி செய்வதுடன், சம்பந்தப்பட்டதாக முக்கிய ஐந்து கட்டங்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். எந்தவொரு முயற்சி தொடர்பாகவும் இந்தக் கருத்துகோளை அடையாளம் காண்பதுடன், இதனை வர்த்தகத்துறையின் சுழல்வட்டம் எனக் குறிப்பிடக் கூடியதாகவுமுள்ளது. அவையாவன -

1. **தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னரான கட்டம்.**
2. **தொழிலை ஆரம்பிக்கும் கட்டம்.**
3. **தொழிலை நிலைநிறுத்தும் கட்டம்.**
4. **தொழிலை வலுவூட்டி, அதனை வேரூன்றச் செய்யும் கட்டம்.**
5. **தொழிலை நவீனமயமாக்கும் கட்டம்.**

ஆனால், அனைத்து சிறுதொழில் முயற்சிகளும் இந்த வட்டத்தினூடாக கடந்து செல்லும் எனக் கூறமுடியாது. தொழிலின் இயல்புப் புதுமைகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஆபத்துகளை (Risk) ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை, புதிய துறையில் பிரவேசிக்கக்கூடிய அதன் வாய்ப்பு, முகாமைத்துவ அடித்தளம், பிரச்சினைகளைக் கையாளும் தன்மை, கடின உழைப்பு மற்றும் சந்தைப்படுத்தும் திறன்கள் போன்றவைகள் இவ்வட்டத்தின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றவையாக உள்ளன.

இதனடிப்படையில், எமது பிரதேசத்தில் சிறுகைத்தொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பித்து நடத்தும் முயற்சியாளர்களிடம், பின்வரும் குறைபாடுகள், பிரச்சினைகள் இருப்பதனை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**தொழில்முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர், தொழிலைப் பற்றிய தெளிவான அறிவின்மை.**

**தொழிலை ஆரம்பித்த பின்னர், அத்துறை சார் திறமைகள், நுட்பங்கள், அறிவு போன்றவற்றை வளர்த்துக்கொள்ளத் தயங்குவது அல்லது அலட்சியப்படுத்துவது தொழிலுக்கான வாய்ப்புக்கள், சந்தைப்படுத்தல் பற்றிய அறிவின்மை.**

**நுகர்வோர், வழங்குநர் பற்றிய தெளிவின்மை.**

**இறக்குமதி செய்யப்பட்ட போட்டிப் பொருட்களுடன் முகங்கொடுக்க முடியாமை.**

**தொழிலை விஸ்தரிப்பதற்கான நிதி இருப்பினும், தனிப்பட்ட ஒரு சில தடைகளை ஏற்படுத்துவதனூடாக வெற்றியடைவதிலிருந்து நழுவும் தன்மை.**

**நிதியற்ற தன்மை.**

**உள்ளீடுகளைப் பயன்படுத்துவதில் சரியான முறையில் முகாமைத்துவம் இடம் பெறாமை.**

**உரிய முறையில் சந்தைப்படுத்தாமை.**

இவற்றுடன், எம்மக்களிடையே இத் தொழில் துறை சார்ந்த மனோபாவத்தையும் கருத்தில் எடுத்தல் வேண்டும். எனெனில், சிறுகைத் தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதோ அல்லது அததுறையில் வேலைவாய்ப்பைப் பெறுவதோ, ஆரோக்கியமானதாக வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் கைக்கொள்ளப்படுவதில்லை.

எனவே, இக்குறைபாடுகள், பிரச்சினைகளுடன் வட - கிழக்குப் பிரதேசத்தை எடுத்து நோக்குவோமாயின், பாரிய தொழிற்துறையைவிட, சிறிய தொழிற்துறையே உகந்ததாக அமைந்துள்ளமையும், தொழில் முயற்சியாளர்களிற்குத் தேவைப்படும் ஆலோசனைகள், தொழில்சார் அறிவு போன்றவைகள் வழங்கப்படவேண்டி உள்ளதை நாம் காணமுடியும்.

அதேசமயம், சிறுகைத்தொழில் பற்றிய விளக்கங்கள், சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் சமூக, பொருளாதார முக்கியத்துவங்கள் மக்களை சென்றடைவது மிக முக்கியமானதாகும். ஏனெனில், சிறுகைத்தொழில் துறையானது கிராமங்களிலும், நகரங்களிலும் ஆரம்பித்து நடத்தப்படக் கூடியவையாக அமைந்திருப்பதே இதன் முக்கியத்துவத்தை அதிகரிப்பதாக உள்ளது.

ஆகவே, எமது பிரதேசத்தின் அபிவிருத்திக் கும், தொழில் முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கும் முன்னோடியாக,

**பிரதேசரீதியாக சிறுகைத்தொழில் பற்றிய முழுமையான புள்ளிவிபரங்களைப் பெறுதல்.**

**வளங்களை அடையாளம் காணல்.**

**ஏற்கனவே நடைபெறும் தொழில் முயற்சிகளின், தொழில்ரீதியான பிரச்சினைகளை அணுகுவதற்கு வழிகாட்டல்.**

**தொழிலை விரிவாக்குவதற்கான வசதிகளை வழங்கல்.**

**மக்களுடைய தொழில் முயற்சியாளர்களின் மனோபாவத்தை மாற்றுவதற்கு உதவக்கூடிய சஞ்சிகைகள், கருத்தரங்குகளை நடத்துதல்.**

**ஏனைய துறைகளுடன், சிறுகைத்தொழில் துறையினை இணைத்தல்.**

**சிறுகைத்தொழில்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு.**

ஆகியவற்றினூடாக வடக்கு - கிழக்குப் பிரதேச அபிவிருத்தி, சிறுகைத்தொழிற்துறையினூடாக சாத்தியமாக அமையும் எனக் கூற முடியும்.

தனது வளர்ச்சிப் பாதையில் முதலாவது அகவையை நிறைவு செய்யும் "நமத் ஈழநாடு" தினசரிக்கு எமது இனிய நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



## திருமறைக் கலாமன்றம்

**Centre for Performing Arts**

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
Tel & Fax 021 - 222 2393
Website: www. cpateam. org
E.mail: cpajaffna @ eureha.lk.

(சி.1606)



## நமது ஈழநாட்டுக்கு எமது வாழ்த்துக்கள்

இதமான புகை இன்பத்திற்கு **ஆர்.வி.ஜி பீடிகள்**

நீங்கள் நாடவேண்டிய இடம் ஆர்.வி.ஜி பீடி ஸ்தாபனம்

58, நல்லூர் வீதி, குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துகள், பால்மா வகைகள் யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## ஆர்.வி.ஜி மெடிக்கல்ஸ்

504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி.1572)



முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நமது ஈழநாடு மேலும் சிறப்புப்பெற வாழ்த்துகின்றோம்



✦ ஓவ்(f)செற் பிறின்ரிங்,
✦ ஸ்கிறீன் பிறின்ரிங்

போன்றவற்றை நவீன முறையிலான கணனி வடிவமைப்புடன் குறித்த நேரத்தில் சிறந்த தரத்துடன் செய்து பெற்றுக்கொள்ள



## ஸ்ரீராம் ஓவ்(f)செற் பிறின்ரேர்ஸ்

250, பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.



☞ அத்துடன் ஓவ்(f)செற் பிறின்டிங் மூலப்பொருட்கள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



அகவை ஒன்றைப் பூர்த்தியாக்கும் "நமது ஈழநாடு" நாளிதழ் ஆக்கபூர்வமான விடயங்களை சமூகத்திற்கு நல்கி என்றும் நின்று வளர வாழ்த்துகின்றோம்.

## புதிய உயர் கல்லூரி

**G.A.Q வெளிவாரி (யாழ், பேராதனை)**
**புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன.**
**1st in Com. [English Madium]**
**புதியபிரிவு ஆரம்பம்:– 04.10.2003**
**காலை - 9 மணி.**

பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு
S.அருள்நங்கை
*புதிய உயர்கல்லூரி,*
*ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்*

(சி.1602)



நமது ஈழநாடு நாளிதழ் நீண்டகாலங்கள் ஒளி வீச எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

## YOGI BEAUTY PARLOUR

அதி நவீன நுட்பங்களுடன் தரமான சேவை



Ladies Herbal Beauty Care & Fitness Centre
*(Academy of Beauty Culture & Hair Dressing)*
"A Golden Opportunity, Step in and Look Best".

"உங்கள் எண்ணத்தில் எங்கள் கை வண்ணம்"

**For Latest**

1. Bridal Make up.
2. Different Facials.
3. Bleaching
4. Waxing
5. Threading
6. Hair Treatments
7. Hair Colouring
8. Hair Perming
9. Hair Rebonding
10. Pimple Treatment
11. Spot Removing.

சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை - வித்தியாசமாகவும், அழகாகவும், திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு எங்களை நாடுங்கள்.

**நீங்களும் அழகுக்கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா?**

எமது அழகு நிலையத்தில் குறுகியகால அழகுக்கலை டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

"Janat" Herbal Cosmetics Creams எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
*MRs. YOGINI SHANMUGANATHAN*
*Dip.in.Cosmetology, Beauty Therapy,*
*Hair Dressing & Home Science. (India, Colombo)*

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.P:- 222 2796

சி.1585)



இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நமது ஈழநாட்டிற்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

## ஐஸ் உற்பத்தி விற்பனவு நிலையம்

கடற்றொழிலாளர்களின் அத்தியாவசிய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விநியோகப்பட்டு வருகிறது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர், கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்,
பருத்தித்துறை.

(சி.1587)



## ராஜ் லங்கா ருவர்ஸ்

### எயார் லைன் ரிக்கற்றிங் அன் ருவர்ஸ்

வெளிநாடு செல்வதற்கு வழி காட்டப்படும்

யாழ். மண்ணில் நமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 6 மாத காலத்தினுள் அதிகப்படியானவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிய பெருமையில்
ராஜ் லங்கா ருவர்ஸ்

வெளிநாடு செல்லும் நீங்கள் முகவர்களிடம் பெரும் தொகை பணத்தை ஒப்படைத்தது மட்டுமல்லாமல், கொழும்பு சென்று தங்கும் அறைகளுக்கும் உணவுச் செலவுகளுக்கும் பெரும் தொகை பணத்தைச் செலவு செய்கின்றீர்கள். எமது சேவை அவ்வாறல்ல. யாழ். நகரில் எமது காரியாலயத்தில் உங்கள் ஆவணங்களை ஒப்படைத்ததும் கொழும்பில் சகல அலுவல்களும் நாமே முன்னின்று செய்து தருகின்றோம். யாழ். நகரில் இருந்தவாறே பயணத் திகதி எம்மால் அறிவிக்கப்படும். இங்கிருந்தே உங்கள் பயணத்தை உரிய நாடுகளுக்கு நீங்கள் மேற்கொள்ளலாம்.

மு.குறிப்பு:- விமானப் பயணிகளின் ரிக்கட்டுகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

**RAAJ LANKA TOURS**

Air Line Ticketing And Tours
220 A, 2nd Cross Street
Hospital Road,
Jaffna.
T.P. : 0212222273
Mobile : 0777686161

சி.1585)

# ஈழம் பற்றிய தொன்மையான சான்றுகள்

பேராசிரியர். சி.க.சிற்றம்பலம்

> 'ஈழ' என்ற பதம் தாங்கி நிற்கும் இரு வாசகங்கள் அண்மைக் கால அகழ்வாராய்ச்சியின்போது, பூநகரியிலுள்ள மண்ணித் தலையில் கிடைத் துள்ளன. இவ்வாசகங்கள் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் (கி.பி. 2 ஆம் நூற் றாண்டளவில்) இங்கு பயன் படுத்தப்பட்ட பானை ஓடுகளிற் காணப்படுகின்றன. இவை முறையே 'ஈழ', 'ஈல' ஆகும். 'ஈழம்' என்ற பதத்திலுள்ள 'ழ'வுக்குப் பதிலாக, 'ள', 'ல' என்ற வடிவங்களும் பயன் படுத்தப்பட்டதை இச் சான்றுகள் மேலும் உறுதி செய்கின்றன. இச்சான்றுகள் மிக முக்கியமா னவையாகும். காரணம் -அநுராதபுரத்திலமைந்த கல்வெட்டில் 'ழ' வடிவத்திற்குப் பதிலாகப் பிராகிருத்தில் உள்ள 'ள' பயன்படுத்தப்பட்டமையைக் கண்டோம். இதற்குக் காரணம், பௌத்தத்தின் மொழியாகிய பாளிப் பிராகிருதம் இப்பகு தியில் பெற்ற செல்வாக்கேயாகும்.

'ஈழம்' என்ற பெயர் - நமது நாட்டிற்கு இடப்பட்ட மிகப் பழைமையான பெயர்களுள் ஒன்று என்பதை இலக்கியத் தொல்லியற்சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. சங்க நூல்களில் ஒன்றாகிய பட்டினப்பாலையில் 'ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இவ்வாறே 'ஈழத்துப் பூதந்தேவனார்', மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் ஆகிய புலவர்கள் பாடிய பாடல்கள் சங்க நூல்களாகிய- அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களிற் காணப்படுகின்றன. இப்பூதந்தேவனார் என்ற பெயர்கள் ஒருவரையே குறித்த தென்றும் இவர் ஈழத்திற் பிறந்ததால் ஈழத்துப் பூதந்தேவனாார் என்றும், இப்புலவர் மதுரையிற் சென்று வாழ்ந்ததால் மதுரை ஈழத்துப் பூதந் தேவனார் என்றும் அழைக்கப்பட்டார் என அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இவரின் பாடல்களில் மூன்று அகநா



னூற்றிலும்[2], மூன்று குறுற்தொகையிலும்,[3] ஒன்று நற்றிணையிலும்[4] காணப்படுகின்றன. இந்நூல்களின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடு அறிஞரிடையே காணப்பட்டாலும்கூட, இந்நூல்களில் காணப்படும் பாடல்கள் கிறிஸ்தாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவை என்று கூறப்படுவதால், இந்நூல்களில் காணப்படும் பாடல்கள் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் 'ஈழம்' என்ற பெயரால், நமது நாடு அழைக்கப் பட்டதையே எடுத்துக்காட்டுகின்றன எனலாம்.

இத்தகைய இலக்கியச் சான்றுகள் மட்டுமன்றித் தொல்லியற் சான்றுகளும், குறிப்பாகக் கல்வெட்டுச் சான்றுகளும் மேற்கூறிய கருத்தினை உறுதி செய்கின்றன. இவற்றில் முதன்மை வகிப்பது பண்டைய சிங்கள அரசின் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்தில் கிடைக்கும் தமிழ் வணிகர் பற்றிய கல் வெட்டாகும்[5]. இக்கல்வெட்டின் காலம் கி.மு. 3 ஆம் அல்லது 2 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என இனங்காணப்பட்டுள்ளது. இது இக்காலத்தில் வழக்கிலிருந்த பிராமி வரி வடிவத்திலெழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தமிழ் வணிகர்களின் 'குழாம்' (கணம்) ஒன்று இத் தலைநகரில் வாழ்ந்து , தமது வணிக நடவடிக்கைளுக்காகப் பயன்படுத்திய மண்டபம் அமைந்த ஒரு பாறையில் கிடைத்துள்ளது. இப்பாறையின் மேலே மரங்களால் அமைக்கப்பட்டிருந்த மண்டபம் அழிந்தபோதிலும், இப்பாறையில் அம் மரத்தூண்களை நாட்டுவதற்கு அமைக்கப்பட்ட குழிகளானவை இவற்றின் மேற்பகுதி மரத்தினால் அமைக்கப்பட்டதை உறுதி செய்கின்றன. இவ்வணிகர்கள் பௌத்த சமயத்தைக் கடைப்பிடித்திருந்தார்கள் என்பதை, இவர்கள் சூடியிருந்த பெயர்களாகிய- சாக, நாசத, திஸ்ஸ ஆகியன எடுத்துக் காட்டுகின்றன. இந்த வியாபாரக் குழுவின் தலைவனாக, கடலோடியாக நாவிகன் குறிப்பிடப்படுகிறான்.

இக்கல்வெட்டின் சிறப்பம்சம் யாதெனில், இதில் காணப்படும் 'ஈள', 'தமெட' ஆகிய பதங்களாகும். இக்கல்வெட்டை வாசித்து விளக்கமளித்த சிங்கள வரலாற்றாசிரியர்கள் 'தமெட்' என்பது தமிழகத்தாரைக் குறிக்கும் பதமாக, இவற்றில் பிரயோகிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட, 'ஈள' என்பதற்குச் சரியான விளக்கத்தினை அளிக்கத் தவறிவிட்டனர். இப்பதம் காணப்படும் சொற்றொகுதியைப் பரணவித்தான 'இலுபரத' என வாசித்து, இது அநுராதபுரத்திலுள்ள ஓர் இடத்தின் பெயராகும் எனக் கூறியுள்ளார்[6]. ஆனால், 'லு' தமிழ்நாட்டில் இதே காலத்தில் வழக்கிலிருந்த பிராமி வரிவடிவமாகிய 'ள' என்பதை ஒத்துள்ளது. ஆகவே, 'இலு' என்பதை 'இள' அல்லது 'ஈள' என்று கொள்வதே பொருத்தமான பாடமாகும். இப்பிராமி வரி வடிவத்தில் குறில், நெடில் வேறுபாடுகள் காணப்படாததால், இந்த வடிவத்தைச் சந்தர்ப்பத்திற்கேற்ப 'ஈள' எனக் கொள்ளலாம்.

ஆதலால், இதனை 'ஈள', 'பரத' என்ற இரு தொகுதிகளைக் கொண்ட தொடராகவே வாசிக்கமுடியும். புத்தசமயத்தின் மொழியாகிய பாளிப் பிராகிருதத்தில் இக்கல்வெட்டு எழுதப்பட்டதாலும், இம்மொழியில் தமிழ்மொழிக்கே சிறப்பான 'ழ' எழுத்துக் காணப் படாததாலும், 'ழ' வுக்குப் பதிலாக 'ஒ' என்ற எழுத்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், கல்வெட்டுக்களின் வழக்காற்றில் 'ழ' வுக்குப் பதிலாக 'ள' வை எழுதும் வழக்கம் காணப்படுவதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. இதன் அடுத்த தொகுதி 'பரத' ஆகும். தமிழ் நாட்டுச்சங்க இலக்கியங்களை உற்றுநோக்கும்போது, 'பரதவர்கள்' பாண்டி நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்தமை தெரிகின்றது. புகழ்பூத்த வசதி படைத்த வணிகர்களாக இவர்கள் விளங்கினர். இதனை உறுதிப்படுத்துவதாகவே ஈழத்தின் பல பாகங்களில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுகளில் இடம்பெறும் 'பத', 'பரத' போன்ற பதங்கள் அமைகின்றன. இதனால், இச்சொற்றொகுதியை 'ஈழத்துப் பரதன்'என வாசிப்பதே பொருத்தமாகும்.

ஈழத்துப் பரதன் என்ற வாசகம் ஏன் இவ்வாறு அமைந்துள்ளது என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இதற்குக் காரணம், இக்கல்வெட்டு இங்கு தமிழக வணிகர்குழாம் (கஹபதி கண) தங்குவதற்குச் சிலரால் அமைக்கப்பட்ட மண்டபம் பற்றியே குறிப்பிடுகின்றது. இதனை அமைத்தவர்களில் ஒருவன் ஈழத்துப் பரதன் ஆவான். இவனைத் தமிழகத்திலுள்ள பரதவர்களிலிருந்து வேறுபடுத்தவே இவ்வாறு அழைக்கப்பட்டான் எனலாம். இதனை அமைத்த மற்றையவன் தமிழகத்துச் சுமணனாவான். இதனை உணர்த்தும் வாசகம் 'தமெட சுமணே' என்பதாகும். அதாவது, 'தமிழகத்துச் சுமணன்' என்பதாகும். இவர்கள் இருவரும் இணைந்துதான் தமிழ கத்து வணிகர்கள் தங்குவதற்கு இத்தகைய மண்டபத்தை அமைத்தனர் என்பது புலனாய்கின்றது. இக்காலத்தில் தமிழர் 'தமள' (தெமள) எனப் பாளி நூல்களில் அழைக்கப்பட்டதை, இந்நூல்களில் காணப்படும் 'தமிள', 'தெமௌ' என்ற சொற்பிரயோகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழுக்குரிய சிறப்பு எழுத்தாகிய 'ழ' பாளிப் பிராகிருத மொழியில் இல்லாததால், 'ழ' வுக்குப் பதிலாக 'ள' அல்லது 'ட' இவற்றுள் பயன்படுத்தப்பட்டது. தமிழ் வணிகர்கள் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் அநுராதபுரத்தில் மட்டும் காணப்படவில்லை. நாட்டின் பிற்பகுதிக ளிலும் இவர்கள் காணப்பட்டதை 'தமெட்' என்ற வடிவம் தாங்கி நிற்கும் வவுனியா[8], திருகோணமலை மாவட்டத்தி லுள்ள சேருவாவில[9], அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுவில்[10] ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.

அநுராதபுரத்தோடு மேற் கூறிய இடங்கள், இன்றைய வட - கிழக்கு மாகாணத்தில் காணப்படுவதால், இக் காலத்தில் தமிழ் மொழி பேசுவோர் இந்நாட்டின் வணிகத்துறையில் பெற்றிருந்த செல்வாக்கினை இவை உறுதி செய்கின்றன எனலாம்[11].

'ஈழ' என்ற பதம் தாங்கி நிற்கும் இரு வாசகங்கள் அண்மைக்கால அகழ்வாராய்ச்சியின்போது, பூநகரியிலுள்ள மண்ணித்தலையில் கிடைத்துள்ளன.[12] இவ்வாசகங்கள் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டளவில்) இங்கு பயன்படுத்தப்பட்ட பானை ஓடுகளிற் காணபடுகின்றன. இவை முறையே 'ஈழ', 'ஈல' ஆகும். 'ஈழம்' என்ற பதத்திலுள்ள 'ழ'வுக்குப் பதிலாக, 'ள', 'ல' என்ற வடிவங்களும் பயன்படுத்தப்பட்டதை இச்சான்றுகள் மேலும் உறுதி செய்கின்றன. இச்சான்றுகள் மிக முக்கியமானவையாகும். காரணம் -அநுராதபுரத்திலமைந்த கல்வெட்டில் 'ழ' வடிவத்திற்குப் பதிலாகப் பிராகிருத்தில் உள்ள 'ள' பயன்படுத்தப்பட்டமையைக் கண்டோம். இதற்குக் காரணம், பௌத்தத்தின் மொழியாகிய பாளிப் பிராகிருதம் இப்பகுதியில் பெற்ற செல்வாக்கேயாகும்.

அத்துடன், தமிழ்மொழிக்கே சிறப்பான எழுத்தாகிய 'ழ' வடிவம்- வவுனியா மாவட்டத்திலுள்ள பெரியபுளியங்கு



ளக் கல்வெட்டு, கிழக்கு மாகாணத்திலுள்ள பம்பரகஸ்தலாவக கல்வெட்டு, தென்மாகாணத்திலுள்ள மங்குள் மகா விகாரைக் கல்வெட்டு ஆகிய கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது[13]. இவ்வாறே இவ்வடிவம் பூநகரியிலுள்ள மட்பாண்ட ஓட்டில் மட்டுமன்றி அநுராதபுரம்[14], திஸ்ஸமகாராம[15] ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற மட்பாண்ட ஓடுகளிலும் பயன் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தமிழ் வரிவடிவத்தின் மற்றுமோர் சிறப்பெழுத்தாகிய 'ன' வடிவமும், திஸ்ஸமகாராமவில் கிடைத்துள்ள நாணயங்களில் இடம்பெற்றுள்ளது. இதனால், பண்டைய ஈழத்தில் தமிழ்மொழி வழக்கிலிருந்தது உறுதியாகின்றது. ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும், தமிழக நாகரிகத்தின் படர்ச்சியே ஈழத்து நாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்டதை உறுதி செய்துள்ளமை ஈண்டு நினைவுகூரற்பாலது.[17]

'ஈழம் பற்றி இறுதியாக நாம் எடுத்துக்காட்டும் கல்வெட்டுச் சான்று - தமிழகத்திலுள்ள மதுரை மாவட்டத்திலுள்ள திருப்பரங்குன்றத்தில் கிடைத்துள்ளது.[18] பிராமி வரிவடிவத்தில் அமைந்துள்ள இக்கல்வெட்டு அவ்விடத்திலுள்ள எருக்காட்டூரில் தங்கியிருந்த ஈழத்து வணிகனான போலாலையன், சமணமதத் துறவிகள் தங்குவதற்கு அமைத்துக் கொடுத்த குகை பற்றிக் கூறுகின்றது. இதில் காணப்படும் 'ஈழம்' என்ற பதம் 'ஈழத்துக் குடும்பிகள்' (ஈழக் குடும்பிகன்) எனக் காணப்படுகிறது குடும்பிகன் என்பது, வணிகர் குழாத்தைக் குறித்து நின்ற பதமாகும். இக்கல்வெட்டில் காணப்படும் 'குடும்பிகன்' என்ற பதமும், அநுராதபுரத்திலுள்ள கல்வெட்டிற் காணப்படும் 'கஹபதி' என்ற பதமும் ஒத்த பொருளுள்ளனவே. அதாவது, செல்வச்செழிப்புள்ள வகுப்பினரைக் குறிக்கும் இப்பதம் இவர்கள் 'குழுக்களாக' இயங்கி வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டதை எடுத்துக் காட் டுகின்றது. அத்துடன், திருப்பரங்குன்றம், அநுராதபுரம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள இக்கல்வெட்டுகள், இக்காலத்தில் வியாபார முயற்சிகளிலீடுபட்டிருந்த தமிழர்களின் ஒரு பகுதியினர் சமண, பௌத்த மதங்களை ஆதரித்ததையும் எடுத்துக் காட்டுகின்றன.

நமது நாடு ஈழம் என கிறிஸ்து பிறப்பதற்கு முன்னருள்ள காலப் பகுதியிலிருந்தே அழைக்கப்பட்டதையும், ஈழத்து நாகரிகம் பழந்தமிழகத்தின் ஒரு கூறே என்பதையும் மேற்கூறிய சான்றுகள் உறுதி செய்கின்றன. சீகள/ சிம்கள என்பது நாட்டின் பெயராக முதன்முதலாகக் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குரிய பௌத்த நூல்களிலும் தென்னிந்தியாவிலுள்ள பௌத்த தலமாகிய நாகர்யுனிகொண்டாவிலுள்ள கல்வெட்டிலும் காணப்படுகின்றது. ஈழத்திற்கான கல்வெட்டுச் சன்றோ எனில் கி.மு.3 ஆம் / 2 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்களில் காணப்பட, கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குரிய நாாட்டின் பெயரான சீகள / சிம்கள என்ற பதம் ஓ இனத்தோடு கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் இணைக்கப்படுகிறது. இது பற்றிப் பிறிதோரிடத்தில் ஆராய்வோம்.

## அடிக்குறிப்புக்கள்

1. சாமிநாதையர், உ.வே., பத்துப்பாட்டு (சென்னை), 1950, பட்டினப்பாலை வரி 190 - 192.

2. விஸ்வநாதன் செட்டியார், மு.காசி., அகநானூறு (பதிப்பு), (திருநெல்வேலி), 1961, செய்யுள் 88, 231, 307.

3. சோமசுந்தரனார், பொ.வே. குறுந்தொகை (பதிப்பு), திரு நெல்வேலி, 1962, செய்யுள் 189, 343 360.

4. சோமசுந்தரனார், பொ.வே. நற்றிணை (பதிப்பு), திரு நெல்வேலி, 1962, செய்யுள் 366.

5. Paranavitana, S.(ed), Inscriptions of Ceylon. Vol I, Early Brahmi Inscriptions. Colombo. 1970, p.7.

6. Ibid., P.Xc.

7.Sitrampalam, S.K.TamilHouseholders Terrace Inscription at Aunradhapure - A Reappraisal Readings in Social Sciences, Essays in honour of Dr. S.K.S.Nathan (ed) Manivasagar, A.V. (Colombo) 1998.

8. Paranavitana, S.Op.Cit.pp.27-28, No.356 - 57.

9. Sudarshna, Seneviratne. ''The Baratas - A case fo Community integration in Early Historic Sri Lanka" James Thevathasan Rutnam Festschift, 1985, (Ed), amerasinghe A.R.B and Sumansekara Bande, Sri Lanka. UNESCO. National Commission (Ratmalana), 1985. p.54, fn.17.

10. Paranavitana, S.op.cit., 1970, p.37.

11. Sitrampalam, S.K. The form Dameda of the Sri Lankan Brahmi Insciptions - A Historical Assessment, Sri Lanka Joumal of South Asian Studies, No.6. New Series 1996/ 1999. pp.48 - 72.

12. புஷ்பரட்ணம், ப.பூநகரி - தொல்பொருளாய்வு, திருநெல்வேலி, 1993. பக. 30 - 40.

13.Karunaratne, Saddhama ngala 'Epigraphia Zeylanica, Vol. VII, Being lithic and other Inscriptions of Ceylon (Colombo) 1984, pp 71 - 91.

14. Wimalasena, N.a. 'A new chronology for the letters appearing on the pottery found near the place in the Citadel of Aunrad hapura'. Paper submitted (in Sinhala) for the section E of the Sri Lanka Historical Association on the occasion of the Multi - Disciplnary International Conference on the occasion of 50 th Anniversary of Independence of Sri Lanka, Feb. 23 - 25, 1998, p.27.

15. Weisshaar, H.J., Roth, H. and Wijeyapala. W.(ed) Ancient Ruhuna - Sri Lanka -German Archaeological project in the Southem Province, Vol. 3 Verlag Phillipp Von zabern - Mainz Am Rhein (2001), p.160.

16. Bopearachchi Osmand and Wickremasinghe, Rajah 'Rohuna - An ancient Civilization Re - Visited - Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trads' (Nugegoda - Colombo) 1999. pp 56 - 59.

17. Sitrampalm, S.K.The Megalithic Culture of Sri Lanka, Unpublished Ph.D.Thesis, University of Pune, 1980.

18. Mahalingam, T.V. South Indian Palaeography, madras, 1974, pp. 130 - 135.

பவுண் பேசாமல் நின்றான். அவள் ஓடிப் போய் மண்வெட்டியை எடுத்தாள். ஐந்தாறு தடவைகள் ஓங்கிக் கிடங்கை வெட்டினாள். அவனிடம், "அதை" மெதுவாக வாங்கிக் கிடங்குக்குள் வைத்து, மண்ணால் மூடினாள். மூடும்போது, புருசனின் ஞாபகம் வந்தது...

அவரை ஒருநாள் பெட்டியோடு வைத்து, இப்படித்தான் மண்ணை அள்ளிப்போட்டார்கள். வசந்தத்தின்ரை புருசன்தான், பவுணின் கைகளைப் பிடித்து, ஒரு பிடி மண்ணை அள்ளிக் கிடங்குக்குள் போட வைத்தவர். அப்ப பவுனுக்கு ஐந்து வயது . பவுண் மண்ணை அள்ளிப் போடேக்கை -



சிறுகதை

# இரண்டாவது அடக்கம்



பவுண் இன்று நல்ல சந்தோஷமாக இருந்தான். ஒரு பூவைப்போல, அவனின் முகம் விரிந்திருந்தது. அவனிடம் அப்படியொரு சந்தோஷத்தை மனோகரி கண்டு, கனகாலமாகிவிட்டது.

அவன் தனது உடுப்புகள் எல்லாவற்றையும் மடித்து மடித்து வடிவாகப் பாய்க்கினில் வைத்துக் கொண்டிருந்தான். கீழ்ச் சொண்டை பற்களால் கடித்துக் கொண்டு, பாய்க்கைத் தூக்கினான். பெரிசாய்ப் பாரமில்லை. நூலுரிந்த பழைய பெற்சீற் கொடியிலிருந்தது, அதையும் எடுத்து மடித்தான்.

அவள் அவனையே கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டு நின்றாள். அவன், அவளைக் காணவில்லை. அவள் பார்வையை மடக்கி, வீட்டுக்குள் எறிந்துகொண்டு போனாள். திரும்பி வரும்போது, கைகளில் சீலைக் கொடி வளையங்களாய் இருந்தது. சீலைக் கொடியைப் பார்த்ததும், 'அது'தான் அவனின் ஞாபகத்தில் வந்தது. கடைசியாக அவன் ஊரைவிட்டு வெளிக்கிடும்போது, "அதை" பக்குவமாய்ப் பொலித்தீன் பைகளால் சுற்றிவிட்டு, சீலைக் கொடியை அவிட்டு, தான் 'அதை' இறுக்கமாகக் கட்டினான். 'அது' சட்டென அவனில் மின்னியது.

ஏழு வருசத்துக்குப் பிறகு, ஊரில் 'அதை' இன்றுதான் அவன் காணப்போகிறான். 'அதை' காணும் சந்தோஷம்தான், அவனில் பூத்துக் கொண்டிருக்கிறது...

மனோகரியும், அவனும் வீட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் படலைக்கரையில் எடுத்து அடுக்கினார்கள். லொறி வந்தால், ஏத்தச் சுகமென்று.

முற்றத்தில் பெரிய கொய்யாமரம், அதை அவன்தான் சந்தையில் வாங்கி வந்தான். சட்டி, பானைகள் கழுவி ஊத்திற இடம் என்றபடியால், நல்ல குளிர்மையாக நிற்கிறது. அதன் கொப்பொன்றில்தான், அவன் தன்ரை பாய்க்கைத் தூக்கியிருந்தான்.

இந்திரா வந்தாள். அவளின் காணியில்தான், இவளவு காலமும் அவர்கள் இருந்தவர்கள். அவர்கள் ஊருக்குப்போவது, அவளுக்குச் சரியான கவலை. படலையில் குவிந்திருந்த சாமான்கள் எல்லாவற்றையும், அவள் வடிவாகப் பார்த்தாள். மடித்து வைக்கிற சின்னத்திருவலை, குடத்துக்குப் பக்கத்தில் இருந்தது, அதனைத் தூக்கினாள். மனோகரி வந்த புதிசில், இந்திரா குடுத்த திருவலை அது.

இனி இந்திராவுக்குச் சரியான கஸ்டம். விழுகிற தேங்காய்கள் எல்லாவற்றையும் பொறுக்க வேணும், மட்டைகளை எடுத்து அடுக்கவேணும் - மாடுகள் நுழைந்தால், கலைக்கவேணும். முற்றத்தில் புல்லுப்பிடிச்சால் செருக்கவேணும் - இவ்வளவு நாளும் மனோகரிதான் அவைகளைச் செய்து கொண்டு வந்தாள்.

விறகு கொத்த, தொட்டியிக்குள் தண்ணி நிரப்ப, கடைக்குப் போகவென்றால், பவுணைத்தான் கூப்பிடுவாள். தடிமன், சழியென்றால், வேதிப்பானையைத் தூக்கவும், பவுணைத்தான் கூப்பிடுவாள்.

உழவு தொடங்கினால்- எருமைகளைக் கலப்பையில் பூட்டிக்கொண்டு, புருசன் வயலுக்குப் போவான். இரவுகளில் வரமாட்டான். அந்தநேரங்களில், துணைக்குப் பவுணைத்தான் கூப்பிடுவாள். ஒரு இரவு மட்டும் தான், அவன் படுக்கப் போனான். அதுக்குப்பிறகு, அவன் மறுத்துவிட்டான். கூப்பிடும் சப்தங்கள் கேட்டால், ஒழித்து விடுவான்.

மரத்தால் விழுந்த மாம்பழங்களையும், சுளைகள் எடுத்த பிலாப்பழங்களையும் தட்டில் வைத்துக்கொண்டு, "பவுண்... பவுண்..." என்று எத்தனை தடவைகள் கத்தினாலும், ஏன் என்று கேட்காமல் இருப்பான்.

"இந்தக் கழுதை யேனிப்பிடி - பிள்ளை குட்டியில்லாதவள்..." மனோகரிதான் வாங்க ஓடுவாள்.

இந்திரா எடுத்த திருவலையைக் கொய்யாவுக்குக் கீழே வைத்துவிட்டு, வீட்டை வடிவாகப் பார்த்தாள், சின்னக் கொட்டில் தேங்காய்கள் போடப் போதுமானது. பின்னுக்குப்போய்த் தென்னைகளைப் பார்த்தாள்.

படலை திறந்து சிவசோதியும், கமலாவும் வந்தார்கள். கமலாவோடுதான் - பவுணும் சந்தையில் மரக்கறி விற்கிறவன். அவனோடு - அவள் நல்லமாதிரி. சந்தை கலையேக்கை அவன்தான், அவளின் சாமான்களைத் தூக்கி வைக்கிறவன். பெரிய சாமான்களேதும் நிறுப்பில் அவன்தான் தூக்கி, தராசில் கொழுவுவான். கமலாவை ஏற்றிக்கொண்டுபோக சிவசோதி சுணங்கினால், அவன்தான் ஏற்றிக் கொண்டுபோய் வீட்டில் இறக்குவான். கமலாவுக்கும், அவன் ஊருக்குப்போவது சரியான கவலை.

கமலாவுக்கு, இந்திரா கிட்டடிச் சொந்தம். சிவசோதி கதைத்துத் தான் - இந்திரா, அவாகள் வீடுகட்டி இருக்க இடங்கொடுத்தவள்.

சிவசோதி மளமளவென வீட்டுக் கூரைகளை அறுத்துக் கொட்டினான் - கப்புகளைப் புடுங்கிப் படலையில் அடுக்கினான். வீடு புடுங்கியதைப் பார்த்ததும், இந்திராவின் முகம் இரைந்து கொண்டு வந்தது. பற்களை நொறுக்கிக்கொண்டு, விழுந்த தேங்காய்களை எடுத்துக் குவித்தபடி இருந்தாள்.

"அம்மா லொறி யெப்ப வரும்?"

அடுக்கிய கப்புகளிலிருந்து கொண்டு, பவுண் கேட்டான்.

"இப்ப வந்திடும்."

சொல்லிவிட்டு, அவளும் தெருவைப் பார்த்தாள். சந்திரனின் லொறி, அவன் லொறியை - அவளுக்குப் பிடிக்கவில்லை. லொறிக்குக் கொடுக்க, அவளிடம் அவளவு காசுகளுமில்லை. பரமேசுவோடு சேர்ந்துதான் போகிறாள், லொறிக்கு எண்ணாயிரம். பரமேசு இரங்கித்தான் சம்மதித்தாள்.

குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. கருக்கலில் தொடங்கிய காற்று. அதன் சிறகுகளில் ஊசிகள் இருக்கவேணும். தூரத்தில் முழக்கங்களும் கேட்டன.

"மழை பெய்தால் 'அது' அப்படியே இருக்குமே?"

பவுண் கேட்டான்.

"பொலித்தீன் உக்காது"

சொல்லிவிட்டுக் கொட்டாவி விட்டான்.

சிவசோதியும், கமலாவும் எழும்பி, வெளியில் போனார்கள். அவர்கள் சந்தைக்குப் போக வேணும். மனோகரிக்கு ஏக்கம் மரத்தைப் போல் வளர்ந்து கொண்டிருந்தது. வீடும் புடுங்கியாச்சு. லொறியில் இடம் காணாதுவிட்டால், வீட்டை விட்டுத்தான் போக வேணும்.

பாதை திறந்ததுக்கு, அவளின்னும் ஊருக்குப் போகவில்லை. முன்பு ஊரைவிட்டு வெளிக்கிடவும் இப்படித்தான். சூட்கேஸ் நிறைய உடுப்புகள், RX நஷனல் செற், லுமாலாச் சைக்கிள், இரண்டு பாலாடு, ஒரு பூனை, நாய் எல்லாவற்றையும் கொண்டு போறதுக்கு வாகனங்களில்லை. ஊரில் நின்ற எல்லா வாகனங்களும், கிளாலிக்கு ஆள்க்களை ஏற்றி, இறக்கிக் கொண்டிருந்தன. கடைசியாகத்தான் மனோகரி, ஞானத்திடம் ஓடினாள்.

லாண்மாஸ்ரருக்கு மூவாயிரம் சொன்னான். குறையென்றவும் குறைக்கவில்லை. சாவகச்சேரிக்கு ஆமி வந்தாப்பிறகுதானிப் பிடி. இதுக்கு முதலென்றால், அறு நூறுக்கும் ஓம்படுவார்கள். கழுத்திலிருந்த இரண்டு பவுண் சங்கிலியைக் கழற்றிக்கொண்டு, வசந்தத்திடம் போனாள், இரண்டு பவுனுக்கும் ஆறாயிரம் என்றாள். மனோகரிக்கு வயிறு எரிந்தது.

ஊரை விட்டு வெளிக்கிடவேணும் என்று, கிடக்கிறதுகளை அரைவிலைக்கு விற்றுத்தான் அநேகமானவர்கள் வெளிக்கிட்டவர்கள். வாங்கிறவர்களுக்கு ஒரு மனச்சாட்சியுமில்லை. மனோகரி ஆறாயிரம் ரூபாவை வாங்கிக் கொண்டு வந்தாள்.

ஞானம் லாண்மாஸ்ரரைக் கொண்டு வந்து, படலையில் நிறுத்தினான். பவுண் "அதை"வடிவாக இறுக்கிப் பிடித்துக் கொண்டு, பெட்டிக்குள் ஏறினான். அவள் பாய்க்குகளை மளமளவென்று ஏற்றினாள். பவுண் 'அதை' கீழே வைக்கவில்லை. கால்களில் மிதிபடுமென்ற பயம். இரண்டு பாலாட்டையும், ஞானம் தூக்கிப் பெட்டிக்குள் விட்டான். பவுண் ஒரு கையால், அதன் முதுகுகளை எட்டித் தடவினான். அதுகள் தலைகளால், அவனின் கையை உரசிக்கொண்டிருந்தன.

ட்ரைக்டர் ஒன்று வந்தது. அதில் தணிகாசலமண்ணையிருந்தார். பெட்டி நிறையச் சாமான்கள்- நேற்று வெளிக்கிட்டவர். வீட்டுக்காரரை விட்டுத் தனிய வாறார். அவள் ட்ரைக்டரை மறித்தாள் - நின்றது.

"என்னண்ணை...?"

"சனங்கள் அங்கை நம்பீட்டுது. சமாணுகள் ஒண்டையும் போட்டிலை, ஏத்தேல்லை. வீட்டுக்காரரை அனுப்பிப் போட்டன். இனி, நான் தனியத் தானிஞ்சை."

சொல்லும்போது, கவலை தொண்டைக்குள் வந்தது. அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பவுண் 'அதை' நெஞ்சோடு அணைத்துக்கொண்டு இறங்கினான். அவனுக்கு 'அதை' விட்டுவர மனமில்லை.

அவள் ஒரு பாய்க்கை மட்டும் தூக்கிக்கொண்டு, மிச்சச் சாமான்களோடு, இரண்டு பாலாட்டையும் சேர்த்துத் தணிகாசலமண்ணையிடம் கொடுத்தாள். அவர் கயிறுகளில் பிடிக்க, ஆடுகள் இரண்டும் கத்தியது. பாய்க்குகளைத் தூக்கி, ட்ரைக்டரில் போட்டார்.

ட்ரைக்டர் வெளிக்கிட்டது. தணிகாசலமண்ணை ஆடுகளை இழுத்தார். நாயும், ஆடுகளுக்குப் பின்னால் போக, நாய்க்குக் காலை ஓங்கினார் -

"அம்மா 'இது'..."

பவுண் கேட்டான்.

மனோகரி 'அதை', அவரிடம் கொடுக்கவில்லை. 'அதை'யும் பக்குவமாகக் கொண்டு போகமுடியாது - சன நெருசல். அலைகள் அடித்து, உப்புத்தண்ணி பட்டால், 'அதை' எறிய வேண்டிவரும்.

அது காலங்காலமாக, அவர்களுடன் இருக்கவேண்டியது என்பதை நினைத்தவள்.

"வேம்புக்குக் கீழை தாப்பம் - எப்பவோ ஒரு நாளைக்கு வருவம்தானே..."

பவுண் பேசாமல் நின்றான். அவள் ஓடிப் போய் மண்வெட்டியை எடுத்தாள். ஐந்தாறு தடவைகள் ஓங்கிக் கிடங்கை வெட்டினாள். அவனிடம், "அதை" மெதுவாக வாங்கிக் கிடங்குக்குள் வைத்து, மண்ணால் மூடினாள். மூடும்போது, புருசனின் ஞாபகம் வந்தது...

அவரை ஒருநாள் பெட்டியோடு வைத்து, இப்படித்தான் மண்ணை அள்ளிப்போட்டார்கள். வசந்தத்தின்ரை புருசன்தான், பவுணின் கைகளைப் பிடித்து, ஒரு பிடி மண்ணை அள்ளிக் கிடங்குக்குள் போட வைத்தவர். அப்ப பவுணுக்கு ஐந்து வயது . பவுண் மண்ணை அள்ளிப் போடேக்கை -

"அப்பா..."

என்றபடி கிடங்குக்குள் விழுந்தது, அவளின் கண்களுக்குள் வந்ததும் 'பவுண்...' என்று, அவனை இறுக்கிக் கட்டிப் பிடித்தாள்.

பவுண் - அப்பா பிள்ளை - அவனுக்கு எந்தநேரமும் அப்பாதான் வேணும். விடிய

நித்திரை விட்டு எழுந்ததும், "அப்பா..." என்று தான் கூப்பிடுவான். அப்பா வராதுவிட்டால், உரத்துக் கத்துவான். அவர் கடலுக்குப் போய்விடுவார். வரப் பத்து மணியாகும். கடை யில் வாங்கி வந்த பல்லிமுட்டை இனிப்புகள் எப்பவும் போத்தலுக்குள்ளிருக்கும். அவை களை எடுத்துவந்து, விறாந்தையில் பரத்தி விடுவாள்.

இனிப்பைக் கண்டால், அவன் அழமாட் டான். ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சாப்பிடக் கனநேரமெடுக்கும். அதற்குள் காலைச் சாப் பாட்டை, சமைத்து முடித்து விடுவாள்.

அப்பா வருவதைக் கண்டால், படலைக்கு ஓடிப்போவான். பையில் மீன் கொண்டு வரு வார். அதைப் பூவரசில் தூக்கிவிட்டு, அவ னைத் தூக்குவார். தூக்காதுவிட்டால், மண் ணில் விழுந்து புரளுவான்.பூவரசம் இலை யை ஆய்ந்து, குழல் செய்து ஊதக்குடுப்பார். ஊதிக்கொண்டு திரிய, அவர் குளித்துவிட்டுச் சாப்பிடக் குந்துவார். அவன் ஓடிவந்து, பக்கத திலிருப்பான். அவித்த முட்டையை எடுத்து, அவர்- அவனுக்குத் தீத்துவார்.

"நீ இப்பாத்தானே, கக்கிக் கக்கித் திண் டனி ....."

சின்னச் சினப்போடு, அவனைத் தூக்கு வாள்.

"அப்....பா.." என இடறிக் குதித்து, இறுக் கித் தோளைக் கட்டிப்பிடிப்பான். சாப்பாட் டைப் பாதியில் நிறுத்திவிட்டு, அவனைத் தூக கிக்கொண்டு வெளியே போவார்.

"அப்பா காவடி..."

முருகன் கோயிலில் ஆடிய காவடியைப் போல, தன்னையும் தோளிலிருத்தி ஆடச் சொல் லியழுவான். அழத்தொடங்கினால், மூச்சை நல்லா அடக்கி வைத்திருப்பான். அந்தப் பயத்தில் முற்றத்தில் நின்று கொஞ்ச நேரம் ஆடுவார். அவருக்கு - அவன் அழக்கூடாது. பத்து வருசமாகப் பிள்ளையில்லாமலிருந்து, கடைசியில் தூக்குக்காவடி எடுத்தவர்.

ஆடிக் களைத்தவுடனை, தோளால் அவனை இறக்கிக் கொண்டு, விறாந்தைக்கு ஓடிப்போவார். பகல் நித்திரை அடித்தால் தான், இரவுக்குத் தொழிலுக்குப் போகலாம். அவன் படுக்க விடமாட்டான்.

"அப்பா... பாப்பா ..." சிணுங்குவான். கோழியைப் பாக்காட்ட, கோழி ஓடிவரும்.

"உதுதான் பாப்பா...?" சொல்லிவிட்டுச் சிரிப்பார். " அம்மாப் பாப்பா" என்று கத்து வான். அவனைத் தூக்கி நெஞ்சோடு அணைத்து, " மூக்குப் பாப்பா.... மூக்குப் பாப்பா ....."

மூக்கை அவனின் வாய்க்கு நேரே நீட்டு வார். அவன் மூக்கில் இறுக்கிக் கடித்து விட்டு, பெரிய சப்தமாய்ச் சிரிப்பான், சிரிக்கக் கட்டிப்பிடிப்பார். அதுக்குப்பிறகு, அவன் ஒன்றும் பேசமாட்டான். சப்தங்களெதுவுமில் லாதுவிட்டால், குசினிக்குள்ளிருந்து மனோ கரி, அவனைக் கூப்பிடுவாள். அவனுக்கு ஒழித்து விளையாடுவதென்றால், நல்லாய்ப் பிடிக்கும். அவள் வந்து தேடுவதற்காக, அப் பாவின் கால்ச் சாரத்தை உயர்த்தி, அதுக் குள் தலையை மறைப்பான். அவனின் சின் னக் கைகள், அவரின் துடைகளில் முட்டுப் பட, அவர் திக்குற்று எழும்புவார்.

அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை. அப்ப பவுண் நேசறியில் படித்தவன். காலை யில் அவனை நேசறியில் கொண்டு போய் விட்டால், அப்பா தொழிலால் வரும் போது தான் கூட்டிக் கொண்டு வருவார். அன்று கனநேரமாகியும் அவரைக் காணவில்லை . கடலில் ஏதோ குழப்படியென்று, ரேடியோ மூலம் அறிந்திருந்தாள். அறிந்த நேரத்திற்குப் பிறகு, அவள் வேலைகள் ஒன்றும் செய்ய வில்லை. அவர் வரும் வழியைப் பார்த்தபடி, படலையில் நின்றாள்.

தூரத்தில் லட்சுமிகாந்தன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவன் - அவ ளையே பார்த்தபடி வந்தான். அவனைப் பார்க்கும்போதெல்லாம், அவளுக்கு அந்த ஞாபகம்தான் சடக்கென வரும்.

அவன் - அவளோடுதான் படித்தான். படிக் கும்போது, அவளில் சின்ன விருப்பம். ஒரு கடிதமும் குடுத்தான். அவள் அதுக்குப்பிறகு, அவனைப் பார்ப்பதில்லை, கதைப்பதில்லை. கடிதத்தை அவனுக்கு முன்னாலேயே கசக்கி எறிந்தாள். அதுக்குப்பிறகு அவளைக் கண் டாலே, முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு போகிறவன். பாவம் நாற்பது வயதா கியும், இன்னும் கலியாணம் செய்யவில்லை.

அவன் குறியாய்ப் பார்ப்பதை உற்றித்த வள், மெதுவாகத் தலையைக் கவிழ்த்தாள். சைக்கிள் அவளுக்கு முன்னால் வந்து நின் றது.

" மனோகரி ... புட்டிவாய்க்கால் கரேலை, ஒரு பொடி ஒதுங்கியிருக்கு. அதை நானும் போய்ப் பார்த்தனான். அது உன்ரை தனபாலு தான்."

படலையில் வந்து நின்ற லொறியின் "கோண்" தான், அவளை அந்த நினைவிலி ருந்து அறுத்தது. திடுக்குற்ற அவள், கொஞ்ச நேரம் நின்றுவிட்டு, பாய்க்கைத் தூக்கினாள்.

சிவசோதி மரங்களைக் கெதிகெதியாக ஏற்றினான். பவுண் முடிச்சுக்களைத் தூக்கி எறிந்து கொண்டிருந்தான். கமலா சட்டி, பானைகளை மெதுவாகத் தூக்கி, கிளினர்ப் பொடியனிடம் கொடுத்தாள். எட்டத்தில் நின்ற இந்திரா கிட்ட வந்தாள். எல்லாம் ஏற்றியாச்சு. கடைசியாக மனோகரி குடத்தைத் தூக்கி னாள். அரைக்குடத்திற்கு மேல் தண்ணி நின்றது.

தண்ணீரோடு அந்தக் கொய்யா மரத்தைப் பார்த்தாள். பூக்கள் தூங்கிக் கொண்டிருந் தன. கொண்டுபோய்க் கொய்யாவுக்குத் தண் ணீரை ஊற்றினாள். ட்றைவர் கோணடித்தான். கமலா, பவுணின் கன்னங்களைத் தடவித் தடவி அழுதாள். சிவசோதி பொக்கற்றுக் கால் ஏதோ எடுத்துக் கொடுத்தார்.

"போட்டு வாறன் ... "

இந்திராவுக்குச் சொல்லும்போது, மனோ கரிக்கு அழுகை வந்தது. சீலைத்தலப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு, லொறியில் ஏறினாள். பவுணும் ஏறினான். கமலா, சிவசோதி, இந்திரா அனைவரும் கைகளை அசைக்க, லொறி வெளிக்கிட்டது.

"பவுண் கவனமப்பு... "

மனோகரி சொன்னாள். பிடித்த சங்கி லியை இன்னும் கொஞ்சம் இறுக்கிப் பிடித் தான். அவனுக்கு முற்றத்தில் தாட்ட "அதை" பார்க்க வேணும் போலிருந்தது.

எப்ப லொறி போய்ச் சேரும்...?

அவனுக்கு, அப்பாவின் ஞாபகம் வந்தது. ஒவரு திவசத்துக்கும் கல்லறைக்குப் போய், மாலைகள் போடுறவன். ஏழு வருசமாக- அந் தக் கல்லறையையும், அவன் காணவில்லை.

"அப்பா சரியாவுன்னை மாதிரித்தானி ருப்பார். சிரிப்பு, நடை, இமைகளை அகட்ட நெற்றியில் விழும் சுருக்குகள், அடிக்கடி நாக கால் சொண்டுகளை நனைப்பது, மீசையுமு னக்கு அப்பா மாதிரித்தான் முளைக்கப் போகுது"

**அவனுக்கு, அப்பாவின் ஞாபகம் வந்தது. ஒவரு திவசத்துக்கும் கல்லறைக்குப் போய், மாலைகள் போடுறவன். ஏழு வருசமாக- அந்தக் கல்லறையையும், அவன் காணவில்லை.**

**"அப்பா சரியாவுன்னை மாதிரித்தானிருப்பார். சிரிப்பு, நடை, இமைகளை அகட்ட நெற்றியில் விழும் சுருக்குகள், அடிக்கடி நாககால் சொண்டுகளை நனைப்பது, மீசையுமுனக்கு அப்பா மாதிரித்தான் முளைக்கப் போகுது"**

**அவள் அடிக்கடி சொல்லும் வார்த்தைகளை நினைத்துப் பார்க்க, அப்பாவின் அந்த முகம் சரியாய் அவனில் வரவில்லை.**

அவள் அடிக்கடி சொல்லும் வார்த்தை களை நினைத்துப் பார்க்க, அப்பாவின் அந்த முகம் சரியாய் அவனில் வரவில்லை.

"நான் கடைசியாப் பார்த்தபோது, அப்பா எப்படி இருந்தார் ..? "

லொறியின் வேகத்தைப்போல, மனதின் வேகமும் ஓடிக்கொண்டிருந்தது. பொக்கற்றுக் குள் வடிவாக மடித்து வைத்திருந்த ஒரு பேப்பர் துண்டை எடுத்தான், பிரித்தான். அந் தப் பேப்பரில், அவன் எப்பவோ வரைந்த அப்பாவின் படமிருந்தது. வரைந்த படத்தில், அவள் சொன்னவைகள் அனைத்தையும் தேடினான்.

அவள் சொன்ன ஒன்றேனும் படத்தில் பொருத்தமாயில்லை.

லொறி வீட்டு வாசலில் வந்து நின்றது. பக்கத்து வீட்டிலிருந்து நாலைந்து பேர் ஓடி வந்தார்கள். அவர்களை ஆவலோடு மனோ கரி பார்த்தாள். அவர்களில் புனிதா இல்லை,

## கருணை ரவி

கோபு இல்லை, சேந்து இல்லை, அவிசாக் குட்டியில்லை.

பவுண் - அவர்களைப் பார்க்கவில்லை. வீட்டைப் பார்த்தான். வீடு நல்ல அழகாய் இருந்தது. கதியால்கள் வெட்டி, வேலிகள் அடைக்க கிடுகுகளும் பறித்திருந்தன. சுவ ருக்கு நீலம் கலந்து, சுண்ணாம்பும் அடித்தி ருந்தது.

அவள் தலையில் கைகளை வைத்துக் கொண்டு நின்றாள். பவுண் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு, வேப்பமரத்தடிக்கு ஓடி னான். அவனுக்கு அதைக் கெதியில் பார்க் கவேணும் போலிருந்தது. அவனுக்கு 'அதை' தாட்ட இடம் அச்சொட்டாய்த் தெரிந்தது. மண் வெட்டியால் மளமளவென்று தோண்டினான்.

"கவனம்..."

சொல்லிக் கொண்டு மனோகரி உள்ளே வந்தாள்.

"அம்மா படம் கிடக்குது."

சந்தோஷத்தோடு அப்பாவின் படத்தைக் கைகளில் எடுத்தான். பொலித்தீனிலிருந்த மண்ணை வடிவாகத் தட்டினான். அவள் படத்தை வாங்கி, நெஞ்சோடு அணைத்துப் பொலித்தீனை விலக்கினாள்.

"அப்பாவைப் போலத்தான் நானா...?"

அவன் ஆவலோடு, அப்பாவின் படத்தைப் பார்த்தான். படமும் சட்டமும் உக்கி, வெறும் கண்ணாடி மட்டும்தான் அவளின் கைகளிலி ருந்தது. ❖



# சுட்டெரிக்கும் சூரியனின் நாடு

என் நாடு
சுட்டெரிக்கும் சூரியனின் நாடு!
ஒரு வேளை
அதனால்தான்
என் கைகள் சுடுகின்றனவோ
என் பாதங்கள் கொப்புளிக்கின்றனவோ
என் உடல் புண்களால் மூடப்பட்டுள்ளதோ!

என்நாடு
சுட்டெரிக்கும் சூரியனின் நாடு!
அதனால்தான்
என்வீட்டின் கூரை உருகி வீழ்ந்தது!
கொதிக்கும் சுவர்கள் தீண்டும்
யாவும் பொசுங்குகின்றன!

என்நாடு
சுட்டெரிக்கும் சூரியனின் நாடு!
அதனால்தானா
என் பிள்ளைகளுக்கு
எப்பொழுதும் தாகமெடுக்கிறது!
என் உடல் மூடப்படாதிருக்கிறது!

என்நாடு
சுட்டெரிக்கும் சூரியனின் நாடு!
ஒருவேளை
அதனால்தான்
முகில்கள் திரள்வதோ
வெள்ளம் வடிந்ததோ
எங்களுக்குத் தெரிவதில்லைப் போலும்!

ஏனெனில்
ஒருகால் கடன்காரராலும்
ஒருகால் காட்டுவிலங்குகளாலும்
ஒருகால் இயற்கை அனர்த்தங்களாலும்
சில வேளைகளில்
தம்மைத் தாமே
எஜமானர்களாகப் பிரகடனப்படுத்தியவர்களாலும்
என் வயல்கள்
என்றென்றும் தரிசாய்க் கிடக்கின்றன!

சூரியன் சுட்டெரிக்கும்
என்சொந்த நாட்டை
வெறுக்க எனக்குக் கற்றுத்தராதீர்கள்!
ஏனெனில்
அதே சூரியன்
முற்றத்தில் தொங்கும்
என்உடைகளை காயப்பண்ணுகிறது
என்வயலில் விளையும் நெல்லை
பொன்னாக்கித் தருகிறது!
ஆறுகளில் என்தாகத்தைத் தீர்த்து
மரநிழலில் என்னை இளைப்பாற விடுங்கள்!
மண்ணினால் ஓர் அங்கியும்
புழுதியினால் ஒரு போர்வையும் நெய்ய
என்னை விடுங்கள்!
நன்கொடைகளை
என்நாட்டின் மீது பொழியும்
உதய சூரியனின் உன்னதத்தை
கண்ணுற்ற எனக்கு
மாலைப் பொழுதின் நீளும் நிழல்கள்
பிடிப்பதில்லை!

ஆம்
இந்தச் சூரியன் என்னுடையது
ஒருவிதத்தில் உங்களுடையதும் தான்!
ஏனெனில்
சுட்டடெரிக்கும் சூரியனுடன்
நான் கைகோர்த்து நடக்கின்றேன்!

உருது மூலம் கிஷ்வார் நஹீர்
ஆங்கில வடிவம் :
சேஷா அப் ஹஷ்மி
தமிழாக்கம்: சோ. பத்மநாதன்

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY ROAD,
JAFFNA.

(சி.1537)

லொயலாஸ்
Loyalas
David Alexander
Proprietor
0777 - 734083
மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
59, Patricks Road, Jaffna. 021-222 3352.
195, Main Street, 4th Cross Street Junction, Jaffna. 021-222 2110.
(சி.1505)

முதலாம் ஆண்டைப் பூர்த்தி செய்யும் நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

சகல விதமான மருந்து வகைகளுக்கும் நம்பிக்கையான இடம்

அம்பிகா டிஸ்பென்சறி

கண்டி வீதி, சாவகச்சேரி.
கிளை: K.K.S. வீதி, இணுவில்.
(சி.1508)

வெற்றுச் சாக்குகள்
வெற்றுப் பைகள்
முதலாம் அண்டுவிழாக் காணும் நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்
விற்பனைக்கு உண்டு
உள்ளூர் HIACE வான் சேவையும் பெற்றிடலாம்
நாடுங்கள்
ஸ்ரீ இராமராஜ் அன் சன்ஸ்
603, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி.1522)

இரண்டாம் ஆண்டில் அடி எடுத்துவைக்கும் நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

**CAREER. COM INSTITUTE**

No.79, Main Street,
Jaffna.
(சி.1540)

கிளின்ரன்
அந்தியகால சேவை
Clinton Funeral Service
548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 3518



(சி.1501)

நமது ஈழநாடு நாட்டுமக்களுக்கு ஆற்றும் நற்பணி தொடர வாழ்த்துகின்றோம்.

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்த்து மடல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி.1528)

**RENNY**
DENTAL & OPTICAL SERVICE
பல் கட்டிக் கொடுக்கப்படும் மிதப்புப் பற்களுக்குக் கிளிப் செய்து கொடுக்கப்படும் கண் பரிசோதித்து, கண்ணாடி வழங்கப்படும்.
இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 3703
(சி.1502)

*Soft View Computer College*
Jaffna, Sri Lanka
WWW. arammenporulagam.Com arammenporulagam@eth.net

43,Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 222 - 5170
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P.+91-44-4891286
Number 79, Jalam Gambus 11, Taman Desawan, 41200 Klang, Malasiya. T.P.+60-3-33234650.

சான்றிதழ்களை மட்டுமே அடுக்கி வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்வது?
சான்றிதழ்களை மட்டுமல்ல, கணினி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலோ அல்லது சுயமாகவோ கணினி வேலைவாய்ப்பினை உருவாக்கிட உங்கள் கணினி நண்பன் SCC
(சி.1523)



இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

**V. M. K JEWELLERS**
வி.எம்.கே ஜூவலர்ஸ்
Genuine 22 Kt Jewellery Manufacturing Jewllers
(சி.1507)
KANDY ROAD, CHAVAKACHCHERI TELE: 070-212989, 0777-723021

நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
- இரண்டு வருட உத்தரவாதத்துடன், தரமான Pentium 4 கணினிகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
- உங்கள் கணினிகளைச் சிறப்பான முறையில் மறுசீரமைத்துக்கொள்ள

நாடவேண்டிய ஒரே இடம்

**Northern Technology (Pvt) Ltd.**
20, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 - 222 5653
(சி.1542)

# தமிழ்மொழிக்குக் கடமைப்பட்டுள்ள உலகம்

**உலகு தழுவிய கருத்துக்களையெல்லாம் கூறும் நூலாகத் திருக்குறள் அமைகின்றது. அதனுடைய முதலாவது குறளே,**

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி,**
**பகவன் முதற்கே உலகு"**

**என்று அமைகின்றது. உலகு என்னும் சொல்லுடன் இது தொடங்குகின்றது. உலகு என்பதுடன் இலக்கியம் தொடங்கும் ஒரு மரபு தமிழிலே உண்டு.**

இன்று உலகத்தின் பல நாடுகளிலே தமிழர் வாழ்கின்றனர். அவர்கள் தாம் வாழும் நாட்டிலே, தம்மைப் பெருமையுடன் அறிமுகம் செய்துகொள்ள ஒரு வழி உண்டு. "திருக்குறள் என்னும் நூலுக்குச் சொந்தக்காரன் நான் என்று கூறலாம். அந்த நாட்டு மொழியிலே அது மொழி பெயர்க்கப்படவில்லை என்றால், அது ஏனைய மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ள கதையை அவர்களுக்குக் கூறலாம். மேலைத்தேய, கீழைத்தேய மொழிகள் பலவற்றிலே இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முதன்முதலாக டொக்டர் ஜி.யு.போப் இதனை ஆங்கில மொழியிலேயே பெயர்த்தார். மேலைத்தேயத்தின் பண்டைய செம்மைசேர் மொழியாகிய இலத்தீனிலும் அது மொழிபெயர்ப்பக்கப்பட்டது. பின்னர், பல உலக மொழிகளிலே திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

உலகு தழுவிய கருத்துக்களையெல்லாம் கூறும் நூலாகத்



பேராசிரியர் அ. சண்முகதாஸ்

திருக்குறள் அமைகின்றது. அதனுடைய முதலாவது குறளே,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி'
பகவன் முதற்கே உலகு"

என்று அமைகின்றது. உலகு என்னும் சொல்லுடன் இது தொடங்குகின்றது. உலகு என்பதுடன் இலக்கியம் தொடங்கும் ஒரு மரபு தமிழிலே உண்டு. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் கணியன் பூங்குன்றனின் உலகுதழுவிய எண்ணமே புறநானூற்றிலே இடம்பெறுகின்றது. தமிழிலே பல நூல்கள் - உலகம் என்னும் சொல்லுடன், உலகைக் குறிக்கும் சொல்லுடன் தொடங்குகின்றன.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண்டா அங்கு" என்று திருமுருகாற்றுப்படையும்,

"மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை" என்று சிறுபாணாற்றுப் படையும்,

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொரு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை" என்று முல்லைப் பாட்டும்,

*"ஓங்குதிண வியன் பரப்பின்*
*ஒலி முத்தர் வரம்பாக*
*தேன்தூங்கும் உயர்சினமய*
*மலைநாறிய வியன் ஞாலத்து"*
*என்று மதுரைக்காஞ்சியும்,*
*"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ*
*பொய்யா வானம் புதுப்பெயல் மொழிந்தேன்"*
*என்று நெடுநல்வாடையும்,*
*"உலகந் திரியா ஓங்குயர் விழுச்சீர்ப்*
*பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய"*
என்று மணிமேகலையும்,

"மூவா முதலா வுலகமொரு மூன்றுமேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி" என்று சீவகசிந் தாமணியும்,

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்று கம்பராமாயணமும்,

"உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்" என்று பெரியபுராணமும்,

"சீரிய உலக மூன்றும் செய்தனித்து அழிப்பவல்லாய்" என்று தேம் பாவணியும்,

"உலகம் யாவும் புரந்தரு ஞுன்னதர்" என்று இரட்சணிய யாத்தரிகமும் தொடங்குவதை நோக்குமிடத்து, தமிழ்ப் புலவர்களுடைய உலகு தழுவிய நோக்குப் புலப்படுகின்றது.

இவ்வாறு உலகு பற்றிய எண்ணமுடைய தமிழர் சார்பாக உலகுக்கே ஒரு நூலை வழங்கியுள்ளார் திருவள்ளுவர். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி பாடியுள்ளார்.

உலகத்தவர் திருக்குறளின் பல்வேறு மொழிபெயர்ப்புக்களூடாக வள்ளுவனின் கருத்துக்களை அறிந்து வருகின்றனர். உலகத்தவர் எல்லோருக்கும் வேண்டிய வாழ்வு வழிகாட்டியாகத் திருக்குறள் அமைகின்றது. திருக்குறள் இவ்வாறு அமைவதற்குரிய காரணம் என்ன?

வள்ளுவன் வாழ்க்கையை ஒரு முனையப்பட்ட நோக்குடையவனாக விளக்க முற்படவில்லை. அதனைத் தன்னிலையாக நோக்கும்போது, வாழ்க்கை வாழ்வதற்கே என்றும், அது வெறுக்கப்பட வேண்டியதில்லை என்றும் உணரக் கூடியதாயுள்ளது. வாழ்க்கையை எதிர்நிலையாக நோக்கும் போது, துறவறத்தின் போக்கினையும், சிறப்புக்களையும் உணருகின்றோம்.

வள்ளுவன் இந்த இரண்டினுக்கும் அமைதி கண்டுள்ளான். இல்லறம் - துறவறம் என்னும் இரண்டின் சேர்க்கை, இந்த உலக வாழ்வின் முழுமையினை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.



## மெல்லத் துளிர்கின்ற காற்று...

இப்போதெல்லாம்
பொழுதுகள் சுருங்கி
ரேகைகள் விழுந்து
போயிருக்கிறது காலம்.
எப்போதாவது ஒரு தடவை
சுரத்தையில்லாமல் வந்தமர்கின்ற
சிட்டுகளைப் பார்க்கையில்
விசராய் இருக்கிறது.
கிளைகொள்ள இலைகளும் இல்லை
சிட்டுகளும் இல்லை.
ரசனையும் செத்துப் போயிற்று
இப்போது...
யாரும் பேசத் தயங்கி
சிரிக்கவும் தயங்கி - ஏன்
பார்க்கவும் தயங்கிப் போகிறார்கள்.
கண்கள் எரிய
சயிக்கிளை மிதிக்கையில்
தோள்பட்டை வலிக்கிறது - அப்போதில்
வழி நெடுக.
எதிர்படுகிற எவனும்
பிணவீட்டிலிருந்து வருகின்றவனைப்போல
தனிமையின் துயரையும்,
பிரிவின் துயரையும்,
முகங்களில் தூக்கி
நெடுந்தொலைவுகளுக்கு போகிறார்கள்.
இப்போது
சகிக்கவும் முடிவதில்லை
பெரும் திகைப்பின் வலியில்
மரங்களில் படியும் புழுதியை
இந்தப் பகலின் வெறுமை
எப்படி வாங்கிற்று.

**முல்லைக்கமல்**

# முதுமை பாரமா? பரிசிலா?

இளமையின் குதியாட்டங்களும், அது தரும் குதூகலங்களும் முதுமையின்போது நினைவுகளாக எஞ்சிநின்று, கடந்தவற்றிற்காய் ஏங்கி, நெடுமூச்சு விடவைப்பதை. என் போன்ற முதியோர் பலர் - அனுபவ வாயிலாக அறிந்திருப்பர். இந்த அனுபவமும், அறிவும் காலங்கடந்தவை என்பதற்குச் சங்கப் புலவர் ஒருவரின், பின்வரும் பாடல் சான்றாகும்.

**இனி நினைந்து இரக்கமாகின்று திணிமணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய்பூ தைஇத்**
**தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து**
**தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி**
**மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு**
**உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து**
**நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்**
**கரையவர் மருளத் திரையகம் பிதிர**
**நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து**
**குளித்து மணற்கொண்ட கல்லா, இளமை**
**அளிதோ தானே யாண்டு உண்டு கொல்லோ?**
**தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று**
**இருமிடை மிடைத்த சிலசொற்**
**பெருமூ தாளரேம் ஆகிய நமக்கே.**

(புறநானூறு 243)

"இப்பொழுது நினைக்கையில், இரக்கமே எமக்கு உண்டாகிறது. ஏனெனில், பூணிட்ட ஊன்றுகோலினை ஊன்றிய வண்ணம் நடுக்கமும், இருமலுமாகச் சிலசொற்களைச் சிரமத்தோடு பேசுகின்ற பெரிய முதியவராய் நாம் ஆகிவிட்டோம்..... அன்று..... நெருங்கிய மணல் நிறைந்த தடாகக் கரையிலே, இளம் பெண்கள் - தமது பாவைகளுக்குப் பூச்சூட்டிக் குளிர்ந்த பொய்கையிலே நீராடும் பொழுது, அவர்களைத் தழுவும் முறையில் தழுவுவோம், கூடி ஆடும் முறையில் ஆடுவோம். மறைப்பே என்றும் அறியாத நண்பர் கூட்டத்துடன் சேர்ந்து, உயர்ந்த கிளைகளோடு கூடிய மருதமரத்திலேறிக் கரையில் நிற்பவர்கள் அஞ்சும்படியும், நீர் அலைகள் ஓசையோடு கலங்கி எழவும், நெடிய நீர்த்தடாகத்தில் குதித்துச் சுழியோடி, நீரடியிலிருந்து மணலைக் கிள்ளியெடுத்து வருவோம். கல்வியறிவில்லாத கட்டிளமைப் பருவத்தில் நிகழ்ந்தவை அவை!" இது பாடலின் சாரம்.

இப்பாடலைப் பாடியவர் பெயர் தெரியாமையால், பாடலைத் தொகுத்தவர் - இவரின் பாடலடியில் தாம் சிறந்ததாகக் கருதிய, *தொடித்தலை விழுத் தண்டினாா* என்பதையே, இவருக்குச் சூட்டியுள்ளார். (*தொடி - பூண் (டேட்), விழுத்தண்டு-* ஊன்றுகோல்)

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தத் திருவிழாவன்று - சுவாமி தீர்த்தமாடுவதற்கு முன்பே, தீர்த்தக் குளத்தினுள்ளே குதித்துக் கும்மாளமிட்ட இளைஞரின் '*கல்லா இளமைக*' குதியாட்டத்தைக் கண்டபொழுது, தொடித்தலை விழுத்தண்டினாரின் பாடல் என் உள்ளத்தே கிளர்ந்தெழுந்தது என் குற்றமல்ல.

இளமைக் குதியாட்டங்கள் அவற்றின் எல்லை கடந்து மற்றவர்களை இடர்ப்படுத்தாதவரை கண்டு இரசிக்கத்தக்கனவாகும். இவற்றில் ஈடுபடுவோர் தமது முதுமைக்காலத்தில் பழைய நினைவுகளால் பரவசம் அடைந்ததால் அதுவும் நியாயமானதே. ஆனால், மேல் குறித்த புலவர்போலக் கழிவிரக்கம் கொள்ளும் அளவுக்கு மிகப்படச் செய்தல் ஏற்புடையதா என்பதை இளைஞர் சிந்திப்பது நல்லது.

இளமையின் எழுச்சி, முதுமையில் அடங்கிப்போவது இயற்கையே. ஆனால், முதுமையிலும் இளமை மாறா வீறும் வலிவும் முதியோர்க்குகேற்ப அவர்கள் வாழும் சமுதாயமும்,

## முதியோர் வாழும் சமுதாயமே!

குடும்பமும், சூழலும் உதவலாம் என்பதற்கும் புறநானூற்றிலே சான்று உண்டு. "யாண்டு பலவாக நரையில் வாழுதல்" எனத் தொடங்கும் அப்பாடல் இது.



கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்)

**யாண்டு பலவாக நரையில வாகுதல்**
**யாக்கா கியரென வினவுதி ராயின்**
**மாண்டஎன் மனைவியரொடு மக்களும் நிரம்பினர்**
**யான்கண்டு அரனயரென் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை**
**ஆய்ந்து அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.**

(புறநானூறு 191)

"எனக்கு வயது பலவாகிவிட்டபோதிலும் ந்ரைமயிர் தோன்றவில்லையே, ஏன்? என்று கேட்கிறீர். சொல்கிறேன் என மாட்சிமை பொருந்திய மனைவியோடு மக்களும் நிறைந்த அறிவினராய் உள்ளனர். என் பணியாளர்கள் என் குறிப்பறிந்து திறம்படச் செயலாற்றுகின்றனர். அரசனோ நீதி இல்லாத செயல்களை நிகழ்த்தமாட்டான். நான் வாழும் ஊரில் வாழ்பவர்கள் நன்று ஆராய்ந்து கற்றுப் புலனடக்கத்தோடு கூடிய பணிவும் பொருந்தி உள்ளனர். இவர்களாலேயே நான் தலை நரைக்காது முதுமையிலும் இளைஞனாகக் காட்சி தருகின்றேன்.

பிசிர் என்ற ஊரினரும் ஆந்தையார் (ஆதனின் தந்தையார்) என்ற பெயரினருமான இப்புலவர் பெருந்தகை தமது 'மூத்த இளமைக்கு'க் கூறிய காரணங்கள் ஒருவகையில் இலட்சியமானவையே என்று கொள்ளத்தக்கவகையிலே தான் அவரின் முடிவு அமைந்துவிடக் காண்கின்றோம்.

ஒருவர் பற்றி ஒருவர் அறியாமலே ஒருவர் பெருமைகளை மற்றவர் அறிந்ததன் மூலம் பிசிராந்தையாரும், கோப்பெருஞ் சோழனும் என்ற வேந்தனும் நட்புப் பூண்டு விளங்கினர். கோப்பெருஞ்சோழன் புலவர்களை ஆதரித்த பெருவள்ளலாயும், செங்கோலனாயும் விளங்கியபோதிலும், அவனுக்கு - அவன் மக்களால் நிம்மதியற்ற வாழ்வே பரிசாகக் கிடைத்தது. அவர்கள் தந்தைக்கு அடங்காது, தந்தைக்கு எதிராகப் போருக்கு எழுந்தனர். தொடக்கத்தில் கோப்பெருஞ்சோழனும் அவர்களை எதிர்த்துப் போராட முற்பட்டாலும், அவன் நண்ப

## விடை தா?

ரான புலவர் புல்லாற்றூர் எயிற்றியனாரால் அறிவுரை கூறப்பட்டுச் சண்டையை ஒழித்தான். ஆனால், பிள்ளைகளின் துரோகத்தினால் மனச்சிதைவடைந்து வடக்கிலிருந்து உயிர் நீத்தான்..

கோப்பெருஞ்சோழன் வடக்கிலிருந்ததைக் கேள்வியுற்ற பிசிந்தையார் அவன் இருந்த இடத்திற்கு வந்து, தாமும் அவனோடு வடக்கிலிருந்து உயிர் துறந்தார். (புறநானூறு)

ஆக, அன்றும் இன்றும் முதுமை தாங்கற்கரிய பெருஞ்சுமையாக மாறுவதும், காற்றில் பறப்பது போன்று மகிழ்ச்சியிலே திளைப்பதும் ஒருவரின் மக்களது நடத்தையைப் பொறுத்தே என்பது பெரியதோர் உண்மையாகும்.

# மெல்லத் தமிழ் இனிச் சாகுமா?

உலகில் நிலவும் மொழிகளுள் நூற்றுக் கணக்கானவை காலப்போக்கில் வழக்கொழிந்து போகவுள்ளதாக, அவற்றுள் 47 ஆவதாகத் தமிழும் வழக்கொழிந்துவிட உள்ளதாகவும். தாம் நடத்திய கணிப்பீட்டின் மூலம் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார் உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத்தலைவர் ஒருவர். இன்னும் சில ஆய்வு முடிவுகள், இன்னும் முந்தி அது நிகழப்போவதாகக் கூறியுள்ளன.

இது எழுந்தமானமான வெறும் அச்சுறுத்தல் என்று தள்ளிவிடக்கூடிய ஒன்று அன்று. தமிழ்மொழி பேசப்படும் தேசங்களான - தமிழீழம், தென்னிந்தியத் தமிழ்நாடு என்பவற்றிலும், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுமுள்ள தமிழ்க்குடியிருப்புக்கள் என்பவற்றிலும், தமிழின் நிலைமைகளை எண்ணிப்பார்க்கும்போது, தமிழின் எதிர்காலம் பற்றிய ஐயப்பாடு எழவே செய்கிறது.

தென்னிந்தியத் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், தமிழையும் இந்தியாவின் உயர்தனிச் செம்மொழி என இந்திய அரசினைப் பிரகடனம் செய்து வைக்குமாறு என்னதான் சில தமிழ் அமைப்புக்கள் குட்டிப் போராட்டங்கள் நடத்துகின்றபோதிலும், தமிழ்நாட்டு - தமிழ் மக்கள் சமூகத்தின் கரிசனை இதுவாக இல்லை. தமிழ்நாட்டுத் திரைப்பட உலகம், தொலைக்காட்சி போன்ற தகவல் ஊடகங்கள் அரசியற் கட்சிகள் என்பன, தமிழின் பாதுகாப்பில் தமிழின் நிலைப்பேறில் அக்கறை கொண்டவை என்று யாருமே நம்பமாட்டார்கள். சாதாரண குடிமக்கள் மத்தியில்கூட, ஆங்கிலமொழியே பேச்சு மொழியாக வலுவடைந்துவரும் நிலைமை அங்கு நிலவுகின்றது.

ஈழத்தைப் பொறுத்தமட்டிலும் என்னதான் ஒரு சில ஆயிரம் இளையவர்கள் 'தமிழ் எங்கள் உயிருக்கு மேல்' எனத் தம்முயிர்களை தற்கொடையாக வழங்கிவரும்போதிலும், இன்னும் சில ஆயிரம் தமிழ்க்குடும்பங்கள் - தமிழ்ப்பற்று, இனப்பற்று, தேசப்பற்றோடு எதிர்நீச்சல் வாழ்வு நடத்திவருகின்ற போதிலும், ஏனைய பல இலட்சம் ஈழத்தமிழர்கள் போரின் கொடூரங்களால் மனத்தளர்ச்சிக்குள்ளாகி, இனக்கட்டமைப்பின் இனறியமையாமையை மறந்துவிடும் நிலைக்கு - தானுண்டு, தன் குடும்பம் உண்டு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டமை நிதர்சனமாகியுள்ளது.

1. குறுக்கு வழிகளில் தமக்குப் புகழையும், பொருளையும் தம்பிள்ளைகளுக்குப் பட்டம், பதவிகள், உத்தியோகங்களையும் தேடிட அங்கலாய்த்துப் பறக்கும் பெற்றோர்கள், தமிழ் மாணவர்களிடையே முக்கியமாக மொழித் தேர்ச்சி ஏற்படுத்தவெனக் கல்விப் பகுதியானது - வகுப்புக்களில் செய்விக்கும் கையெழுத்துப் பத்திரிகைகளுககுத் தம் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்களை வாங்கவைப்பதற்காக வேறு பெரியார்களிடம், எழுத்தாளர்கள் எழுதுவித்து வாங்கிக்கொடுப்பதன் மூலம், தங்கள் பிள்ளைகளின் மொழி ஆற்றல் விருத்தியில் மண் போடும்நிலை.

2. அந்த மாணவன் அவ்வாக்கத்தை எழுதவிலலை என அறிந்தும், ஆசிரியர் உயர் மதிப் பெண் வழங்கும்நிலை.

3. பள்ளிகளில் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாட ஆசிரியர்களையும், தமிழ் கற்பிக்க அதிபர்கள் அனுமதிக்கும்நிலை.

4. தங்கள் பாடத்தில் மாணவன் விடும் வசன, எழுத்துப் பிழையைத் தமிழ்ப்பாட ஆசிரியரே திருத்தக் கடமைப்பட்டவர் எனக் கருதி, இவர்கள் திருத்த மறுக்கும்நிலை.

5. தமிழ்ப்பாட நூலாக்கற்சபையும் இனவிகிதாசாரத்தில் அமையவேண்டும் என்ற போர்வையில், தேர்ச்சி குறைந்தவர்கள் நுழைக்கப்பட்டுத் தப்பும், தவறும் மலிய எழுதப்பட்ட பாடநூல்கள் தமிழ்ச்சிறார்களுக்கு வழங்கப்படும்நிலை.

6. தமிழரைத் தரங்குறைந்தவர்களாக, வந்தேறு குடிகளாகக் காட்டும் அரசின் சமூகக் கல்விப் பாடநூல்களைத் தமிழ்ச்சிறார்கள் கற்கும்நிலை.

7. புதிய கணிப்பீட்டுமுறை, கல்வித்திட்டத்தின்படி அவ்வகுப்புக்கான நேர்வியல்களை (**Facts**) அறிந்து அடைவுமட்டங்களை அடைந்தாற்போதும். கொச்சை மொழியில் வெளியிடப்பட்டாலும், குற்றமில்லை என்றநிலை.

8. வகுப்புக் கரும்பலகை, பாடப்புத்தகம், தனியார் வெளியிடும் பாடப்பயிற்சிப் புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றில் இன்று வழுக்கள் விரவிக் காணப்படும் சொற்படிமங்கள், பிஞ்சுமனங்களில் ஆழப்பதிந்துவிடும் நிலை.

9. நடத்தியற்பண்புகள் வெளிப்படவென்ற போர்வைக்குள் தம்மியலாமையை மறந்து கொண்டு கொச்சையும், குறளுமான பிரதேச வளர்ப்புக் கதாபாத்திரங்களூடாகப் புகுத்தி, இலக்கியகர்த்தாக்கள் கதைகள், கவிதைகள் எழுத, மாணவர்கள் அவற்றை வாசித்துக் கெடும்நிலை.

10. இன்னும் ஒரு மேலே போய்க் கதை கூறும் கதாசிரியரே - கதையைக் கொச்சையிலே எழுத, சிலர் சுயலாபங்களுக்காக ஊடகங்கள் சில, அவற்றை வெளியிட்டு இனமொழித் துரோகம் இழைக்கும்நிலை.

11. தாய்மொழிமூலம் பல்கலைக்கழகக் கல்வி என்ற கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, பல தசாப்தங்கள் கழிந்தும் இன்றுவரை தமிழில் தேவையான கலைச்சொற்களும், பாடநூல்களும் ஆக்கப்படாமல் ஆங்கிலத்திலேயே விரிவுரைகள் நிகழ்த்தப்படும் நிலை.

12. அரச அலுவலகங்களில் தமிழ்மொழியில் கருமமாற்றும் அனுமதியிருந்தும், இன்றும் பல அதிகாரிகள் தமிழ்க் கடிதங்களுக்குச் சிங்களத்திலோ, ஆங்கிலத்திலோ பதில் அனுப்பும் நிலை.



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

இவற்றைப் பார்க்கும்போது, தமிழ்மக்களிடம் தாய்மொழியான தமிழ்மீது இருந்துவரும் பற்று - அதுபற்றிய பெருமிதம் அண்மைக் காலத்தில் வெகுவாகக் குறைந்து, அவர்கள் தற்குறிகளாக மாறிவிட்டமை தெள்ளெனத் தெரிகிறது.

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல்" தமிழ்ப் பற்று நம்மிடையே தளர்ந்துள்ள நிலையில், தலைதூக்கி நிற்கிறது பூலோகமயமாக்கல் என்னும் புதிய பூதம். இது உலகில் அங்கங்கு எட்டப்படும் விஞ்ஞான தொழில்நுட்பப் பொருளாதார ஈட்டங்களை உலக நாடுகள் அனைத்தும் பகிர்ந்து, நுகர்ந்து அனுபவிக்க உதவுதல் என்ற போர்வையில், உயிரிலுள்ள அத்தனை இணக்குழுத் தனித்துவங்களையும் தேய்த்தழிய வைத்து, ஒரு குறிப்பிட்ட மொழியும், மதமும் கொண்டதாக உலகினையே மாற்றியமைக்கும் உள்நோக்கங் கொண்டதென உணரப்பட்டு, பலநாடுகளில் எதிர்ப்பலைகள் கிளம்பிவருகின்றன. இப்படியான ஒருநிலை வரும்போது, விரைந்து அதற்கு இரையாக்கித் தமிழினம் தமிழை அடியோடு மறந்துவிடலாம்.

இதுபோலப் புலம்பெயர்ந்த தமிழர்கள் - அந்தந்த நாடுகளின் மொழிகளிலேயே தம் சேய்களுக்குக் கல்வி வழங்கவேண்டியுள்ளது. தாய்மொழியான தமிழை, தமிழ்க்கலைகளைத் தம் பிள்ளைகளுக்கும் கற்பிப்பதனால், இங்குள்ள பெற்றோர், சகோதரங்களுக்குப் பணம் அனுப்பமுடியாமற்போகும். அதனால், அப்பிள்ளைகளும், பிற்சந்ததிகளும் தமிழைமறந்துவிடவே நேர்கிறது. (அதேவேளை வெளிநாடுகளில் ஓய்வுறக்கமின்றி அவ்வனுதாபத்துக்குரியவர்கள் பலர் உழைத்து, இங்கனுப்பும் பணம் - தொலைக்காட்சிப் பெட்டிகளாகவும், உந்துருளிகளாகவும் அவதாரமெடுத்துத் தமிழ்க் குடும்பங்களிடையே பெருமைக்குவித்தாக விளங்கி வந்து - ஆழ்ந்த பற்றுக்களையும், பொறுப்புணர்ச்சிகளையும் நீறாக்கி, தமிழர் அல்லாதவர்களாக அவர்களை மாற்றி வருவதும் ஒருபக்க விளைவாகும்).

அண்மையில் ஒரு புலம்பெயர் நாட்டிலிருந்து வந்து, வன்னியில் கருத்தரங்கொன்றில் உரையாற்றிய ஒரு தமிழ் ஊடகவியலாளர் - "இன்னும் 15 வருடங்களின் பின்னால் இப்போது வெளிநாடுகளில் நடத்தப்படும் யாழ். பத்திரிகைகள், வானொலிகள் இயங்க முடியாத நிலைவரும். காரணம் - இவற்றைப் பயன்டுத்தத் தமிழ் தெரிந்தவர்கள் அந்தக் காலத்தில் கிடைக்கமாட்டார்கள்" என வெளியிட்ட செய்தி சிந்தனைக்குரியது.

அதேவேளை, சென்றமாதம் அமெரிக்காவிலிருந்து ஊர்வந்து சென்றுள்ள ஓர் அன்பர் கூறிய செய்தி - தமிழின் பழம் பெருமையைப் பறைசாற்றுவதாக இருந்தது. அதாவது அமெரிக்கரான மொழி ஆராய்ச்சியாளர் ஒருவர் உலகின் மிகத் தொன்மையான மொழிகளில் ஆதிநிலைச் சொற்களையும், தமிழையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, கண்ட இறுதிமுடிவு 'தமிழே உலக மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது' அந்தப் பலமொழிகளின் பல சொற்களின் அடிச் சொற்களை - வேர்களை-தாதுகளைத் தமிழ்மொழியிலேயே காணக்கூடியதாகவுள்ளது என்பதாகும். ஏற்கனவே வெளிவந்ததாகிய புவிச்சரிதவியல் நூலான 'இழக்கப்பட்ட குமரிக்கண்டம்' (**The Lost Lemuria**) என்பதும் இந்த முடிவிற்கே எம்மை இட்டுச் செல்வதாக அமைகின்றது.

பல நூற்றாண்டுகளாத் தாய் மண்ணில் இருந்து விரட்டப்பட்டு, பல்வேறு நாடுகளில் சிதறிக்கிடந்த யூத இன மக்கள், தாய்மொழியை மறந்து, புலம்பெயர் நாடுகளின் மொழிகளையே பேசி வாழ்ந்தபோதும், தமக்கென இஸ்ரவேல் நாடு மீண்டும் உருவானதும், வழக்கொழிந்து இறந்தமொழியாக (**Dead Language**) ஆகியிருந்த 'இபிரேனியம்' என்னும் தம் தாய்மொழியை மீண்டும் உயிர்ப்பித்து, தம் பேச்சு, எழுத்து, நிர்வாக மொழியாகப் பயனபடுத்தி வருகிறார்கள். இவர்களின் இந்த இன, மொழி, தேசப்பற்று மீண்டும் தமிழரிடையே கட்டியெழுப்பப்படுமானால், 'மெல்லத் தமிழினிச்சாகும் அவலம், அவமானம் தடுக்கப்பட்டுவிடும்'.

# பிறக்கும்போது பெருமையோடு பிறந்தவன் தமிழன்!

"பிறக்கும்போது பெருமையோடு
பிறந்தவன் தமிழன் - தமிழ்ப்
பெருங் குடிதன்னிற் பிறந்தவன் ஆதலால்"

என்பது பாவேந்தர் பாரதிதாசனின் பாடலடி. பிறக்கும்போதே ஒருவன் பெருமை உடையவனாகிவிட முடியுமா? முடியும் என்கிறார் பாவேந்தர். தமிழனாகப் பிறந்தால் முடியும் என்கிறார்.



புலவர் மா.பார்வதிநாதசிவம்

தமிழனாகப் பிறப்பதில் உள்ள சிறப்பு என்ன? அதையும் அவரே சொல்லுகிறார்.

"முதலில் தோன்றிய மனிதன் தமிழன்
முதல் மொழி தமிழ்மொழி ஆதலால்" என்கிறார்.

உலகில் தோன்றிய முதலினம் தமிழினம். இந்தப் பெருமை தமிழனாகப பறந்த எல்லோருக்கும் உண்டு. உலகில் தோன்றிய முதல்மொழி தமிழ்மொழி. இந்தப் பெருமையும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவர்க்கும் உண்டு.

பாவேந்தர் கருத்துகளுக்கு அரண் செய்வதாகவுள்ளது. புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலடி. அந்த அடி -

"கல்தோன்றி மண் தோன்றாக் காலைத் தேவாளோடு முன்தோன்றிய மூத்தகுடி" என்பது,

உலக முதல் இனம் தமிழினம் என்பதால், புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் முன்தோன்றி, மூத்தகுடி என்றார். மூத்தகுடி என்றார். மூத்தகுடி என்றது அறிவினால் மூத்தகுடி எனறும் பொருள்தரும். மொழியினால் மூத்தகுடி என்றும் பொருள தரும். நாகரிகத்தால் மூத்தகுடி என்றும் பொருள் தரும். கலைகளால் மூத்தகுடி என்றும் பொருள்தரும்.

தமிழ்மொழித் தமிழினம் - தமிழ்க்கலை - தமிழ்ப் பண்பாடு இவை அனைத்தையும் காப்பதற்கு என்னவேண்டும், உறுதியான படைவேண்டும். இதனையே புறப்பொருள் வெண்பா மாலை வானோடு முன்தோன்றி மூத்தகுடி என்கிறது.

சிலர் பிறக்கும்போதே - தமது பரம்பரையில் வந்த நிலத்துக்கும், பரம்பரையில் வந்த பணத்துக்கும் சொந்தக்காரராகப் பிறப்பதில்லையா? அதேபோலத்தான் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும், பிறக்கும்போதே பரம்பரை பரம்பரையாக வந்த இலக்கியச் சொத்துக்குச் சொந்தக்காரனாகின்றான்.

"வள்ளுவனார் முப்பாவின் மிக்கமொழியுணர் கடனப் பகர்வார்
அப்பா வலிலினுமில்" என்கிறார். புலவர் ஒருவர் ; திருவள்ளுவரின் திருக்குறளின் மேற்பட்ட நூலொன்று உண்டென்று சொல்லுவர். எவ்வகைப் பட்ட புலவருள்ளும் இல்லையாம். தன்னிகரற்ற நூலாகிய திருக்குறளுக்குச் சொந்தக்காரனாகத் தமிழன் பிறப்பதால், பிறக்கும்போது பெருமையோடு பிறந்தவன் தமிழன்.

**சங்க நூல்கள்.**

சங்க நூல்கள் அகம், புறம் என்னும் இரு பிரிவில் உள்ளன. அகம் என்பது - காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்பதை அதாவது, ஒருவனும் ஒருத்தியும் இணைந்துவாழும் நாகரிக வாழ்வை விளக்குகிறது. அந்த நாகரிகத்தோடு சேர்ந்த இல்லற வாழ்வை விளக்குவது, விருத்தினரை உபசரிக்கும் பெரும் பண்பை விளக்குவது, வறியவன் வழங்கும் கருணை உள்ளத்தை விளக்குவதை விளக்குவது.

புறம் என்பது - தமிழ் மண்ணையும் - தமிழ் இனத்தையும் - தமிழினத்தின் தனித்துவத்தையும் காக்கவும், வளர்க்கவும், புரிந்த போரைக் குறிப்பது. அத்துடன் அரசனின் கொடைத் திறத்தையும் கூறுவது, காடுதிருத்தியும், குளங்கள் அமைத்தும், நாடு வளம்பெறச் செய்த செயலையும் குறிக்கும்.

சங்க நூல்கள் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகையாகும். திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருணநாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டு நூல்களாகும்.

தமிழன் ஒவ்வொருவனும் பிறக்கும்போதே, இந்த நூல்களின் சொந்தக்காரன் என்ற பெருமையோடு பிறந்தவனாகிறான்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதையும், உரைகால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுவர் என்பதையும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதையும் விளக்கும் சிலப்பதிகாரமும், பசிப்பிணி நீக்குதலையும் பெரும் தர்மமாகக் கூறும் மணிமேகலையும், சீவகசிந்தாமணியும் இவைபோன்ற தரமான நூல்களும், நாம் பிறக்கும்போதே சொத்தாகக் கொண்ட நூல்களல்லவா?

பிறகும்போது பெருமையுடன் பிறந்த தமிழன், வாழும்போது தன் பெருமைகளை மறப்பதா?

தங்கள் பிள்ளைகளுக்குத் தனித்தமிழிலேயே பெயர் வைக்கவேண்டும். தமிழன் - தமிழனோடு பேசும்போது, எந்த நாட்டில் வாழ்ந்தாலும், தமிழிலேயே பேசவேண்டும். வீட்டுப் பெயர், வணிக நிலையங்களின் பெயர், வீதிப்பெயர் அனைத்தும் நல்ல தமிழில் இருக்கவேண்டும். பொருளீட்ட தமிழர் வெளிநாடு செல்வது வரவேற்கவேண்டியதே! ஆனால், வெளிநாட்டில் வாழும்போது, பிறக்கும் பிள்ளைகள் தாய்மொழியாகிய தம் தமிழிற் பேசத் தெரியாதவர்களாக வளர்வது, தமிழினத்துக்குச் சிறுமையல்லவா? பிறக்கும்போது, பெருமையோடு பிறந்த தமிழன் வாழும்போது அந்தப் பெருமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே பாவேந்தர் பாரதிதாசனின் முழுப்பாடல்.

**தமிழன்**

**பிறக்கும்போதே பெருமையோடு**
**பிறந்தவன் தமிழன் - தமிழ்ப்**
**பெருங்குடி தன்னிற் பிறந்தவன் ஆதலால்**
**(பிறக்கும் போதே)**

**இறப்பதே இல்லைத் தமிழன் - புகழுடம்மை**
**எங்குமே வைத்தது காண்க**
**மறக்குமோ வையம் தமிழன் மனப்பாங்கு**
**வளர்ந்த அறத்தையும் அறிவையும்**
**சிறப்பதென்றால் தமிழால் சிறக்கவேண்டும்**
**தீர்வதென்றால் தமிழ் மறந்து தீர்தல் வேண்டும்**
**(பிறக்கும்போதே)**

**முதலில் தோன்றிய மனிதன் தமிழன்**
**முதல் மொழி தமிழ்மொழி - ஆதலால்**
**புதுவாழ்வின் வேர் தமிழர் பண்பாடே**
**(பிறக்கும்போதே)**

**முதுகிற்புண்படாதவன் தமிழன் போர் எனில்**
**மொய் குழல் முத்தமென் றெண்ணுவான்**
**மதிப்போடு வாழ்பவன் தமிழன்**
**வாழ்வதற்கென்று வாழ்பவன் அல்லன்.**
**(பிறக்கும்போதே)**

# சேக்கிழாரும் பெண்விடுதலையும்

சோழர் காலத்தில் எழுந்த பேரிலக்கியங்களில் பெருமை பெற்று விளங்குவது பெரிய புராணமாகும். சைவத்தை வளர்த்த நாயன்மார்களது தொண்டு மனப்பான்மையை அது விதந்து கூறுகின்றது. மக்கள் மனதிலே சைவ சமயக் கருத்துக்களைப் பதிய வைப்பதற்காகச் சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றுகின்றார். தமது காலத்து மக்கள் வாழ்வு நெறியிலே சமயம் பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பின்வந்தவர்க்கும் விளக்கும் வண்ணம் அடியார்கள் அன்புநெறிகளையெல்லாம் விளக்கி வரலாறுகளாக இயற்றுகின்றார்.

காலத்தின் தேவைக்கேற்றவாறு சமயக் கருத்துக்களைச் சமூகத்திலே விதைக்க எண்ணங் கொண்ட சேக்கிழார் - தம் காவியத்திறத்தினாலும் பாடற்சிறப்புக்களாலும் பல்வேறு நலன்களையும் பெரியபுராணத்திலே இணைத்துச் சென்றிருக்கிறார். ஒரு சமூகத்தின் தேவைகளை இலக்கியம் எடுத்துக் காட்டுவது இயல்பானதாகும். அந்த இயல்புக்கேற்ப, சோழர் காலத்தில் - சமூகத்திலே ஏற்பட்ட புதிய போக்கினைச் சேக்கிழார் தமது காவியத்தினூடாக உலகுக்குக் காட்டியுள்ளார். குறிப்பாக, பெண்கள் பெற்றிருந்த சமூக மதிப்பினை அவர் விளக்கிச் செல்லும் பாங்கு வியப்புக்குரியது. சாதாரண குடிமக்கள் என்ற நிலைமைகளிலிருந்து, அரசமாதேவி என்றநிலை வரையில் பெண்களின் பண்பு, நலன்கள் எவ்வாறு சமூகத் தேவைகளுக்கு உறுதுணையாக இருந்ததென்பதை அவர் பெரியபுராணத்திலே நிலைப்படுத்த முயன்றது, அவரது சமூகப் பணிக்கு எடுத்துக்காட்டாகிறது. காலந்தோறும் பெண்களைப் பற்றி நிலவிய கருத்துக்களை மனத்தகத்தே வாங்கித் தமது காலத்தின் தேவைகளுக்கேற்பப் புரட்சி செய்தவர் சேக்கிழார். பெண்விடுதலை, சமூகத்தேவை என்பதைப் பழைய புராண வடிவத்தால் கூறவந்த அவரது புதுமை, நாம் போற்ற வேண்டியதொன்று. வீட்டைப் பேணுகின்ற மனைவி என்ற நிலையிலிருந்து, பேரரசி என்ற பெருமை பெறுகின்ற நிலைவரை, பெண்ணின் பெருமை எவ்வாறு பேசப்பட வேண்டும் என்பதை வகுத்துக காட்டியவர் சேக்கிழார் என்று கூறின் அது மிகையாகாது.

பண்டைய மரபான பெண்மைக் குணங்களுடன் வாழும் பெண்களால், சமூகத்தின் போக்கிலே ஏற்படும் தாழ்ச்சியான போக்கினை மாற்ற வேண்டியதன் அவசியத்தை சேக்கிழார் நன்குணர்ந்திருக்கிறார். தமிழகத்திற்கு அப்பால் கடல் கடந்து பேரரசு அமைத்து, தமிழர் வீரத்தை உலகறியச் செய்கின்ற சோழர் காலத்திலே, பெண்ணின் பெருமையும் உணரப்படவேண்டியதொன்று என்பதைச் சேக்கிழார் எடுத்துக்காட்டினார். அரசியல், சமூக, பொருளாதார நிலைகளிலே சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் மக்களின் வாழ்வுக்கு வழிவகுப்பனவாக அமைய வேண்டும். சமூக அமைப்புக்கள் மாற்றமடையப் பெண்ணின் பணி எத்துணை அவசியமானது என்பதை வலியுறுத்திய வகையிலே சேக்கிழார் தனித்துவமானவர். அரசியல் நெறிமுறைகளுக்குட்பட்டு வாழ்வு நடத்தும் மக்கள், தமது சமூகத் தேவைகளை இனங்காண்பதற்கும் சமூகப் பிரச்சினைகளை இலகுவில் பொருத்தமான வழிகளிலே தீர்த்துக்கொள்வதற்கும், பெண்களின் பணி பெரிதும் வேண்டப்படும் என்பதைச் சேக்கிழார் மறைமுகமாகவன்றி நேராகத் தமது பெரிய புராணத்திலே கூறிச் செல்கிறார்.

நெடுங்காலமாக இருந்துவரும் சமூக மரபுகளை எவ்வாறு பேணவேண்டும் என்பதையும், பயனற்ற மரபுகளை எவ்வாறு நீக்கவேண்டும் என்பதையும், சேக்கிழார் கூறிச்செல்லும் பாங்கு பெரியபுராணத்தின் காவிய நெறிக்குச் சிறப்பாக மட்டுமன்றி, மக்களது வாழ்வுநெறிக்குச் சிறப்பாகவும் நோக்கப்படவேண்டியதாகும். பெண்களின் சிறப்பான குணங்களை அடிப்படையாக வைத்து, சமூகப் புரட்சிகளை எவ்வாறு ஆரம்பிக்கலாம் எனபதைச் சேக்கிழார் விளக்கமாகப் பல இடங்களிலே கூறிச்செல்கின்றார். பொதுவாக, சிவனடியார்களது வரலாறு கூறப்படும் சந்தர்ப்பங்களிலே, அவர்கள் வரலாறுகளோடு தொடர்புடைய பெண்களது புரட்சியான போக்குகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அன்பு என்னும் நல்லாயுதம் கொண்டு, அக்காலப் பெண்கள் எவ்வாறு சமூக சீர்திருத்தங்களைச் செய்தனர் என்பதை சேக்கிழார் அழகாக விளக்கியுள்ளார். நாயன்மாரது மனைவியராக விளங்கிய பெண்கள், தமது பணிகளினாலே தாம் சிறப்படைவதைவிடச் சமூகச் சிறப்பினையே வேண்டி நின்றனர் என்பதைச் சேக்கிழார் வரலாறு கூறும்போதே எடுத்துக் காட்டியுள்ளார்.

பெண்களின் விடுதலை பற்றிப் பலவாறு பேசப்படுகின்ற இன்றைய கால கட்டத்தில், பெண் விடுதலை என்பது என்ன என்ற விளக்கங்களும் வேண்டப்படுகின்றன. பாரதி காட்டிய பெண் விடுதலை புதுமையானதென்று பலரும் எண்ணுகின்றனர். ஆனால், பாரதியின் பெண்மை பற்றிய கருத்துக்களை நாம் நன்கு விளங்கிக் கொள்ளும்போது, பாரதி பழமையான பெண்மைக் குணங்களையே தமது புதுமைப் பெண்களுக்கு வேண்டி நின்றான் என்பது புலப்படுகின்றது. பெண்விடுதலை பற்றிப் பேசிவந்த பாரதி, சில முரண்பாடான கருத்துக்களையும் கூறிச் சென்றுள்ளான். "பெட்டைப் புலம்பல்" என்றும் "பெண்ணென்று பிறந்து விட்டால் பெரும் பீழை இருக்குதடி" என்றும் கூறிச் சென்றுள்ளான். பெண்ணாகப் பிறந்து விட்டாலே பெருந்துன்பந்தான் என்று அவன் பெண்களைப் பார்த்துப் பரிதாபப்படும் நிலை, பெண்களாலேயே ஏற்பட்டதென்பதை பாரதி குறிப்பாகவே விளங்க வைத்தான். அதனை வெளிப்படையாகவும், விளக்கமாகவும், பாரதி வெளிப்படுத்தியிருந்தால் - பாரதியின் பெண் விடுதலை எது என்பது எளிதில் புலப்பட்டிருக்கும்.

பெண்ணுக்கும் ஈசன் ஞானத்தை வைத்திருக்கிறான். ஆனால், மண்ணுக்குள்ளே சிலர் மாதரறிவைக் கெடுத்தார் என்ற பாரதியின் குற்றச்சாட்டு அர்த்தமற்றதென்பதைச் சேக்கிழார் அழகாகத் தமது பெரியபுராணத்திலே பல்வேறு இடங்களிலே கூறிச் செல்கிறார். தாம் கண்ட சோழர் காலப் பெண்களின் பண்புகளை விரிவாக விளக்கும்போது, பெண்ணடிமைத்தனத்தை எவ்வாறு நீக்கலாமென வழிகளையும் கூறிச் செல்கிறார். பெண்ணின் குடும்பப் பாங்கும் இயல்பான அறிவும் அவன் பணிக்கு போதுமானது என்பதைக் காட்டுகிறார். குடும்ப நிலையிலே பெண்கள் பலரது பணி சிறப்பாக அமைந்து, பின் அவரது வாழ்வுநெறி செம்மைப்பட உதவியதையும் விளக்குகிறார்.

பெரியபுராணத்திலே சேக்கிழார் மூன்று பெண்களைச் சிறப்பித்துக் கூறுகிறார். புனிதவதியார், மங்கையற்கரசியார், இசைஞானியார் என்ற இந்த மூவரும் - பல்வேறு நிலைகளில் நின்று சமூகப்பணி புரிந்தவர்கள் என்பதை அவர் விளக்கும்போது தான், தமது காலத்தில் பெண் பெற்றிருந்த சிறப்பியல்புகளையும், அவளது ஆக்கபூர்வமான பணிகளின் சிறப்பையும் விளக்கி விடுகின்றார். அரசியல், சமூக, பொருளாதார நிலைகளிலே நாடு சிறப்புற்றிருக்கும்போது, பெண்மையும் சிறப்பிக்கப்படுவதில் என்ன வியப்பிருக்கிறது என்று இன்றைய பெண்கள் கேட்கக்கூடும். ஆனால், நமக்கு முன்பிருந்த காலத்து வரலாறுகளையும், தமது காலத்துச் சமூக அமைப்புக்களுடன் இணைத்து நோக்கியே சேக்கிழார் அதனைக் கூறியுள்ளார். அதன்மூலம் - காலங்காலமாகப் பெண்ணின் பணி, சமூகத்தின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் எவ்வாறு காரணமாயிற்றென்பதை எடுத்துக் காட்டுகிறார்.



புனிதவதியார், வணிகர் குலத்துப்பெண். சிவவழி நின்று வாழ்வு நடத்தியவர். அன்பினாலே அனைவரையும் அவ்வழியிற் செலச் செய்தவர். குல மரபுகளோடு, நடைமுறைப் பழக்கவழக்கங்களோடு இணைந்து வாழ்ந்தவர். அவ்வாறிருந்தபோதும் சமூகச் சீர்திருத்தம் ஒன்று ஆண்கள் வாழ்வு நெறியிலே ஏற்படவேண்டிய தேவையை அவர் நிறைவுபடுத்தினார். மனைவியின் சிறந்த குணத்தை மதித்து வாழ்வு நடத்த முடியாதவனான தன் கணவனது பழியை, தன் செயல்களாலே துடைத்தெறிந்தவர். மனைவியிடம் தெய்வத் தன்மைகள் இருப்பதைக் கணவன் அறிந்தவுடன், அவளைப் பிரிந்து செல்வது முறையன்று. அவ்வாறு இணைந்து வாழ முடியாமல் பிரிந்து செல்லும் கணவன், பிறிதொரு மனைவியைத் தேடி அவளோடு வாழ்வு நடத்துவதன் மூலம் தன் பெருமைகளையெல்லாம் இழந்து விடுகிறான். தன் சமூகத்திற்கும் அவமதிப்பு ஏற்படுத்துகிறான்.

அத்தகைய நிலையிலே நிலையாக இருந்த சமூக மரபுகளை மாற்ற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆனால், சிறந்த பெண்மைக் குணங்கள் தான் அத்தகைய சந்தர்ப்பங்களிலே, சமூகத்தின் கட்டுக்கோப்புக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்து, சமூகத்தின் இயக்கத்தைச் சுமுகமான முறையிலே நடத்திச் செல்லும் வல்லமை படைத்தன என்பதைச் சேக்கிழார் துணிந்து எடுத்துக் கூறுகின்றார். பரமதத்தனின் பெரும் பிழையை மன்னிக்கும் மனப்பாங்கு பெற்ற புனிதவதி, அவன் பழிதீர்க்கத் தன்னையே தியாகம் செய்கின்றாள். தன் அழகு வடிவத்தையே வெறுத்துப் பேய் வடிவு கொள்கிறாள். பெண்ணழகை விரும்பும் ஆண்கள் அதே பெண் பேய் வடிவு கொண்டால், தம் மனத்தை மாற்றும் ஆற்றல் படைத்தவர்கள். ஆணின் மனச்சனலத்தை எடுத்துக்காட்டிப் பெண்ணின் நிறைவான குணத்தை வெளிப்படுத்தும் சேக்கிழார், பாரதியைவிடத் துணிவு படைத்தவராவார். ஆணின் குணங்களைப் பெண்ணே மாற்றும் வலிமை படைத்தவள் என்பதை அஞ்சாமல் எடுத்துக்காட்டுகின்றார். புனிதவதியார் பேய்வடிவம் கொண்டு கணவன் பழியைத்தானே தாங்கிக் கணவனுக்கு வாழ்வு கொடுத்து, பக்திப் பணியை மேற்கொள்ளுகிறார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை மாற்றி, ஒருத்திக்கு ஒருவனே என்ற புதிய கோட்பாட்டை வகுத்து விடுகிறார். "தாய்க்குப் பின் தாரம்" என்ற பொன்மொழியை அர்த்தமாக்குகிறார். "இல்லாள்" என்ற சொல்லின் பொருளைத் தெளிவாக்குகின்றார். கேட்கின்ற எதையுமே மறுக்காத மனைத் தலைவியின் மாண்பை மற்றவர் உணரச் செய்கிறார்.



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

சேக்கிழார் காட்டும் மங்கையர்க்கரசி, மாதர்களிலே சிறந்தவர். அரசனுக்கு மனைவியாக வாழ்ந்தபோதும், அரசன் தவறையே திருத்தும் பணியில் ஈடுபட்டவர். தன்னாட்டையும், தன்சமூகத்தையும் நன்னெறியிலே செலுத்துவதற்காக முன்னின்றுழைத்தவர். அவர் பணியைப் பாராட்டி ஞானசம்பந்தரே பதிகம் பாடியுள்ளார். மங்கையற்கரசியாரது நல்ல உள்ளத்தையும், உயர்ந்த நோக்கத்தையும் சம்பந்தர் பாராட்டுவது உலகத்து ஆண்மக்கள் அனைவர்க்கும் வழிகாட்டியாகிறது. பெண்மையறத்தை, ஆண்மையறம் போறறுமாயின், சமூகம் சீர்திருந்தும் என்ற பாரதியின் கோட்பாட்டைப் பல ஆண்டுகளுக்கு முன்னேயே சேக்கிழார் வகுத்து வைத்திருப்பது நோக்குதற்குரியது. அரசனான தன் கணவனை மனம் மாற்றி, நாட்டின் நலத்தைப் பாதுகாக்கத் துணிந்து நின்ற மங்கையர்க்கரசியின் மனத்துணிவு மாதர்க் கருங்கலமானது. சமண மதத்தையே நாட்டிலிருந்து அகற்றிச் சைவத்தை மீண்டும் சிறப்புறச் செய்த அவரது சமூகத்தொண்டு, இன்று சமூகத் தொண்டு புரியும் மாதர்கள் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தும் பெருநெருப்பானது. பெண்கள் தங்கள் நிலையை உணர்ந்து வதற்கு துணிவுடன் முன்னின்று கடமை செய்ய வேண்டுமெனச் சேக்கிழார் கூறுகின்றார். மங்கயர்க்கரசியின் மனத்துணிவுதான் பாண்டிநாட்டின் பெருமைக்குக் காரணமானது. பொற்கொல்லன் சொற்கேட்டு, நீதி தவறிய பாண்டியனால் ஏற்பட்ட குலப்பழியினை மங்கையர்கரசியார் தீர்த்து வைக்கிறார். தலைமுறை தலைமுறையாக பாண்டிய மன்னர்கள் பழியுடன் வாழ்ந்த வாழ்வை மாற்றிப் பாண்டியர் குலப் பெருமையை மீட்டுத் தருகின்றார். சமண சமயத்தைத் தழுவிய தன் முன்னோர் பெருமையைக் குறைத்த பாண்டிய மன்னனான தன் கணவனை, அந்தச் சிறுமையினின்றும் மீட்டு, "தென்னவர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை" யாகிறார் மங்கையர்க்கரசியார். மாதர் தமது நற்குணங்களையும், திறமைகளையும் ஏற்ற வழியிலே பயன்படுத்தாது ஆண்களுக்கு அடிமைகளாகச் சோம்பல் வாழ்வு நடத்துவது பயனற்றது. எதிர்த்து நின்று உண்மைகளை எடுத்துக்காட்டி, ஆண்களது தவறைக் கண்டித்து, அவர்களை நல்வழிப்படுத்த பெண் முயற்சி செய்ய வேண்டும். தன் அன்பினாலும், புத்திக் கூர்மையினாலும், தாய்மைப் பண்பினாலும் ஆண்களை வழிநடத்த வேண்டும் என்பதை மங்கையர்க்கரசியின் வரலாறு நன்குணர்த்துகிறது.

மொழியும் சமயமும் பெண்களால் ஒரு நாட்டில் வளர்ந்தோங்க முடியும் என்பதை, மங்கயர்க்கரசியாரின் வரலாறு கொண்டு, சேக்கிழார் தெளிவுபடுத்துகிறார். சம்பந்தப் பெருமானின் திருப்பாடலிலே

**"மங்கையர்க் கரசி வளவர் கோன் பாவை**
**வரிவளைக் கைமட மானி**
**பங்கயச் செல்வி பாண்டிமா தேவி"**

என்று மங்கையர்க்கரசியார் போற்றப்படுகின்றார். பல்லவர் காலத்துப் பக்தி இயக்கத்தின் சிறந்த தலைவராக இருந்த சம்பந்தரால், மங்கையர்க்கரசியின் பணி போற்றப்படுகிறது என்றால், மற்றையோர் நிலை கூற வேணடியதில்லை. திருவாலவாய்த்தலத்தின் பெருமை கூற வந்த சம்பந்தர், சாதாரண மானிடப் பெண்ணாகிய மங்கையர்க்கரசியாரின் பணியின் சிறப்பையும் இணைத்திருக்கிறார். இத்தகைய பாடற்சிறப்புப் பெற்ற சாதாரண மானிடப் பெண்களின் சமயவாழ்வு - மக்களால் போற்றப்படவேண்டியதென்பதைச் சேக்கிழார் வலியுறுத்துகின்றார். தமது சோம்பற்தனத்தை விடுத்துப் பெண்கள் தாமே போற்றுகின்ற மடமைக்குணங்களை விடுத்து, சமூகப் பணியிலே ஈடுபடப் புதுவழி கூறிய சேக்கிழார், பெண் விடுதலையைப் பாடிய புதுமைப் புலவராகிறார்.

**"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப் போமென்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"**

என்ற பாரதியின் கும்மிப் பாட்டு - சேக்கிழாரின் பாடல் முன் அர்த்தமற்றதாக, வலியற்றதாக நிற்கிறது. பொய்மை கொண்ட கலிக்குப் புதிதானதன்றிப் பண்டைய மக்களுக்கு இயல்பான குணங்களாகவே பாரதி கூறியுள்ள புதுமைப் பெண்களின் பண்புகள் காணப்படுகின்றன.

காவியத்தின் தலைவரான சுந்தரரைப் பெற்றெடுத்த மாதா என்ற வகையில், இசைஞானியார் பெரியபுராணத்தில் போற்றப்படுகின்றார். 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் நற்றாயாக' அவரைச் சேக்கிழார் கண்டார். சமயத்தின் கொள்கைகளையெல்லாம் வாழ்வுநெறியூடாக விளக்கிய சுந்தரரை அக்குணங்களோடு வளர்த்தெடுத்த இசைஞானியார் பாராட்டுக்குரியவர் என்பதைச் சேக்கிழார் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டுவதன் மூலம், நல்லவர்களை உருவாக்கி உலகுக்களிக்கும் உயர்ந்த பணி, பெண்களுடையது என்பதை வரையறை செய்து விடுகிறார். அன்று தொட்டு இன்றுவரை, தாய்மைப் பண்பு உலகத்தில் செய்துவரும் அளப்பரும் தொண்டுகளைப் பாவலர்கள் பாடியுள்ளனர். பாரதி சிறப்பிக்கும் அன்னை பராசக்தியின் வடிவங்களாகச் சாதாரண மானிடப் பெண்கள் வாழ்வதைச் சேக்கிழார் தமது கால வாழ்வு நெறியிலே கண்டவர். அதனால் அதனை தமது நூலில் சிறப்பித்திருக்கிறார்.

எனவே, சேக்கிழார் - பெண் விடுதலை என்ற புரட்சியின்றியே செம்மையான வாழ்வு நெறியூடாகப் பெண்களைப் பெருமைப்படுத்தினார். பெண்ணின் இயல்பான அறிவின் திறத்தை வெளிப்படுத்தினார். ஆனால் பாரதியோ, பெண்ணின் பெருமையை மறைமுகமாக கூறியதாலேயே, இன்றும் பெண் விடுதலை யெனப் பாரதி கொண்ட பண்புகள் தவறாக விளங்கப்படுகின்றன. அறிவாகிய விளக்கின் உதவி கொண்டே ஞானக் கவிஞர்களின் கருத்துக்களை நமது பெண்கள் தேடவேண்டும். தமது விடுதலை என்பது எது என்பதை அந்த ஒளியிலே கண்டு மகிழ வேண்டும். அடிமையாக வாழ்வது யார் என்பதைப் புரியவேண்டும். ☆

நமது ஈழநாடு பத்திரிகை ஓராண்டு நிறைவு கொள்வதையும்,
அதன் சேவையையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.





பாரதிதாசன் நூலகம்
அல்வாய்.
(சி.1530)

சகல விதமான அச்சு வேலைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
தமிழ்ப்பூங்கா மல்ரி ஓவ்செற் பதிப்பகம்
THAMIL POONGA MULTY OFFSET PRINTERS
பிரதான வீதி. MAIN ST. (சி.1533) நெல்லியடி. NELLIADY. கரவெட்டி. KARAVEDDY.

AAROKIYA DIAGNOSTIC CENTRE
ஆரோக்கிய டயக்னோஸ்ரிக் சென்ரர்
நமது ஈழநாடு பத்திரிகை ஓராண்டு விழாவினைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வடமராட்சியில் 29.09.2003 தொடக்கம்
R.M. ராஜா ஞாபகார்த்த புதியதோர்
X - RAY பிரிவு உதயம்.



ம.மீனலோஜினி - (X.கதிரியலாளர்)
இடம்:- கொமர்ஷல் வங்கி அருகாமை,
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
(சி.1534)

"ஆனந்" தொலைத் தொடர்பகம்
இன்ரநெற், பக்ஸ் (FAX) வதிகள் உண்டு.
குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையைப்
பெற, நாடவேண்டிய ஓரே ஒரு தொலைத்
தொடர்பகம்

ஆனந் தொலைத் தொடர்பகம்
வதிரி வீதி, உடுப்பிட்டி.
தொலைபேசி இலக்கம்:
021 = 22638448.
IDD = 0094 = 212263848

ஆனந் தொலைத் தொடர்பகம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொலைபேசி இலக்கம்:
070 = 212640.
IDD = 70 212640.
(சி.1531)

கௌரி மிதிவண்டி - காலணி வாணிபம்



இரண்டாம் ஆண்டில் அடி எடுத்துவைக்கும்
நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
தரம் மிகுந்த மிதிவெடிகள் (LUMALA, HERO)
உதிரிப்பாகங்கள், நவ நங்கையர்கள் விரும்பும் காலணி வகைகள்
பெற்றோ மாக்ஸ் மற்றும் உதிரிப்பாகங்களும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஓரே ஒரு இடம்
கௌரி மிதிவண்டி - காலணி வாணிபம்
உரிமையாளர் - க.பேரானந்தன்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி.
(சி.1532)
முக்கிய குறிப்பு:-
முன்பு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்திருந்த கௌரி மிதிவண்டி - காலணி வாணிபம், தற்போது பருத்தித்துறை வீதியில் நெல்லியடி சந்திக்கருகாமையில் அமைந்துள்ளது.

முதலாம் ஆண்டைப்
பூர்த்தியாக்கும் "நமது ஈழநாடு"
என்றும் தன் பணியைத் தொடர
வாழ்த்துகின்றோம்.

- அழகு சாதனப் பொருட்கள்.
- அன்பளிப்புப் பொருட்கள்.
- பாடசாலை உபகரணங்கள்.
- பிளாஸ்டிக் பொருட்கள்.
- எவர் சில்வர் பொருட்கள்.

சத்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி.1536) பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ். ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (NIC)
முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு
நடாத்திய போட்டியின்போது, தலைமைக்
காரியாலய விற்பனைப் பணிப்பாளர் அவர்களால்
யாழ். மாவட்டத்தில் முதல் தரக்
காப்புறுதியாளராகவும், யாழ். மாவட்டத்திலே
அதிகூடிய வைப்புப் பணம் இட்டவராகவும் தெரிவு
செய்யப்பட்டவரான
திரு.நமசிவாயம் சங்கரலிங்கம்
அவர்களை
இதய பூர்வமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்.ஜனசக்தி கம்பனி ஊழியர்கள், முகவர்கள் விற்பனையாளர்கள்.
(சி.1535)

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது ஈழநாடு தொடர்ந்தும்
தனது பணியைத் தொடர வாழ்த்துகின்றோம்.
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள்
பொங்கிடும் பார்வையைப் பெற்றிட..
எரிக்கணேஷ்
பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட
உறுதியான, அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட,
இளைய தலைமுறைகளே! மிதப்புப்பற்களா? அழகிய
அமைப்பைப் பெற்று, உறுதிமிக்க பற்கிளிப்புகளைப்
பொருத்திட யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான
மாத்திரை விற்பனையில் உண்டு.
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்.
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.222 2486
கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80,கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல 91,கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P.222 5233
(சி.1525)

ஈழநாடு தனது 1 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடும்
இவ்வேளையில் அதன் சேவை மேன்மேலும் வளர எமது நல்வாழ்த்துக்கள்
பக்ஸ் (Fax) வசதிகள், போட்டோப்பிரதிகள்,
லமனேற்றிங் Computer & Accessories
E - Mail & Internet
Sales & Service.
Whole Sales Distributers For:
Dialog Kit card
Curvform Brassiers, Silvershield Socks, Banians and Textiles
இன்னும் பல வேகமானதும், இலகுவானதும்
இலாபகரமானதுமான அளப்பரிய சேவைகளுக்கு:
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
SRI MURUKAN TELE COMMUNICATION SERVICE
& AGENCY POST OFFICE
303 K.K.S.Road, Faffna.
T.P.: 021 - 2670, 3588
Fax: 021 - 3214
E.Mai: Del - Smskr@eureka.lk
(சி-1537)

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது
ஈழநாடு, தொடர்ந்தும் தன் பணியைத் தொடர
வாழ்த்துகின்றோம்.
DMI
யாழ்ப்பாணம்
(சி.1539)

சிறுகதை

# "யுவ தர்மம்"

"அம்மா... தாயே தர்மம் குடுங்கோய்யா..."

"ரெண்டு நாளாப் பட்டினி ஐயா. ஏதாவது குடுங்கோய்யா..."

"பசியலை நடக்கவே முடியாமக் கிடக்குது... உங்களோடை கூடப்பிறந்த தம்பி எண்டு நினைச்சு உதவி செய்யுங்கோம்மா...

பஸ் நிலையத்தில், அந்த நீண்டவரிசையில் தவங்கிடந்த ஒவ்வொருவருக்கு அண்மையிலும் நின்று, சோகக்குரலில் தன் சோற்றுக்கு வழிகாணும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அந்தப் பிச்கைக்காரன்.

"இப்படியான தடியன்களுக்கு ஒருக்காலும் உதவி செய்யக் கூடாது."

"ஏதாவது தொழிலைச் செய்து சீவிக்களாந்தானே..."

"இந்தக் காலத்துப் பிச்சைக் காரர் கனபேர் வங்கியிலை கணக்கும் வைச்சிருக்கினம்..."

"இவை தரவளியளுக்கு உதவி செய்வது புண்ணியமில்லை... பாவம்!"

"இந்தப் பெரிய தேகத்தை வச்சுக்கொண்டு இப்பிடிப் பிச்சை எடுக்க வெக்கமில்லையே..."

"இப்ப இஞ்சை நிண்டு பிச்சை எடுக்கிறான்... பின்னேரம் தியேட்டருக்குள்ளை இருந்து படம் பார்ப்பான்."

"ஆளைப் பார்த்தால், பிச்சைக்காரன் போலை தான் கிடக்குது... ஆனால், நாங்கள் எங்கையாவது பிராக்குப் பாத்தால் காதிலை, கழுத்திலை கிடக்கிறதுகளை உருவிக்கொண்டு வறுகிவிடுவான்..."

வரிசையில் நின்றவர்களில் பலர் ஏளனமும், வெறுப்பும் கலந்த குரலில் தம் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் 'தான'மாக வழங்கிக் கொண்டிருந்தனர்.

நீண்டநேரமாக பஸ் வராமல் விட்டதும், கால் உழைய வியர்வையுடன் நிற்கவேண்டியிருந்ததும், பிச்சைக்காரனின் கீச்சுக்குரலைச் சகிக்க முடியாம லிருந்ததும், அவர்களுக்கு எரிச்சலையும், ஆத்திரத்தையும் மூட்டி, சொற்களுக்குக் கூர்மையையும், வேகத்தையும் ஏற்படுத்தின.

ஆனால், அவன் முகத்தைச் சுளிக்கவில்லை. யாரையும் முறைத்துப் பார்க்கவுமில்லை. கர்மயோகியைப்போல், தன் கடமையைக் கண்ணாக, தன் தொழிலின் வழியில் அவன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

பரம்பரைப் பிச்சைக்காரனோ!

என் அருகில் வந்த அவன், பேணியைக் குலுக்கியபடியே என்னிடம் நீட்டினான்.

குலுக்கல் சத்தம் சற்று வித்தியாசமானதாக இருந்தது. அவனைப் பற்றிய ஆராய்ச்சிகள், விமர்சனங்கள், ஆலோசனைகள் போன்றவற்றைப் புறந்தள்ளிவிட்டு, சிலர் அவனுடைய தகரப்பேணிக்குள் நாணயங்களைப் போட்டுத்தான் இருக்கிறார்கள்!

இவர்களை, நான் பின்பற்று வதா? அல்லது சற்று முன்னர் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்களை ஆமோதிப் பதா? என் 'பட்டிமன்ற' முடிவுக்குக் காத்திராமல், அவன் என்னைவிட்டுச் சென்றுவிட்டான்.



சற்றுத்தள்ளி, வேறு எங்கோ செல்லும் பஸ ஸுக்காகக் காத்துக்கொண்டு நின்றான் இளைஞன் ஒருவன் - கையில் சிகரெட்; முகத்தில் 'கூலிங்' கிளாஸ்.

அவனுடைய உடுப்பு, தோற்றம் எல்லாமே, அவன் பணவசதி படைத்தவன் தான் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

பிசசைக்காரன், அவனிடம் தன் பல்லவியை ஆரம்பித்தான். தகரப்பேணியைக் குலுக்கினான்.

அவனுடைய பரிதாபக் குரலோ, பிச்சைப் பேணியின் குலுக்கல் சத்தமோ, இளைஞனுடைய காதுகளை எட்டியதாகத் தெரியவிலலை.

பழுத்த அனுபவம் மனத்தைத் தூண்ட, பிச்சைக்காரன் தன் நடையைத் தொடர்ந்தான்.

நான் செல்லவேண்டிய பஸ் இன்னமும் வரவில்லை.

அந்த இளைஞனை மீண்டும் பார்த்தேன்.

தன்னை - தன் ஆடம்பர உடுப்புக்களை-தன்னுடைய தோற்றம் பிரதிபலிக்கும், தன் பணகார அந்தஸ்த்தை யாராவது கவனிக்கிறார்களா என்பதை அறிய விரும்புபவனைப்போல், தன் பார்வையை எறிந்து கொண்டிருந்தான்.

சிறிதுநேரத்தில், எங்கிருந்தோ வந்த இளம் பெண்கள் இருவர் - அவன் நின்ற வரிசையில், அவனுக்குப் பக்கத்தில் நின்றார்கள்.

இருவரும் அழகாக இருந்தார் கள்; கவர்ச்சிகரமான உடை அணிந்திருந்தார்கள்; செல்லமாக - மென்மையாக - இனிமையாகத் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இளைஞன் சுறுசுறுப்படைந்தான். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். தலைமயிர் குழம்பாமல் ஒழுங்காக இருக்கின்றதா எனத் தடவிப்பார்த்துக் கொண்டான். "கூலிங்கிளாஸ்" அளித்த துணிச்சலில், இடைக்கிடை பார்வை யைத் திருப்பி, அந்தப் பெண்களின் அழகை விழுங்கிக் கொண்டிருந்தான்.

"அம்மா தாயே... பிச்சை போடுங்கோம்மா..." பிச்சைக்காரன் வந்துவிட்டான்.

அழகிகள் தம் 'டம்பப்' பைகளைத் துழாவத் தொடங்கினர்.

ஆனால், வாலிபன் முந்திக்கொண்டான்.

தன் சட்டைப் பைக்குள் கிடந்த தாளொனறை எடுத்தான்; தான் நினைத்த தொகை சரிதானா என்பதை உறுதி செய்வதைப்போல், அதை முன்னும் பின்னும் புரட்டிப்பார்த்தான்; பின்னர் அநாயாசமாக அந்தப் பிச்சைக்காரனின் பேணிக்குள் அதைத் திணித்தான்.

புத்தம் புதிய நூறு ரூபாத் தாள்!

பிச்சைக்காரன் கனவிலும் எதிர்பாராத தொகை!

சில்லறை ஏதாவது திருப்பிக் கொடுக்க வேண்டியவருமோ என்ற நினைப்பில், சிறிது நேரம் அங்கே நின்றுவிட்டு - அந்தப் பெண்களின் தர்மத்தையும் பெற்றுக்கொண்டு, அப்பால் நகர்ந்தான் அவன்.

ஆனால், தான் கொடுத்த அந்தத் தொகையைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலைப்படாதவனைப்போல... பிச்சைக்காரன் அங்கே நிற்கின்றானா, போய்விட்டானா என்பதைப் பற்றி அக்கறை இல்லாதவனைப் போல...

புதிதாக ஒரு சிகரட்டைப் பற்ற வைத்தான் அந்த இளைஞன்.

சிகரட் புகை, அந்த அழகிகளைச் சிறிதளவும் பாதிக்கக்கூடாது என்பதிலே, தான் அக்கறை உள்ளவன் போலவும் காட்டிக்கொண்டான்.

"பாத்தியளே... முந்தி ஒரு சதத்தைக்கூட, பிச்சைக்காரனுக்குப் போடேல்லை... இப்ப நூறு ரூபா போட்டிருக்கிறான்..."

எனக்கு அருகில் நின்றவரிடம் என் அருவருப்பையும், அதிருப்தியையும் நான் வெளியிட்டேன்.

"நீங்கள் என்னத்தைச் சொல்லப்போறியள் என்பது எனக்கு விளங்குது. தான் ஒரு பெரும் மனிதன் என்று அந்தப் பொம்பிளைப் பிள்ளையளுக்குக் காட்ட... தனக்கு நூறு ரூபா ஒரு பெரிய தொகையல்ல என்பதைக் காட்ட... அவன் விரும் பியிருக்கலாம்... ஆனா, பிச்சைக்காரனைப் பொறுத்தவரை, அது ஒரு பெரிய தொகைதானே... எங்கடை ஆக்களின்ரை ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு அவமானப் படாமல்... வெய்யிலுக்கை திரியாமல்... இரண்டொரு நாளைக்காவது அவன் நிம்மதியாயிருந்து சாப்பிடலாந்தானே... சில சந்தர்ப் பங்களிலை, ஒரு செயலின் காரணங்களைவிட, அதனால் வாற பயனைததான் நாங்கள் பார்க்கவேண்டும்... இல்லையா?" என்றார் அவர்.

'சுருக்'கென்றது எனக்கு!

சிற்பி

---

கட்டுரை

# பேச்சு வழக்கினை எழுத்து வழக்கிற்கு மாற்றும்போது கவனிக்கப் படவேண்டியவை

'ஒருவர் தன் கருத்தைப் பிறருக்கு அறியச் செய்யவும், பிறருடைய கருத்தைத்தான அறிந்து கொள்வதற்கும் கருவியாக இருப்பது சொல்லாகும்' என நாவலர் - சொல்லிற்கு வரைவிலக்கணம் செய்கின்றார். சொற்களின் பயன்பாடு இருவகையிலே காணப்படுகின்றது. ஒனறு பேச்சு வழக்கில் சொற்கள் பயன்படுதல். இரணடாவது - எழுத்து வழக்கில் சொற்கள் பயன்படுதல் என்பனவே அவையாகும்.

இருவகைப்பட்ட வழக்குகளிலும் - பேச்சு வழக்கில் சொற்களை விளங்கிக்கொள்வதற்கும், எழுத்து வழக்கில் சொற்களை விளங்கிக்கொள்வதற்கும் வேறுபாடுகள் உள்ளன.

பேச்சுவழக்கில் பேசுவோன் (தன்மை), கேட்போன் (முன்னிலை) ஆகிய இரு விடயங்களே காணப்படுகின்றன. பேசுவோன்கூறும் விடயங்கள் அனைத்தையும் அவனால் கிரகித்துச் சொல்லமுடிகிறதா என்பது பெரிய பிரச்சினை யாகவே உள்ளது. அதனால் தான் ஔவையார்,

'ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்!....' என்ற பாடலில் - ஒரு சபையில், ஒரு பேச்சாளன் - கூறுகின்ற வார்த்தைகளைக் கேட்கின்ற ஆற்றல் படைத்தவன். அந்தப் பேச்சை அப்படியே கிரகிக்கும் தன்மையுடையவன் நூறுபேரில் ஒருவர்தான். அந்தச் சபையில் இருக்கமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பேச்சுவழக்கைப் பொறுத்தவரையில், விடயம் கேட்போரிடம் போய்ச் சேருதல் என்பது - எழுத்து வழக்குச் சொற்கள் வாசகனிடம் போய்ச் சேருவதைவிடவும் அதிகம் என்றே கூறல்வேண்டும்.

எழுத்துவழக்குச் சொற்கள் என்ற விடயத்தை நோக்குகின்றபோது, பத்திரிகைகளில் எழுதப்படுகின்ற விடயங்கள் வாசகனை முழுமையாகச் சேருகின்றதா என்பது கேள்விக்குரிய தொன்றாகவே விளங்குகின்றது. எழுதுகின்றவன் - தான் கூற வந்த விடயத்தை எழுத்துக்குள் அடக்கமுடிகிறதா அல்லது எழுத்துக்களில் அடக்கமுடியுமா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததொன்றாகவே விளங்கு கின்றது.

எந்தவொரு மொழியிலும் இவ்வாறான தர்மசங்கடமான நிலையொன்று இருக்கவே செய்கிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பன்கூட, தான் கூறவந்த விடயத்தை முழுமையாகச் சொல்லமுடியாமல் திண்டாட வேண்டிய சந்தர்ப்பமும் நிகழ்ந்திருக்கிறது. இராமனின் அழகை வர்ணனை செய்ய முயன்ற வேளையில், "மையோ மரகதமோ மழை முகிலோ..." என்று கூறிக்கொண்டு வந்து, இறுதி யில் "ஐயோ! இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான்! என்று கூறுவதன் மூலமாகத் தனது இயலாமையைத் தெரிவிப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறான ஒருநிலையில் எழுத்து வழக்கிலே விடயங்கள் யாவும் வாசகனை அடையுமாறு செய்தல் எவ்வாறு, என சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

எழுத்து என்பது நாம் பேசும் ஒலிக்கு - மொழிக்குப் பயனபடுகின்ற, ஒலிக்குக் கொடுக்கப்படுகின்ற வரி வடிவம் என்பது இலக்கணகாரரின் வரைவிலக் கணமாகும். இந்த ஒலிகளை விளங்கிக்கொண்டு, குறுகிய ஓசையுடைய குறில்களையும், நீண்ட ஓசையுடைய நெடில்க ளையும் வேறுபடுத்தி எழுதுகின்றோம். குறில், நெடில் எழுத் துக்களின் வேறுபாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்ளாது போனால், பல்வேறு வகையான சிக்கல்களை எழுத்து வழக்கில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

குறில், நெடில் வேறுபாடுகள், லகர, ளகர, ழகர எழுத்துக்களின் வேறுபாடுகள், னகர, நகர, ணகர எழுத்துக்களின் வேறுபாடுகள் என்பவற்றைச் சரியாக உணர்ந்து, எழுத்து வழக்கிலே பயன்படுத்தவேண்டும்.

இவ்வாறு எழுத்துக்களைப் பயன்படுத்துவது என்பது - எழுது பவனின் கருத்துக்களை, வாசகன் எவ்வளவு தூரம் விளங்கிக்கொள்கின்றான் என்பதை நோக்குகின்றபோது, எழுதுபவன் உணர்வுகள் அப்படியே வாசகனிடம் போய்ச் சேர்வதற்கு மொழியில் குறியீடுகளின் பயன்பாடு அவசியமாய் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஒரு வாக்கியம் ஒன்று - சாதாரணமாகக் குறியீடுகள் எதுவுமில்லாது எழுதப்படுவதற்கும், குறி யீடுகள் கொண்டு எழுதப்படு வதற்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதை அறியலாம்.

**எடுத்துக்காட்டாக,**

இராமன் வந்தான் என்ற வாக்கியத்தினை இராமன்! வந்தான் (?) என்று எழுதுகின்றபோது, அது தருகின்ற பொருள்கள் வித்தியாசப்படுவதை உணரலாம். முதலாவது வாக்கியம் ஒரு செய்தியைத் தருகின்றதாகவே அமைகிறது. இரண்டாவது வாக்கியத்தில் இராமன் வியப்புக்குரியவனாகவும், அவன் வருகை சந்தேகத்துக்கிடமானதாக, அவன் வந்தானா? என்று கூறப்படுவதாகவும் அமைகின்றன.

இவ்வகையில் மொழியில் குறியீடுகள் வகிக்கும் பணி இன்றியமையாததாகும். தமிழ் மொழியில் பலவகையான குறியீடுகள் காணப்படுகின்றன.

முற்றுப்புள்ளி (.), வினாக்குறி (?), மெய்ப்பாட்டுக்குறி அல்லது வியப்புக்குறி (!), காற்புள்ளி (,), முக்காற்புள்ளி அல் லது விளக்கிசைக்குறி (:), அரைப் புள்ளி (;), சிறுகோடு (-), தனிநிலைத்தொடர்க்குறி (...), அடைப்புக்குறி [()], மேற்கோட்குறி - இதில் ஒற்றை மேற்கோட்குறி (' '), இரட்டை மேற்கோட்குறி (" ") என இரு வகைகள் காணப்படுகின்றன.

குறியீடுகளைப் பயன்படுத்துகின்றபோது, இவ்வகைகளை எழுததாளன் பாவிக்கின்றான். அக்குறியீடுகள் தருகின்ற பொருள்களைச் சரியான முறையில் வாசகன் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகவே எழுத்தாளனுக்கும், வாசகனுக்கும் குறியீடுகள் பாவனை தெரிந்திருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

இக்குறியீடுகளை எவ்வாறு பாவிப்பது, எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது தொடர்பாக தமிழ் இலக்கணப் புத்தகங்கள் விரிவான விளக்கத்தைத் தருகின்றன.

குறியீடுகள் பயன்பாடு தொடர்பாக சில விடயங்களை விளங கிக்கொள்ளவேண்டும். முற்றுப்புள்ளி ஒன்று வாக்கியம் ஒன்றின் கருத்து நிறைவிற்காகப் போடப்படுவது. கருத்து நிறைவை வாசகன் புரிந்துகொள்வதற்காக ஒரு மாத்திரை அளவு நேரம் அடுத்த வாக்கியத் தொடக்கத்துக்குப் போகுமுன்னர் முதல் நிறைவு பெற்ற வாக்கியத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்ற குறிப்பையே முற்றுப்புள்ளி தருகிறது. இவ்வாறு அரைப்புள்ளி, அரை மாத்திரை அளவு நேரமும், காற்புள்ளி கால மாத்திரை நேரமும், முக்காற்புள்ளி முக்கால் மாத்திரை அளவு நேரமும் நின்று வாசிகக வேண்டும் என்ற குறிப்பைக் குறியீடுகள் தருகின்றன.

ஒரு மாத்திரை என்பது ஒரு எழுத்து உச்சரிக்க எடுக்கும் நேரத்தை அளவிடு வதற்கு இலக் கணகாரர் பயன்படுத்திய அளவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவழக்குச் சொற்களை, எழுதது வழக்கில் கொண்டு வருகின்றபோது, இனனொரு சிக்கலும் நம்மிடையே தோன்றுவது இயல்பானதாகும்.

ஒரு மொழியைப் பேசுகின்ற மக்கள்- பல்வேறு பண்பாடுகளைப் பின்பற்றி வாழ்பவர்களாக இருக்கலாம். அந்தப் பண்பாட்டு உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியவகையில், ஒரு பொது மொழியைப் பயன்படுத்த வேண்டியது எழுத்தாளனின் கடமையாகும்.

எடுத்துக்காட்டாக, நாற்றம் என்ற ஒரு சொல் பழைய இலககியங்களில் நல்வாசனை என்ற பொருளைக் குறித்து நின்றது. தற்காலத்தில் அந்தச் சொல் கெட்டவாசனையைக் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. ஒரு மொழி -பேசுவோரி டையே காலமாற்றத்தால் தோன்றிய இச்சொல் பற்றிய உணர்வை, எழுத்தாளன் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு மொழியைப் பேசிக் கொண்டு வாழும் பல்வேறு பிரதேசத்தின் மொழிவழக்குகளை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு விளங்கிக்கொண்டு எழுதினால், எழுத்து மொழி நன்றாக அமையும். இவ்வாறான நெறிமுறைகளைக் கடைப் பிடிப்பதன் மூலமே, பேச்சுமொழியிலுள்ள விடயங்களை, எழுத்து மொழிக்குக் கொண்டுவர முடியும் என எதிர்பார்க்கலாம்.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ச்சிபெற்றுக் கொண்டு வருகின்ற இந்த நவீன யுகத்தில், சர்வதேசதரத்திற்கு எமது மொழியை உயர்த்த வேண்டும். அதனை அடைவதற்குப் பல வழிகளிலும் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்று வாதிடுபவர்களுக்கு ஒன்றைச் சொல்லவேண்டியது கட்டாயமாகும்.

நமது மொழியிலுள்ள இலக்கண வரையறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்போமானால், அதுவே சர்வதேசதரத்தையும் தாண்டி ஒரு உன்னதமான, ஒப்பற்ற மொழியாகத் தமிழ்மொழியை விளங்கச் செய்யும் என்பதே அதுவாகும். ●

பூ.நகுலன்

# இதழியலில் 'விளம்பரம்' ஓர் அறிமுகம்

## 1. முன்னுரை

இதழியல் விளம்பரம் கணிசமான முக்கியத்துவம் பெற்ற ஒரு உள்ளடக்கமாக உள்ளது. விளம்பரத்துறை ஒரு கலைமிகுந்த, விஞ்ஞான பூர்வமான தனிப்பெரும் துறையாக, இன்றைய உலகில் அங்கீகாரம் பெற்றுள்ளது. விளம்பர முறைகள் உத்திகளில் ஆராய்ச்சி, திட்டமிடுதல், தயாரித்தல், விளம்பரங்களை முறையாக வெளியிடுதல் இவை அனைத்தும் அனுபவம், பயனோடு தொழில்ரீதியாகச் செய்யப்படவேண்டியவை என்ற கருத்துநிலை வேரூன்றியுள்ளது.

இன்றைய உலகம் விளம்ப ரத்தால் இயங்கிக்கொண்டுள்ளது. ஒரு தொழிலில் உயிர் நாடியே விளம்பரம்தான். விளம்பரம் செய்யாவிட்டால், போட்டிகள் நிறைந்த சந்தை உலகில்- பொருள் உற்பத்தியாளர்கள் தத் தமது பொருட்களை விற்பனை செய்ய




முடியாதநிலை காணப்படுகின்றது. அதிக விளம்பரம் செய்யப்படும் பொருள்தான் தரம் மிகுந்தது என, இன்றைய நுகர்வோன் தீர்மானிக்குமளவுக்கு விளம்பரம் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. எனவே, 'விளம்பரம்' என்ற துறையினை எவரும் அலட்சியம் செய்ய முடியாதநிலையே இன்று காணப்படுகிறது. இக் கட்டுரையானதுள - இதழியலில் (Journalism) முக்கியத்துவம் பெற்றுள்ள ஒரு கூறாக விளங்கும் விளம்பரத்தினை அறிமுகம் செய்வதாக அமைகிறது.

## 2. விளம்பரம்: விளக்கம்

விளம்பரத்திற்கு (Advertisement) பல்வேறு வகையான வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்படுகின்றன. 'விளம்பரம் என்பது ஒப்பீட்டு நிலையில் குறைந்த செலவில் நிறையப்பேருக்கு, அவர்களை வாங்கத்தூண்டும் வகையில் கருத்துக்களை, பொருட்களை, பணிகளைப் பற்றிக் கவர்ச்சி யாகச் சொல்கின்ற ஒருமுறையாகும். பிறிதொரு வகையில் சுட்டுவதானால், ஒரு அறிமுகமான, முன்னேற்றாளன் (Identified sponsor) தானாகவே நேரிடையாக அல்லாமல், பணத்தைச் செலவிட்டு கருத்துக்கள், பண்டங்கள், பணிகள் முதலியவற்றைப் பரப்பிவிடுவதும், அவைகளின் விற்பனைகளைப் பெருக்கி விடுவதும் விளம்பரமாகும்.

விளம்பரம் வேறு, பிரசாரம் அல்லது கருத்துக்களைப் பரப்புதல் (Probaganda) என்பது வேறு. கருத்துக்களைப் பரப்புதல், வணிகநோக்கில் நடைபெறவேண்டும் என்பதில்லை. ஒரு அறிமுகமான முன்னேற்றாளன் என்ற சொற்றொடர், விளம்பரத்துக்கும், செய்திப் பரப்புதலுக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாட்டை உணர்த் துகின்றது. செய்தி பரப்புதல் மூலம் பரவும் கருத்துக்கள் யாரால் அளிக்கப்படுகின்றன என அறிந்துகொள்ள முடியாது. ஆனால், விளம்பரத்திற் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களை எவர் கொடுத்துள்ளார் என்பதை நுகர்வோன் அறிந்து கொள்வான்.

### விளம்பரப் பணியின் தொடர்பு முறைகள்

விளம்பரப் பணியின் தொடர்பு முறையின் பின்வரும் மூன்று நிலைகள் முக்கியத்துவமானவை. அவை வருமாறு

**அ) விளம்பரம் செய்பவர் - விளம்பர நிறுவனம** (Advertisement Agent)

**ஆ) விளம்பர நிறுவனம் - விளம்பரதாரர்**

**இ) விளம்பர சாதன உரிமையாளர்** (Media owner) **- விளம்பர நிறுவனம் - விளம்பரதாரர்.**

விளம்பரதாரர் (Advertiser), விளம்பர நிறுவனம் (Adevrtising Agency), விளம்பரசாதன உரிமையாளர் (Media owner), மக்கள் தொடர்பு ஆலோசகர் (Public Relations counsultant), உப பணிகள் (Ancilliary services), நிறுவன சார்பற்ற விளம்பரப் பணிகள் (Free Lance Services) ஆகிய பல் நிலைப்பட்டவர்களது நெருங்கிய ஒத்துழைப்பு, வெற்றிகரமான விளம்பரம் ஒன்றிற்கான அடிப்படையாக உள்ளது.

### விளம்பரப் பணியின் பல்வேறு முனைகள்

'விளம்பரம்' ஒன்று அதனுடைய செயற்பாட்டு நிலையின் பல்வேறு முனைகளைச் சார்ந்ததாக உள்ளது. அவை வருமாறு -

**அ) விளம்பரதாரர்:** விளம்பரதாரர், உற்பத்தியாளர், இறக்குமதி செய்பவர், சில்லறை விற்பனையாளர், அஞ்சல்வழி விற்பனையாளர் எனப் பல்வேறு வகைப்படுவர்.

**ஆ) விளம்பர நிறுவனம்**

பெரியளவிலான அனைத்து விளம்பரப் பணிகளையும் வழங்கும் நிறுவனம், நடுத்தர அளவிலான நிறுவனம், விசேட வகைத் தொழில்முறை நிறுவனம் (Specialist Technical Agency) அல்லது 'அவசர சேவை' வழங்கும் விளம்பரப் பணியாளர்கள்.

**இ) விளம்பர சாதன உரிமையாளர்கள்:**

அச்சு ஊடகம் (Print media), மின்னணு ஊடகம் (Electronic media), விளம்பரப் பற்றிணைப்பாளர் (Conractor), புறவிளம்பரம் (Outdoor Advertising) மற்றும் பெயர்ச்சி விளம்பர அமைப்பாளர் (Transportation Advertising), பொருட்காட்சி அமைப்பாளர் முதலானோர்கள்.

**ஈ) மக்கள் தொடர்பு ஆலோசகர் :**

விளம்பர நிறுவனங்களைச் சேர்ந்த பல்வேறு நிலைப்பட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகள் (Public Relations Officers).

**உ) விளம்பர உதவியாளர்கள் :**

புகைப்படக் கலைஞர்கள், விளம்பர மாதிரிகள் (நடிகர், நடிகையர்), அச்சுத் தொழிலாளிகள் (Typesetters, Process engravers and plate makers), அச்சுத்தொழில் உரிமையாளர்கள், சினிமாத் தயாரிப்பாளர்கள், காகிதம் வர்ணம் முதலான பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், பொருட்காட்சி அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளைச் செய்பவர்கள் முதலானோர்.

**ஊ) நிறுவன சார்பற்ற பணிகள்:**

விளம்பர நகல் எழுதுபவர் (Copy writer), விளம்பர வடிவமைப்பாளர், கலைஞர்கள், பத்திரிகையாளர், தொழில்நுட்ப ஆசிரியர்கள் முதலான தொழில்சார் வல்லுநர்கள்.

## 5. திறன் மிகுந்த விளம்பரத்தின் பண்புகள்

விளம்பரம் ஒன்று வெற்றிகரமாக அமைய வேண்டும் என்றால், அது பின்வரும் அம்சங்களில் சிலவற்றையாவது கொண்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அ) விழிப்புணர்வு** (Awareness):

பொருளைப் பற்றி அல்லது சேவையைப் பற்றி நுகர்வோர் அறிந்திருப்பதற்கு பல்வேறு உத்திகளைக் கையாளவேண்டும். குறிப்பிட்ட படம், வர்ணம் அல்லது சின்னம் இசை முதலானவையாக அவை இருக்கலாம்.

**ஆ) அறிவு** (Knowledge):

விளம்பரம் செய்யப்படும் பொருள் குறித்த அறிவை நுகர்வோர் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், செய்திபூர்வமான விளக்கக் குறிப்பாக (Literature) அது அமையவேண்டும். செய்முறை விளக்கம், காட்சியறை அமைத்தல், இலவசமாதிரி (Free sample) வழங்கல், செய்திப்படம், செய்திக்கட்டுரை முதலானவை இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கனவாகும்.

**(இ) விருப்பம், அவா** (Desire) :

குறிப்பிட்ட ஒரு பொருளுக் கான விளம்பரமானது, குறித்த பொருளை விளக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும். கவர்ச்சியான வண்ணம், கவர்ச்சியான சொற்கள், புதுமையான விடயங்கள் இவ்விடத்தில் கவனத்திற்குரியன.

**(ஈ) நம்பிக்கை** (Conviction):

விருப்பம் அல்லது அவா, இவை மட்டுமே குறித்த பொருள் ஒன்றை வாங்கப் போதுமானவையாக இருப்பதில்லை. குறித்த பொருளின் மீது நம்பிக்கை வைக்கும் விதத்தில் விளம்பரம் அமைதல் வேண்டும். செயற்திறன், இலாபம் முதலானவற்றை விளம்பரம் வெளிப்படுத்த வேண்டும். ஆதாரபூர்வமான, ஆராய்ச்சி பூர்வமான குறிப்புக்களை விளம்பரம் கொண்டிருத்தல் வேண்டும்.

**(உ) குறியீட்டுப் பெயரின் பாதிப்பு** (Brand Preference) :

ஒரே பொருளை வெவ்வேறு கம்பனிகள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலாம். குறிப்பிட்ட விளம்பரத்தால் கவரப்பட்ட நுகர்வோன் - சந்தையிலுள்ள ஒரே மாதிரியான பொருள்களைக் கண்டு மயக்கமடையக்கூடும். இந்த நிலையில் குறித்த கம்பனியின் குறியீட்டுப் பெயர் (Brand Name) அவனை வழிநடத்தலாம். விளம்பரங்களில், குறியீட்டுப் பொருளை நுகர்வோர் மனதில் ஆழமாகப் பதியும்படி அமைக்கவேண்டும்.

**(ஊ) முடிவு செய்தல்** (Decision Making)

விளம்பரம் செய்வோர்க்குச் சார்பான வகையில், நுகர்வோரைச் செயற்பட வைக்கும்படியாகக் கட்டளை வாசகங்களை வைத்தல். 'இலவசச் சலுகை பெற முந்துங்கள்', 'அன்பளிப்புப் பொருள்களுக்காக அருகிலுள்ள முகவரை அணுகுங்கள்' முதலானவைகளாக அவை அமையலாம்.

**விருப்பம் அல்லது அவா, இவை மட்டுமே குறித்த பொருள் ஒன்றை வாங்கப் போதுமானவையாக இருப்பதில்லை. குறித்த பொருளின் மீது நம்பிக்கை வைக்கும் விதத்தில் விளம்பரம் அமைதல் வேண்டும். செயற்திறன், இலாபம் முதலானவற்றை விளம்பரம் வெளிப் படுத்த வேண்டும். ஆதாரபூர்வமான, ஆராய்ச்சி பூர்வமான குறிப்புக்களை விளம் பரம் கொண்டி ருத்தல் வேண்டும்.**

## 6. விளம்பரத்தின் அமைப்பு

விளம்பரத்தின் அமைப்பானது திறம்பட அமைந்தாலே, அவ்விளம்பரம் நுகர்வோரைப் பாதிப்பதாக அமையும். விளம்பர அமைப்பு ஒன்றில் பல்வேறு தனிமங்கள் (Elements) அடங்கியுள்ளன. அவை பின்வருமாறு அமைந்து காணப்படும்.

**(அ) தலைப்பு** (Heading) **மற்றும் உப தலைப்பு. (உப தலைப்பு எல்லாவகை விளம்பரத்திற்கும் பொருந்திவரமாட்டாது)**

**(ஆ) இடைநிலை** (Transitional Copy)

**(இ) விளம்பர வாசகப் பகுதி அல்லது உடற்பகுதி** (Body Copy)

(ஈ) **இறுதிக் கருத்து** (Closing Idea)

தலைப்புக்கள் விளம்பரத்தின் இலக்கை (Target Group) உணர்த்துவனவாக இருக்கும். அவை செய்தித் தலைப்பு, உடன்பயன் கொடுக்கும் தலைப்பு, உணர்ச்சிப் பெருக்கெடுக்கும் தலைப்பு (Emotional), வழிகாட்டும தலைப்பு, ஆசையைத் தூண்டும் தலைப்பு, கவர்ச்சித் தலைப்பு, வாசகத் தலைப்பு, சேர்க்கைத் தலைப்பு, கேள்வி முறைத் தலைப்பு (Question type), உத்தரவுத் தலைப்பு (Command Type), சுலோகத் தலைப்பு (Slogan Head Line) எனப் பல வகையினவாக அமைதல் மரபாகும்.

விளம்பரத்தில் தலைப்புக்கும், விளம்பரத்தின் உடற்பகுதிக்கும் இடைப்பட்ட பகுதி, இடைநிலை நகல் (Traditional Copy) எனப்படும். அநேகமாக உப தலைப்புப் போன்ற அமைப்பில் இது தோற்றமளிக்கலாம்.

விளம்பரப்படுத்தப்படும் பொருள்களின் தன்மையினை விளக்கும் பகுதி, உடற்பகுதி (Bcdy Copy) எனப்படும். விளம்பர நகலின் உடற்பகுதியினைப் பலரும் படிப்பதில்லை. விளம்பர நகலில் தலைப்பு மற்றும் படம் என்பன கவர்ச்சிகரமாக அமைந்தால், உடற்பகுதியினை நோக்கி நுகர்வோர் கவனம் ஈர்க்கப்படும்.

**ஈ) இறுதிக் கருத்து :**

விளம்பரத்தின் இறுதிப்பகுதி மிகக் கவர்ச்சிகரமாக, மக்களைக் குறித்த பண்டத்தின் மீது அல்லது சேவையின் மீது ஈர்க்கும் படியாக அமைதல் வேண்டும். விலைக் குறிப்புகள், பொருள் சுலபமாகக் கிடைக்கும் வழிகள், தவணைமுறை வசதிகள், இலவச அன்பளிப்புகள் முதலானவை பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் இறுதிக் கருத்தில் இடம்பெறுவதுண்டு.

பொதுவாகக் குறிப்பிடின், விளம்பர நகலானது உண்மையினை உரைப்பதாக எளிதில் விளங்கிக் கொள்ளப் படத்தக்கதாக, மனிதாயத் தன்மை உடையதாக, சுவாரஸ்யமானதாக அமைதல் பிரதானமானதாகும்.

விளம்பர நகலைத் தயாரிக்கும்பொழுது, சில விடயங்கள் குறித்து அவதானமாக இருத்தல்வேண்டும். விளம்பரம் செய்யப்படும் பொருளின் உண்மை விபரங்களை அறிந்து கொள்ளுதல். மூலப்பொருள், தயாரிப்புமுறை, செயற்திறன், பிறகம்பனிப் பொருள்களுடன் ஈடுகொடுக்கும் தன்மை, பொருளின் விலை (Price Range) குறித்த பொருள் இனங்காணப்படும் தன்மை (Primary Demand, Selective Demand).

நுகர்வோர் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுதல் - விளம்பரம் செய்யப்படும் பொருள்களின் பிரதான இலக்கு ஆண்களா, பெண்களா, இருபாலாருமா, எந்த வயதினர், நுகர்வோரின் வருமான நிலை, நுகர்வோரின் பதவிநிலை, பொருள் வாங்கப்படுவதில் தொழிற்படும் காரண கர்த்தாவைக் கண்டறிதல் (Who Influence the Purchase) என்பன பிரதானமாகக் கவனிக்கப் படவேண்டிய அம்சங்களாக உள்ளன.



க.விசாகரூபன்

நுகர்வோரது வாழ்க்கைச் சூழல், அதற்கேற்ப வேறுபடும் தேவைகள் ஆகியவை அவர்கள் வாங்கும் பொருள்களைத் தீர்மானிக்கும் என்பதால், அது குறித்தும் விளம்பரம் கவனம் செலுத்த வேண்டும். சிலவகைப் பொருட்கள் அல்லது சேவைகள் சிலவகை இனத்தவர், மதத்தவர், நாட்டவரால், அதிகம் நுகரப்படுதல் குறிப்பிடத்தக்கதா கும்.

## 7. விளம்பரத்தின் நோக்கம்:

விளம்பரத்தின் நோக்கம் பலவகைப்பட்டு இருக்கலாம். புதிய பொருள் அல்லது பணி விற்பனைக்கு வந்திருப்பதை அறிவித்தல், புதிய நுகர்வோரைப் பெருக்குதல், விற்பனை முறை, விலை, இடம் முதலானவற்றில் ஏற்படும் மாற்றங்களை அறிவித்தல், விலை குறைப்பு மற்றும் சலுகைகளை அறிவித்தல், பொருள்களின் சிறப்புத் தன்மையை அறிவித்தல் வேணடும். விளம்பரங்களைக் கேட்டுப் பெறுவதை அறிவித்தல், விளம்பர வழிமுறை ⇨

களைப் பரிசோதனை செய்தல், பொருள் இருப்புப் பற்றி அறிவித்தல், விற்பனையைச் சீராக வைத்திருத்தல், முதலீடுகளைக் கவர்ந் திழுத்தல், ஏற்றுமதியை ஊக்கப்படுத்தல், வாணிப வெற்றிகளை விரிவாக்குதல், வெளிப் படுத்துதல் முதலான பல்வேறு நோக்கங் களுக்காக 'விளம்பரங்கள்' செய்யப்படுகின் றன.

### *8. விளம்பர முயற்சித்திட்டத்தின் பிரதான பணிகள்:*

'விளம்பரம்' ஒன்றைச் செயற்படுத்துவதில் பின்வரும் பணிகள் மிகவும் வேண்டப்படு வனவாக அமைந்துள்ளன.

**(அ) சந்தை ஆராய்ச்சி :**

உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட் களையோ, சேவைகளையோ நுகர்வோருக்கு வழங்க முற்படும்போது, ஏற்படும் இடர்பாடு களைச் சேகரித்து ஆராய்தலே சந்தை ஆராய்ச்சி என்பதாகும்.

பண்டங்களின் பகுப்பு ஆராய்ச்சி (**Product Analysis**) மற்றும் நுகர் வோர் பற்றிய முழுவிபரங்களையும் ஆராயும் ஒரு செயற் பாட்டையே சந்தை ஆராய்ச்சி (**Market Research**) குறித்து நிற்கிறது.

**(ஆ) விளம்பர இலக்கை நிர்ணயித்தல் :**

விளம்பரங்களின் தன்மை, மற்றும் குறிப் பிட்ட நோக்கத்தைப் பொறுத்து, விளம் பரத்தின் நேரடிக் குறிக்கோள் வித்தியாசப்பட வாய்ப்புண்டு. பிரதான குறிக்கோள் (**Main Objective**), குறிப்பிட்ட நோக்கம் (**Special Goal**) என்பன இவ்விடத்தில் கவனத்திற் குரியன.

**(இ) விளம்பர, வரவு - செலவுத்திட்டம் அமைத்தல் -**

**கட்டுப்பாட்டு முறைகளை நிர்ணயித்தல் :**

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட ஒரு ஆண்டில் மொத்தமாக எதிர்பார்க்கும் விற்பனை, அதற்காக விளம்பரத்துக்குச் செலவு செய்ய வுள்ள தொகை, விளம்பர சாதனங்களின் தேர்வு முதலானவற்றை விளம்பர வரவு - செலவுத்திட்டம் விளக்குவதாக அமையும். கம்பனியின் முழுமையான வரவு - செலவுத் திட்டம். விளம்பர வரவு - செலவுத்திட்டதிலே பாதிப்பைச் செலுத்தும்.

**(ஈ) விளம்பர சாதனத் தேர்வு, விளம்பரச் செய்தி அமைத்தலுக்கான செயற்திட்டம் வரைதல்.**

ஒப்பீட்டு நிலையில், குறைந்த செலவில் நிறைந்த நுகர்வோரைச் சென்றடையக்கூடிய விளம்பர சாதனத்தைத் தேர்ந்தெடுப்பது பிர தானம். விளம்பரதாரர் பலதிறப்பட்ட விளம்பர சாதனத்தைப் பயன்படுத்த விரும்புவதில்லை. விளம்பரச் செய்தியின் தன்மையும், விளம்பரம் செய்யப்படும் பொருளின் தன்மையும், விளம் பரசாதனத் தேர்வில் செல்வாக்குச் செலுத் துகின்றன.

**(உ) விளம்பர முயற்சி குறித்த பொருள் விற்கப்படுவதற்கான இதர பணிகளுடன் ஒத்திசைவாகப் பணியாற்றுவதை உறுதிப் படுத்துதல்.**

விளம்பரம் ஒன்றின் பூரணமான வெற் றிக்கு, விற்பனைப் பிரிவு உள்ளிட்ட இதர பிரிவுகளின் ஒத்துழைப்பு மிகவும் முக்கிய மானதாகும். பொருட் தயாரிப்பு, விநியோகம், கையிருப்பு முதலான செயற்பாடுகள் இவ் விடத்தில் சிறப்பான கவனத்திற்குரியன.

**(ஊ) விளைவுகளை ஆராய்ந்து நோக் குதல், விளம்பரத் திட்டத்தைச் சீராக்குதல் :**

விளம்பரத்தைச் செயற்படுத்த முன்னர் சந்த்த (**Model Market**) ஒன்றைத் தேர்ந் தெடுத்து, குறித்த விளம்பரத்தின் தாக்கு திறனை அறிய முற்படவேண்டும். அதன்மூலம் பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் ஏற் கனவே திட்டமிட்டுள்ள விளம்பர அமைப்பில் சில உத்திநிலை மாற்றங்களைப் புகுத்த வேண்டும்.

விளம்பரம் ஒன்றின் முழுமையான பயன்- அதனைத் திட்டமிடுவதிலும், செயற்படுத்து வதிலும், விளைவுகளைப் பரிசோதிப்பதிலும் பெரிதும் தங்கியுள்ளது.

### 9. விளம்பர வகைகள் :

விளம்பரங்கள் சென்றடையும் மக்களை அடிப்படையாகக் கொண்டு, அதனைப் பின் வரும் மூன்று நிலைகளில் பாகுபடுத்துவர். அவையாவன -

அ) **நுகர்வோர் விளம்பரம்**
**(Consumer Advertisement)**

ஆ) **தொழில் விளம்பரம்**
**(Business Advertisement)**

இ) **பண்ணை விளம்பரம்**
**(Farm Advertisement)**

தொழில் விளம்பரத்தை உற்பத்தியாளர் விளம்பரம் (**Industrial Advertisement**), வணிக விளம்பரம் (**Trade Advertisement**), வாழ்க்கைத் தொழில் விளம்பரம் (**Profes sional Advertisement**) எனவும் வகைப் படுத்தலாம்.

இதழ்களில் வரும் விளம்பரங்கள் பல வகைப்பட்டனவாகும். இவற்றைப் பொருள், நிறுவனம், நிதி, வகைப்படுத்திய விளம்பரம், சில்லறைத் தொழில், கூட்டுறவு, அரசு, வாணி பம், சட்டம் எனப் பலவாறாக வகைப்படுத்தி நோக்கலாம்.

### 10. விளம்பர சாதனங்கள்

ஒரு விளம்பரதாரர் தமது பொருள் அல் லது கருத்து, பணி குறித்த விபரங்களை நுகர்வோருக்குத் தெரியப்படுத்தப் பயன் படுத் துகின்ற ஊடகமே விளம்பர சாதனம் ஆகும்.

இவற்றைப் பிரதானமாக நான்கு வகை களுக்குள் அடக்கிப் பார்க்கலாம். அவை யாவன -

1. **அச்சுச் சாதனங்கள** **(Print media)**
2. **மின்னணுச் சாதனங்கள்** **(Electronic Media)**
3. **வெளிப்புற விளம்பரங்கள** **(Outdoor Advertisement)**
4. **நேரடி அஞ்சல் விளம்பரங்கள்.**

மேற்குறித்த ஒவ்வொருவகை ஊடகங் களும் - நன்மைகளையும் குறைபாடுகளையும் கொண்டுள்ளன. எனவே, விளம்பரதாரர் குறித்த விளம்பர சாதனத்தைத் தேர்வதில் மிகுந்த சிரத்தை காட்ட வேண்டும்.

### 11. விளம்பர அறங்கள்
### *(Ethis of Advertising)*

மனிதன் விளம்பரங்களை அடிப்படையா கக் கொண்டே தனது ஒவ்வொரு அசைவு களையும் அமைத்துக் கொள்ளத் தொடங்கி விட்டான். இந்த நிலையில் - விளம்பரங்கள் குறிப்பிட்ட சில அறங்களைத் தாங்கி நிற்க வேண்டிய தேவை பிரதானமாக உணரப் பட்டுள்ளது.

அரசியல் சட்டங்களுக்குக் கட்டுப்படுதல், குறித்த நாட்டின் பண்பாட்டை மதித்தல், பிறர் மதிப்பை மதித்தல், அறியாமையைத் தூண்டா திருத்தல், உண்மை பேசுதல், சரியான தக வல்களைத் தருதல், போட்டியாளரை மதித் தல், வணிகக் குறியீடுகளைத் துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல், தேசிய சின்னங்களுக்கு மதிப்பளித்தல், வன்முறையைத் தூண்டாதி ருத்தல், இனம், சாதி முதலானவற்றை இழிவு படுத்தாதிருத்தல் முதலானவை விளம்பர அறங்களுள் சிலவாகும்.

### 12. சமூக பொருளாதார மாற்றங்களில் விளம்பரத்தின் முக்கியத்துவம் :

விளம்பரம் - மக்களின் தேவைகள், பழக்க வழங்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளைத் தெளிவாகச் சமூகத்திற்கு உணர்த்தி நிற் கின்றது. அத்துடன் மக்களின் நடத்தை களிலும் பல்வேறு மாறுதல்களை இவை நிகழ்த்தின. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற விளம்பரங்கள், சமூகத்தை அறிவியல்பூர்வமான மாற்றங்களுக்கு இட்டுச் செல்வனவாகவும் காணப்படுகின்றன.

தகவல் தொடர்புச் சாதனங்களில் விளம் பரங்கள் அதிகமாக வெளியிடப்படுவதனால், பல்வேறு நிலைகளில் பொருளாதார மாற் றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. நேரடியாகவும் மறைமுகமாகவும், பல்வேறு தொழிற்துறை களிலும் வளர்ச்சிப்போக்கு நிகழ விளம்பரம் வாய்ப்பளிக்கின்றது.

### 13. முடிவுரை :

இதழியலில் 'விளம்பரம்' என்பது இணை பிரியாத ஒரு உள்ளடக்கமாக அமைந்துவிட் டது. விளம்பரம் இல்லாமல் எந்தவொரு பொரு ளையோ, சேவையையோ விற்பனை செய்ய முடியாத நிலையே இன்றைய போக்காக உள்ளது. விளம்பரத்தின் முக்கியத்துவம் - அதனைக் கலாபூர்வமாகவும், விஞ்ஞானபூர்வ மாகவும் அணுகி அமைக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

## துணை நூல்கள்


**1. அந்தோனி இராசு, ஆ.பி. *இதழியல் ஓர் அறிமுகம்*, ஆரோக்கியப் பதிப்பகம், திருச்சி 1986.**

***2. கலைவாணி, எஸ். இதழியல் உத்திகள், ஸ்ரீ பராசக்தி வெளியீடு, ஸ்ரீபராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம் 1982.***

***3. கோதண்டபாணி இரா. இதழியல்... கற்பக நூலகம், மதுரை 1980.***

***4. சாந்தா. அ.அ. மோகன், வீ., மக்கள் ஊடகத் தொடர்பியல் - புதிய பரிமாணங்கள், மீடியா பப்ளிகேகூன்ஸ். மதுரை 2001***

***5. குருசாமி, மா.பா., இதழியல் கலை, குரு - தேமொழிப் பதிப்பகம், திருச்செந்தூர்.***

**6. Anuja. B.N. *Theory and practice of Journalism* Subject Publications New Delhi,1979.**

**7. Berger, Charles, R/ *A Hand Book of communication Science*, Sage Publications India (P)Ltd., New Delhi, 1968.**

**8. Cassata, Mary, B., *Mass communication principles and practices*, Machmillan Publishing Inc. Newyork, 1970.**

**9. Denis mcquil *Mass Communication Theory Anintroduction*, Sage publications India (P) Ltd. New Delhi, 1988.**

**10. Eyre, E.C. *Effective communication made simple* Rupa & Co.London 1985.**

**11. Puri , G.K.*Journalism* Sudha publication, (P)Ltd., New Delhi, 1978.**

**12. Wimal Dissana *Communication Theory*, The Asian Mass Communication Research and Information Centre, singapore.**


# குரங்கு மனசு!



குரங்கு தாவுகிறது
கிளைவிட்டுக் கிளையாக
அதற்கென்ன,
தனது வழமையில் அது
அதைத்தானே செய்யும்
செய்யட்டும்.

வானக்கருமை கலையவில்லை.
குளிர்காற்று விலகித் தூரவும்
போகவில்லை,
என்றாலும் சுழன்றாடிய காற்று
சற்றுத் தூங்குகிறது
இடியேதும் முழங்கவில்லை.
வானக் கருமை எப்படிக்கலையும்?
கார்கால மின்னும் கழியவில்லையே!

தாவும் குரங்கு தாவுகிறது
இலை நுனி மழைநீர்ச் சொட்டு
உதிரத்தான் செய்கிறது
குரங்கு மேனி நனையாமல்
எப்படித் தப்பும் (மரத்திற்குத்
திட்டுகிறது),
மழை இப்போதானே சற்று
ஓய்ந்தது அதற்குள் எப்படி
நீர் வடிந்து முடிந்துபோகும்?
இலைச் சொட்டு நீர்
இன்னும் வடியவில்லை
சூரியக் குளிப்பை நினைத்து
பல்லிழிக்கிறது குரங்கு.

இன்னும் கேட்காத
குயில் பாட்டிற்கும்,
மரங்களெங்கும் படரும்
வண்ணங்களுக்கும் இன்னும்
பருவமடையாக் காலத்தில்
எப்படி ஏங்கும் குரங்கு?

சொட்டும் இலைதங்கு நீர்த்துளிக்காய்
மரத்தைத் திட்டாமல் இருக்கும்
பக்குவத்தைக் குரங்கு
பெறுவதாகுக.

- கை.சரவணன்.

# ஒற்றை ராத்திரியும் காற்றில் அலையும் மெழுகுச் சுடரும்



நீளமான இந்த இரவின்
முழுமைக்கும்
போதாது
மெழுகுவர்த்தியின் கீதம்...

உறங்காதவிழிகளுக்குப்
போதாமலிருக்கிறது
அந்த நினைவுகளின் தடங்கள்...

ஒரு மணியிசையென
காற்று
சலசலத்தோடுகிறது
இரவின்
விளிம்புகளைத் தடவிட...

மனதிடுக்குகளின்
தங்கிய
ஞாபகக்கசிவுகளில்
எங்கேனும்
அருமையாய் ஒரு
கவிதை பீறிடக் கூடும்.

அந்தக்கவிதைக்கெனவே,
இந்த ஒற்றை ராத்திரியின்
மெழுகுச்சுடர் அலைதலும்...

உறங்காத விழிகளுள்
தவமிருக்கும்
நினைவுகளின் தடங்களும்...

- ச.பிரேமினி

# இராணுவ - அரசியல் சதுரங்க போட்டியின் கேந்திர மையமாகிவரும் திருகோணமலை



**த**மிழர் தாயகத்தின் தலைநகர் என்று பிரகடனப்படுத்தப்பட்ட திருகோணமலை தான் இப்போது அரசியல், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாக மாறியிருக்கிறது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு கடந்த வருடம் பெப்ரவரி 22 ஆம் திகதி அமுலுக்கு வந்த பின்னர், அவ்வப்போது - காலத்துக்குக் காலம் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. கடல் மோதல் விவகாரங்கள், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள், மட்டு - அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் என்று- அவ்வப்போது நெருக்கடியான சூழ்நிலைகள் இருதரப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்டன.

இவ்வாறான சிக்கல்கள் இப்போதும் முழுமையாகத் தீராவிட்டாலும், இப்போது இவை பற்றிய பேச்சுக்கள் குறைந்து கொண்டிருக்க - இன்னொரு இடத்தில், புதிய பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது - ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கமும்-ஜனாதிபதி சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணியும்.

### கதிர்காமரின் இந்திய விஜயம்

திருகோணமலையில் புலிகளின் பதின்மூன்று புதிய முகாம்கள் நிறுவப்பட்டு - துறைமுகம் உள்ளிட்ட பிரதேசத்தைச் சுற்றி வியூகம் வகுக்கப்பட்டிருக்கிறது. சண்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டால், மூன்று மணி நேரத்துக்குள்ளாகவே திருகோணமலை கடற்படைத்தளம் உள்ளிட்ட துறைமுகப் பிரதேசம் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிடும் என்று, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிடம் போய் எச்சரித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிடம் போய் இவ்வாறு எச்சரிக்கை விடுத்ததற்குக் காரணம் -திருமலை, சீனன்குடாவிலுள்ள ஒரு தொகுதி எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. புலிகள் சண்டையை ஆரம்பித்தால், இந்த எண்ணெய்க் குதங்களின் நிலை என்ன என்று சிந்தித்துப் பாருங்கள் என, இந்தியாவுக்கு எச்சரிப்பது தான் - கதிர்காமரின் திட்டமாக இருந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், திருகோணமலையின் பாதுகாப்புக் குறித்து அது கவனம் செலுத்துகிறதோ இல்லையோ, கதிர்காமரின் எச்சரிக்கை குறித்து, அவ்வளவாகக் கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால், லக்ஷ்மன் கதிர்காமர் திடீரென புதுடெல்கிக்கு விஜயம் செய்து, இப்படியானதொரு எச்சரிக்கையை இந்திய ஆளும் வட்டாரங்களுக்கு வெளியிட்டதற்கு என்ன காரணம்?

இந்தக் கேள்விக்கு விடைகாண முற்படும் போதுதான் - திருகோணமலை மட்டுமன்றி, தமிழர் பிரச்சினை, பாதுகாப்பு நிலவரங்கள், இலங்கை அரசாங்க - புலிகள் பேச்சுக்கள், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் ஆகியவற்றைச் சுற்றி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது பரிவாரங்களும் பின்னிக் கொள்ளும் வலைமுறைப்பொறியொன்றின் தோற்றம் உறுதியாகின்றது.

### சந்திரிகாவின் பொறிவலை

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடித்து, ஆட்சிபீடமேறியதைவிட - ஆபத்தானதாகவும், ஆத்திரமாகவும் நோக்குவது புலிகளைத் தான்.

1994 இல் சந்திரிகா குமாரதுங்க ‘சமாதான தேவதையாக’ பிரதமர் பதவிக்கு வந்தபோதும், பின்னர் ஜனாதிபதியானபோதும் இருந்து வந்த மாயைத்தோற்றங்கள் உடைக்கப்பட்டது புலிகளால் தான்.

1995 இல் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- நாட்டுமக்கள் மத்தியில் முற்றிலும் எதிர்மாறான உருவகம் கொண்டவராக மாறினார். இதற்கு அவர் கையாண்ட அரசியல், இராணுவ ரீதியிலான தவறான உத்திகளே காரணமாகும்.

### சந்திரிகாவின் தவறான நகர்வுகள்

சந்திரிகாவின் தவறான இராணுவ நகர்வுகளுக்கும், அதன் விளைவான பாரிய இராணுவப் பின்னடைவுகளுக்கும் காரணமாக இருந்தவர் - பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரும், சந்திரிகாவின் மாமனாருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தவே. இதுபோன்றே, சந்திரிகாவின் அரசியல்ரீதியான தோல்விகளுக்கும், சர்வதேச மட்டத்தில் இன்று அவர் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் மதிப்பீடுகளுக்கும் காரணமாக இருந்தவர் லக்ஷ்மன் கதிர்காமர்.



ஜெனரல் ரத்வத்த இப்போது அரசியல் ரீதியாக பல்லுப்பிடுங்கிய பாம்பாக இருக்கின்ற போதும், லக்ஷ்மன் கதிர்காமரை வைத்து, ஜனாதிபதி சந்திரிகா இப்போதும் தனது காய்களை நகர்த்தி வருகிறார்.

அரசியல் ரீதியாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இப்போது அதிகாரம் இருந்தும் - அதைப் பெரிதும் பயன்படுத்த முடியாதவராக அவர் இருக்கிறார். இதனால் அவர் தனது நகர்வுகளை இரகசியமான, இராஜதந்திர அணுகுமுறைகள் மூலம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலைக்கு அவர் தள்ளப்பட்டமைக்கு அரசியல், இராணுவரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் புலிகள் அவருக்குக் கொடுத்த பலமான அடிதான் காரணம். அரசியல் மாற்றத்துக்கு- இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு 1999 நவம்பரில் புலிகள் ஆரம்பித்த ‘ஓயாத அலைகள் -3 என்ற தொடர் போர் நடவடிக்கைகள் தான் காரணம்.

### பொ.ஐ.முவின் தோல்வியும் புலிகளின் இராஜதந்திர நகர்வுகளும்

புலிகள் இராணுவரீதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்குக் கொடுத்த தோல்விகளின் பின்னர், இராஜதந்திரரீதியில் அவர்கள் நகர்த்திய காய்கள் எல்லாமே இணைந்துதான் 2001 ஆம் ஆண்டு தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சியிலிருந்து வீழ்த்தியது. சந்திரிகாவின் அரசாங்கத்தையே ஆட்டங்காண வைத்து, அவருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

புலிகள் தமக்கும், தமது கட்சிக்கும் ஏற்படுத்திய வீழ்ச்சியை ஜனாதிபதி சந்திரிகா இன்று மட்டுமல்ல, என்றுமே மறக்கத் தயாராக இல்லை. இப்படியான அரசியல் பின்புலத்தில் , புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்ட பின்னர் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பித்து, தற்போது - வட- கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அமைப்பது தொடர்பான திட்ட வரைபு ஒன்றைத் தயாரிக்கும் அளவுக்கு இரு தரப்புகளுமே இணங்கி வந்துள்ளன.

### புலிகளின் தீர்வு யோசனைகள்

அரசு முன்வைத்த அதிகாரங்கள் குறைந்த இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குப் பதிலாக, புலிகள் தாம் தயாரித்த திட்டவரைபைச் சமர்ப்பிக்கத் தயாராகியுள்ளனர். இந்தநிலை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட, சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளுக்குப் பெரும் அச்சத்தைக் கொடுத்திருக்கிறது.

முதலாவதாக, அரசாங்க - புலிகள் பேச்சுக்கள் இணக்கப்பாட்டுக்கு வந்து, தமிழ்மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு விடக்கூடாதே என்ற ஆதங்கம்.

அடுத்தது, பிரச்சினைகளுக்கு இருதரப்பும் தீர்வைக்கண்டுவிட்டால், அரசியல் ரீதியாகத் தம்மால் தலையெடுக்க முடியாது என்ற அச்சம்.

இந்த நிலையில்தான், எப்படியாவது சமாதான முயற்சிகளைக் குழப்பிவிட வேண்டும் என்ற இலக்குடன் - சந்திரிகா, பொ.ஐ.மு, ஜே.வி.பி. மற்றும் சிங்கள பௌத்த பேரின வாதிகள் எனப் பலரும் முனைந்து செயற்படத் தொடங்கியுள்ளனர்.

### திருகோணமலை - குழப்பசக்திகளின் பிரசார ஆயுதம்

இந்த சக்திகள் அனைத்தும் இப்போது முக்கியமான பிரசார ஆயுதமாகப் பயன்படுத்துவது- திருகோணமலை விவகாரத்தைத்தான். முதலில், குரங்குபாஞ்சானில் - புலிகள் புதிய முகாம் ஒன்றை அமைந்துள்ளதாக அரச படையினர் பிரச்சினைகளைக் கிளப்பியிருந்தனர்.

குரங்குபாஞ்சானில் புலிகள் நீண்ட காலமாகவே தமது முகாமைப் பேணி வந்தபோதும் அதைப் புதிய முகாமாகக் காட்டி - சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவையுட நம்ப வைப்பதில் அரச படையினர் வெற்றி கண்டிருந்தனர்.

ஆனால் விடுதலைப்புலிகளோ இந்த விடயத்தில் - அரசாங்கம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வே அரசாங்கம் எனப் பல்வேறு தரப்புக்களும் கொடுத்த அழுத்தங்களுக்கு மசிந்து கொடுக்காமல், நிதானமாக தமது மறுப்பைத் தெரிவித்து விட்டனர்.

இந்தப் பிரச்சினையில், விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி விட்டதால், எதுவும் செய்ய முடியாதநிலையில் தான், திருகோனமலைத் துறைமுகப் பகுதி[…]




சுற்றி, பதின்மூன்று புதிய முகாம்களைப் புலிகள் நிறுவியுள்ளதாகக் குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் முன் வைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவும், லக்ஷ்மன் க[…]காமரும் இந்த விடயத்தை அரசியல் ரீதிய[…]வும், இராணுவரீதியாகவும் - புலிகளுக்கு எதிரான வகையில், திருப்பிவிட எத்தனித்தனர். இன்னமும் அவ்வாறே செயற்பட்டுக்கொண்டும் இருக்கின்றனர்.

### திருகோணமலை மீதான சர்வதேச கவனம்

திருகோணமலை விவகாரத்தில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன. திருகோணமலைத் துறைமுகத்தின் அமைவிடமும், அதன் இயற்கையான பாதுகாப்புச் சூழலும் - பிராந்திய ரீதியில் ஆதிக்கம் செலுத்த முற்படும் சர்வதேச சக்திகளுக்கு இது ஒரு பெரும் கனவாகவே இருந்து வருகின்றது.

திருகோணமலையில் தளம் அமைப்பது, திருகோணமலையை அண்டியுள்ள புல்மோட்டையில் காணப்படும் கனிய வளத்தை அகழ்வது என்று இந்த சர்வதேச சக்திகளின் இலக்குகள் வெவ்வேறு பட்டவையாக விரிந்து செல்கின்றன.

இப்போது பாகிஸ்தானும்கூட, இலங்[…] விவகாரத்தில் இராணுவ ரீதியான அக்கறையுடன் செயற்பட ஆரம்பித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகம், சீனன்குடா விமானத்தளம், எண்ணெய்க்குதங்கள் எனப் போர் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரதேசத்தைக் குறிவைத்து, சர்வதேச சக்திகள் வலைவிரித்துக் கொண்டிருக்க, இந்த நிலையைத் தமக்குச் சாதகமாக்க ஜனாதிபதி சந்திரிகா முனைந்துள்ளார்.

இந்தியாவை உசுப்பிவிட்டு, புலிகளுக்கு எதிரானதும், அரசாங்கத்துக்கு எதிரானதுமான நிலைப்பாடுகளைத் தீவிரப்படுத்தும் நோக்கிலேயே, ஜனாதிபதி சந்திரிகாவின் நகர்வுகள் அமைந்திருக்கின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் - பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் அஸிஸ்கானின் விஜயத்தை இந்தியாவுக்குத் தெரியப்படுத்தாமல், மறைத்து வைத்திருந்த

விவகாரத்தையும் சந்திரிகா தமது இராஜதந்திர அரசியலாக்கியிருக்கிறார்.

இதனால்தான், ஜெனரல் அஸிஸ் கானைச் சந்திப்பதற்கு அவர் மறுத்து, இந்தியா மீதான விசுவாசத்தைக் குறிப்புணர்த்தியிருக்கிறார். இந்தியாவின் ஆசியுடன் இராணுவ, அரசியல் ந[illegible]களைப் புலிகளுக்கு எதிராகத் தொடுக்க[illegible]த்தனிக்கிறார் என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

### [illegible]ந்திரிகா - இந்தியா நெருக்கம்

இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்புடன் ஏற்கனவே பல்வேறு நகர்வுகளைப் புலிகளுக்கு எதிராக இலங்கைக் கடற்படை மேற்கொண்டிருந்தது. இவ்வாறு உதவிகள் செய்தும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அதையெல்லாம் சுலபமாக மறந்துவிட்டதே என்ற ஏமாற்றம் இந்தியாவுக்கு.

### சந்திரிகா ரணிலுக்கு அனுப்பிய கடிதம்

இந்தியாவுடன் இணைந்து புலிகளுக்கு எதிரான வியூகங்கள் வகுக்க முற்படும் ஜனாதிபதி சந்திரிகா, அதற்காக லக்ஷ்மன் கதிர்காமரைப் பயன்படுத்தினார். ஆனால் இந்த விடயத்தில் இந்தியா அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை என்பது ஒருபுறமிருக்க, உள்ளூரில் திருகோணமலை விவகாரத்தை மிகப்பெரிய விடயமாகக் காட்டி, பிரதமர் ர[illegible]க்கு ஒரு கடிதத்தினை சந்திரிகா அ[illegible]பினார்.




அதில் திருகோணமலைத் துறைமுகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றி வெளிப்படுத்தியிருந்தார் சந்திரிகா.. இந்தக் கடிதத்திற்கு பிரதமர் ரணில் கொடுத்த பதில் - சந்திரிகா[illegible]ால் ஜீரணிக்க முடியாதளவுக்கு அமைந்து[illegible]டது. பதில் கடிதத்தில் ரணில் குறிப்பிட்டிருந்த விடயங்கள், அவருக்கு நிச்சயமாக அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்.

## சுபத்ரா

காரணம் - பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளைப் பட்டியலிட்டிருந்த பிரதமர் ரணில்- திருகோணமலைத் துறைமுகம் புலிகளால் 2000 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம், 23 ஆம் திகதி பெருமெடுப்பில் தாக்கப்பட்டது, புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதிற்கு துறைமுகத்தைச் சூழ இருந்த இராணுவமுகாம்களை அகற்றியதே காரணம். தங்களது அரசே இந்த முகாம்களை அகற்றியது என்றும், பதிலடி கொடுத்திருந்தார்.

### துறைமுகத்தைச் சூழ புலிகள் புதிய முகாம்களை அமைத்தனரா?

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ - புலி[illegible]ின் முகாம்கள் அமைந்திருப்பது ஆபத்தா[illegible] விடயம் என்று, அமெரிக்க இராணுவ அதிகாரிகளும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். துறைமுகத்தைச் சூழப் புலிகள் முகாம் அமைத்து நிலைகொள்வது ஆபத்தான விடயந்தான். ஆனால், புலிகள் இப்போதுதான் இந்த முகாம்களை அமைத்துள்ளார்களா என்பதே, இங்கு முக்கியமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் திருகோணமலையில் புலிகள் பலம் பெற்றிருந்தனர். ஆனால் பின்னர் அந்த நிலை நீடிக்காவிட்டாலும், மூன்றாம் கட்ட ஈழப்போரில் - பெரும் படையணிகளைக் கொண்டிருக்கா விட்டாலும் கணிசமான பலம்கொண்டவர்களாக புலிகள் திருகோணமலையில் நிலைகொண்டிருந்தனர்.

ஜயசிக்குறு மற்றும் ஓயாத அலைகள் தொடர் நடவடிக்கைகளுக்காக திருகோணமலையிலிருந்து வட போர்முனைக்கு படையணிகள் நகர்த்தப்பட்டதால் புலிகளின் நடவடிக்கைகள் அங்கு மட்டுப்படுத்தப்படவேண்டிய நிலையை தோற்றுவித்திருந்தது.

2000 ஆம் ஆண்டில் ஆனையிறவு வெற்றி, குடாநாட்டின் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்து, புலிகள் சமாதான முயற்சிகளுக்கான இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபட்ட அதேசமயம், தமது படையணிகளைக் கிழக்கு நோக்கி நகர்த்தி, போர்முனையை கிழக்கிலும் விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

### கிழக்கே நகர்த்தப்பட்ட புலிகளின் படையணிகள்

இதன் ஒரு கட்டமாகவே வடபோர்முனைத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மட்டு - அம்பாறைச் சிறப்புத்தளபதி கேணல் கருணாவை மீண்டும் மட்டக்களப்பிற்கும், திருகோணமலைக் கட்டளைத்தளபதியாக கேணல் பதுமனை, படையணிகளுடன் திருகோணமலைக்கும் அனுப்பி வைத்திருந்தது புலிகளின் தலைமைப்பீடம்.

இந்த மாற்றம் 2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே ஏற்பட்டு விட்டது. திருகோணமலைக்கும், மட்டக்களப்புக்கும் படையணிகளுடன் சென்ற இந்தத் தளபதிகள், அங்கு தமது பலத்தை மேலும் அதிகரித்து, மிகவும் வலுவான நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். புலிகள் இவ்வாறு பலம் பெற்றிருப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையாலல்ல என்பதே உண்மை.

2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்படாமல் இருந்திருந்தாலோ அல்லது புரிந்துணர்வு உடன்பாடு ஏற்படாமல் இருந்தாலோ, போர்முனையில் இந்த நகர்வுகளின் தாக்கங்களைப் பல மாதங்களுக்கு முன்னரே படைத்தரப்புத் தெளிவாகக் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.

இந்த உண்மை நிலையை மறந்து, புலிகள் புதிதாக இப்போதுதான் திருகோணமலையில் பலம் பெறுவதாகப் பிரசாரப்படுத்தி அரசியல், இராணுவ அனுகூலங்களைப் பெறுவதற்கு எத்தனிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ புலிகள் புதிதாக 13 முகாம்களை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயரும் நிராகரித்திருக்கிறார்.

### வீடாப்பிடியாக சந்திரிகா

ஜனாதிபதி சந்திரிகா இந்த விவகாரத்தினை அவ்வளவு சுலபமாகக் கைவிட்டு விடுவதாக இல்லை. இதனால்தான், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை திருகோணமலைக்கு நிலைமையை ஆராய்ந்து வந்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அனுப்பி வைத்திருந்தார்.

இது இவ்வாறிருக்க திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பெரும் பிரதேசங்களை அரச படையினர் எப்போதுமே முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. அவ்வாறு வைத்திருந்தால், திருமலைத் துறைமுகப் பகுதியில் புலிகளால் நடத்தப்பட்ட எத்தனையோ தாக்குதல்களைப் படையினர் முன்னர் தடுத்திருக்க முடியும்.

### இலக்கு வைக்கும் நிலையில் புலிகள்

இப்போதும்கூடப் புலிகள் திருகோணமலைத் துறைமுகம் உள்ளிட்ட எந்தவொரு இலக்கையும் எளிதாக - தொலைவிலிருந்தே குறி வைக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த - புலிகளின் கனரக மோட்டார் படையணியான- இளங்கோ பீரங்கிப் படையணி- திருகோணமலை மாவட்டத்தில் சகல பகுதிகள் மீதும் தாக்குதல் நடத்தக்கூடியளவுக்குத் தம்மைப் வலுப்படுத்தியிருக்கிறது.



2000-10-23 இல் இத்துறை முகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கையின் போது - மாபிள் பீச் பகுதியிலிருந்து புலிகள் 120 மி.மீ மோட்டார்கள் மூலம் கடற்படைத் தளம் உள்ளிட்ட இராணுவ இலக்குகள் மீது நடத்திய தாக்குதலில், கடற்படைத்தளம் உள்ளிட்ட படை நிலைகளுக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய தாக்குதல்களை நடத்துகின்ற அளவிற்கு - புலிகள் முன்னரே பலம்பெற்றிருந்த போதும் கூட இங்கு புலிகள் புதிதாக முகாம்களை அமைத்துள்ளதால்தான், துறைமுகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுவது தான் வேடிக்கையான விடயமாக இருக்கிறது.

இதேவேளை, இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். திருமலை விவகாரம் இத்தளவுக்குச் சூடுபிடிப்பதற்குத் தனியே அரசியல்ரீதியான அனுகூலங்கள், நகர்வுகள் மட்டுமே காரணமாக அமையவில்லை என்பதுதான்.

### அதிகாரப்போட்டி

இலங்கையின் படைத்துறையிலுள்ள அதிகாரப்போட்டிகளும் கூட இந்த விவகாரம் மோசமான பிரசாரமாக்கப்படுவதற்குக் காரணமாக இருந்து வருகின்றது என்பது, புதிதாக வெளிவரும் செய்தியாகும்.

திருமலைத் துறைமுகத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொடதான், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தார். சந்திரிகாவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த இரகசிய அறிக்கையை, ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி, லக்ஷ்மன் கதிர்காமர் பெரும் சிக்கலை ஏற்படுத்திவிட்டதாகக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகரி - கதிர்காமர் மீது குற்றஞ்சாட்டியிருந்தார்.



ஆனால், கதிர்காமர் இந்தக்குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையில் - கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி வசந்த கரன்ன கொடதான் இந்த விவகாரத்தை வெளிப்படுத்தி, திருகோணமலைக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தக் கோரியதாகத் தெரிவித்துள்ளார்.

### இரகசிய அறிக்கையும் கிழக்கு கடற்படைத்தளபதியும்

இங்கேதான் விவகாரமே கிளம்புகிறது. கதிர்காமர் எந்தவொரு அதிகாரமுள்ள பதவியிலும் இல்லாத நிலையில், ஒரு பிராந்திய கடற்படைத்தளபதி - தனது உயர் மட்டத் தளபதிகளுக்குத் தெரியாமல், இராணுவ இரகசிய அறிக்கைகளைப் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்துமாறு கோருவது எந்தளவில் நியாயமானது. இதற்கு இராணுவச் சட்டங்கள் இடமளிக்கிறதா என்பது முக்கியமான கேள்வியாகும்.

கிழக்குக் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவின் இரகசிய அறிக்கையைத்தான் இந்தியாவுக்கு கதிர்காமர் வெளிப்படுத்தியிருந்தார். இங்கேதான் கிழக்குக் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்ன கொடவுக்கும், இந்தியக் கடற்படைக்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும்.

### இந்தியக் கடற்படையுடனான நெருக்கம்

கடந்த ஜூன் மாதம், 14 ஆம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் எரிபொருள் தாங்கிக் கப்பலான 'எம்.ரி.சோஷின்', - இந்தியக் கடற்படையின் உதவியுடன், இலங்கைக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

புலிகளின் 'எம்.ரி.சோஷின்' கப்பல் தொடர்பான தகவல்- இந்தியக் கடற்படையால், கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் உடனடியாக இந்தத் தகவலை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிவித்தார்.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி அப்போது ஹவாயில் - ஒரு பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். பதில் கடற்படைத்தளபதியாக இருந்த றியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவுக்கு இந்தத் தகவலைத் தெரியப்படுத்தாமல், நேரடியாகவே ஜனாதிபதி சந்திரிகாவிடம் இந்த விடயத்தைத் தெரியப்படுத்தி ஜனாதிபதி சந்திரிகாவிடம் கப்பலைத் தாக்கி அழிப்பதற்கான உத்தரவை ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொட பெற்றிருந்தார்.

இந்த உத்தரவுக்கு அமைய புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட - இது பின்னர் பல்வேறு சர்ச்சைகளுக்குக் காரணமாகியிருந்தது தெரிந்த விடயமே. ஒரு கட்டத்தில் இந்தக் கப்பல் மூழ்கடிப்பு விவகாரம், கடற்புலிகளுக்கும், கடற்படைக்கும் இடையிலான கடல் மோதல்களை ஏற்படுத்தி - போர் ஒன்று ஏற்படுவதற்கான புறச்சூழ்நிலைகளைக் கூடத் தோற்றுவித்திருந்தது.

### அடுத்த கடற்படைத்தளபதி

இந்த நிலைக்குக் காரணம் -அடுத்த கடற்படைத் தளபதி பதவிக்குப் போட்டியிடும் றியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவை ஓரங்கட்டிவிட்டு, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவோடு பதவியைப் பிடிப்பது என்ற நோக்குடன் ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொட மேற்கொண்ட நடவடிக்கைகளேயாகும்.

இந்தத் திட்டத்தை மிகவும் இரகசியமாக அவர் செயற்படுத்தி வருவதாகவே விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. திருமலைத் துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் என்ற அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி, அதைக் கதிர்காமர் மூலம் வெளிப்படுத்தி, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சாதகமான அரசியல் இலாபத்தைத் தோற்றுவிக்க கிழக்குப் பகுதி கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொட முற்பட்டிருக்கிறார் என்பது வெளிப்படையாகியிருக்கிறது.

இது கடற்படைத்தளபதிக்குக் கூடத் தெரியாமல் நடந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இதனால்தான் - அவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்கமானவராக இருந்தபோதும், கதிர்காமரின் அறிக்கைக்கு எதிரான கருத்துக்களை, அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

### படையதிகாரிகளைச் சாதகமாகப் பயன்படுத்தும் சந்திரிகா

கடற்படையின் தளபதி பதவியைக் குறிவைத்துச் செயற்படும் ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொட உள்ளிட்ட பல்வேறு படையதிகாரிகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஜனாதிபதி சந்திரிகா இப்பொழுது அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் எதிரான காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளார்.

திருகோணமலைத் துறைமுகத்துக்கான ஆபத்து என்ற விடயம் இதில் ஒரு கட்டமே. அடுத்தடுத்த கட்டங்கள் எப்படி அமையும் என்பது இனிமேல்தான் வெளிப்படும். திருமலை விவகாரத்தில் பெரியளவிலான பரபரப்பு ஏற்படுத்தப்பட்டபோதும், புலிகள் புதிய முகாம்களை அமைத்திருப்பதான குற்றச்சாட்டை நிரூபிக்கமுடியாமல் போனதால், இக்குற்றச்சாட்டு பிசுபிசுத்துப் போய்க்கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த விவகாரத்தை இப்போது ஓயவிடுவதில் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு உடன்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் அவர் திருமலை விவகாரத்தை வைத்தே பிரச்சினைகளைக் கிளப்பத் துணிந்துவிட்டார்.

1995 இல் மூன்றாவது கட்ட ஈழப்போர் - திருமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற இரு பீரங்கிப் படகுகள் அழிப்புடன்தான் ஆரம்பமானது. இந்த மூன்றாம் கட்ட ஈழப்போர் எத்தகைய அழிவை ஏற்படுத்தியதென்பதை சந்திரிகாவும், அவரது பொதுஜன ஐக்கிய முன்னணியும் நன்றாகவே அறியும்.

இந்தநிலையில் மீண்டும் திருகோணமலையை மையமாக வைத்து, இன்னொரு பெரும் நாசத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவே ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட, அவரது பரிவாரங்களின் செயற்பாடுகள் தென்படுகின்றன. இந்த நிலை நீடித்தால், அது பெரும் அழிவுகளுக்குக் காரணமாகிவிடும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ☆

உங்கள் நிறைவு! நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள் எங்கள் சேவை!!

# பயிற்சிபெற்ற ஊழியர்களின் பக்குவமான சேவை

எல்லா வகையான மோட்டார் சைக்கிள்களையும் சிறப்பாகச் சேவிஸ் செய்யவும், திறமையாகத் திருத்துவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## இரத்தினம் ஊர்திச் சேவைத்தளம்

30, 32, சிராம்பையடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.1553)

வணிக விடுமுறை நாள்கள் தவிர்ந்த எல்லா நாள்களிலும் (ஞாயிற்றுக்கிழமை உட்பட) சேவிஸ் செய்துகொள்ளலாம்.





# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யோகாசன உடற்பயிற்சி மாஸ்ரர் மார்க்கண்டு மகாநேசன்
அவர்களை

**. பாராட்டி வாழ்த்துபவர்கள்**

யோகாசனப் பயிற்சியை வாரந்தோறும் (செவ்வாய்க்கிழமை) நமது ஈழநாடு பத்திரிகை மூலம் வெளிப்படுத்தும் எமது சகோதரர் மா.மகாநேசன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மா.சிவநேசன், ம்ா.யோகநேசன், மா.இராசநேசன், மா.அருள்நேசன், மா.குகநேசன், மா.ஜெகநேசன், மா.தர்ஷினி கல்லுவம் கரவெட்டி.

**எனது நண்பர் மா.மகாநேசன் அவர்களை, மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க கிளைமுகாமையாளர் மு.சிவராசா, உடுப்பிட்டி மூர்த்தி, சி.அஜந்தன், யோ.சிவகுமார் கரணவாய் தெற்கு, நி.தவக்குமார், நி.சிவகுமார், ம.மதன், ம.தயன், மாதகல் பெ.அல்பேட், புறாப்பொறிக்கி ஆலடி எஸ்.ரீ. சோளன், V.S.P.குமார்.**

*கல்லுவம் கரவெட்டியைச் சேர்ந்த வல்லைவெளி இயற்கை சூழல் பாதுகாப்புத் தலைவர், யோகாசன ஆசிரியர் மா.மகாநேசன் அவர்களின் சேவை மேலும் வளர வாழ்த்துகின்றோம்.*

கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் பிரதி அதிபர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி. சிற்றம்பலம் நாகேந்திரன் ஆசிரியர். கா.பஞ்சரத்தினம் நமது ஈழநாடு முகவர். யூனியனடி. உடுப்பிட்டி.

(சி.1529)



லுமாலா, ஏசியா, ஹீரோ மிதிவண்டிகளும் அதன் உதிரிப்பாகங்களும் ரேடியோ, ரீ.வி, டெக், மணிக்கூடு போன்ற அன்பளிப்புப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

# இ.சு.பேரம்பலம் சிக நிறுவனம்













**50,52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2988**

(சி/1559)

## அரசியல் கண்ணோட்டம்

புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந் திரவலையும் இடைக்கால நிர்வாக நகல் வரைபும் -

இலங்கைத்தீவின் அரசியலின் சுழல் மைய மாக அடுத்த சில மாதங்களுக்கு விளங்கப் போவது விடுதலைப் புலிகள் தயாரித் துள்ள இடைகால நிர்வாகம் தொடர்பான அறிக்கை அல்லது நகல் திட்டமே இது. ஒக்ரோபர் மாதத்தில் அரசாங்கத்திடம் கையளிக்

மக்களுக்கும், விளக்கவும் மேற்கொள்ளப்பட்ட காத்திரமான முடிவாகும். இது சரியான நேர த்தில் எடுக்கப்பட்ட, சரியான முடிவென்பதில் சந்தேகமிருக்க முடியாது.

இதுவரை காலமும் மிகவும் திட்டமிட்டு புலிகள் மீது உருவாக்கப்பட்டிருந்த, சர்வ தேச இராஜ தந்திர குழுவின் மத்தியிலிருந்த ஒரு மாயையான தோற்றத்தை உடைக்கும்

ணரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய கே.என்.சொக்ஷி (தற்போதைய நிதியமைச்சர்) ஆகியோராலும் இணைந்து தயாரிக்கப்பட்ட 18 ஆம், 19 ஆம் திருத்தங்கள் அரசியலமைப்

ளிக்கப்பட்டவுடன் பேச்சுக்களுக்கான களத் தைத் திறக்க அரசு துடியாய் துடிக்கிறது. ஆனால், இது அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தையாக வன்றி, இடைக்கால நிர்

**அரசாங்கம், சர்வதேச சமூகம் என்பவை ஒருபுறமிருக்கட்டும். நிறைவேற்ற அதிகாரத்தை தன்வசம் குவித்துவைத்துள்ள ஜனாதிபதியும், அவரது எதிர்க்கட்சியும், ஜே.வி.பி உள்ளிட்ட சிங்களத் தீவிரவாதிகளும் இதற்கு எந்தளவு தூரம் இடம்கொடுக்கப் போகிறார்கள்? இந்தத் தடைக்கற்களை தாண்டி வருவதற்கு ரணில் அரசாங்கத்திற்கு எந்தளவு தூரம் ஆர்வமும், மனத்திடமும் இருக்கின்றன? அதற்கு சர்வதேச சமூகம், ரணிலுக்கு எந்தளவு தூரம் ஆதரவும், ஊக்கமும் வழங்கப்போகிறது?**

**இதுவே இலங்கைத்தீவின் அரசியலில் இன்றுள்ள 4.5 பில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.**

புக்கு விரோதமாக இருப்பதால், 2/3 பெரும் பான்மை யாலும், சர்வஜன வாக்கெடுப் பாலும் அங்கீகரிக்கப்படவேண்டுமென உயர்நீதி மன் றம் தீர்ப்பளித் தமையினால், கைவிடப்பட்ட மையே அது. இது ரணிலின் அரசு - சந்திரி காவின் நிறைவேற்று அதிகார அச்சுறுத்தலை நீக்குவதற்கு எடுத்த முயற்சியாதலால், ரணி லுக்கு அவ்விடயத்தில் ஏற்பட்ட பெருந் தோல்வி என விமர்சிக்கப்பட்டதை நீங்கள் மறந்திருக்க நியாயமில்லை).

ரோக்கியோ மாநாட்டில் வாக்குறுதியளிக் கப்பட்ட மிகப்பெருந் தொகை நிதியானது இலங்கையின் தற்போதைய அரசியல் இறுக்க நிலையினால் விடுவிக்கப்பட முடியாதுள்ளது.

வாகம் பற்றிய பேச்சாகவே அமைந்துவிடப் போகின்றது என்பதுதான் யதார்த்தம். அதா வது, பேச்சுக்களுக்கு முன்பான ஒரு வகைப் பேச்சுக்களே இவை.

இந்தப் பேச்சுக்களில் இருந்து புலிகள் பின்வாங்கிவிட முடியாது என, அரசாங்கத் தரப்புக் கருதுகிறது. எனவேதான் தாம் அனுப் பிய நகல் இறுதியானதல்ல எனவும், அது பற்றிய புலிகளின் ஆலோசனைகள் பெறப் பட்ட பின்னரே இறதிவடிவம் தீர்மானிக்கப்படும் எனப் பீரிஸ் கூறியிருந்தார். ஒரு வகையில் இது புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு இராஜதந்திர வலைதான்.

இந்த வலைக்குள் புலிகள் புகுந்துகொள்



# அரசியல் கொந்தளிப்பின் மையம் இடைக்கால நிர்வாக வரைவு!

கப்படவுள்ள சூழ லில் அதை மைய மாக வைத்து, தமது அரசியற் காய்களை நகர்த்த சகலரும் தயா ராகிவிட்டதை அண்மைக்கால அறிவிப்புக் களும், அறிக்கைகளும் வெளிக்காட்டுகின் றன.

சர்வதேச சமூகத்தினரும், ரணில் விக்கி ரமசிங்க அரசாங்கத்திற்கும் பேச்சுவார்த்தை என்ற ஒன்று நடந்துகொண்டு இருக்க வேண்டி யது அவசியமாயுள்ளது. அவ்வாறான சூழ லில்தான் அவர்களது அபிலாஷைகளை எட்டுவதற் கான நகர்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதற்கு கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து புலிகள் பேச்சுக்களி லிருந்து விலகியிருப்பதானது, மிகப்பெரிய தடங்க லாகியிருப்பதால் இப்போது புலிக ளால் முன்வைக்கப்படவுள்ள நகல் திட்டத் தினை இறுக்கமாகப் பற்றிக்கொள்ள சர்வ தேச சமூகமும், ரணில் அரசாங்கமும் குறியா கவுள்ளன.

இதற்கு மாறாக குட்டையைக் குழப்பி, ஆட்சியைப் பிடிக்க அலையும் ஜனாதிபதி, பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி மற்றும் சிங்கள் கடும்போக்காளர்களுக்கோ தமது தொண்டை கிழியக் கத்தும் வங்குரோத்து அரசிய லுக்கு நல்லதொரு பிடியாக இந்நகல் திட்டம் அமை யப்போகியது.

எது எவ்வாறாயினும், இந்தச் சுழல்வுக ளின் பெறுமதியாக ஏதாவது அடைவு எமக்கு கிடைக்குமா எனக் காத்திருக்கும் தமிழினத் துக்குக் காலம் தரப்போகும் பதில் என்ன? இலங்கையின் அர்சியலின் கடந்தகாலங்களி னூடு தற்போதைய செல்நெறியை ஒப்புநோக் கினால், பதில் சாதகமானதாக இருக்கப் போவதில்லை என்பதைப் கணிப்பிடுவது கடினமான விடயமல்ல.

ரோக்கியோ மாநாட்டுக்கு முன் பாக இரு தடவைகள் ரணில் அர சாங்கம் அனுப்பிய வெற்று நகல்களைப் புலிகள் நிராகரித்தபோது, ரணில் கூறினார் இடைக்கால நிர்வாத்திற்கான எமது யோசனைகள் முடிவடைந்துவிட்டன. ஆனால், ரோக்கியோவில் உரையாற்றுகையி லேயே - இடைக்கால நிர்வாகம் ஒன்றை நாம் வழங்கவுள்ளோம். அதற்கான வரைவு விரைவில் புலிகளுக்கு அனுப்பப்படும் என, ஒரு ஸ்ரண்ட் அடித்து தனது இமேஜை சர் வதேச சமூகத்தின்முன் உயர்த் திக்கொள்ள முற்பட்டார். இதன் அடுத்த கட்டமாக- ஒரு நான்கு பக்க நகல் வரைவு பேராசிரியர் பீரிஸினால் அனுப்பப்பட்டது. இதுவும் முன் னைய இரண்டினதும் உடன்பிறப்பாகவே இருந்தபோதும், அதை நிராகரிக்காமல் தமது எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கிய தான ஒரு மாற்றுநகல் வரைபினை அனுப்பவுள்ளோம் எனக் கூறியதன் மூலம் ஒரு திருப்பத்தினைப் புலிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

அதாவது, நோர்வேப் பிரதிநிதி வெளிவி வகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கூறியது போல, திம்புப் பேச்சுவார்தைகளின் பின்னர் ஒரு யோசனையை தமது பக்கத்திலி ருந்து வைக்கும் பணியினைப் புலிகள் பொறுப் பேற்றுக் கொண்டனர். உண்மையிலேயே, ஹெல்கிசன் குறிப்பிட்டதுபோல, இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு கள்தான். தமிழர் பிரதி நிதிகளான புலிகள் (1985 திம்புக் கோட்பாட்டுக்குப்பின்) தமிழரின் தற்போதைய எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கி திட்டமொன்றை முன்வைக்கும் பொறுப்பைத் தாமே ஏற் றுக்கொண்டமையானது, இலங்கை யின் அரசியற்களத்தின் தேக்க நிலையை உடைக்கவும், அதேவேளை - சிறிலங்காவின் அரசியற் தலைமைகளின் அகப்புறத் தோற் றங்களைச் சர்வதேச சமூகத்துக்கும், சிங்கள

பணியையும் புலிகள் இத்தருணத்தில் மேற் கொண்டிருந்தனர் என்பதுவும், இங்கே கவனங் கொள்ளதக்கது. மெத்தப் படித்த சிறிலங்கா வின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஒரு சுற்றப்பேச்சு முடிவ



டைந்த பின்னர் தெரிவித்தார். புலிகளுக்கு அரசியலமைப்புப் பற்றிய விடயங்களில் அனு பவமில்லை. ஒரு தரப்பு அரசியல மைப்பு ரீதியான விடயங்களை முன்வைக்கும்போது, மறுதரப்பு அதனை விளங்கிக்கொள்ள முடி யாமலுள்ளது. இந்த மிதப்பான கூற்றுக்கான மறுத்தானாக விளங்கியது புலிகளின் நட வடிக்கை சர்வதேசரீதியாகத் திரட்டப்பட்ட சட்ட, அரசியலமைப்பு விற்பன்னர் களின் குழாம் பாரிஸில் கூடிவிரிவாக ஆராய்ந்து தயாரிக்கப் பட்ட நகல் திட்டம். மேலும், பரி சீலணைக்காகத் தேசியத் தலைவரிடம் கை யளிக்கப்பட்டுள்ளது. அவரது திருத்தங்களின் பின்னர், இது அரசாங்கத்திடம் கையளிக் கப்படவுள்ளது.

நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் எவருமற்ற, அவ்வாறானவர்களின் ஆலோசனைகளைக் கொண்டிராத ஒரு தீவிரப்போக்குடைய அமைப்பு, குழு எனப் புலிகள் முத்திரை குத்த முனை யும் சிறிலங்காவின் அரசியலாளர்களுக்கும், மெத்தப்படித்தவர்களுக்கும், ஒரு சில தமிழ்ப் பதர்களும் புலிகள் நாகரிகமாக வழங்கிய பதிலே, பாரிஸ் பேச்சுக்கள் இதில் கவ னிக்க வேண்டியது என்ன வெனில் மேற்படி பேச்சில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் 'வித்யா ஜோதி' பீரிஸின் குருநாதர் என்பதாகும். (இவ்வளவு பீற்றிக்கொள்ளும் பீரிஸ் ஒரு விடயத்தை வசதியாக மறந்தோ, மறைத்தோ விட்டார். சிறிலங்காவின் இரண்டாவது குடி யரசு யாப்புக்கு அவராலும், அவரது சட்ட நிபுணத்துவம் வாய்ந்தவர்களான முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பன (தற்போதைய பாதுகாப்பு அமைச்சர்), அரசியலமைப்பு நிபு

இந்நிதியின் விடுவிப்பு பெறுகைமூலம் - தத் தமது தரப்பு இலக்குகளை நோக்கி நகரமு யாமல் சர்வதேச சமூகமும், ரணிலின் அரசாங் கமும் கையைப் பிசைந்தபடி உள்ளார்கள். இதனை அண்மையில் இலங்கைக்கு வருகை

தந்திருந்த ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி வெளிப்படையாகவே தெரிவித்து மிருந்தார். "சர்வதேச சமூகம் பொறுமை யிழந்துவிட்டது எனக் கூறிய அகாஷி இந் நிலை நீடித்தால், சர்வதேச சமூகத்தின்

### விவேகானந்தன்

கவனம் பாதிக்கப்பட்ட வேறு நாடுகளை நோக்கித் திரும்பிவிடக்கூடும் எனவும் எச்சரித்ததோடு, இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வேண்டுமென்பதே சர் வதேச சமூகத்தின் விருப்பம் என முத்தாய்ப்பு வைத்தார்.

இந்தவேளையில் பிலிப்பைன்ஸின் அரோயா அரசுக்கும், போரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்குமிடையேயான பேச்சுக்களை நடாத்த நோர்வே முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் வந்திருப்பது இதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டிய ஒரு விடயமே.

இந்தச் சர்வதேச நிதி வழங்கல் என்ப தனையே தனது அரசாங்கத்தின் ஆயுட்காலச் சாதனையாகக் கூறிக்கொண்டிருக்கும் ரணில், அக்கேள்விற்கு அந்நிதியின் முடக்கம் என் பது, தமது சாதனைக் குஞ்சானது பொரிக்கா மல், முட்டைக்குள்ளேயே சமாதியா கிவிடும் அபாயமாகக் காணப்படுகிறது. இதனைத் தவிர்க்க எப்படியாவதும் புலிகளைப் பேச் சுக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென் பதே அவர்களின் தற் போதைய இலக்காகும்.

ஆக, மிக அண்மையில் அதாவது புலி களின் நகல் திட்டம் அரசாங்கததிடம் கைய

ளத்தான் போகிறார்கள். ஆனால், அவர்களது நகல் திட்டத்தின் கனதியைத் தாங்கக்கூடிய சக்தி மேற்படி விலைக்கு இருக்கிறதா? என் பதே கேள்வி. எது எப்படி இருப்பினும் அரசாங் கமும், சர்வதேச சமூகமும் எதிர்பார்த்திருக் கும் பேச்சுவார்த்தை நடைபெறுதல் என்பது, எதிர்வரும் நாட்களில் நடைபெறப்போகின் றது. அதனூடாகத்தான் புலிகள், அரசாங்கத் தினதும், சிறிலங்காவின் ஏனைய அரசியலா ளர்களதும் உண்மையான உளக்கிடக்கையி னைச் சர்வதேச சமூகத்துக்குத் தோலுரித்துக் காட்டவேண்டியுள்ளது. இதுவே உண்மை யில் புலிகளின் எதிர்காலச் செல்நெறிக்கான பெறுமதியாக அமையவேண்டியுள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்துக் கான திட்டத்தை எந்தளவுக்கு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்? ஏற்றுக் கொண்டாலும், எந்தளவுக்கு அதை நடைமுறைப்படுத்தும்?

அவ்வாறு முற்பட்டாலும், எந்தளவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அதற்கு அனுமதியளிப் பார்? இந்தக் கேள்விகளுக்கான நடை முறைப்படுத்தலே சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் வெளிப்படுத்தவுள்ள செய்தியாகும்.

அரசாங்கம், சர்வதேச சமூகம் என்பவை ஒருபுறமிருக்கட்டும். நிறைவேற்ற அதிகா ரத்தை தன்வசம் குவித்துவைத்துள்ள ஜனா திபதியும், அவரது எதிர்க்கட்சியும், ஜே.வி.பி உள்ளிட்ட சிங்களத் தீவிரவாதிகளும் இதற்கு எந்தளவு தூரம் இடம்கொடுக்கப் போகிறார் கள்? இந்தத் தடைக்கற்களை தாண்டி வரு வதற்கு ரணில் அரசாங்கத்திற்கு எந்தளவு தூரம் ஆர்வமும், மனத்திடமும் இருக்கின்றன? அதற்கு சர்வதேச சமூகம், ரணிலுக்கு எந்த ளவு தூரம் ஆதரவும், ஊக்கமும் வழங்கப் போகிறது? இதுவே இலங்கைத்தீ வின் அரசியலில் இன்றுள்ள 4.5 பில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

சாரமற்றது எனப் புலிகளால் விமர்சிக் கப்பட்ட அறிக்கையையே பாரதூரமான விடயமாக உருப்பெருக்கிக்காட்டும் இவர்கள், புலிகளின் நகல் திட்டத்தை எவ்வாறு பூதா காரமானதாகப் பிரசாரப்படுத்துவார்கள்? துள்ளி மிதிப்பவர்கள்? கெம்பிக் கூத்தாடு வார்கள்? மக்களை உருவேற்றுவார்கள்? நிறை வேற்றதிகாரத்தைக்காட்டி அச்சுறுத் துவார்கள்? இதையெல்லாம் மீறி, ரணில் முன்வருவாரா? ஏற்கனவே தனது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளிநாடு களுக்கோ தூரப் பிரதேசங்களுக்கோ, போக வேண்டாமெனவும், எதிர்வரும் நாட்கள் மிக முக்கியமானவை எனவும் ஜனாதிபதி அறி வுறுத்தியுள்ள பின்னணியில், 'புலிகளின் நகல் திட்டம்' என்பது அவருக்கு அற்புதமான தொரு பிடியாக மாறிவிடாதா?

ஆக, அடுத்துவரும் மாதங்கள் இலங் கைத்தீவின் அரசியலில் கொந்தளிப்பாக இருக்கப்போகிறது. அதனது மையம் புலிக ளின் நகல் திட்டமாகத்தான் இருக்கப் போகிற அதேவேளை, தமிழ்மக்களின் அபிலாஷை களுக்கான தீர்வு, 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதாகவே இருக்கப் போகிறது என்பதுதான் கசப்பான யதார்த்தமாகும்.

# 1ஆம் ஆண்டு நிறைவிற்கு எங்களது







## நல் வாழ்த்துக்கள்!

**'BEAUTY IS A JOY FOREVER'**

THE *ABCD* OF LIFE AOCCORDING TO BEAUTY EXPERTS

A - ATTRACTIVE
B - BEAUTY
C - CHARISHMATIC
D - DASHING

TO ALL BEAUTY SOLUTIONS & TREATMENT NOW THERE IS

**ONE STOP-SHOP**

## மகளிருக்கு மட்டும்

- அழகைப் பேணும் வழிகளும் சிகிச்சைகளும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்
- எங்களுடைய குளிரூட்டப்பட்ட அழகு நிலையத்தில் உங்களுக்கான சேவைகளும் வாய்ப்புகளும.
- வாடிக்கையாளர்களின் சகல வசதிகளும் கருதி கொழும்பு நகரத்தில் விசாலமாக அமைக்கப்பட்ட அழகு நிலையங்களில் இதுவும் ஒன்று.
- மூலிகைச் சிகிச்சை, அரோமா சிகிச்சை, முகப்பரு, கரும்புள்ளி அகற்றல், மங்கு.மரு, முடி உதிர்தல், இளநரை, கண்ணில் கருவளையம் போன்றவற்றிற்கான சிகிச்சையும் ஆலோசனைகளும் பயிற்சி பெற்ற நிபுணர்களால் வழங்கப்படும்.
- அவரவாின் சருமத்தின் தனித்தன்மைக்கு ஏற்றபடி மூலிகைச் சிகிச்சைகளும் பேசியல் (Facial)களும் எமது சேவையில் அடங்குகின்றன.
- மணப்பெண் அலங்காரம். மேடை அலங்காரம். விழா அலங்காரம் முதலியவையும் செய்து கொடுக்கப்படும்.

# NalineS

INSTITUTE OF AROMA HERBAL, THERAPY & BEAUTY CLINIC

19, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு 6.

தொலைபேசி இல. 2365360, 2503138, 0777-383846

## பம்பலப்பிட்டியில்... மாணிக்க பிள்ளையார் கோவில் எதிரில்

புகைப்படத்துறையில் 20 வருட அனுபவமுள்ளவர்களால் தரமான முறையில் துல்லியமான நவீன தொழில்நுட்பத்துடன் விரைவாக உங்கள் புகைப்படங்களை கழுவிப்பெற்றுக்கொள்ள

- Same Day Service, Developing and Printing
- Special Service for Photographers
- Urgent Passport/Visa Photos
- Special Wedding Photography & Albums by **THIRU**









# Visionarts Studio (PVT) LTD

DIGITAL MINI LAB

292 B, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 4.

தொலைபேசி இல. 2595537

**COLLECTING AGENTS**

| Abiramy Communication | Pon Kaveen Colour Lap |
|---|---|
| 212, Ramanathan Road, Thirunelveli, Jaffna. | 11, First Cross Street, Vavuniya. |
| (Opp. Compus) Tel: 2222360 | Tel: 0712-356210 |

உளவளவியல்

# வருமுன் காப்போம்

**யா**ழ்ப்பாணத்தின்.. சிறு கிராமம் .. அங்கேயுள்ள, ஒரு வீட்டினுள்ளே பலத்த சத்தம் கேட்கின்றது. குழந்தைகள் பெரும் குரலெடுத்து, ஒப்பாரி வைத்து அழுகின்றார்கள். பல பொருட்கள் வெளியே வந்து முற்றத்தில் விழுகின்றன. அக்குழந்தைகளின் தாயின் குரலோ பெரும் அவலமாக, வேதனையாக எதிரொலிக்கின்றது.

கிராமத்து தெருவில் நடமாட்டம் குறைந்துவிட்டது. வீட்டின் உள்ளே ஒரு ஆண்மகனின் குரல் இடிஇடித்துக் கர்ஜிக்கின்றது.

என்னடி சமைச்சு வைச்சிருக்கிறாய்.. உந்த சாப்பாட்டை எவன் சாப்பிடுவான்? ஒரு உழைச்சுப்போட்டு வாற ஆம்பிளைக்கு



இதே சாப்பாடு.. நாசமாய்ப் போறவளே வேணுமெண்டுதானே உதைச் செய்து வைச்சிருக்கிறாய். இங்க வாடி.. எங்க.. ஓடுறாய்..

அடிகள் பல அவள் மேனியில் விழுகின்றன. என்ரை ஐயோ, என்ரை ஐயோ அறுவானே குடிச்சுப்போட்டு வந்து, ஏன் இந்த அநியாயம் பண்ணுறாய். சனியன் கத்தாதே, கத்தினியெண்டால் சாக்காட்டிப் போடுவன். தாயும், பிள்ளையும் சேர்ந்து ஊரைக் கூப்படுகிறியளோ?

மறுபடியும் அடிகள், வசவுகள். பிள்ளைகளும், அவளும் - அவனின் அகோரம் தாங்கமுடியாமல், வெளியே அடுத்த வீட்டுக்கு ஓடுகின்றார்கள்.

என்னடி நெடுகப் பக்கத்து வீட்டுக்குத்தான் ஓடுறியள். பக்கத்து வீட்டுக்காரன் உனக்குப் புருசனோடி?

வார்த்தைகள் அமிலத்தை ஊற்றின. நிலைமை இன்னும் மோசமாகின்றது.

அடுத்து இன்னுமொரு கிராமம் - ஒரு வீடு. மாலைநேரம் பறவைகள் கூடு திரும்பிக் கொண்டிருக்கின்றன. குடும்பத்துக்காக உழைக்கச் சென்றவர்கள் வேகமாக வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சிந்தனை - மனைவி, பிள்ளைகளை நோக்கியபடியுள்ளது. வீட்டில் இருப்பவர்களின் பிணைப்பும் அதேபோலத்தான்.

இங்கே இந்தக் குடும்பத்தைப் பாருங்கள். வீடு அமைதியாக இருக்கின்றது. குசினிக்குள் வேலை செய்து கொண்டிருக்கும் தாய், அடிக்கடி வெளியே வந்து படலையைப் பார்ப்பதும், உள்ளே போவதுமாய் இருக்கின்றாள்.

கண்களில் மிரட்சி பயம், நெஞ்சில் படபடப்பு, உடலில் லேசான நடுக்கம், மேசையில் கையில் பாடம் புத்தகங்களை வைத்துக்கொண்டு பிள்ளைகள் படிக்கமுடியாமல் படலையைப் பார்ப்பதும், தாயைப் பார்ப்பதும் விழிகளோ.. மழுண்டபடி.

அம்மா - அப்பா இண்டைக்கும் குடிச்சுப்போட்டுத்தான் வருவாரோ?

ஏனம்மா எந்தநாளும் குடிச்சுப்போட்டு வாறார்.

அப்பாவால குடிக்காம இருக்கேலாதோ?

அம்மா - நாங்கள், அப்பாவை விரட்டிவிட்டு எங்கயாலும் போய் இருப்பம். பாவம் நீங்களும் அடிவாங்காமல் இருப்பியள்.

படலை திறக்கப்படுகின்றது.

அப்பா என்ற உருவம் கத்தியபடி, தள்ளாட்டமாக உள்ளே வர, இன்னுமோரு அவலநிலை தொடங்குகின்றது.

இனி இன்னுமொரு வீட்டினைப் பார்க்கலாம். வீடு இருளில் மூழ்கி இருக்கின்றது. படலையை அவன் அடித்துத் திறக்கின்றான். அது கழண்டு விழாத குறைதான்.

அவன் வாயிலிருந்து அசிங்கமான வார்த்தைகள் வெளிவருகின்றன.

ஏய் கிரகங்கள் எங்கயடி போட்டியள்.

ஒருத்தரையும் காணேல்ல.

அவனோ தண்ணீரில் மிதக்கும் கப்பல்போலத் தள்ளாடுகின்றான்.

வீட்டில விளக்கும் கொழுத்தாம,

அவன் பொறுமை இழந்து காணப்படுகிறான்.

சுமதியக்கா, குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு அம்மா விட்ட போட்டா, தான் இனி இங்க வரமாட்டாளாம்.

வேலிக்கப்பால் ஒரு உருவம் சொல்லியபடி, பயந்து அப்பால் ஓடியது.

அம்மாட்ட போயிட்டாளாமோ? அவனுக்குக் காலையில் நடந்த சண்டையும் பிறகு மனைவிக்கும், பிள்ளையலுக்கும் அடித்த அடிகளும் லேசாக ஞாபகத்தில் வந்தன. அவளின் இந்தச் செய்கை, அவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. பசிவயிற்றைக் கிள்ளுகின்றது. உடலோ நடுங்குகின்றது. இப்படிச் செய்து போட்டாளே. இவளுக்குச் சரியான பாடம் படிப்பிக்க வேணும். அதை நான் செய்து காட்டுறன். அவன் தோட்டப்பக்கம் விரைந்துபோய்ப் பயிர்களுக்கு அடிக்கும் அந்த மருந்துப் போத்தலை எடுக்கின்றான்.

அந்த நேரத்தில் போதையில் அவன் ஒருவரையும் நினைக்கவில்லை.

உள்ளே திரவம் வேகமாக அவன் தொண்டைக் குழியுள் இறங்குகின்றது.

இங்கே நீங்கள் பார்த்த மூன்று சம்பவங்களிலும் ஓர் உண்மை தெரிகின்றது.

அந்த விசியம் வீட்டைக் கவனிக்கவேண்டிய பொறுப்புமிக்க அப்பாக்கள் - மது போதையில் குடிப்பாவனையில் குடிகாரர்களாக உள்ளனர். இப்படியான பல குடும்பங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். யாழ்ப்பாண குடாநாடு - இன்று இந்த நிலையில் உள்ளது.

நீங்கள் பார்த்த அப்பாக்கள் மாத்திரமா- இந்தக் குடிப் பழக்கத்திற்கு, போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாக உள்ளனர்.

பணக்காரன்முதல் பரம ஏழைவரை, படித்தவர்கள்முதல் பாமரர் வரை, அரசன்முதல் ஆண்டிவரை, ஆசிரியர்முதல் மாணவர்கள் வரை, சமுதாயத்தில் எல்லா நிலை மனிதர்களும் குடிநோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

சந்திக்குச் சந்தி, வீதிக்கு வீதி மதுபானக் கடைகள் மதுவை இலகுவாகப் பெறக்கூடியதாக உள்ளது. இதனால், பெண்களும் இப்பழக்கத்துக்குள்ளாகி வருகின்றனர். சமூகத்தில் மதுபானம் ஒரு நாகரிகமான செயலாகவும் கருதப்படுகின்றது: ஊர்களில் சட்ட விரோதமாகக் காய்ச்சப்படும்



கசிப்பு உற்பத்திகூடத் தடுப்பு நடவடிக்கைகள் அதை வைத்திருப்பவர் மீது தண்டனை விதித்து, அபராதம் அறவிடுதல் போன்ற நடவடிக்கை எடுத்தும், அதனை ஒழிக்கமுடியாமல் உள்ளது.

எங்கள் சமூகம், நலன் விரும்பிகள் என்ன செய்வதென்று தெரியாமல் கவலைப்படுகின்றார்கள். எப்படி இதனைக் கட்டுப்படுத்துவது? குடி பாவனையால் தனி மனிதன், குடும்பம், சமுதாயம், ஊர் எப்படிப் பாழ்பட்டுப் போகின்றது.

மதுவானது வயது வித்தியாசமின்றி, எல்லோரையும் தன் வலையில் போட்டுக் கொள்கின்றது, குடும்பம் சீரழிந்து போகின்றது. பிள்ளைகள் தந்தையை வெறுக்கின்றார்கள். மனைவி கூட, கணவனை வெறுக்கின்றாள். தொழில் இழக்கப்படுகிறது. சமுதாயத்தில் மதிப்புப் போகின்றது, உடல் நோய்கள் ஏற்படுகின்றன. உள நோய்கள் ஏற்படுகின்றன. பாதை விபத்துக்கள், பாலியல் துஷ்பிரயோகம், தற்கொலை எண்ணங்கள், சண்டை, அடிதடி, கொலை... என்னதான் செய்வது.

பத்திரிகையைப் புரட்டினால் நம்பமுடியாத செய்திகள், அதிர்ச்சிதரும் சம்பவங்கள் இப்படியும் நடக்குமா? மது போதையில் வந்த தந்தை மகனை வெட்டிக் கொன்றார். போதையின் உச்சத்தில் சகோதரன், சகோதரனை வெட்டினான். மாலையில் வீதியில் இளைஞர்கள் கலாட்டா. வாகனங்கள் கொழுத்தப்பட்டன, கண்ணாடிகள் உடைந்தன. அவர்கள் மதுபோதையில் இருந்தார்கள். பாடசாலை சென்ற மாணவிகள் மீது.... அவர்களும் இதே நிலைமைதான்.

தனியார் ஸ்தாபனங்கள், தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன, வீதி நாடகங்கள், கூத்துக்கள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், கண்காட்சிகள், கிராம மட்டத்திலும், நகர மட்டத்திலும், மதுபோதை சம்பந்தமான பேச்சுக்கள், பிரசாரங்கள், எச்சரிக்கைச் சுவரொட்டிகள், பாடசாலை மட்டத்தின் மாணவர்களுக்கு இடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகள்... எல்லாம்... எல்லாம்.

இன்னொரு பக்கம்... வெள்ளம்போல் மதுபான வகைகள்... டசின் கணக்கில், லொறிக் கணக்கில் பிரதான பாதையூடாக யார் நகரிலுள்ள மது விற்பனை நிலையங்களுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன விதம் விதமான அமைப்பில் போத்தல்கள், பார்வையாளரைச் சுண்டி இழுக்கும் விளம்பர உத்திகள், பலவகையான அயிட்டங்கள், பியர், வைன், சாராயம், ஜின், பிஸ்க்கி, பொட்கா,றம், பிரண்டி.... எங்கள் கையில் உள்ள பணத்திற்கேற்றபடி, மனதுக்கேற்றபடி, உடலுக்கேற்றபடி அயிட்டம் கைகளுக்கு வருகின்றது. கிராமத்து மது பாவனையாளன் கள்ளை நாடுகிறான். சிலநேரங்களில் கசிப்புப் பக்கமும், அவன் பார்வை திரும்புகின்றது... புதிய புதிய கண்டுபிடிப்புகள், புதிய புதிய மாற்று வழிகள்.

மது பாவனையாளரின் தொகையும் அதிகரித்துக்கொண்டு போகின்றது.

மதுப் பழக்கத்திற்கு எப்படி மனிதன் அடிமையாகின்றான்?

பொதுவாகக் குடிப்பழக்கம் - பெற்றோரிடமிருந்து, நண்பர்களிடமிருந்து, பணிபுரியுமிடங்களிலிருந்து, கல்வி நிலையங்களிலிருந்து, பண்டிகை - விழா சம்பந்தமான தொடர்புகளிலும் குடிப்பழக்கம் ஒருவரைப் பற்றிக் கொள்கின்றது. போதைப்பொருள் பழக்கமும் இதுபோலத்தான் ஒருவரை, தனக்கு அடிமைப்படுத்தத் தொடங்குகின்றது.

குடிப்பவர் குடிக்கும் மதுவின் அளவு மற்றும் அவர் எவ்வளவு காலமாய்க் குடித்து வருகிறார் என்ற காரியங்களைப் பொறுத்து, அவரது பழக்கவழக்கங்களில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஈதைல் அற்ககோல் **(ETHL ALCOHOL)** எனப்படும் இரசாயனப் பதார்த்தம் - எல்லா மது வகைகளிலும் முக்கியமாகக் காணப்படுகின்றது. இது மது வகைகளில் வெவ்வேறு செறிவுகளில் காணப்படும். மனிதனில் "இன்ப துன்ப" நிலைமைகளுக்கு இது காரணமாகின்றது.

இது தவிர, இங்கு சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் கள்ளச் சாரயமான "கசிப்பு" காணப்படும் அற்ககோல் - மீதைல் அற்க கோல் **(METHYL ALCOHOL)** ஆகும். இது நச்சுத் தன்மையுடையது.

ஒருவன் மதுவை உள் எடுக்கிறான். என்றால் அதன் அர்த்தம் அவன் நஞ்சை கொஞ்சம் கொஞ்சமாய் அருந்தத் தொடங்கிவிட்டானென்றே சொல்லவேண்டும்.

உல்லாசம் உற்சாகம் ஜாலி என்ற தலைமையில் மது எடுக்கும் ஒருவன் மெல்ல மெல்ல அது தன்வலையில் சிக்க வைத்துக்கொண்டிருப்பதை உணரமாட்டான். மேலும் நண்பர்கள் வருகிறார்கள். தொழில்கிடைகின்றது. அங்கேயும் நண்பர்கள் மது மேலும் அதிகமாகின்றது. கிழமையில் மாதத்தில் ஆண்டுக்கொரு முறையென மது பாவித்தவர்கள் தொடர்ச்சியாக மது பாவிக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

தனிமனிதனாக மது பாவித்துக் கொண்டிருந்தவன் இல்லற வாழ்வில் நுழைகின்றான். ஆரம்பத்தில் அவனின் மது பாவனை இரகசியமாக நடக்கின்றது. ஒருநாள் மனைவிக்கு அது தெரியவருகின்றது. அதிர்ச்சி இருந்தும் அவர் சும்மா முகஸ் பாத்திக்குக் குடிகின்றார்என மன ஆறுதல் அடைகின்றார். அதனை பெரிதாக அவள் எடுத்துக் கொள்ளவில்லை.

மது பாவனை கூடிக்கொண்டு போகின்றது. குழந்தைகள் பிறக்கின்றார்கள். அவர்களை வளர்க்கவேண்டும். மது பழக்கத்தால் அவனது வருமானமோ குடும்பத் தேவைக்கு போதுமானதாக இல்லை. பிரச்சினைகள் ஆரம்பமாகின்றது. குடும்பம் பெருத்துவிட்டது.

குடும்பப்பாரம் கூடிவிட்டது.

இப்பொழுது அவனது உழைப்பு முழுவதும் மதுவுக்கே போகின்றது. வேலைக்கு போவது ஒழுங்கில்லாமல் இருக்கின்றது. வேலை செய்யும் இடத்தல் பிரச்சினை, அயலாரோடு பிரச்சினை.

கடைசியில்

மனைவி கணவனின் குடி பாவனையிலிருந்து மீட்க பல முயற்சி எடுக்கின்றான். மன்றாடுகின்றான். கெஞ்சின்றாள். பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்து கவலைப்படுகிறாள். ஓயாது புலம்புகின்றாள்.

குடித்துக் குடித்து ஈரல் கருகி மது அருந்துவதால் சிரோசின் வயிறு வீங்கி செத்தவர்களின் கதையை சொல்லுகின்றான். குடும்பம் அழிந்தகதை, சகோதரங்கள், உறவினர்கள் எல்லாம் மது பாவனையாளரை கைவிட்ட கதை....

என்ன சொல்லியும் என்ன?

காலையில் எழுந்தவுடன் அவனுக்கு தலைவலிக்கின்றது. அன்று மது எடுத்தால் தான் அவனுக்கு எதுவுமே செய்ய முடிகின்றது.

இருந்தும் மனைவியின் "நச்சரிப்பு" தாங்கமுடியாமல் சத்தியமாய் இனிமேல் குடிக்கமாட்டேன் என்று உறுதிபடக் கூறுகின்றான். சூறுரைக்கின்றான். மாலையில் எல்லோரும் ஆவலாய் எதிர்பார்த்து காத்து நிற்கின்றார்கள்...

பாவம்... அவன் அதே பழைய கோலத்தில்தான் வீடு திரும்புகின்றான்.

"ஐயோ கடவுளே இவரை திருத்த முடியாதா?"

"இந்நோயிலிருந்து இவரை மீட்க முடியாதா?"

"இவர்களுக்கு யார் உதவுவார்கள்?"

தயவு செய்து சொல்லுங்கள் என்னதான் இவர்களுக்கு நடக்கின்றது.

சமூகத்தில் பலர் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துக்கொண்டு இருக்கின்றார்கள். சந்தோஷம், இன்பம் என்ற நிலையில் மது அருந்தத் தொடங்கியவர்கள் கடைசியில் துன்பம் கவலை பிரச்சினை என்று எல்லாவற்றுக்கும் காரணம் காட்டி குடிக்கத் தொடங்கிவிட்டார்களே இதில் எது உண்மை?

இது பற்றி 45 வயதுடைய மது பாவனையிலிருந்து விடுபட்ட ஒருவரிடம் கேட்டால் உண்மை அனைவருக்கும் தெரியவரும். அப்படிவிடுபட்ட அந்த மனிதனிடம் கேட்போம்....

ஐயா குடிச்சு குடிச்சு வாழ்க்கையில் ஒண்டும் மிச்சமில்லை. எல்லாத்தையும் இழந்ததுதான் மிச்சம். குடிக்கிற ஆக்கள் கன காரணங்கள் சொல்லுவினம். அதை நியாயப்படுத்த பல கதைகள் தொடர்ச்சியாய் வரும். அதில ஒண்டுமே உண்மையில்லை. குடிக்கிறதால உசார், வீரம், நித்திரை, போகுமெண்டும் சொல்யிருப்பினம்... கடைசியில எல்லாம் கூடின மாதிரிபோயிடும். குடிக்கேக்க நாங்கள் நினைக்கிற மாதிரி கதைக்க அது தாறமாதிரியிருக்கும். கடைசியில கடன் கொடுத்திட்டு வாங்கிறமாதிரி எல்லாத்தையும் வாங்கிடும்...

உண்மையில எங்களுக்கு இயல்பாய் இறைவன் கொடுத்த உசார், வீரம், நித்திரை பிசி சந்தோஷம் ஆளுமை, எல்லாத்தையும் குடி பாவனை அற்றுப்போகச் செய்து மனிதனின் அடக்கப்பட்டிருக்கும் உணர்வுகளான பொறாமை, குரோதம் சந்கேம் போன்ற தீய குணங்கள் வெளிவர மது உதவி செய்திடும்.

பல தடவைகள் நான் குடியிலிருந்து மீள முடியாமல் கஷ்ரப்பட்டன. இருந்தும் மனதில் நான் கொண்ட உறுதியான மாற்றம் மனைவி பிள்ளைகள் சகோதரர்களின் அன்பான ஆதரவு, என்னில் பெறுப்பு கொள்ளாமல் எனக்குள் குடி நோயை ஏற்றுக்கொண்டு செயல்பட்டமையும் என்கு உதவிய ஆலோசனைகளும் மருந்து உதவிகளும் என்னை மீண்டும் சமூகத்தோடு சேர்ந்து வாழும் மனிதனாக மாறியது. மது பாவனையிலிருந்து நீங்கள் விடுபட நினைத்தால் தாராளமாக அதிலிருந்து விடுபடலாம். என்னைப் போல கடைசிவரை காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. உடனே செயல்படுகிறன்.

என்ன இந்த புதிய மனிதன் கூறியது உங்கள் மனத்திலிருந்து மது சம்பந்தமனா அச்சஉணர்வையும் பய உணர்வையும் நீக்கி உள்ள அல்லவா?

எனவே தாமதிக்க வேண்டாம்.

வருமுன்காப்போம். ❑

**மது மருந்து துர்ப்பாவனைக்கான**
**உளவளத் துணையாளர்**
**பல்துறைசார் சிகிச்சைக் குழு**
**உள மருத்துவப் பிரிவு**

# சிறுகதை

# என்ர பிள்ளையள் எங்க?

## சி.கதிர்காமநாதன்

மியாவ்...

பூனைகளின் அலறல் சத்தம் திடுக்கிடச் செய்தது. நேரம் என்னவாக இருக்கும்? ஒரு மணியா? ரண்டு மணியா?

கொஞ்ச நாட்களாக 'இவைகளின்' அமளி பெரும் தொல்லையாகப் போய்விட்டது.

அந்த அலறல் சத்தத்தை என்னவென்பது? வேதனையா? கோபமா? அல்லது வேறு ஏதாவது உணர்வின் வெளிப்பாடா?

எதில் போடுவது?

நாடி நரம்பெல்லாம் ஊடுருவி உயிரைக் கொல்லுகின்ற தன்மை.

மியாவ் வ் வ்.....

ஓடுகளின் மேல் 'தொபு தொபு' என ஓடும் காலடிச் சத்தம்... ஒன்றையொன்று விரட்டிக் கத்திக்கொண்டு, அடுத்தும் மீண்டும் அலறல் சத்தம்.

மி...யா...வ்.........

என்னை விட்டுப் போயிடாத ஓடி வா.

சே என்னடா இது.

எழுந்து உட்கார்ந்து விட்டேன், நித்திரை குழம்பிவிட்டது, டோர்ச்சை எடுத்து மணியைப் பார்த்தேன். ஒன்று நாற்பது காட்டியது (பு.நே).

சனியன்களுக்கு என்ரை வீடுதான் கிடைச்சுது, ஓடித் திரிஞ்சு விளை யாடுறத்துக்கு. ராவில் இதேவேலையாய்ப் போச்சு.

மனைவியும் எழும்பி விட்டாள்.

"என்னப்பா--- இண்டைக்கும்... பூனையளே?"

"ஓமப்பா ரண்டு மெல் லக் கத்தி உயிரை வாங்குது."

"எனக்கும் நித்திரை முறிஞ்சுபோச்சு."

"யார் வீட்டுப் பூனையப்பா?"

நான் காரமாக...

யாருக்குத் தெரியும்?

நான் நினைக்கிறன், ஒழுங்காத் தமிழ் சினிமாப் படங்கள் பாக்கிற வீட்டில இருந்து வாற புனையள் போல அது-தான் நேரம் காலம் தெரியாமல், காதல செய்து கொண்டு திரியுதுகள். அண்டைக்கு விடிய எழும்பிப் பாத்தன் காலுக்கடியில படுத்தெல்லே கிடந்தது.



சமைக்கேக்க ரண்டும் கூரையில நிண்டு பாத்துக் கத்திக்கொண்டு நிக்கும்... எனக்கு ஜேர்மன், கனடா என்று இருக்கிற பிள்ளையளின்ரை ஞாபகம் வரும்.

அந்த இரவுவேளையில் - மனைவியின் கண்கள் பிரகாசமாக, பூனையின் கண்கள்போல் பளிச்சிட்டன. அப்பு, நீர் தான் பரிதாபப்பட்டு, சாப்பாடு போட்டு,

அசையனை இங்கே வரப்பண்ணிப் போட்டீர்போல... எனக்கு வேற வேலையில்லையே. நிக்கிற நாய்க்கும், கோழியளுக்கும் சாப்பாடு போடுறத்துக்கு நான் படுறபாடு.. சனியன்களைக் கலைச்சாலும் போகுதில்லையே...

'சரியப்பா...' என்ன செய்யிறது... இப்படியே ஒவ்வொரு நாளும்... நித்திரை குழம்பி... 'டின்கவரி சணல்' பார்க்கிற மாதிரிராவில் எழும்பி, பூனையளைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்கிறதே.

மி...யா...வ்...

"கிரகங்கள் வந்திட்டுதுகள். லைட்டைப் போடுமப்பா".

வெளிச்சத்தைக் கண்டதும், இரண்டு பூனைகளும் **A**-9 பாதையில் கொழும்புக்கு ஓடுற வாகனங்கள் மாதிரி ஓடி மறைந்தன.

'கெதியாய் உவையளுக்கு ஒரு வழி செய்யவேண்டும்'.

பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தேன். காலில் மென்மையாய் ஒன்று உராய்ந்தது. திடுக்கிட்டுக் கீழே பார்த்தேன்.

திருவாளர் பூனையார்.

வெள்ளை வெளேரென்ற 'குண்டான பூனை'. கண்களை அகலத்திறந்து, சற்று அச்சத்துடன் பின்வாங்கி என்னைப் பார்த்தது, வாலை ஆட்டவும் செய்தது.

நான் 'ஒருவிதமான முறைப்புடன்' அதனைப் பார்த்தேன். அது இப்போது பயப்படவில்லை. கொஞ்சம் முன்வந்து என்னைத் தைரியமாகப் பார்த்தது.

மியாவ்... மியாவ்...

அந்தக் குரலில்... என்னே இனிமை... பரிவு... குழைவு. **T.M.S** இல் தொடங்கி, உதித் நாராயணன் இசைபோல் என்னை மயக்கியது.

ராவில என்னைக் கதிகலங் கச் செய்து, நித்திரையைக் குழப்பி... எனது பரம எதிரியான பூனையாரா இவர்?

அது மீண்டும் தனது முதுகினால் காலைத் தேய்த்தது. மியாவ் என்றது.

எனக்கு அப்படிச் செய்வது கொஞ்சம் சுகமாகத்தான் இருந் தது. இருந்தும், உடன் சுதாகரித்துக் கொண்டேன்.

இல்லை, இது சாகசம் பண்ணுகிறது, நன்றாக நடிக்கின்றது, தாங்கள் தொடர்ந்து இங்கே "காதல் கோட்டை" கட்டுவதற்கு, என்னைச் சமாளிக்கப் பாக்கிறது. நான் ஏமாறக்கூடாது. (நாற்பது வருடத்திற்கு மேலாக ஏமாந்தது போதாதா) கவனமாக, அவதானமாக அதனது அத்தனை செயற்பாட்டையும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

நான் வடக்கு - கிழக்குத் தமிழ்மக்கள்போல், உசாராக இருந்தேன்.

அங்கால போ... நல்லாத் தேய்க்கிறதுக்கு வந்திட்டார். ராவில எங்களைப் படுத்திறபாடு. உன்னர மற்றவர் எங்கே? வேலைககுப் போட்டாரோ?

"அதென்ன உங்களுக்கு என்ரை வீடு கொழும்பு மாதிரி இருக்கோ... ஓடு... அங்காலா எங்கட ஆட்கள் வெளிநாடு ஓடிப்போற மாதிரி, அங்க ஓடிப் போங்களேன். இங்க வந்தேன் என்ர உயிரை வாங்கிறியள். அங்கால ஓடிப்போ... இனி இங்கால வந்தா பயங்கரவாதச் சட்டத்தில பிடிச்சு உள்ள போட்டிடுவன்.

நான், ஜனாதிபதி "புஷ்" போல் பயங்கரவாதத்தை ஒழிப்பேன் என்றரீதியில் புலம்பித் தள்ளினேன்.

என் புலம்பலைக் கேட்டு மனைசி ஓடிவந்து விட்டாள்.

"என்ன பிடிச்சது உங்களுக்கு... உங்களுக்குள்ள கதைச்சுக்கொண்டு நிக்கிறியள்.

என்ன செய்யிறது, என்னர நிலை இந்த மாதிரி ஆகிப் போச்சு. எலியைப் பிடிக்க எலிப்பொறியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பூனையைப் பிடிக்க, ஏதாவது பொறி கண்டு பிடிச்சு இருக்கிறாங்களோ?

இன்று நித்திரை ஆனந்தமாக இருந்தது. எந்தவிதமான கூச்சல், குழப்பம், புத்தகவீச்சு, கதிரை வீச்சு, உள்நடப்பு, வெளிநடப்பு இல்லாத பாராளுமன்றம் மாதிரி அமைதியாக இருந்தது.

பூனைகள் எங்கே போய்விட்டன?

எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

"அண்டைக்கு நான் - நாலுகால்ப் பூனைக்குக் குடுத்த குடுவையில அதுக்கு ரோசம் வந்திட்டுதுபோல.

பாத்தியே.. ஆக்களைக் காணேல்ல.

படைத்தரப்புப்போல், தமது நிலைகளுக்குப் பின்வாங்கி விட்டனவா?

"பாருமன் ஐஞ்சறிவாய் இருந்தாலும் அதுகள் மானம், ரோஷமுள்ள பூனைகள். என்ரை சொல்லுக்கு மதிப்புக்கொடுத்துப் போட்டுதுகள்.

மனைவிக்குச் சந்தோஷமாக இருந்தது.

"ஓமப்பா சமைக்கேக்க வாறதுகள், இப்ப காணேல்லை."

மியாவ்... மியாவ்...

எல்லாம்.. எல்லாம்... கடந்த.. செப்டெம்பர் மாதத்தில்-அமெரிக்காவில் நடந்த தாக்குதல்போல் நிலை குலைந்தது போன்ற....

"எளியதுகள்.. எளியதுகள்... இங்கதான் நிக்குதுகள். இவ்வளவு நாளும் எங்க போனதுகள்.

வன்னியில இருக்கிற தங்கட சொந்தக்காரரைப் பாக்க போனதுகளோ?

மியாவ்....

'தொபு தொபு'வென ஒடுகளில் உருண்டு, விழுந்து ஓடுகின்ற சத்தம்.

இனி என்ன செய்வது?

போரா? சமாதானமான? புரிந்துணர்வு ஒப்பந்தமா?

'என்னப்பா செய்யிறது?'

"பேசாமக் காதைப் பொத்திக்கொண்டு படுங்கோ.

மியாவ்...

சிலநாட்கள் அமைதியாகக் கழிந்தன.

எந்தவிதமான மோதல்களும் ஏற்படவில்லை.

"என்னப்பா அமைதியாய்க் கிடக்கு.'

பேசாமல் கிடவுங்கோ.

அமைதி.. அமைதி.. அமைதி

மியாவ்.. மியாவ்...

பூனைகளின் சத்தம் தான் கொஞ்சம் வித்தியாசமாக, மெல்லியதான 'கீச்சுக்குரலில்'.

என்னப்பா பூனையின்ர சத்தம் வித்தியாசமாய்க் கிடக்கு

நானும் அதான் யோசிக்கிறன். எங்களுக்காகச் சத்தத்தைக் குறைக்க 'அப்பலோ கொஸ்பிற்றலுக்குப்போய் ஒப்பிரேஷன் செய்து போட்டுதோ...?'

'வாயை மூடுங்கோ'. சத்தம் உள்ளுக்க சாமான்கள் வைக்கிற அறைக்க இருந்தெல்லே வருகுது.

மியாவ்

உண்மையாத்தான். அந்த அறைக்குள் இருந்துதான் சத்தம் வந்தது.

'உது பூனைக்குட்டியளின்ரை சத்தமாயெல்லே இருக்கு'.

'பூனைக்குட்டியளின்ரை சத்தமோ?'

பூனைக்குட்டிளே தான்.. அறைக்குள்ள பழைய பெட்டி இருக்கெல்லே, அதுக்குள்ள தான் இருக்குதுகள். மனைவியின் காது அவ்வளவு கூர்மை.

'கடைசியில காதலித்து, கலியாணம் முடிச்சுப் பிள்ளையளையும் பெத்துப் போட்டினம். சரி, இனி என்ன செய்யிறது. உமக்குத்தான் சொந்தப் பிள்ளையளுக்கு, பிள்ளைப் பெத்துப் பாக்க முடியேல்லை. எல்லாம் வெளியால போட்டுதுகள். உதுகளுக்கெண்டாலும், 'பத்தியம்' அரைச்சுக்கொடுமன்'.

மனைவி பொங்கி எழுந்தாள்.

சும்மா 'லூஸ்' கதை கதையாதையுங்கோ. இனிப் பூனைக் குட்டியளை காவிக் கொண்டேல்லே திரியப்போகுது.

எனக்கு தலை கிறுகிறுத்தது.

பூனை - குட்டி போட்டால், ஏழு இடம் காவுறதெண்டு சொல்லுவினம். பெரிய உபத்திரமாவெல்லே போகப்போகுது.

ஜேர்மன், கனடா, பிரான்ஸ், சுவீடன் என்று குட்டியள் இடம் மாறிக்கொண்டு இருந்தன. நாங்கள் இந்த 'இடம் பெயர்வை' வெளிநாட்டு ராஜதந்திரிகள் நிலையில் உன்னிப்பாக அவதானித்தோம்.

மூன்று குட்டிகள் பார்க்க வடிவாகத்தானிருந்தன. கண்கள் திறந்திருந்த நிலையில் கவிதையாக..

'பாத்தியளே பிள்ளையளை வளர்க்கிறதுக்கு எவ்வளவு கஸ்ரப்படுகுது'.

பூனையும் சலிக்காமல் குட்டியளைக் கொண்டு திரியுது. அதுகளுக்கும் 'எங்கட நிலைமை தான்'. குட்டியள் இப்போது கொஞ்சம் வெளிவர ஆரம்பித்தன. எங்களைக் கண்டவுடன், அன்று 'அடையாள அட்டை' இல்லாத தமிழ்மக்கள் உள்ளே ஓடுவதுபோல், ஓடி ஒளித்துவிடும்.

உவையளை நெடுக இப்படி விடுறுது பிரச்சினையப்பா. கெதியில இங்க இருந்து அப்புறுப்படுத்த வேண்டும். மனைவி அவசரப்படுத்தினாள்.

'அப்ப என்ன செய்யிறது.?'

'எங்கையாவது பிடிச்சுக் கொண்டு போய்விட வேண்டியது தான்.'

இரண்டு நாட்களாகப் பூனைக்குட்டிகளின் சத்தத்தைக் காணவில்லை.

'கடைசியாய் விறகுக் குவியலுக்கு இடையே படுத்துக் கிடந்ததுகள்'.

'அப்ப எங்க போயிருக்கும்'.

'முந்தநாள் இரவு தாய்ப்பூனை, ஒரு பூனையைக் கலைச்சபடி கத்திக் கொண்டெல்லே போனது'.

மனைவி கண்கள் விரியச் சொன்னாள்.

ஓமப்பா எனக்கும் ஞாபகம் வருகுது. பயங்கரமாய்க் கத்திக் கலைச்சுக் கொண்டேயேல்லே போனது.

என்ன நடத்திருக்கும்?

நாங்கள் யோசித்துக் கொண்டிருக்க, கால்களுக்கிடையே தாய்ப் பூனை கத்திக் கொண்டிருந்தது.

மியாவ்.. மியாவ்.. மியாவ்...

குரலில் வேதனை தெரிந்தது, அவலம் தெரிந்தது. பரிதாபமாக இருந்தது.

'என்னப்பா அதன்ரை சத்தம் என்னை என்னவோ செய்யுது, வயிறு எரியுது'.

மனைவி பெரிதாகப் புலிம்பினாள்.

அது குட்டியளைத்தான் தேடுது. ஒவ்வொரு இடமாகத் தேடுது.

'என்னப்பா குட்டியள் எங்க போயிருக்கும்?'

'எனக்கு ஒரே விசராய்க் கிடக்கு'.

தாயப் பூனை ஒவ்வொரு இடமாகத் தேடுவதும், பின் என் கால்களுக்கிடையில் புகுந்து கத்தியபடி, என்னைப் பார்ப்பதும்,

மியாவ்.. மியாவ்....

என்ரை பிள்ளையளை நீங்கள் என்ன செய்து போட்டியள்? உங்களை நம்பித்தானே, நான் குட்டியளை இங்க வந்து 'பெத்துப் போட்டனான்'. நீங்கள் - எங்களை விடப் பெரிய மனுசர். நாங்கள் சின்ன ஆக்கள். எப்படியும் நீங்கள் தான், எங்களைக் காப்பாத்த வேணும். அன்றிரவு என்ரை பிள்ளையளைப் பிடிச்சுக்கொண்டு 'எதிரி' போகேக்க நான் கத்தினான், உங்களையெல்லாம் கூப்பிட்டனான். ஒருத்தரும் உதவிக்கு வரேல்லை. உங்கட சொந்தப் பிள்ளையென்டால், பாத்துக் கொண்டிருந்திருப்பியளே?

என்ரை பிள்ளையள் எங்க?

அவையளைக் கண்டுபிடிச்சுத் தரமாட்டியளே?

இநதத் தாயின் வேதனை உங்களுக்குத் தெரியேல்லையே? எனக்கு உடம்பு நடுங்கியது. நீங்கள் தான் அதுகளைக் காப்பாத்தியிருக்க வேணும். மனது வலித்தது.

வாருமப்பா நாங்களும் தேடிப் பார்ப்பம். அங்குலம், அங்குலமாகத் தேடினோம். குசினிக் கூரை இறங்கும் முடிவில், ஒருவிதமான 'கெட்ட வாசனை' வந்தது.

என்னப்பா அந்தப் மூலைப் பக்கமாய்த்தான் 'மணம்' வருகுது, ஏறிப் பாருங்கோ.

கதிரையை வைத்து ஏறிப்பார்த்தேன்.

கூ...ச்..ச..லி...ட்..டேன்

கை, கால்கள், தலைகள், துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில், பூனைக்குட்டியள் சிதறிக் கிடந்தன.

ஐயோ.. இ..ஞ்...சை பாருமப்பா, அறுவான்கள் பிடிச்சுக் கொண்டு போய்த் துண்டு துண்டாய் வெட்டி, சாக்காட்டிப் போட்டாங்கள்.

நான் சிதறிக் கிடந்த துண்டுகளைப் பொறுக்கிக் கீழே போட்டேன்.

பூனை அவற்றை முகர்ந்து பார்த்துப் பார்த்துக் கத்தியது.

மியாவ்.. மியாவ்.. மியாவ்..

தாயின் வேதனை, ஓலம் என்னைத் தொடர்ந்து வருத்திக் கொண்டே இருந்தது. (யாவும் சிந்தனை)

❋





SISIL

உத்தரவு பெற்ற **சிங்கர்** விற்பனையாளர்

சகல விதமான மின் விசிறிகள், காஸ்குக்கர்கள்,
**சிசில், சிங்கர்** குளிர்சாதனப் பெட்டிகள், **சிங்கர்**
தையல் இயந்திரங்கள் அதன் உதிரிப்பாககங்கள், துணி
துவைக்கும் இயந்திரம் இவை அனைத்தையும்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

# ஊஷா ஏஜென்சி

**62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.** (சி.1560) **T.P. 222 6982**

# தற்பொழுது
## யாழ்ப்பாணத்தில்!
# SONY
## SIEDLES

உலகப் பிரசித்தி பெற்ற சோனி அய்வா தயாரிப்புகளை வழங்குகிறது

**SONY** **aiwa**



21" KV HA21P50

மேலும் இதைவிட உங்களுக்குக் கிடைக்கக்கூடியது

PG - 21"
PG - 14"



7000W மேலும் இதைவிட உங்களுக்குக் கிடைக்கக்கூடியது MHC RV 8

**MHC RV - 2, RV - 5, RV - 8 & RV - 50**
DVD PLAYER
Walkman, Radio Cassettes &
Car stereo, Micro Recorders.



T.V.C2121

மேலும் இதைவிட உங்களுக்குக் கிடைக்கக்கூடியது

TVC 14 22
HIFI
RV - 15, RV - 25, RV - 75

**SIEDLES**
**No. 1J, Stanley Road,**
**Jaffna.**
**T.P.021 222 6744**

சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

*"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சோனியை வீட்டிற்குக் கொண்டு செல்லவேண்டாம்"*

நமது ஈழநாடு ஓராண்டு பூர்த்தி செய்வதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், நமது ஈழநாடு பத்திரிகை மேன்மேலும் வளர, நமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினர்**

(சி.1547)

'நமது ஈழநாடு' ஓராண்டு பூர்த்தி செய்வதையிட்டு பருத்தித்துறை கலைஞர் வட்டம் மனதார வாழ்த்துகின்றது.

(சி.1549)

**குணம் குளிர்களி அகம்** (கிறீம் ஹவுஸ்)

நீங்கள் சுவைத்து மகிழ்ந்திட – சுவையான ஐஸ்கிறீம் வகைகள், மிக்ஸ் புறூட், ஐஸ்சொக், ஐஸ்பழம், சர்பத், கிறீம் சர்பத், குளிர்பானங்கள், கேக் வகைகள், சிற்றுண்டி வகைகள், பிஸ்கற் வகைகள் கண்டொஸ் வகைகள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**குணம் குளிர்களி அகம்**

பிரதான வீதி, பருத்தித்துறை

உரிமையாளர்: A.P.தேவதிரவியம்,
T.P. 021 - 2263325

கிளை: 49, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(சி.1546)

முதலாம் ஆண்டை நிறைவுசெய்யும் நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் எந்த நிகழ்ச்சிகளையும், புதுப்பொலிவுடன் நவீன டிஜிற்றல் வீடியோ, கமராக்கள் மூலம் துல்லியமான முறையில் படம் பிடிக்கவும் கணினி மூல படத்தொகுப்பு கறுப்பு, வெள்ளை படப்பிடிப்பு, அல்பம் தயாரித்தல் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு வசதிகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**சுதா வீடியோ இன் ஸ்ருடியோ**

உரிமையாளர்:-
த.சுதாகர்
வதிரி வீதி,
உடுப்பிட்டி.

T.P. : 021 - 226 - 3707
MOBILE : 0777 - 568530.

(சி.1548)

**முதலாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது ஈழநாட்டுக்கு எமது மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்**

உலகெங்குமிருந்து ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற இலகுவான வழி

**வெஸ்டன் யூனியன் மணி (Money) டிரான்ஸ்பயர்**

**இப்பொழுது வடமராட்சி மக்களின் நன்மை கருதி நெல்லியடியில் செயற்படுகிறது.**

**புதிய அம்பிகா மல்ரி சென்ரர்**

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
T.P : 021 2263139 Fax : 021 2263571. E.Mail:- Loshan @ SLT NET. LK

(சி.1544)

MOIL

**விசேஷம்**

நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

**சுத்தமான நல்லெண்ணெய்**

தரமான எள்ளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்றது. (சி.1541)

A PRODUCT OF MULTII - OIL INDUSTRIES LIMITED INUVIL Sri lanka

**ஆட்டோ சேவை**

குறைவான செலவில் நிறைவான சேவை

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

பா.பாஸ்கரன்
யூனியனுக்கருகாமையில்,
இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

(சி.1545)

# Yarl Beach Inn

**யாழ் பீச் இன்**

(Sea food Restaurant)

No.8 Old Park Road, Jaffna Tel:- 021 - 222 5490.

- குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்.
- கார் தரிப்பிட வசதிகள்.
- மாநாட்டு மண்டபம்.
- இணைக்கப்பட்ட குளியலறை.
- கீழைத்தேய, மேலைத்தேய உணவுகள்.
- உல்லாசப் பயணிகளுக்கு, அனுபவம் வாய்ந்தோரின் சேவை.

(இலங்கை உல்லாசப் பயணிகள் சபையின் அங்கீகாரம் பெற்றது)

நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துகள்

(சி.1554)




உரிமையாளர்
S.சிலுவைராசா.

## சிறுகதை

# கருகல்

**தாட்சாயணி**



மேகத்திரள் ஒன்று கறுப்பாய் சுருண்டு சுருண்டு அருகில் வருகிறது. முகத்தை முட்டுகிறாற்போல் எட்டித் தொடுகையில்,மெது மெதுவென்றல்லவா இருக்க வேண்டும்.

அப்படி இல்லை.

வலியென்றால் வலி.

இரும்புக் கட்டையால் ஓங்கி அடித்த மாதிரி....

இருட்டடி .. இதுதான் இருட்டடியோ...? மயக்கத்துள் முனகினார்.

இன்னும் விண்விண்ணென்று மண்டைக்குள் குடைந்து, உட்கவிழ்ந்து கொண்டிருக்கும் வலி ....

இது எப்படி நேர்ந்தது .....?

காலப் பிரக்ஞை தவறிப் போயிற்றோ...?

எப்போதோ போய்க்கொண்டிருந்த நெடு வழியில் ஒரு சடுதியான அறை.....

லட்சுமி எங்கே...?

எங்கே போய்விட்டாள் இப்போது?

அருகிலிருப்பாளோ....? விழிகளைத் திறக்க முடியவில்லை.

ஓசைகளற்றுப்போய், செவிகளும் உணர்ச்சிகளற்றுப் போயின. இருந்தாலும் உள்ளுக்குள் சத்தங்களும், காட்சிகளும் குழப்பியடித்துக் கொண்டு பரவுகின்றன. ஓய்ந்துபோன உயிர்த்துணுக்கின் விளிம்பு வரையிலும்....

விண்.. விண் மண்டையைப் பிளக்கின்ற இந்த வலி அஜந்தாவிடமிருந்து வந்து தொற்றிக் கொண்டதா ....? அஜந்தா இப்போது எங்கிருப்பாள்...? அவளிடம் காட்ட முடியாத கோபத்தையும், வேகத்தையும், பாவம் லட்சுமியிடம் தீர்த்துக் கட்டி......

அஜந்தா அப்போதிலிருந்தே ஒன்றாய்த்தான் படித்தாள். கவிதைகள் எழுதுவாள். கட்டுரைகளும் கூட, அதனாலான ஈர்ப்பே இவர்களிடையே நட்பைத் தோற்றுவிக்கவும், அதனை வளர்க்கவும், அதிகமாய்த் துணையிருந்தது.

அவர்களிடமிருந்து வெளிக்கிளம்பிய கருத்துக்கள், அந்த நாள்களில் அவளைச் சுற்றி ஒரு ஒளிவட்டத்தை ஏற்படுத்தின. மற்ற ஆண்களெல்லாம் அந்த ஒளி வட்டத்தினுள் நுழைய அச்சப்பட்டுக் கொண்டிருந்தபோது, சுயாதீனமாய் அந்த ஒளி வட்டத்தினுள் நுழைந்து, தனக்கான கௌரவத்தை ஒருபடி அதிகமாக்கிக் கொண்டார் அவர். இவரிடமும் எழுத்துப் பற்றிய ஆர்வமும், ஆவலும் இருக்கவே செய்தன. எனினும், அவளுடையதைப் போல் விகசிக்கவில்லை ஒருபோதும். ஆரம்ப காலத்தில் அவளுடைய எழுத்துக்கள் பெரும்பாலும் அவள் வயதுக்கேற்றதான வகையில் காதல் பற்றியதாகவே இருந்தது. எனினும், காலங்களின் முதிர்வில் அவள் சமூகப்பார்வையும், பெண்ணீயச் சிந்தனைகளும் கொண்ட கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கியிருந்தாள்.

இவர் காதலிக்கத் தொடங்கியிருந்த நேரம், காதலின் போதை எதையும் முற்றிலுமாய் மறக்க வைத்திருந்த நேரம், அந்நேரத்தில் தாம், தம் வயதினர் மத்தியில் பேசப்படுகின்றவர்களாய் இருக்கின்றோம் என்பதே பெருமை தரும் விடயமாக்கப்பட்டது. இருவருமாய் சந்தித்துக் கொண்ட வாகையடி நிழலும், ஐஸ்கிறீம் கடைகளுமே காதல் என ஆயிற்று. சந்தோஷத்தில் ஊறியெழுந்த காலம். அப்போது பொற்காலம் என்றே தோன்றிற்று. ஆனால், எல்லாம் முடிந்துபோன பிறிதொரு கால எல்லையில் அஜந்தா இப்படியொரு கவிதை எழுதியிருந்தாள்.

"கைகோர்த்துத் திரிந்தும்,
கதைகதையாய் அளந்ததும்,
ஐஸ்கிறீம் குடித்ததும்
மாத்திரமே காதலெனில் ....
எனக்குக் காதலில் தோல்வி தான்
எனினும் நான்
வாழ்க்கையை வென்றிருக்கிறேன்!"

இந்தக் கவிதை எத்தனை நாளாய் அவர் நெஞ்சைக் குற்றியெடுத்தது. ரணமாய் வலியூட்டியது. அதன் வேதனையில் இரவில் லட்சுமியைப் பாடாய்ப்படுத்தி, ஒட்டுமொத்தப் பெண்ணினத்தையே பழிவாங்குவதாயெண்ணி..

அஜந்தா எந்த மூலையிலிருந்து சிரித்துக் கொண்டிருந்தாளோ? எப்படி அவளுக்கும், அவருக்குமான பிரச்சினை முளைவிடத் தொடங்கியது. அது ஒரு புகைமூட்டாய் எழுகிறது நெஞ்சுக்குள். இவள் எழுதிய எழுத்துக்களை, அவர் நண்பர்கள் ரசித்தார்கள். இவருக்கு முன்பாகவே அவளைப் புகழ்ந்தார்கள். அந்நேரம் தன்னை வெறுமையாய் உணர்ந்த அவருள் காழ்ப்புணர்வு மெது மெதுவாய்க் குடியேறியதே...! கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளூறிய புகையாய்த் தொடர்ந்த எண்ணங்கள், காதலையே மூடி மறைத்தனவோ...?

கல்யாணப் பேச்சுக்கள் தொடங்கியிருந்தன. இரண்டு வீடுகளிலும் சம்மதங்கள் பெறப பட்டுவிட்டன. இனி என்ன...? யார் தடை சொல்லமுடியும் என நிம்மதியுறுகையில், அவர்களுக்கிடையே அந்த முரண்பாடு வெடித்தது.

அது அவருக்கு மிக நன்றாய் ஞாபகமிருக்கிறது. அன்று அவர் வரவில்லை. காத்திருந்து, காத்திருந்து சலித்துப்போன மனதோடு வெறுத்துப்போய்ப் புறப்பட்டபோதுதான், அஜந்தாவின் தம்பி அரக்கப்பரக்க ஓடி வந்தான். ஒரு நேர்காணலுக்காக, பத்திரிகை நிருபர்கள் வீட்டுக்கு வந்திருப்பதாகவும், அதனால்தான் வரமுடியாதென்று அவள், தம்பியிடம் செய்தி சொல்லி விட்டிருந்தாள். அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது. காதலனைவிட, அந்தப் பத்திரிகைக்காரர்கள் அவளுக்கு முக்கியமாய்ப் போய்விட்டார்களா...? உள்ளுக்குள் பொத்தி வைத்த கோபம் வெடிப்பதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

மறுநாள், வேலியோர வேம்பில் ஒற்றைக் குயில் ஒன்று சோகம் ததும்பக் கூவிக் கொண்டிருந்தது. காகமொன்று குயிற்குஞ்சுகளை விரட்டி விரட்டிக் கலைத்துக் கொண்டிருந்தது.

அஜந்தா வந்தாள் என்றுமில்லாத உற்சாகத்தோடு. அவள்- அவரிடம் சொல்வதற்கு எவ்வளவோ இருந்தன. மிகவும் சிறப்பாக அந்த நேர்காணல் அமைந்துவிட்டது பற்றி... அவரது துணை இருப்பதாலேயே, தன்னால் இந்த அளவுக்கு நன்கு பிரகாசிக்க முடிந்ததென்பது பற்றி.... தன்னால், இவர் துணையில் இன்னும் சிறப்பாக வளர முடியும் என்பது பற்றி... இன்னும் நிறையவே அவள் சொல்வதற்கு இருந்தன.

அவர்- அவளைக் கண்டதும் பேசவில்லை, முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டார். இது என்ன கோபம் இப்படி...?

அவள் - அவரது முகத்தைத் தன்புறமாய்த் திருப்பினாள்.

அவர் வெடுக்கென்று திரும்பினார்.

"என்ன இது..."செல்லம் கொஞ்சுகிறாற்போல, அவர் முன் வந்து நின்றாள்.

"அஜந்தா, நீ இனிமே எழுதவேண்டாம்...?"

"என்ன...?"

அவளுக்கு எதுவும் விளங்கவில்லைப் போல, மெதுவாய்த்தான் கேட்டாள்.

"நீ இனிமேல் எதுவும் எழுதவேண்டாம்..."

"ஏ....ன்....?"

அவளது கேள்வி உறுதியாயும், அழுத்தமாயும் அவர் முன் வந்து விழுந்தது. அவர் தடுமாறினார்.

"ஏ..ன்...ஏ...ன் எழுதக்கூடாது...?"

"கண்டவங்கள் எல்லோரும் வந்து ஆக்கினை குடுப்பாங்கள்..."

தான் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சறுக்கிக்கொண்டு போகிறோம் என்பது, அவருக்குப் புரிந்துதானிருந்தது அஜந்தா, அவரை ஊடுருவிப் பார்த்தாள்.

"நீங்கள்... நீங்களுமோ இப்படிச் சொல்லுறீங்கள்" என்கிற மாதிரி, அவள் கண்களில் காதல் கரைந்துபோக ஆரம்பித்தது. அந்தக் கணங்களின் பிறகுதான்.

"எனக்கு, நீ எழுதுறது பிடிக்கேல்லை..."

"எனக்கு எழுதாமல் இருக்கேலாதே..."

"அப்ப என்னை மறந்திடும்..."

எவ்வளவு சுலபமாக அப்போது அவரால் சொல்ல முடிந்தது.

"எ...ன்...ன...?"

அதிர்ந்துபோன அவள் அப்படியே அசைவற்று நின்றாள். அவர் எதுவும் பேசாமல் திரும்பிக்கொண்டார். அஜந்தா அவரைக் கெஞ்சுதலாய்ப் பார்த்தாள்.

"எனக்கு ரெண்டு கண். ஒண்டு நீங்கள் மற்றது எழுத்து... ரெண்டிலை ஒண்டையும் இழக்க நான் விரும்பேல்லை. உங்களை எவ்வளவுக்கு நம்பியிருக்கிறனோ, அந்தளவுக்கு என்ரை எழுத்தையும் நம்பியிருக்கிறன். எனக்கு ரெண்டும் வேணும்..."

எவ்வளவு உறுதியாய் இருந்தாள் அவள்,

"ரெண்டு ஒண்டு சேராது அஜந்தா. ரெண்டிலை ஒண்டை நீர் மறக்கத்தான் வேணும். நீர் என்னைக் காதலிக்கிறது உண்மையாய் இருந்தால், எழுதுறதை விடத்தான் வேணும்..."

இவளுக்குக் கோபம் வந்தது. கடைசி கடைசியாய் அவரது கண்களை ஊடுருவிப் பார்த்தாள்.

"உங்களுக்கு என்னிலை காதல் இருந்தா, உப்பிடிச் சொல்ல மாட்டீங்கள். எனக்கு உங்களிலை காதல் இருக்கோ எண்ணுறதுதான் இப்ப கேள்வியாய்ப் போச்சுது என்ன...?

அவர் - அவளது விழிகளை எதிர்கொள்ளமுடியாமல் தள்ளாடினார்.

"இப்ப தெரிஞ்சு கொள்ளுங்கோ. எனக்கு உங்களோட வாழுற வாழ்க்கை வேண்டாம். நான் எழுத்தோடையே வாழுவன்..."

அவரை உதறிக்கொண்டு அப்போது போனவள்தான். அதற்குப்பிறகு, அவளது புகழ் மளமளவென்று உச்சிக்கு ஏறிற்று. அவளது வாழ்வின் உயர்வுகளும்கூட. இவரால் அந்தப் புறக்கணிப்புத் தாளமுடியவில்லை. எவ்வளவு இலகுவாக அவள் அந்தப்பிரிவை ஏற்றுக்கொண்டு விட்டாள் என்பதைத்தான் அவரால் தாங்கமுடியவில்லை. தனது பிரிவு அவளுக்கு வேதனையையும், வருத்தத்தையும் கொடுக்க, அவள் திரும்பி வந்து காலில் விழவேண்டும் என்று எதிர்பார்த்திருந்தாரோ...? அல்லது பிரிந்து போனாலும் தன்னை எண்ணி எண்ணி அவள் ஏங்க வேண்டும் என்று நினைத்தாரோ. இவை எதுவும் நிகழாத பட்சத்தில், அவரால் நிம்மதியாய் இருக்கமுடியாமல் போனதோ!

எப்படியோ, அவர் - அஜந்தாவை விட்டு விலகிய அந்த இடைவெளியைப் பயன்படுத்தி, அவருக்கு லட்சுமியைப் பேசி முடித்தார்கள். லட்சுமி, குனிந்த தலை நிமிராதவளாய், பிற ஆண்களை ஏறெடுத்தும் பாராதவளாய், பெரிய படிப்பாளியாய் இராததில் இவருக்கு ஏக திருப்தி. அஜந்தாவைப் பழிவாங்குவதாயெண்ணி, லட்சுமியுடனான வாழ்வுக்குச் சம்மதம் சொல்லிவிட்டார். அவளுடனான வாழ்வும் இனிமையாய்த்தான் போய்க் கொண்டிருந்தது.

இடையில் அஜந்தாவின் கவிதைகள் வீறு கொண்டதாய், பெண்ணினம் நோக்கிய பரிவோடு, மிகவும் புரட்சிகரமாக வெளிவரத் தொடங்கியிருந்தன. அந்தக் கவிதைகளை அவரது நண்பர்கள் புகழ்ந்து தள்ளுகையில், தனக்குரிய ஒன்றை இழந்துவிட்டதுபோலான உணர்வு தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட நண்பர்களிடமிருந்துதான், அவளது திருமணம் பற்றிய செய்தியையும் அறியமுடிந்தது. அவளது வாசகர்களில் ஒருவனே விரும்பி அவளை மணக்கப் போவதாய்ச் சொன்னார்கள். இவருக்குச் சகிக்கமுடியாமற்போனது. அவளது முகவரியைத் தேடியலைந்து, அவனது பெயருக்கு ஒரு மொட்டைக் கடிதம்கூடப் போட்டுப் பார்த்தார்.

அந்தக் கடிதம் கிணற்றில் போட்ட கல்லென அமுங்கிப்போனது. அப்படி ஒன்று வந்ததாகவே ஒரு சிறுசலனம் கூட இல்லை. அஜந்தா, அவருக்கும் ஒரு அழைப்பிதழை அனுப்பியிருந்தாள். இவருக்குப் போகவே பிடிக்கவில்லை. பேசாமலே இருந்துவிட்டார். எனினும், அவளது வாழ்வின் வளம் பற்றிக் கேள்வியுறுகையில் மனம் பற்றியெரியும். அவன் - அவளைப் பூவாய்த் தாங்குகிறான் போலான விமர்சனங்களையும், இவரைவிட, அவன் - அவளுக்கு எவ்வளவு பொருத்தம் என்பது போன்ற அரட்டைகளையும் கேட்கையில், இவருக்கு உள்ள நிம்மதியும் பறிபோகும்.

பாவி... என் வாழ்வைப் பறித்துப் போனாளே என, அவளைச் சபித்துக் கொள்வார். இப்படி நேர்ந்தற்கான முழுப்பொறுப்பும் தன்னையே சார்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள மறுத்து, மதுபானச்சாலைகள் அவரது பணத்தையும், துன்பங்களையும் சேர்த்து விழுங்கின. லட்சுமியின் வாழ்க்கை மட்டும் அவலமாகிப் போனது.

அஜந்தாவிடமிருந்து இப்போது அற்புதமான கவிதைகள் பீறிடத் தொடங்கியிருந்தன. ஆண் வர்க்கத்துக்கு எதிராக அவள் நீட்டுகிற போனாமுனை, தன் நெஞ்சையே சுட்டிநிற்பதுபோல் அவரால் உணர முடிந்தது.

வெளியே சொல்லமுடியாத ஆத்திரங்களைத் தீர்த்துக்கொள்ளும் வடிகாலாய் அவர் லட்சுமியைப் பயன்படுத்திக் கொண்டார். வீட்டிலேயே அடங்கிக்கிடந்த லட்சுமிக்கும் மனதில் துயரம் பூத்தது. வருஷங்கள் ஆக, ஆக இன்னும் மழலை பூக்காத தன் வயிற்றைப் பார்த்துப் பார்த்து அவளுள் ஏக்கம் பூத்தது. அஜந்தா அருமையான இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டிருந்தாள்.

லட்சுமியின் துயரம் தாங்கமுடியாதது. அதைத் தாங்க வேண்டுமெனின், சிறிதேனும் அன்பு சொரிய, அவளிடத்தே உறவுகொள்ளும் சின்னஞ்சிறிய மழலைகள் வேண்டும் எதுவுமே இல்லாத வாழ்வு அவளை நம்பிக்கை வறட்சியுள் தள்ளியது. அதுவே அவளை மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டவும் வைத்தது. கணவன் தாங்கினான் எனின் குழந்தையில்லாக் குறையையும் தாங்கலாம். குழந்தைகள் அன்பு சொரிந்து கொண்டிருப்பின் கணவனின் வெறுப்பையும் சகிக்கலாம். இது எதுவுமில்லாமல், எப்படி வாழ்வதென்ற விரக்திதான் அவளைத் தீயுள் பற்றியெரியத் தூண்டிற்றோ....?

அஜந்தா வந்திருந்தாள், லட்சமியின் இறப்பு வீட்டுக்கு. போர்த்தப்பட்டிருந்த கருகிய உடலை ஒரு பரிவோடு பார்த்தாள். அந்தக் கருகலெல்லாம் இவரது ஆணவங்களாய் இருந்திருக்குமோ? அஜந்தா இவரை ஏளனமாய்ப் பார்த்தாளா? கோபமாய்ப் பார்த்தாளா...? இவரால், அவளை நிமிாந்து பார்க்கத் துணிவில்லை. எல்லாம் முடிந்து சுடுகாட்டுக்குச் சென்றாயிற்று. லட்சுமி என்ற அந்தப் பா[illegible]ப்பட்ட ஜீவனை மீண்டும் அக்கினியில் கரைத்து வீடு வந்து முழுகி ஒரு அலையாயப் பிரவகித்த துயரப்பந்திடை அலைப்புற்றுப் படுத்திருக்கையில் கண்களுள் இருட்டுப் படர்ந்தது.

மேகத்திரள் ஒன்று கறுப்பாய்ச் சுருண்டு சுருண்டு அருகில் வருவதாய்...

லட்சுமி... லட்சுமி... அவள்தானா அது...?

இல்லை, அவள் மெதுவாய்த்தான் தொடுவாள்.

இது.... இரும்புக்கட்டையால் ஓங்கி அடிக்கிறமாதிரி மண்டைக்குள் சுழன்று சுழன்று...

அஜந்தா... அவள்தான் அடிக்கிறாளா....?

இந்தச் செத்த சவத்தின் மீது....?

✷



**BALAKRISHNA**
**JEWEL HOUSE**
பாலகிருஷ்ண ஆபரண மாளிகை
616, Point Pedro Road, NALLUR.
(சி.1506)

இரண்டாவது அகவையில் காலடி வைக்கும்
நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்




**சர்மிளா போட்டோ**
710, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி.1503)

நமது ஈழநாட்டுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்
**ஸ்ரீ தாமோதர விலாஸ்**
(சி.1520) 401, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இரண்டாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும்
நமது ஈழநாட்டிற்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்
LG Digitally yours
**Enjoy A Powerful And Easy**
**HOME**
**THEATRE!!**






JAFFNA ELECTRICALS
Authorised Dealer Fot
**Abans**
141, Power Hause Road,
Jaffna.
Tel.021 222 5766.
(சி.1521)

**அருள் கொமினிகேசன்**






- வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்கள் ஒருநிமிடத்திற்கு 08/-.
- ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு நிமிட வெளிநாட்டு அழைப்பு இலவசம்.
- தொலைத் தொடர்பு நிலையங்களுக்கு என விசேடமாக வடிவமைக்கப்பட்ட PCO Confrence Unit மூலம் இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள் (Connecting Calls).
- தொலைபேசி வசதி உள்ளவர்கள் - வீடுகளில் இருந்தபடியே வெளிநாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ளும் வசதி.
- இணைப்புத் தொலைபேசி அழைப்புக்களை (Connecting Calls) பெறுபவர்களுக்கு மாதாந்தம் பெறப்பட்ட அழைப்புகளுக்கான விபரப்பட்டியல் வசதி.
- மற்றும் ஈமெயில், பக்ஸ், போட்டோ கொப்பி சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

**அருள் கொமினிகேசன்**
இல. 1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.




**T.P. No : 3536**
(சி.1496)

முதலாவது அகவையைப் பூர்த்திசெய்யும்
நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**
நோய் வருமுன் காப்போம்.
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்.
- 40 வயதுக்கு மேற்பட்ட நோயுள்ள, நோயற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய
MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில் வயரங்களுக்கு நேரில்.
போக்குவரத்து வசதி கருதி
**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி.1511)

நயம், நாணயம், உத்தரவாதம்




"நமது ஈழநாடு" நாட்டு
மக்களுக்கு ஆற்றும்
நற்பணி தொடர
வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் தங்கத்தில் காலத்திற்கும்,
கருத்திற்கும் உகந்த
நவீன டிசைன்களில் தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து
கொடுக்கப்படும்.
**சிறீ கருமாரி நகைலகம்**
177 - D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக) தொலைபேசி : 222 5385.
(சி.1495)

நமது ஈழநாடு நாட்டு மக்களுக்கு ஆற்றும்
நற்பணி தொடர என்றும் நல்வாழ்த்துக்கள்
கணினி எழுத்துக்களாலான இறப்பர்
முத்திரை, புத்தகக் கவர்களுக்கான
லமினேற்றிங், நினைவு மலர்களுக்கான
வர்ணப் படங்கள் என்பவற்றைப்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய இடம்



**பிள்ளையார் அச்சகம்**
676, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சி.1510)
தொலைபேசி: 222 6722



இரண்டாம் ஆண்டில் அடி எடுத்துவைக்கும் நமது
ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்



உங்கள் இல்லங்களை
மாளிகையாக்கும் நவநாகரிக
தளபாடங்கள் மற்றும்
பாவனைப் பொருட்களுக்கு...
**மற்றா பேணிச்சர்**
**MATARA FURNITURE**
233, 395, காங்கேசன் சாலை,
யாழ்ப்பாணம்.




கிளை:
**நியூ மற்றா பேணிச்சர்**
**NEW MATARA FURNITURE**
(சி.1504) 458, காங்கேசன் சாலை, யாழ்ப்பாணம்.

## சிறுகதை




## யோ.கர்ணன்.

சடுதியாய் நினைவுகளில் ஏதோ உறுத்த, திடுக்கிட்டு விழித்தேன். தூக்கக் கலக்கத்தை மீறிய, அவசர உணர்ச்சி பரவியது. கடிகாரத்தைப் பார்த்தேன் 3.15. எரிச்சல்தான் வந்தது. தூக்கக் கலக்கம்... எரிச்சல் இரண்டும் இணைந்த உணர்ச்சி அருவருப்பாயிருந்தது.

இப்பொழுதே மூன்றே காலாகிவிட்டது. மூன்றரைக்கு வகுப்பு. எனது சாதாரண வேகத்தில் போனால்கூட, பதினைந்து நிமிடப் பயணம். இனி வெளிக்கிட்டுப் போவதென்றால்...?, இன்றைய வகுப்பிற்குப் போகாமல் விடலாம் போலவும் தோன்றியது.

சீ... போகாமல் விடுவதா? எவ்வளவு பெரிய முட்டாள்த்தனம். இப்படியொரு எண்ணம் உதித்ததே, அபத்தமானதாகத் தோன்றியது. இரண்டு நாட்களாகக் கண்ணனையும் காணவில்லை. அதுவே தலையை வெடிக்க வைத்துவிடும் போலிருக்கின்றது. இந்த இலட்சணத்தில், இன்றைக்கும் போகாமல் விடுவதென்றால் எப்படி? இதனைவிட, 'மங்கி'யின் தொல்லை வேறு. என்ன ஆச்சரியப்படுகிறீர்களா? அவர்தான், நமது கல்வி நிலைய நிர்வாகி. ரங்கு எனச் சுருக்கமாக அழைக்கப்படும் குலசிங்கம் ரங்கநாதன் ஆகிய, அம்மனிதருக்கு - மாணவர்கள் சூட்டிய பட்டம் "குரங்கு", அதையே கொஞ்சம் நாகரிகம் கருதி, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அழைககிறார்கள், உயர்தர வகுப்பைச் சேந்தவர்கள் பெண்கள் என்ற சலுகைகூடக் காட்டாமல், ஒருநாள் போகாவிடினும் காரணகாரியங்களை ஆராய்ந்து கொண்டிருப்பார். போன பிறவியில் உயிரியல் விஞ்ஞானிபோலும்.

இனித் தாமதிக்கக்கூடாது என, அவசரமாக எழுந்து கிணற்றடிக்கு ஓடினேன். அவசர அவசரமாக முகம் கழுவிவிட்டு, ஓடி வந்தேன். பதினைந்திற்கும், இருபதிற்கும் இடையில் நிமிடம் நின்றது. உடைமாற்றி, கண்ணாடியைக் கூடப்பார்க்காது, தலையைச் சீவிப் பின்னிவிடடு, கொஞ்சம் பவுடரைத் தேய்த்துக் கொணடு வெளியே ஓடிவந்தேன். வழக்கத்துக்கு மீறிய வேகத்தில், சைக்கிளை மிதித்தேன், சிரமமாயிருந்தது. வாழ்க்கையில் எதுதான் சிரமமில்லாதது? அனுபவித்துத்தானாக வேண்டும், மிதித்தேன்.

பரபரப்பு.. வேகம் இவற்றால் வியர்வை வடியத் தொடங்கிவிட்டது. வாயிலில் நின்று கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு உள்ளே போனேன். சைக்கிளை நிறுத்திவிட்டு ஓடுவதற்கும், நடப்பதற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் சென்றேன்.

நான் போகவும், எனக்கு முன்னால் ஆசிரியர் போகவும் சரியாயிருந்தது. 'அப்பாடா' என்றிருந்தது. இல்லாவிடில், வகுப்பின் இடையில் புகுந்து, "எக்ஸ்கியூஸ் மீ" சொல்ல .. அனைவரும் என்னைப்பார்க்க .. ஆசிரியர் ஏதாவது நொட்டை சொல்ல.. பொடியன்கள் பெரிதாகச் சிரிக்க... இது நிச்சயமான நிகழ்வுத் தொடர், தப்பித்துக் கொண்டேன்.

ஆசிரியருக்கு வணக்கம் சொல்ல, அனைவரும் எழுந்த நேரத்தில், நானும் நுழைந்துவிட்டேன். என்னிடத்துக்குப் போனதும், வினோதினி சற்றுத் தள்ளி இடம்விட்டாள். இப்பொழுதுதான், ஒரு நிம்மதி படர்ந்தது. முதுகில் யாரோ கிள்ளினார்கள். திரும்பிப் பார்த்தேன் - சுகுணா. "என்னப்பா லேட்..." முகத்தைச் சுருக்கி, இரகசியமாகக் கேட்டாள்.

"நித்திரையாய்ப் போயிட்டன்..."

"ஆ..ஆ..நல்ல கனவுபோல .. என்ன சொன்னவர் .." முகத்தை விகாரமாக்கி, கண்களைச் சுருக்கிக் கேட்டாள். நொடிக்குள் துளிர்த்த எரிச்சல் வற்றி... பரவசம் படர்வது போலொரு உணர்வு. சிரித்துவிட்டு, திரும்பி உட்கார்ந்து கொண்டேன். வினோதினி என் தொடையில் கிள்ளி, முகத்தை நெருக்கமாகக் கொண்டு வந்தாள். "என்னடி ஒரு மாதிரியாயிருக்கிறாய்..."

" ஒரு மாதிரியெண்டு.. நல்லாத் தானே இருக்கிறன்..."

" முகம் நல்லாயில்லையடி நித்திரையால எழும்பி வாறியோ.." - அவள் சொல்லி முடிக்கவில்லை, ஆசிரியர் எங்களைப் பார்த்தார். பேசாமல் இருந்துவிட்டோம். எனக்குள் சிறு அதிர்வு. என் முகம் நல்லாயில்லையா? அப்படியாயின், எந்த முகத்துடன் கண்ணனைக் காணப் போவேன்? ஆசிரியர் என்ன பாடம் நடத்தினார் என்பது தெரியவில்லை. அதனைக் கிரகிக்கும் நிலையிலும் நானிருக்கவில்லை. இடையில், கண்ணனை எழுப்பி ஏதோ கேள்வி கேட்டார். வினோதினி கிள்ளிய பின்புதான், அதுகூடத் தெரிந்தது. நான் பார்க்கவேண்டும் என்பதாலோ என்னவோ, அதிக செயற்கைத்தனமான உடலசைவுகளுடன் விடையளித்து விட்டு இருந்தான். நான் பார்க்கவேயில்லை. எந்த முகத்துடன் பார்ப்பது?

வகுப்பு முடிந்ததும், எழுந்து வெளியே வந்துவிட்டேன். கண்ணணைப் பாக்காததும் சிரிக்காததும் உறுத்தலாயிருந்தாலும், எதுவுமே செய்யமுடியாத நிலையில் நானிருந்தேன்.

வினோதினியும், நானும் வரும்போது, பின்னால் வந்த கண்ணன் விரைவாக எனக்கொரு கடிதத்தைத் தந்து விட்டுப்போனார். அதிர்ச்சியாகத்தானிருந்தது. பொதுஇடம் யாரும் கண்டுவிட்டால்? கடிதத்தை வாங்கியபோதும், நிமிர்ந்து பார்க்கவில்லை.

மனவலி ஆற்றாமல், அழுதழுது தலையணை நனைந்தேவிட்டது. அதனை நினைக்க நினைக்கப் புதிது புதிதாக அழுகை உற்பத்தியாகிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுதும் உள்ளுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு, கண்ணனின் கடிதம் மனதைப் பிறாண்டிப் பிறாண்டி வலியைப் பெருக்க.... மனம் தாங்காமல் அழுதுகொண்டிருந்தேன்.

என் மனநகர் மீது,. எந்தப் பின்லேடன் விமானம் மோதித் தகர்த்தான்? நேற்றுப் பெரிய தொரு முட்டாள்த்தனமான காரியம் ஒன்று செய்துவிட்டதுபோலத் தெரிகின்றது. அலங்காரம் செய்யாமல் போயிருக்கக்கூடாது.

என் கண்ணனிற்கு அது பிடிக்கவில்லை. இல்லையேல், உடனடியாகவே கடிதம் எழுதித் தருவாரா? அந்த வார்த்தைகள்... நினைகக நினைக்க மனதை ஏதோ செய்கின்றன.

அவர், என்னைச் செல்லமாக 'பிரதி' என்றுதான் கூப்பிடுவார். இன்றுவரை, பிரதீபா என்ற என் பெயரைச் செல்லமாக் அப்படிக் கூப்பிட எவருக்கும் தெரியவில்லைத்தானே!

பிரதி என விழித்து, அவர் எழுதியதெல்லாம் என் முகம் பற்றியதே!

"ஏன் உம்மட முகம் ஒரு மாதிரியிருந்தது. உமக்கு முகத்தில் அக்கறையில்லை. உப்பிடியே திரிஞ்சால், பாக்கிறவை சிரிக்கமாட்டினமோ? வீட்டில் இருந்து வெளிக்கிடும்போது, கண்ணாடியில் முகம் பாக்கயில்லையோ? எனக்கெண்டால் அரியண்டமாகக் கிடந்தது. என் பிரெண்செல்லாம் சிரிக்கிறாங்கள். விசு, தான் லவ் பண்ணும் பாமாவைக் காட்டிப் பெருமைப்பட்டான். பாமா எங்கோ அழகு நிலையம் போறதாமே? நீங்கள் போனால் என்ன? எதுவென்றாலும், இனி அப்படி வர வேண்டாம்." இதுதான் கண்ணனின் கடிதத்திலிருந்த பிரதான பகுதி. மற்றப்படி எல்லோரையும் போலவே, யாருடையதோ கவிதையொன்று எழுதியிருந்தார். வேறு சில வசனங்களும்தான்.

என்மீதே எரிச்சல் பிறந்தது. பகலில் என்ன நித்திரை வேண்டிக் கிடக்கின்றது? பாழாய்ப் போன நித்திரை . இதனால்தானே, இத்தனை வினையும். நித்திரை மீதும் எரிச்சல் வந்தது.

சரி, இதையெல்லாம் ஈடுசெய்யுமாப்போல, இன்று போக வேண்டுமென முடிவு செய்து கொண்டேன். மனதுக்குள்ளேயே தலையலங்காரம்... பிற அலங்காரங்கள் குறித்துக் கற்பனை செய்து கொண்டேன்.

இன்று இரண்டே முக்காலிற்கே, என்னைத் தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டேன். ஒன்றுக்குப் பல தடவைகள் சவர்க்காரமிட்டு, முகத்தை அழுத்தித் தேய்த்துக் கழுவிக்கொண்டேன். திருபதியேற்படும் வரையில், கழுவிக்கொண்டேன்.

உடை மாற்றிக்கொண்டேன். இன்றைய உடையிலும் ஒரு வித்தியாசமுண்டு. ஊதா நிறச் சட்டையை அணிந்து கொண்டேன். இது கண்ணனிற்குப் பிடித்தமான உடை. முதலொரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆயினும், அதிகமாக அணிவதில்லை. எப்போதாவது அணிந்து, பரவசமூட்டுவேன். நாங்கள்- தங்களை இழுத்தடிப்புச் செய்துதான் இன்பமூட்டுவதாக, அவர்கள் சொல்லிக் கொள்ளும்போது, அப்படிச் செய்தால் என்னவாம்?

அடுத்ததாகச் செய்தவேலை, நிலைக்கண்ணாடியின் முன் ஒரு கதிரை போட்டு உட்கார்ந்துதான், தலைவாரினேன். பக்க உச்சிபிரித்து, இரட்டைப் பின்னலிடுவோமா? ஒற்றைப் பின்னலிடுவோமா? - நேற்றுக்கூடப் பின்னல்தானே இட்டேன்; இரட்டைப் பின்னலிடுவோம்.

அழுந்தவாரிய முடியிலிருந்து, முன் மயிர்க்கற்றைகள் சிலவற்றை இழுத்துவிட்டுக் கொண்டேன். வாயிலில் உருவமசைவது, கண்ணாடியில் தெரிந்தது, திரும்பிப்பார்த்தேன் பாட்டி.

" என்ன பிள்ளை.. சோடினை வலு கனதியாயிருக்குது.. சுயம்வரம்போல என்றபடி போனா, எரிச்சல்தான் வந்தது. என் அலங்காரம் - பாட்டிக்கு என்ன செய்கிறதாம்? பாட்டிகளுக்கு இவைகளெல்லாம் எங்கே புரியப் போகின்றது. அதனால், மௌனம் காத்தேன்.

பவுடர் பூசினேன். அதிகமாகிவிட்டது போலப்பட்டது. துடைத்துக் கொண்டேன். சிறிதளவு எடுத்துப் பூசினேன். இன்னும் சிறிது பூசலாம் போலப் படவே, இன்னும் கொஞ்சம் பூசினேன். இலேசாகக் கண்மையிட்டுக் கொண்டேன். கண்ணாடியில் பார்க்கத் திருப்தியாயிருந்தது. எழுந்து போய், சற்றுத் தள்ளி நின்று பார்த்தேன். மனதில் இலேசான கர்வம் பிறந்தது. என் வடிவில்த்தானே, வகுப்பில் முதல் மாணவனான கண்ணன் மயங்கினார்! என் முகமா வடிவில்லை? இன்று புரியும்!

எந்தப் பின்லேடனால், என் மனநகரை அழிகக முடியும்? முன்னையதிலும் அழகாக என் மனநகர் எழுந்தது. என் அழகு குறித்து, எனக்குப் பெருமை பிடிபடாமல் போயிற்று.

நேற்று வந்த கண்ணனின் கடிதத்தைப் படித்த பின்தான், உற்சாகம் பன்மடங்காகியது. அதிக சிரத்தையெடுத்து, என்னை அலங்கரித்துக் கொண்டது, அதிக பலனைத் தந்திருக்கின்றது. நேற்றுப் போனமாதிரித்தான், தினமும் வரவேண்டுமாம். இல்லையேல், கதைக்கமாட்டாராம் என, அன்புக் கட்டளையிட்டுள்ளார். நேற்றைய பாணியில்தான், இன்றும் அலங்காரம் செய்தேன். அதிக நேரத்தின் முன்னரே - முகம் கழுவி... தலைவாரி... பவுடர் இட்டு... வகுப்பிற்கு அரை மணித்தியாலம் உள்ளது. ஆறுதலாகப் போகலாம். மீண்டுமொரு முறை கண்ணாடியின் முன் நின்றேன். என் முகம் அழகாயிருந்தது. திருப்தியுடன் நகரும் பொழுது - கண்ணாடியிலிருந்து முகம் மறையும். கணத்தின் பல பத்தில் ஒன்றில் - சட்டென மனதுக்குள் மின்னல் வெட்டு - "எடி பைததியம் .. உன் முகம் எங்கே.." திடுக்கிட்டுவிட்டேன். என்ன இது? என்முகம் எங்கேயாம்- யாரிது? அவசரமாகக் கண்ணாடியின் முன் வந்தேன். ஆழமாக முகத்தைப் பார்த்தேன். "நான் இங்கேயிருக்கிறேன்.... என்முகம் இங்கேயிருக்கிறது.. "

"உது உன் முகமா?..... பைத்தியம்.... உன்னையே ஏன் ஏமாற்றுகிறாய் ..... " மனதுக்குள் மீண்டும் மின்னல்க் குரல்.

"இது என் முகம்தானே... வேறு யாருடையது " அதிர்ச்சியில் நாக்குழறியது.

"உது வேடம் அல்லவா... பவுடர், உதட்டுச் சாயம், கண்மை கொண்டு செய்த, முகமூடியல்லவா? ... முகமூடியே முகமாகிவிட்டதா பெண்ணே?"

மீண்டும் செப்ரெம்பர் 11. ஒன்றல்ல, இரண்டல்ல, பல நூறு விமானங்கள் மோதி வெடித்தன.

"என்ன... இது வேடமா? வேடமற்றதொரு முகம், எனக்குச் சாத்தியமா?"

" ஏன், உனக்கு உந்தச் சந்தேகம்.... உன்னை - நீ பிரதிபலித்தால், சாத்தியம் கவனத்திற்கொள். பிறரை - குறிப்பாக, கண்ணனைப் பிரதிபலித்தால் சாத்தியமில்லை. உன் முகத்துடன் நீ வாழப்போகிறாயா? வேடமிட்டு யாரையோ பிரதிபலிக்கப் போகிறாயா?"

நான் அதிர்ந்து போனேன். யார் உளளிருந்து குரல் தந்தது? என் முகத்தை, நான் இதுவரை காட்டவில்லையா? இது வேடமா?

பெரும் மனக்குழப்பம். சில நிமிடநேரம் தீவிரமாக யோசித்தேன். பின் முடிவுக்கு வந்தவளாகத் துவாயை எடுத்து, முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டேன். மிக இலேசாகப் பவுடர் இட்டுக் கொண்டேன்.

எதிர்பார்த்தது மாதிரியே இன்று கண்ணனிடமிருந்து, கடிதம் வந்தது. இன்று என்னை அலங்காரப் பதுமையாய் எதிர்பார்த்திருந்தவருக்கு அதிர்ச்சியாய் இருந்திருக்கும். பாவம்தான் கண்ணன். இருந்தாலும், அப்படி எதிர்பார்த்திருக்கக் கூடாதல்லவா?

கடித சாராம்சம் இதுதான்- "நீங்கள் ஏன், இன்று இப்படி வந்தீர்கள்? நான் சொன்னதை, ஏன் செய்யவில்லை? நேற்று வந்தது மாதிரியல்லவா வரச்சொன்னேன். எனக்கு இன்றைய உங்களின் தோற்றம் பிடிக்கவில்லை. இனி இப்படி வரவேண்டாம்.

முதன்முறையாகக் கண்ணனின் மேல் ஆத்திரம் வந்தது. இப்படி வந்தால் பிடிக்காதாம். இதுதானே என்முகம். இதைத்தானே, நான் காவவேண்டும்! இது பிடிக்கவில்லையென்றால், நான் பூசிய பவுடரையும், கண்மையையும் ... உதட்டுச்சாயத்தையுமா நேசித்தார்? எனக்குள் ஆற்றாமை பெருகியது. காதலித்த காலத்தில் முதன்முறையாகக் காதல் சஞ்சலமூட்டியது, உண்மைதானே. என் நினைப்பில் என்ன தப்பு?

படுக்கையில் போய் விழுந்தேன். குழம்பிய சிந்தையை ஒன்று கூட்டி யோசித்தேன். பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தேன். காகிதத்தையும், பேனாவையும் எடுத்தேன்.

அன்புள்ள கண்ணனிற்கு!

நேற்றைய உங்கள் கடிதம் கிடைத்தது. ஏன் அப்படி எழுதுனீகள்? உங்களுடைய கருத்துக்களுடன், என்னால் ஒத்துப்போக முடியாதுள்ளது.

நேற்றைய என்முகம் பிடிக்கவில்லையா? இதுதானே என் இயல்பான முகம். நீங்கள் - என் செயற்கை முகத்தையா நேசித்தீர்கள்? கொஞ்சம் பவுடர்... கண்மை... உதட்டுச்சாயம் இவைகள் தானே என் இயற்கை முகத்திற்கும், செயற்கை முகத்திற்குமான வேறுபாடு.

சிலநாள் முன்னர்வரை என் செயற்கை முகத்தையே, என்னுடைய முகமெனப் பிழையாக எண்ணியிருந்துவிட்டேன். இப்பொழுது தெளிவு பிறந்துவிட்டது. என் இயற்கை முகமே, எனக்கு வேண்டும். ஆதலால், இனித் தினமும் இயற்கை முகத்துடனே வருவேன். சிரமமாயிருப்பினும், என்னைப் புரிந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன். புரிந்துகொண்டால், நாளை பதில் போடவும்.

இவ்வண்ணம்
பிரதீபா

இப்போதுதான் ஆசுவாசமாயிருந்தது. பேனாவை மூடி வைத்துவிட்டு, ஆறுதலாகப் படுத்தேன். நாளைவரை வாழ்க்கைத்துணைத் தீர்மானிப்பைப் பின்னகர்த்தி வைத்துவிட்டு. ✸

உழைக்கும் போதே
எதிர்காலத்திற்காக சேமியுங்கள்



மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் Yes சேமிப்புக் கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்

**Yes சேமிப்புக் கணக்குப் பற்றி...**

**ஆரம்ப வைப்புத் தொகை**

Yes கணக்கை ஆரம்பிக்க ஆகக்குறைந்த, ஆரம்ப வைப்புத் தொகை ரூபா 2000/- சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பிள்ளைகளுக்கு 18 வயதானதும் Yes சேமிப்புக் கணக்காக மாற்றலாம்.

**கவர்ச்சிகரமான வட்டி**

- வட்டி மாதாந்தம் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- ரூபா 24, 999 /- வரையிலான வைப்புத் தொகைக்கு சாதாரண வட்டி வீதம்.
- ரூபா 25, 000 /- அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு 1% போனஸ் வட்டி
- ரூபா 1000/- இற்கு மேற்பட்ட வைப்பிற்கு வட்டி வழங்கப்படும்.

**Yes சேமிப்புக் கணக்குதாரர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்**

- உங்கள் வைப்புத் தொகை ரூபா 15,000 இற்கு மேற்பட்டால் நிலையான கட்டளைகளுக்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- ATM காட் இலவசம்.
- காட் சட்ட திட்டங்களுக்கு அமைய இலவச கிரடிட் காட் (தேவையான வைப்புத் தொகையுடன் 6 மாதங்களின் பின்)
- பீபள்ஸ் லீசிங் நிறுவனத்திடமிருந்து லீசிங் வசதி.

Yes Young Executive Savings

**ஆயுள் காப்புறுதி**

வைப்புத் தொகையின் 10 மடங்காக ஆகக்கூடியது ரூபா 500, 000 /- ஆயுள் காப்புறுதி.

6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு உங்கள் கணக்கில் ஆகக்குறைந்தது ரூபா 10,000/- வைப்பில் இருக்கவேண்டும்.

**கடன் வசதிகள்**

உங்கள் வைப்புத் தொகையைப் போல் 10 மடங்கு.

**பின்வரும் தேவைகளுக்காக நாம் உங்களுக்குக் கடன் வசதியை வழங்குவோம்.**

உயர் கல்வி, வியாபார அபிவிருத்தி, வியாபாரத்தை ஆரம்பிக்க, வீடு அ வாகனம் வாங்க, கல்விச் சுற்றுலாக்கள்/ விடுமுறைகள், குடும் கள், கம்யூட்டர் போன்ற பொருட்களை வாங்க.



**மக்கள் வங்கியின் ஜயஶ்ரீ பரிசிழுப்பில் கலந்துகொள்ளும் வாய்ப்பு**

இந்தக் கணக்கில் ஆகக்குறைந்தது ரூபா 10,000 ம் வைப்புத் தொகையாக இருப்பின் ஜயஶ்ரீ பரிசிழுப்பில் கலந்துகொள்ளும் தகுதியையும் பெறலாம்.

(சி-1491)





# தில்லையம்பதி

GREAVES






# மோட்டோர்ஸ்

இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2488, 021 - 2223820

**AGENTS FOR - GREAVES, SPARE PARTS**

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-1499)



# கட்டைவேலி – நெல்லியடி ப.நோ. கூ.சங்கம்

முதலாவது ஆண்டு நிறைவு விழாக் காணும் **"நமது ஈழநாடு"** நாளிதழ்
மேலும் புதுப்பொலிவுடன் மக்கள் மத்தியில் வலம் வர வாழ்த்துக்கிறோம்

**என்றும் கூட்டுறவை வளர்த்து நிற்கும்**
**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்**

**தமது சேவைகளையும் நினைவு கூருகிறது.**

நுகர்ச்சி நிவாரண விநியோகத்துடன்,
வாடகை சேவை புலமையாளர், படைப்பாளர்கள் ஊக்குவிப்பு, சமூக கலை கலாசார அபிவிருத்திச்சேவை
ஒப்பந்த சேவை ★ சேமிப்பிற்கு கூடிய வட்டி
பாலர் கல்வி ★ கடனுக்குக் குறைந்த வட்டி
நடைமுறைப்படுத்தும் எமது கிராமிய வங்கிச் சேவை

(சி-1492)



நமது ஈழநாடு நாட்டு மக்களுக்கு ஆற்றும் நற்பணி தொடர வாழ்த்துக்கள்

## மதுபானப் பிரியர்களே!

## ஓர் இனிக்கும் நற்செய்தி

**செயற்கை மதுசாரங்கள் எதுவும் கலக்கப்படாத 100% இயற்கையாகப் பெறப்பட்ட முற்றிலும் நவீனப்படுத்தப்பட்ட இயந்திர தொழில்நுட்பத்தில் புதிய தரத்துடன் உருவாகும்**





எங்கும் விற்பனையாகின்றது.
உங்களை உற்சாகப்படுத்துவதற்கு, உற்ற தோழன்
எப்பொழுதும் வருத்தாத நண்பன்.
பனையின் சுவையைத் தரத்துடன் வழங்குவதும்
பக்க விளைவுகள் எதுவும் அற்றதும்.
நீரிழிவு நோயாளர்களும் பாவிக்கக்கூடியதுமென
ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டதும், இயற்கையான
மதுசார மூலம் உற்பத்தி செய்யப்படும் திக்கம் பனம் சாராயத்தினைப்
பாவித்து நோய்களில் இருந்து, பிற பக்க விளைவுகளில் இருந்தும்,
உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



தொடர்புகளுக்கு:
*தலைமைக் காரியாலயம்*
*பனை அபிவிருத்திச் சபை*
*இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(சி.1509)

*திக்கம் வடிசாலை, அல்வாய் மேற்கு, அல்வாய்.*



நமது ஈழநாட்டிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

கோயில் அபிஷேகப் பொருட்கள், மருந்துப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

க.பெ.கைலாசப்பிள்ளை அன் சன்ஸ் மருந்துக்கடை

76, பெரியகடை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 222 2912

(சி.1558)

இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்

'நமது ஈழநாடு'

பல நூற்றாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

சிவநேயர் இ.தவகோபால் A.L.T

மில்க்வைற்,

த.பெ.இல.77, யாழ்ப்பாணம். (சி.1571)

யாழ். மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெம்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி

95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)

யாழ்ப்பாணம். தொ.பே. 021 - 2226144. (சி.1524)

24 மணி நேர சேவைக்கு 077- 6038505



M.U.M.Thahir

Siyanas

Tailoring & Textile

No.I Power House Road

#77, Kasthuriyar Road, Jaffna.

Tele:021 - 2222967.

(சி.1566)

நிதர்சன் கிறீம் ஹவுஸ்





நாள்தோறும் சுவைத்து மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்

நிதர்சன் கிறீம் ஹவுஸ்

ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ் பழம், ஐஸ்சொக், மிக்ஸ் புறூட், கிறீம் சர்பத், சர்பத், குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள், பிஸ்கற் வகைகள், கண்டொஸ் வகைகள், கேக் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

நிதர்சன் கிறீம் ஹவுஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை.

(சி.1543)

இன்று முதலாம் அகவை காணும் நமது ஈழநாடு

பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி

Socio Economic Development Bank

எம்முடன் இணைந்து கொள்ளுங்கள் உங்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

- சிறார்களுக்கான கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்கள்.
- சேமிப்புப் பழக்கத்தை வழக்கப்படுத்துவதற்காகக் கிராமம் தோறும் நடமாடும் சேவைகள்.
- சேமிப்பிற்கு அதிகூடிய வட்டி.
- சேமிப்பிற்கெதிராகக் கடன் பெறும் வாய்ப்பு.
- சுயதொழில் முயற்சிக்கான கடன்கள்.
- இலகுவான தவணைக்கால மீளளிப்புக்கள்.
- துரித சேவை.




எதிர்காலத்தை உங்களுடைய தாக்குங்கள்!

எமது கிளைகள்:

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மல்லாவி, விசுவமடு, முழங்காவில், முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு.

(சி.1588)

# சிறுவர் அரங்கம்




## யார், எது, எங்கே, ஏன் ?

1. பிரான்ஸ் நாட்டில் சிறுவர்களின் பிடித்தமான நகைச் சுவை கதாபாத்திர நண்பன் யார்?
2. பூமியின் மிகவும் சூடான பிரதேசம் எது?
3. உலகின் மிகப்பெரிய தீவு எங்குள்ளது?
4. இசைக்கருவிகளின் 'ராணி' என்று போற்றப்படும் கருவி எது ?
5. உலகிலேயே மிகச் சிறிய நாடு எது?
6. இரவும், பகலும் மிகத் துல்லியமாக வரும் நாள் எது?
7. நிலத்திலா, நீருக்கடியிலா பாரமான பொருட்களை தூக்குவது எளிது?
8. நட்சத்திரங்களின் நிறங்களைத் தீர்மானிப்பது எது?
9. கங்காரு என்ற மிருகத்திற்கு, அப்பெயர் வரக் காரணம் யார்?
10. அணுக்கதிர்வீச்சால் பாதிக்கப்படாத உயிரினம் எது?

**விடைகள்**

1. டின்டின் என்ற கதாபாத்திரம். 1929 ஆம் ஆண்டு வெளிவரத்துவங்கிய டின்டின் நகைச்சவை புத்தகம். இதுவரை ஐம்பது மொழிகளில் வெளிவந்திருக்கிறது. இருபது கோடி பிரதிகள் விற்பனையான நகைச்சுவை புத்தகம் என்ற பெருமை டின்டின்னுக்கு உண்டு.
2. சோமாலியாவில் உள்ள லுக் கனானா ஆகும். (Lugh Ganana) இது கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. வெப்பநிலை எப்போதும் $31^0$ சென்டிகிரேட்டில் இருக்கும்.
3. உலகில் மிகப்பெரிய தீவு 'கிரீன்லான்ட்' ஆகும். அவுஸ்ரேலியா பெரிய தீவானாலும் கண்டமாகக் கருதப்படுகிறது.
4. வயலின்
5. வடிகான் நாடு
6. பங்குனி 21
7. நீருக்கடியில்
8. அவற்றின் வெப்பநிலை
9. ஆஸ்திரேலியாவில் உள்ள பழங்குடி மக்களை அமெரிக்கர்கள் 'அது என்ன மிருகம்?' என்று கேட்டபோது, கேள்வி புரியாத அவர்கள், கங்காரு என்றார்கள். அவர்கள் மொழியில் கங்காரு என்றால் தெரியாது என்று அர்த்தம்.
10. கரப்பான் பூச்சி

## நீங்களும் வரையலாம்

ஒரே கோட்டை உபயோகிப்பதன் மூலம் வரைய முயற்சியுங்கள்.



## எழுதுவதற்கு முன்னோடியாக சில வழிமுறைகள்

01. உங்களின் சொந்த அனுபவங்களை எழுதுவதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களின் அனுபவங்களை எழுதுவதற்கு முயற்சிப்பது வாசிப்பவர்களின் மனதில் நம்பக் கூடியவையாக அமையும்.
02. உங்களின் கைகளில் கிடைக்கும் எல்லாவற்றையும் வாசிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். சிறுவர்களுக்கென எழுதப்படும் புத்தகங்கள், சித்திரக்கதைகள், செய்திப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் நீங்கள் கூடுதலாக வாசிக்கும் போது, வாசிப்புப் பரீட்சியம் உங்களை எழுதத் தூண்டும்.
03. நீங்கள் விரும்பும் எல்லாவற்றையும் எழுதுங்கள்.
04. மாறுபட்ட, வித்தியாசமான விடயங்களை எழுத முயற்சியுங்கள். கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என்று எழுதுங்கள்.
05. குறிப்பு புத்தகம் ஒன்றை வைத்திருங்கள். உங்களை சூழ்ந்து இருப்பவர்களை, நீங்கள் சந்திப்பவர்களை கூர்ந்து நோக்குங்கள். பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்நோக்குகின்றார்கள், கையாளுகின்றார்கள் என்பதை அவதானியுங்கள். பின் நீங்கள் அவதானித்தவற்றை எழுத முயலுங்கள்.
06. உங்கள் சிந்தனைகளை எல்லாப் பக்கத்திற்கும் செலுத்துங்கள். உங்களை ஏதாவது ஒரு துறையில் ஈடுபாடு இல்லை என்று வைத்துக்கொள்வோம். ஆனாலும் அதனைப் பற்றி அறிந்து கொள்ள, அந்நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு சென்று அவதானிக்க ரசிக்க முயலுங்கள். இதன் மூலம் உங்கள் எழுத்துக்கள் நேர்த்தியாக அமையும்.
07. நீங்கள் எழுதியவற்றை ஆறு ஏழு நாட்களுக்கு வைத்திருங்கள். பின் மீண்டும் ஒருமுறை வாசியுங்கள். திருத்தங்களை மேற்கொள்ளுங்கள்.
08. உங்களுக்கு நம்பிக்கை உள்ளவர்களிடம் கதையைக் காட்டுங்கள். மற்றவர்களின் கருத்துக்களும், விமர்சனங்களும் வருத்தப்பட வைத்தாலும், அவை உங்களை வலுப்படுத்தும் என்பதை மறந்து விடாதீர்கள்.
09. ஆரம்பத்தில், எழுதுவதற்கு சிரமமாக இருந்தாலும், படிப்படியாக எழுதும் ஆற்றல் வாசிப்பினூடாக ஏற்பட்டு விடும். ஆகவே எழுதுங்கள். எழுத்து உங்களை வசப் படுத்தும்.

## சரியான சொல்லைக் கண்டுபிடித்து கட்டத்திற்குள் எழுதுங்கள்.



1. ல்வி
2. யல்மு
3. டிண்ல்தூ
4. ன்ள்புமாளி
5. அபிழைதழ்ப்
6. திச்ர்நீல்ச
7. ற்கடுண்ங்பகன

# சிறுவர் அரங்கம்

நான்கு எலிகள் வசதியான வாழ்க்கையைத் தேடி நகரத்துக்கு வந்தன. அந்த நான்கு எலிகளின் பெயர்கள், குமார், ரதி, சிவா, பத்மா என்று வைத்துக் கொள்வோமே? சில நாட்கள் உணவு கிடைக்காமல் எலிகள் திண்டாடிக் கொண்டிருந்தன. இருந்தாலும், எப்படியும் உணவைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டன.

கடைசியில் அவை ஒரு பெரிய கிடங்கைக் கண்டன. அது வெண்ணெய் உணவுப் பொருள் சேகரித்து வைக்கப்படும் கிடங்கு. வெண்ணெயை அழகான சிறுசிறு பைகளில் நிறைத்து தட்டுக்களில் அடுக்கி வைப்பார்கள். அவை பழுதாகாமல் இருக்க குளிர்சாதன வசதி இருந்தது.

முதலில் உணவைத்தேடி மூலைமுடுக்கெல்லாம் அலைந்து, கடைசியில் ஒருவழியாக வெண்ணெய் அறையை கண்டுபிடித்து விட்டன. கேட்கவா வேண்டும். கொண்டாட்டத்திற்கு யாரும் தேடமுடியாத இருட்டு மூலையில் இரவு இருந்தாலும், விடியற்காலை நேரத்தில் மெள்ள வெண்ணெய் அறையை நோக்கி எலிகள் புறப்பட்டு விடும்.

முதலில் எழுந்து சுறுசுறுப்பாக ஓடிப்போவது குமாரும், ரதியும் தான். சிவாவும், பத்மாவும் ஆறுதலாகத்தான் போகும். வெண்ணெய் பொட்டலம் நிறைய இருந்ததால் உணவுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. நிறைய வெண்ணெய்யை ஒவ்வொரு நாளும் சுவை

## எலி வெண்ணெய் தேடிய கதை



த்து, கொழுத்து வளர்ந்தன. நான்கு எலிகளும்.

நாளுக்கு நாள் வெண்ணெய் சேமிப்பு குறைந்து வருவதை குமாரும், ரதியும் உணர்ந்தன. அதனால் என்றோ ஒருநாள் அந்த அறை வெறுமையாகி விடும் என்று ஊகித்தன. ஒருநாள் அப்படியே நடந்தது! ஒரு துளி வெண்ணெய் கூடக் கிடைக்க வில்லை.

அதனால் குமாரும், ரதியும் புதிய இடத்தை நாடிப் புறப்பட்டன. அதற்கேற்றபடி தங்களுடைய பாதை, முயற்சி, அதற்கான வழி எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டன. ஆனால் சிவாவும் பத்மாவும் வெண்ணெய் கிடைக்காததை எண்ணி தவித்து சோம்பிப் படுத்து முனகிக் கொண்டிருந்தன.

புதிய வழிகளில் முயற்சி செய்த குமாரும், ரதியும் புதிய சேமிப்பு அறையைக் கண்டு பிடித்து விட்டன. "எங்கே எமது பழைய தோழன், தோழி எலிகளைக் காணவில்லை? - என்று அவை இரண்டும் வியந்து கொண்டிருந்தன.

ஆனால் சிவாவும் பத்மாவும் பழைய அறைக்கே போய் தேடிக் கொண்டிருந்தன. 'வேற இடத்துக்குப் போய் பார்ப்போம்?' - என்று சிவா சொல்லும், 'வேண்டாம்', புதிய இடத்துக்குப் போய் கஷ்டப்பட வேண்டாம்!' என்று பத்மா பதில் சொல்லி விடும்.

உணவு கிடைக்காமல் அவை பலவீனம் அடைந்தன. பசி வயிற்றைப் பிடுங்கியது. கடைசியாக ஒருநாள் சிவா, 'இப்படிச் சோம்பிக் கிடந்தால் நான் அழிந்து போவேன். என் வழியை மாற்றிக் கொள்ள வேண்டும். புதிய வழியை முயன்று பார்ப்போம். நான் ஏன் அச்சத்தை தவிர்த்து முன்னேறக்கூடாது?' என்று எண்ணியது.

நிச்சயமாக வெண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையே அதற்கு ஊக்கம் தந்தது. கிடைத்து விட்டதாக எண்ணிய கற்பனையே அதற்கு வேகம் தந்தது. பயத்தை விட்டு வெளியே வந்தது. வழியில் ஒரு வெண்ணெய் அறையைப் பார்த்தது. சுகமான வாசனை! ஆனால் அறை வெறுமையாக இருந்தது.

இந்த மாறுதலும், தொடர்ந்த முயற்சியும் அதற்குப் பிடித்திருந்தன. கடைசியில் நிறைய வெண்ணெய் உள்ள புதிய அறையை கண்டுபிடித்து விட்டது. அங்கு ஏற்கனவே குமாரும் ரதியும் இருப்பதை கண்டு பிரமித்தது.

அச்சத்தையும், தயக்கத்தையும் தவிர்த்து, தனது வழியையும் முயற்சியையும் மாற்றிக் கொண்டதை எண்ணி மகிழ்ந்தது. இப்போது சிவா, தனது தோழியான எலி பத்மா வருமா என்று காத்துக் கொண்டிருந்தது. வரும் - வந்து சேரும் - அதற்குரிய துணிவும் விடா முயற்சியும் வரும்போது அதுவும் வந்து சேர்ந்துவிடும்.

இது ஒரு கதைதான் - அதுவும் புகழ்பெற்ற ஒரு குட்டிக்கதை. வெற்றிக்குரிய வழியைச் சொல்லித்தரும் கதை.

## சந்தேகம் → விளக்கம்

★ பூமியின் இரு துருவங்களும் ஒரே மாதிரியாக இருக்குமா... இல்லை. ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இருக்குமா?

இரண்டுமே வித்தியாசமானவைகள். வட துருவப் பிரதேசத்துக்குப் பெயர் அண்டார்டிகா. ஆர்டிக், கடல் பிரதேசம். அண்டார்டிக்கா நிலப்பிரதேசம். இரண்டுமே கடுமையான பனியால் மூடப்பட்டு இருப்பதால் பார்ப்பதற்கு இரண்டுமே ஒரே மாதிரியாகத் தோன்றும். ஆர்டிக் துருவப்பரப்பு, அண்டார்டிக்காவை விடச் சிறியது. ஆர்டிக் துருவத்தின் கடலோரப் பகுதிகளில் மனிதர்களும், விலங்குகளும் வாழக்கூடிய இயற்கை சூழ்நிலை இருக்கும். ஆனால் அண்டார்டிக்காவின் எந்த ஒரு பகுதியிலும் மனிதர்களோ, விலங்குகளோ வாழக்கூடிய சூழ்நிலை இல்லை. அண்டார்டிக்காவின் கடுமையான குளிரைப் பொறுத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற உயிரினம் பென்குயின் பறவைகள்.

★ பென்குயின் பறவைகளுக்கு சின்னச் சின்னதாய், இரண்டு இறக்கைகள் இருந்தும் அவைகளால் பறக்க முடிவதில்லை. பறக்க உபயோகப்படாத அந்த இறக்கைகளை இயற்கை எதற்காக படைத்தது.....?

பென்குயின் பறவைகளுக்கு இருப்பது இறக்கைகள் என்று உங்களுக்கு யார் சொன்னது? அவை இறக்கைகள் இல்லை. துடுப்புக்கள் பென்குயின் பறவைகள் பனிநீரில் நீந்தும் போது அந்த துடுப்புக்களை உபயோகப்படுத்தித்தான் வேகமாய் நீந்தும். இயற்கை காரணம் இல்லாமல் எதையும் படைப்பது இல்லை.

## குறும்புச் சிறுவன்



டென்மார்க் மன்னர் கிரிஸ்டியன் அப்பொழுது இளைஞன். அவர் ஒருநாள் குதிரையில் ஏறி நகர்வலம் கிளம்பினார். நீண்ட நேரம் பயணம் செய்ததால் அவருக்கு தண்ணீர்த்தாகம் ஏற்பட்டது. சுற்றும் முற்றும் பார்த்தார். பக்கத்தில் ஒரு வீடு இருப்பது தெரிந்தது. குதிரையை விட்டிறங்கி, அந்தப் பக்கம் வந்த சிறுவனைப் பார்த்து, 'தம்பீ! என்றழைத்தார். சிறுவன் வந்தான். கொஞ்சம் இந்தக் குதிரையைப் பார்த்துக் கொள்கின்றாயா? இதோ வந்து விடுகிறேன் என்றார் இளவரசர்.

சிறுவன் 'குதிரையை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு, உங்கள் குதிரை கடிக்குமோ? என்று கேட்டான்.

கடிக்காது அது மிகவும் சாதுவான குதிலை என்றார் இளவரசர்

அப்படியென்றால் உதைக்குமோ என்று வினாவினான்.

ஊஹு ம், உதைக்காது என்றா இளவரசர்.

ஓடுமா? என்றான் சிறுவன்.

ஓடாது உனக்கு அந்தப் பயமே வேண்டாம் என்ற இளவரசரை சிறுவன் நிமிர்ந்து பார்த்தான்.

அப்படியெண்டால் இதை ஏன் பிடித்துக்கொண்டு நிற்கச் சொல்கின்றீர்கள். வேலை மெனக்கெட்டு என்று கேட்டுவிட்டுக் குறும்புக்கார சிறுவன் எடுத்தானே ஓட்டம்.

## எங்கள் உலகம் இனியது



உங்கள் உலகம் இனியது
எங்கள் மனமும் தூயது
எங்கள் செயலும் இனியது
எவர்க்கும் இன்பம் தருவது.

குழந்தைகள் உலகம் இனியது
கூடி வாழ நல்லது
சிட்டுக் குருவிகள் போலவே
சிரித்துப் பழக ஏற்றது.

அன்பும் பண்பும் பாசமும்
அறிவும் மனித நேயமும்
நல்லோர் வழியே வாழ்வாக
நாங்கள் காணும் புது உலகம்

உயர்வும் தாழ்வும் அங்கில்லை
அயர்வும் சோர்வும் அங்கில்லை
உலகம் எல்லாம் நம் வசமாம்
உணர்வோம் அந்த உண்மைதனை.

கவிஞர் து.துரைசிங்கம்

## என்ன? சொல்லுங்கள்!

01. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
02. ஆற்றில் விழுகிறது. குளத்தில் விழுகிறது. கடலில் விழுகிறது. ஆனாலும்நனையவில்லை அது என்ன?
03. இது வரையில் இல்லாதது. எப்பொழுதும் இருப்பது. யாரும் பாராதது அது என்ன?
04. ஒரு பயணம் போக இரண்டு குதிரை அது என்ன?
05. உலர்ந்த கொம்பில் மலர்ந்த பூ. அது என்ன?
06. உணவை எடுப்பான். உண்ணாமல் வைப்பான் அவன் யார்?
07. உச்சியில் கிரீடம். உடம்பெல்லாம் தழும்பு. யாருக்கு?
08. எவருக்கும் முகம் காட்டுவான். முதுகை மட்டும் காட்டமாட்டான். அவன்யார்?
09. தவழும் போது ஒருபெயர். விழும்போது ஒருபெயர். உருளும்போது ஒருபெயர். அவை என்ன?
10. இது அசுத்தமாக இருக்கும்போது வெள்ளையாக இருக்கும். சுத்தமாக இருக்கும்போது கறுப்பாக இருக்கும்.

விடைகள்
1. காப்பு
2. சூரியஒளி
3. நாளையதினம்
4. செருப்புக்கள்
5. குடை
6. அகப்பை
7. அன்னாசிப்பழத்துக்கு
8. கண்ணாடி
9. மேகம், மழை, நீர்
10. கரும்பலகை

## உங்கள் நுண்ணறிவை நீங்களே மதிப்பிடுங்கள்

கோலத்துக்கமைய வரவேண்டிய இலக்கத்தை குறிப்பிடுக.

(53) 87 (61)    (15) 65 (23)

(32) ? (12)

## வார்த்தை விளையாட்டு

கீழே உள்ள கட்டங்களில் ஐந்து வகையான பூக்களும், ஐந்து வகையான மரங்களும் ஒளிந்திருக்கின்றன. அச்சொற்களை இணைப்பதன் மூலம் கண்டு பிடியுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ளை | கி | ரை | ம் | வீ | ர | பு | சு |
| எ | ம | நெ | ல் | லி | ம் | றி | ர |
| தா | மு | து | ரை | வே | போ | லி | வ |
| உ | லா | டா | ன | ர் | கா | று | பூ |
| கு | றி | ஞ் | சி | ங் | பே | ங் | கை |
| தே | து | ஆ | ரு | மா | ட | லி | ல |
| ஞ | ம் | க | ண | மு | ல் | லை | பா |
| சி | பை | கெ | லு | ம | கு | ந் | கௌ |

MANGAI Silks

நமது ஈழநாடு நாட்டு - மக்களுக்கு
ஆற்றும்
நற்பணி தொடர வாழ்த்துக்கள்

நவ நாகரிக ஆடைகளின் உறைவிடம்

# மங்கை சில்க்ஸ்



8 நவீன சந்தை, சுன்னாகம். (சி.1498)

---



முதலாம் அண்டுவிழாக் காணும்
நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

# பொன்னரசி நகையகம்

Bonnatasy Nakaijagam

T.P.0777 - 066427

76A, Kathuriyar Road.
Jaffna.

76A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி.1515)

---

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**ஐஸ்கிறீம் வகைகள்**

சொக்லட் கிறிப்ஸ்
கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- புருட்லட் ஐஸ்கிறீம்
- வனிலா ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம் மற்றும் மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட் பீடா, மற்றும் குளிர்பான வகைகள்

யாவற்றையும் சுவைத்து மகிழ, நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**KALYANI Cream House**

73, Kasthuriar Road, Jaffna.

---

# SHAMEERA'S
## Herbal Beauty Care

40\2 Temple Road, ChundiKuli, Jaffna.

முதலாவது ஆண்டு விழாக்காணும் நமது ஈழநாடு, தனது பணியைத் தொடர எமது நல்வாழ்த்துக்கள்.

Professional Service Offered

- ★ *Bridal Dressing*
- ★ *Dance Make up\Party make up*
- ★ *Gold, Silver & Pearl facial*
- ★ *Thermo Herbal facial*
- ★ *Herbal treatment for Dandruff,*
- ★ *Hair fall, Pigmentation, Pimples, Open pores,*
- ★ *Under eye treatment, Dark circle & Black neck*

(முகப்பருக்கள், கரும்புள்ளி அகற்றல், மங்கு, மரு, முடி உதிர்தல், இளநரை, கருவளையம் போன்றவற்றிற்கான சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்படும்)

- ✷ Hair colouring chemical
- ✷ Hair cuts
- ✷ Skin lightening treatment
- ✷ Mancicure & Pedicure
- ✷ Threading & Waxing Multi colour mehandhi designing & tattooing

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

Ms.T.Sarmila
Old post office Lane,
Thaliyali, Kokuvil. 0777-190774.

Ms.Meera Krishnan
40/3 Temple Road,
Chundikuli, Jaffna.
0777-198698
021-222 2472

(சி.1516)

---

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும்
நமது ஈழநாட்டுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

# ராசி சில்க்ஸ்
# நல்லி சில்க்ஸ்

இன் இணைந்தசேவை

உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள், இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும் இன்றே நாடுங்கள்

| ராசி சில்க்ஸ் | நல்லி சில்க்ஸ் |
| --- | --- |
| 70,71A, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். T.P. 021 -222 5571 | 121/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 -222 5573 |

---

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

முற்றிலும் **Japan** தயாரிப்பான Sony, National T.Vக்கள் 14", 16", 19", 20", 21", 25", 26", 29", மற்றும் வீடியோ டெக், செற்றப் ரேடியோக்கள் அதற்கான உதிரிப்பாகங்களும், சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# SHAN MULTI TRADE CENTRE

நீங்கள் நாடவேண்டிய இடம்





150, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி.1519)

---

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும்
நமது ஈழநாட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணத்தில்



மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகளுக்கு தனித்துவமான ஒரே இடம்

# கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.
[பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]

---





இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும்

நமது ஈழநாடு

என்றும் தன் பணியை மிகச் சிறப்பாகத் தொடர

எமது நல்வாழ்த்துக்கள்

# தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்

தலைவர்,

பொது முகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி.1513)

இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் "நமது ஈழநாடு" இற்கு எமது நல்வாழ்த்துக்கள்

# STP Computer World (Pvt.) Limited

73, Palaly Road, Kantharmadam. Jaffna. T.P:021 - 222 2674, e.mall:- Stpedu@slt.lk Reg,No:N[PVS] 28674

## Our Courses

Diploma in MS Office
Diploma in Computer Handing
Diploma in Software Developing
Diploma in Desktop Publishing
Diploma in Language Programming
Diploma in Java Programming
Diploma in Hardware Engineering
D Base
C++
Visual Basic
AUTOCAD





**இவ்வகுப்புக்கள் யாவும் வார, வாரஇறுதி, இரவு வகுப்புக்களாக நடைபெறுவதோடு, தனியாகவும் (Personal) நடாத்தப்படும்.**
**உயர் தராதரமிக்க கணினி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்புடன் தகவல் தொழில்நுட்பம் உங்கள் கைகளிலாக எந்நேரமும் நேரடியாகவோ, தொலைசினுங்கியினூடாகவோ**

*STP Computer World (Pvt.) Limited.*
*73, Palaly Road, Kantharmadam, Jaffna.*
*T.P: 021 222 - 2674 email - stpedu@slt.lk*

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடகாலமாகக் கணினிசார் துறைகளில் பாரிய பங்களிப்பை ஆற்றிவரும் நாம், தற்போது இத்துறையில் மேலும் பல நுட்பங்களோடு உலா வருகின்றோம்.

**எமது சேவைகள் -**

- யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல உதவி அரச அதிபர் பிரிவுகளிற்கும் எமது Pension Software களே பாவிக்கப்படுகின்றன.
- பல்கலைக்கழகம், அரச நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள் என்பன எமது சேவையைப் பல வழிகளிலும் பெற்றுக்கொண்டிருக்கின்றன.
- யாழ். மாவட்டத்தில் இயங்கும் 9 அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO's) எமது சேவையையே பெற்றுக் கொண்டிருக்கின்றன.
- பல சனசமூக நிலையங்கள் எம்முடன் தொடர்புகொண்டு, எம்மூடாகத் தங்கள் பிரதேச மாணவர்களுக்குப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.
- உள்ளூராட்சி மன்றம், அரச செயலகம் போன்றவற்றின் ஊழியர்களுக்கு, எம்மால் கணினிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- எம்மால் ஏழாயிரம் மாணவர்களுக்கு இதுவரை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- சிறுவர்களுக்கான baby dod com கணினிப் பிரிவில், 240 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்கள் கல்வி அபிவிருத்திக்கென தற்போது Communicative English என்னும் கணினியூடான ஆங்கில கற்பித்தல் நடைபெறுகிறது. யாழ்.மாவட்டத்தில் சிறுவர்களுக்கு முக்கியத்துவமளித்து, அவர்களுக்குப் பயிற்சி வழங்கிவரும் ஒரேயொரு நிறுவனம் - STP என்னும் எமது நிறுவனமே.
- கணினியில் ஏற்படும் எக்கோளாறும் உடனடியாக விரைந்து சரிசெய்யப்படும். அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் பல இச்சேவையினால் பயன் பெறுகின்றன.
- கணினிசார் உதிரிப்பாகங்கள், கணினிகள் எதுவானாலும் எம்மிடம் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
- கணினிசார் அச்சுவேலைகள் அனைத்தையும் வெகுநேர்த்தியாக முடித்துத் தருகின்றோம்..



**பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்.**

STP **Your Partner in IT Solution**



பைந்தமிழ் ஒளி கொண்டு பாரெங்கும் தாயகப் புகழ் பாடும்....

# டிஜிற்றல் மீடியா நெற்வேர்க்

- சுபமுகூர்த்த விழாக்கள்
- அரங்கேற்ற விழாக்கள்
- விளம்பரத் தயாரிப்புகள்
- மேடை நிகழ்ச்சிகள்
- ஆவணப் படங்கள்
- குறும்படத் தயாரிப்புகள்
- தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புகள்



DMN
DIGITAL MEDIA NETWORK

**"நமது ஈழநாடு" என்றும் சிறப்புற வாழ்த்துகின்றோம்**

**அனைத்தையும் வண்ணக் கோலங்களில் பதிவாக்கித் தருபவர்கள்**

# Digital Media Network

தமிழனுக்கான தரமான தொலைக்காட்சியை வலுப்படுத்த
நம் மண்ணில் தரமிகு
படப்பிடிப்பாளர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சி வழங்குநர்கள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மற்றும் காண்பிய மொழிப் படைப்பாளிகளுக்கு
வாய்ப்புகளும், வேலையும் வழங்க முன்வருகிறது.

***Digital Media Network***
*231, Temple Road,*
*Nallur.*
*Tel: 021 222 3919.*

(சி.1536)




கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா

ஜீவாகாரம்




அண்ணா தொழிலகம்
இணுவில்.
T.P: 021-2223565



பாடசாலை அதிபர்களே! மாணவமணிகளே!

வந்துவிட்டது! பேராசிரியர் டீன் அவர்களின் கட்டளைக் குற்றிகள். இன்றே விஜயம் செய்யுங்கள்! பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப்பொருட்கள், அலுவலக அலுமாரி, பயில் அலுமாரி, அலுவலக மேசைகள், கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், OHP புறஜெக்ரர் மற்றும் அறிவு அமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.- 021-2225542

PEC
Promoters Engineering Company Ltd.
844, Point-Pedro Road,
NALLUR, JAFFNA.
Manufacturers of Export Quality Machinery.

**We Undertake**
Design, Fabrication & Instillation of Custom Built Process Machinery To International Standards on a Turn Key Basis

**We are Involved in**
* Fruit Juice, Dairy & Allied Industries
* Poultry & Annimal Feed Industry
* Fish Meal & Oil Production
* Distilling of Spirits From Varied Raw Materials

**We Offer Service of**
* Stainless Steel / Steel Fabrications Of International Standards.
* Argon Welding Erection of Machinery
* Fuel Tanks Bowsers

A Reputation Built on Over
A Decade Of Experience Backed by Proven Skill

அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன இறையில்ான
நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள்,
விழாமலர்கள், சஞ்சிகைகள்,
சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள்
அனைத்தையும்
உங்கள் மனநிறைவுக்கேற்ப
அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225107


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உண்மை, புதுமை, எழில், அறிவியல்

## எல்லாமே நமது ஈழநாடு



தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ் உருப்பெற்று ஓராண்டு நிறைவைக் கொண்டாடுவதை எமது உளம் கனிந்து வாழ்த்துகிறோம்.



வந்தோரை வரவேற்கும்
வன்னி மண்ணில்
மீண்டெழும் கிளிநகரில்
எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய
தங்ககம் உணவகம், மதுபானக்கடை
உள்ளகத் தொலைபேசியும்
உள்நாட்டு ~ வெளிநாட்டு அழைப்புகள்
இணைந்த ஒரே நிறுவனம்

குளிரூட்டப்பட்ட அறைகள்
சாதாரண அறைகள் ~ மற்றும்
திருமண நிகழ்வுகள்
கருத்தரங்குகள்
பணிநிறைவுப் பாராட்டு விழாக்கள்
எதுவானாலும் சிறப்புற நடாத்த



நூறு இருக்கைகளைக் கொண்ட
மண்டப ஒழுங்குபடுத்தலுடன்

**1 ~ 9 தங்ககம்**

வெளிநாட்டு, உள்நாட்டு மதுவகைகள்
வெளிநாட்டு, உள்நாட்டு உணவு வகைகள்
சிறப்பான, பரிமாற்றச் சேவைகள்
உள்ளடக்கிய

**1 ~ 9 உணவகம்**

முற்கூட்டியே பதிவுகளுக்கான
தொலைபேசி எண்.
0712 ~ 349657.





முதலாம் ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் தமிழர்
தாயகத்தின் தனித்துவமான நாளிதழ் நமது ஈழநாடு
மேன்மேலும் பணி சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

# கணினி மையம்

## The Computer Centre

வன்னியில் முதற்தர கணினி விற்பனை நிலையம்

- எமது சேவைகள்.
- கணினி விற்பனை.
- கணினி திருத்தமும் பராமரிப்பும்.
- வன்பொருள், மென்பொருள் விற்பனை (Hard Ware & Soft Ware).
- பிரயாக்கல் சேவை.
- பொலித்தீன் கவரிடுதல்.
- கணினி பிரதி வடிவமைப்புக்கள்.
- Spiral binding.
- இன்ரநெற், ஈ மெயில் சேவை.
- பிரதியாக்கல் இயந்திரம் விற்பனை.
- விற்பனைக்குப் பிந்திய சேவைகள்.
- சக்தி தமிழ் மென்பொருள் விநியோகம்.




**Dealers For**

- Mercury
- BenQ
- PROLiNK
- Metropolitan
- LG
- hp
- IBM

சகல விதமான கணினித் தேவைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

# கணினி மையம்

யாழ்சாலை. (சி.1589) கிளிநொச்சி.



உள்ளத்திலிருந்து
IIS இன்
வாழ்த்துக்கள்

முதலாம் ஆண்டினை நிறைவு செய்து கொள்ளும் நமது ஈழநாடு பத்திகையின் சேவைக்கு IIS சமூகத்தினராகிய நாம், மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் பல நூறு ஆண்டுகள் நடுநிலைமையான, தன்னிகரில்லா சேவையினை ஆற்றவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறோம்.

பத்திரிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் ஆசிரியர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இயக்குநர்,
பயிற்சி இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
உத்தியோகஸ்தர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

(சி.1601)



# IIS மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2004

## ஆரம்பம் : 05.10.2003

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2004/2005 இற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி : 15/11/2003 மாலை 3.00 மணி

**புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்.**

| | |
|---|---|
| Programme 1 ( P1 )<br>a. Diploma in MS Office<br>b. Diploma in Computer Programming | Programme 2 ( P2 )<br>a. Diploma in Internet Technology<br>b. Diploma in Computer Programming |
| Programme 3 ( P3 )<br>a. Diploma in Internet Technology<br>b. Diploma in Java programming | Programme 4 ( P4 )<br>a. Diploma in Internet Technology<br>b. Diploma in Hardware Technology |
| Programme 5 ( P5 )<br>a. Diploma in MS Office<br>b. Diploma in Visual Basic Programming | Programme 6 ( P6 )<br>a. Diploma in MS Office<br>b. Diploma in Desk Top Publishing |
| Programme 7 ( P7 )<br>a. Diploma in MS Office<br>b. Diploma in Internet Technology | Programme 8 ( P8 )<br>a. Diploma in MS Office<br>b. Diploma in AutoCAD |
| Programme 9 ( P9 )<br>a. Diploma in Hardware Technology<br>b. Diploma in AutoCAD | Programme 10 ( P10 )<br>a. Diploma in Visual C programming<br>b. Diploma in AutoCAD |

*நீங்கள் பெற்றுக்கொள்ளும் புலமைப்பரிசிலை மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு Programme ஐ தெரிவு செய்வதனூடாக இரு Diploma கற்கை நெறிகளினைக் கற்பதற்கு தகுதியுடையவர் ஆகின்றீர்கள்.*

**தெரிவு செய்யும் முறை.**

இருவேறுபட்ட முறைகளினூடாக மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

1) **போட்டிப் பரீட்சையின் அடிப்படையில்**
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் புலமைப்பரிசிலைத் தட்டிக்கொள்வதற்கு IIS இனால் நடாத்தப்படும் (நுண்ணறிவு/பொதுஅறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.

2) **A/L பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில்**
இம்முறையின் கீழ் மாணவர்கள் தங்களது A/L பரீட்சை(எவ்வருடத்தில் தோற்றியிருப்பினும்) பெறுபேறுகளினைக் கொண்டு விண்ணப்பிக்க முடியும். மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவீர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து ரூபா 200 பரீட்சைக்கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக்கட்டணம் ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர்

**Director, Institute of Informatics Studies.**

எனும் பெயர் இட்டு பணம் பெறும் நிலையம் **Post Office, Jaffna.** எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி : Director,
Institute of Informatics Studies,
100, Clock Tower Road, Jaffna.

**பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்:**

♦ IIS - தலைமை அலுவலகம், ♦ IIS - நெல்லியடி, ♦ Sun Computers, யாழ்ப்பாணம் ♦ PC Paradise - யாழ்ப்பாணம், ♦ பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், ♦ ஸ்ரீலங்கா புத்தகசாலை- யாழ்ப்பாணம், ♦ நாயகபாலன் புத்தகசாலை – மானிப்பாய், ♦ துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம், ♦ பொதிகை புத்தகசாலை, பொதிகை கொம்பியூட்டர் கிரபிக்ஸ், சாவகச்சேரி, ♦ மொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.

குறிப்பு : A/L 2004 பரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்காகவே May மாதத்தில் விசேட பிரிவு ஆரம்பமாகும்.

போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்கு புத்தம்புதிய கணனி (P IV) ஒன்று பரிசளிக்கப்படும்.

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

## INSTITUTE OF INFORMATICS STUDIES ( I I S )

தலைமை நிறுவனம்:
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
T.P.No: 021-2222831 E-mail: iis@sltnet.lk

கிளை நிறுவனம்:
IIS- நெல்லியடி,
T.P.No: 021-2263335

## "நமது ஈழநாடு" முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில்......

முதலாம் பரிசு சிறுகதை

# செழிப்பைத் தேடும் பறவைகள்

பெ.சிறிகந்தநேசன்

''ஐயோ! என்ட மகன விடுங்கடா, உங்களுக்கு மன சாட்சியே இல்லையாடா? உங்களோ நம்பி வந்ததுக்கு இதுவும் வேணும், இன்னும் வேணும் எங்கோளுக்கு. அடே... விடுங்கடா... விடுங்கடா...''

தலைவிரி கோலத்துடன் சனத்திரள் மத்தியில் கத்த முடியாமல் கத்தினாள் இராசலட்சுமி.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் என் னும் கிராமம் மிகவும் அமைதியான இடம். வரிசை வரிசையாக பனைமரங்களைக் கொண்டது. அங்கு வாழுகின்ற மக்கள் வழிபாடு செய்வதற்கு ஊரின் மத்தியில் மாவடி விநாயகர் ஆலயம். கோயிலுக்கு முன்னும், பின்னும் வயல்வெளி. வயல் வெளியோ பச்சைக் கம்பளத்தை விரித்துப் போட்ட தினைப் போலமேடு, பள்ளம் இல்லாமல் மட்டமாகக் காட்சியளித்தது. நெற்கதிர்களில் சிட்டுக்குருவி கூடுகட்டி, முட்டையிட்டு அடைகாக்கும். திருவிழா தொடங்கிவிட்டால், வயல்வெளிகளில் சிறுவர்கள் வருவதும், போவதுமாக இருப்பார்கள். இதைக் கண்ட சிட்டுக் குருவிகள் கூட்டம் கூட்டமாகக் கீச் கீச்... என்று பறந்து செல்லும் காட்சி, என்ன காட்சி... இவ்வாறு இந்தக் கிராமத்தின் இயற் கைக் காட்சிகளைக் கூட்டிக்கொண்டே போகலாம். இந்த ஊரில் வாழ்ந்தவர்கள் செல்லத்துரை இராசலட்சுமி அவர் களின் பிள்ளைகள் - ராம், அலெக்ஸ், நிரோஜா ஆகியோரைக் கொண்ட இந்தக் குடும்பம்.

"இராசலட்சுமி சாப்பாடு கட்டிட்டியா?"

"ஆமாங்க அப்பா..."

"சரி புள்ள, நிரோஜாக்குட்டி அந்தச் சாப்பாட எடுத்துக்கிட்டு வா.

"இன்டைக்கு மொதாளி வேளைக்கு வரச் சொன்னார்."

செல்லத்துரை ஏதோ தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் தச்சன் வேலை செய்து வந்தான். தினமும் அதிகாலை சாப்பாடு கட்டிக்கொண்டு போய், மாலையே வீடு திரும்புவான்.

செல்லத்துரையின் குறிக் கோள் - தனது உடம்பில் உயிர் இருக்கும்வரை, தனது மனைவியையும், பிள்ளைகளையும் வேலைக்கு அனுப்பக்கூடாது என்பது. அது எவ்வளவு காலம் சாத்தியமாகும்.

1989 ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கையில்- இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தது. அன்றும் வழமைபோலவே,

"இராசலட்சுமி சாப்பாடு கட்டிட்டியா?"

"ஆமாங்க அப்பா"

"சரி எடுத்துக்கிட்டு வா."

"இன்டைக்கு மொதாளிவூட்டுக் கதவுக்குப் பூவேல செய்யனும். அதோட தீபாவளியும் வருது. இன்னும் பத்து நாள் இருக்கு. கடை ஒட்டிசுட்டானில் இருக்குது, கடைக்கு ஏதோ ஜன்னல் போடவேனுமெனச் சொன்னாரு. நா எப்படியும் தீவாளிக்கு ரெண்டுநாளுக்கு முன்னாடியே வந்துடுவன். நா வரப் பிந்தினா...? பக்கத்து வூட்டு மணியண்ண வருவாறு. அவருக்கிட்ட காசு கொடுத்து விடுகிற. நீ கடைக்குப் போய்ப் புள்ளைகளுக்கும், ஒனக்கும் உடுப்பு எடு. ஒட்டிசுட்டானுக்குப் போன நா கடையில சாப்புடுற..." எனக் கூறிவிட்டு, அவசரம் அவசரமாக ஓடினான் செல்லத்துரை.

சினிமாவில் வரும் கதாபாத்திரங்களைப்போல, திடீரென்று உழைத்து முன்னுக்குவர முடியுமா? யதார்த்த வாழ்வில் படிப்படியாகத்தான் உழைக்க வேண்டும். இதை நன்கு அறிந்தவன்போலச் செல்லத்துரை.

செல்லத்துரை கூறிச் சென்றதைப்போல, தீபாவளியும் நெருங்கிக் கொண்டே வந்தது. "தங்கச்சி இராசலட்சுமி... இராசலட்சுமி..." "இந்தா புள்ள செல்லத்துரைத் தம்பி, காசு குடுத்து விட்டாரு." "அவர் வரேலையா?"

"நாளைக்கு நாளேண்டைக்களவுல வாராராம்..." இதைக் கேட்டதும் இராசலட்சுமி ஆனந்தக்கடலில் மூழ்கிவிட்டாள்.

அடுத்தநாள் அதிகாலை தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, புடவைக் கடைக்குச் சென்று, தனது மூன்று பிள்ளைகளுக்கும் உடையை எடுத்துக்கொண்டு, தனக்கும் ஒரு சாரியை எடுத்ததுடன், தனது கணவனுக்கும் ஒரு சரத்தையும், சேட்டையும் வாங்கிக்கொண்டாள்.

தீபாவளிக்கு ஒருநாளே இருந்தது. அந்த ஊரே விழாக்கோலமாகக் காட்சியளித்தது. பல இடங்களிலிருந்து புதிய புதிய ஆட்கள் அங்கு வந்து குவிந்தனர். இதையெல்லாம் பார்க்கும் போது, இராச லட்சுமிக்குத் தன்னையறியாத ஒரு கொண்டாட்டம். அவள் வீட்டை மெழுகி, பாத்திரங்கள், தளபாடங்கள், பாய்கள் எல்லாவற்றையும் கழுவி, தனது தந்தையாரின் படத்துக்குப் பூ வைத்தாள்.

இவளின் தகப்பனார் ஒரு காவலாளியாகச் சங்கத்தில் கடமை புரிந்தவர். பின்னர், இவர் இனந்தெரியாத நபர்களால் இரவுப்பொழுதில் கடமையில் இருக்கும்போது சுட்டுக்கொல்லப் பட்டதனால், சிறிலங்கா அரசாங்கத்தினால், நாற்பதாயிரம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டது. இந்தப் பணம்- இவளின் தகப்பனுக்கு ஈடாகுமா? இவள் தினம் தினம் படுந்துயரம் அரசாங்கத்துக்குத் தெரியுமா?

தீபாவளிக்குச் சுட்ட பலகாரங்களைப் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கொடுப்பதற்காகப் பைகளில் போட்டு அடைத்துவிட்டு, வீட்டை அலங்காரம் செய்ததுடன், தாங்கள் செல்லமாக வளர்த்த ஆடுகளையும் அலங்காரம் செய்துவிட்டு இராசலட்சுமியும், பிள்ளைகளும் நாளை மலரப்போகும் தீபாவளியை எதிர்பார்த்த வண்ணம் படுக்கைக்குச் செல்கின்றனர். நித்திரை எப்படிவரும், நாளை தீபாவளியல்லவா?

செல்லத்துரை அவசர அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு, கடைத் தெருவுக்குச் சென்று தின்பண்டங்களை வேண்டிக்கொண்டு, 'மொதலாளி நா போய்ட்டுவாரன்..." "சரி பாத்துப்போ றோட்டு றோட்டா ஒரே ஆமிக்காரர் நிக்கிறாங்கள்."

எங்கேயோ ஒரு ஆமியைச் சுட்டதற்கு இராணுவம் சுற்றிவளைப்புச் செய்தது. காட்டுக்குள் ஏதோ சருகுச் சத்தம் கேட்டதும், சரமாரியாகச் சுட ஆரம்பித்தான். சைக்கிளில் வந்த செல்லத்துரையைத் துப்பாக்கிக் குண்டுகள் பதம் பார்க்கின்றன. பல எதிர்காலக் கனவுகளுடன் "அம்மா... அம்மா..." என்று கத்தியதுதான் தெரியும். அவன் உயிர் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்துவிட்டது. செல்லத்துரை சினிமாவில் வரும் கதாநாயகனா? துப்பாக்கிக் குண்டை ஏந்துவதற்கு. அதிகாலைப்பொழுது விடிகின்றது. ஊரெங்கும் பாட்டுச் சத்தமும், பட்டாசுச் சத்தமும் கேட்கின்றது. பிள்ளைகள் புதுச்சட்டைகளை அணிந்துகொண்டு, கோயிலுக்குப் போக ஆயத்தமாகின்றார்கள். இராசலட்சுமி குளித்துப் புதுச் சேலையை அணிந்துகொண்டு, "புள்ளங்களே நில்லுங்கடா, இப்ப அப்பா வந்திடுவாரு." அவரையும் கூட்டிக்கிட்டுப் போவலாம்.

செலலத்துரை இறந்த விடயம் முதலாளிக்குத் தெரிய வந்ததும், அவர் அங்கு சென்று பிணத்தை எடுத்துக்கொண்டு வருகின்றார்.

முதலாளியின் கார் வாசலில் வருகிறது. 'ஏய் புள்ளங்களா அப்பா வந்திட்டாருபோல, வெளிப்படலையில் சத்தம் கேட்குது போய்ப் பாருங்கடா.'

பின்னே ஒரு வானில், செல்லத்துரை ஏதும் அறியாதவன்போல அமைதியாகத் தூங்கிக்கொண்டு வருவதனைப் போல வருகின்றான்.

'ஓ,ஓ... மொதலாளியும், அப்பாவும், அவரோடு வேலை பார்க்கிறவங்களும் தீபாவளிக்கு வூட்டுக்கு வந்திருக்காங்க. பாயை விரித்துப் போடுங்கடா' என்று தனது பிள்ளைகளிடம் கூறிவிட்டு, படலையடிக்கு ஓடி வருகின்றாள்.

சவப்பெட்டி இறக்கப்படு கின்றது. இதைக்கண்ட இராசலட்சுமி 'விளாறு' போன்று நிலத்தில் விழுகின்றாள். பிள்ளைகள் 'அப்பா அப்பா....' என்று கத்தி கத்தி மயங்கும் நிலைக்குச் சென்றுவிட்டனர். 'ஐயோ! உங்கோள இந்த நிலையில பாக்கவா புதுச் சரமும், சேட்டும் வாங்கினம்' என்று, உருண்டு உருண்டு பலவாறு புலம்பினாள் இராசலட்சுமி.



தீபாவளியை எதிர்பார்த்த இவர்களுக்கு வாழ்க்கையில் இதுவோ தீபாவளி? விருந்தா ளிகளை எதிர்பார்த்து ஓடிய இவர்களுக்கு, இவர்களோ விருந்தாளிகள்? புதிய ஆடைகள் களிமண்ணில் உருண்டு உருண்டு இரத்தக் கலராகக் காட்சியளித்தது. முதலாளியும், அவருடன் வந்தவர்களும் ஆறுதல் கூறினார்கள். இவர்களுக்கு இனி யார் ஆறுதல் கூறியும் என்னபயன்? போன உயிர் திரும்பி வருமா? இராசலட்சுமியின் தகப்பனின் படம் தனியாக இருந்த வீட்டில், செல்லத்துரையின் படமும் மாட்டப்பட்டு விட்டது.

செல்லத்துரை இறந்த பின்னர் கூலி வேலை செய்து, தனது மூன்று பிள்ளைகளையும் வளர்த்துவிட்டாள் இராசலட்சுமி. ராம் **A/L** படித்துவிட்டு வீட்டில் விவசாயம் செய்வதுடன், நிரந்தரத் தொழிலையும் தேடினான். அலெக்ஸ் **O/L** படித்துக்கொண்டிருந்தான். நிரோஜா ஆண்டு பத்துப் படித்தாள். இப்போதெல்லாம் இராசலட்சுமி வேலைக்குப் போவதில்லை. ராமின் விவசாயச் செய்கையிலேயே வீட்டின் செலவோடியது.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை தொடங்கியதும், மாங்குளத்தில் வாழ்ந்த மக்கள் எல்லாம் இடம்பெயர்ந்து பல திக்குகளில் சென்றனர்.

இராசலட்சுமி தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு எங்கு போவுதென்று தெரியாமல் நின்றவேளை, ஷெல்லொன்று கூவிக்கொண்டு வந்து அவர்களின் ஆட்டுப் பட்டியில் வீழ்ந்து வெடித்தது தான் தெரியும். 'மே...மே...' என்ற சத்தம், வயிற்றுக்குள் இருந்த ஆட்டுக்குட்டி பாதி மாதத்திலேயே செத்து வெளியில் வந்தது. தாயாட்டின் உடல் இரண்டாகப் பிரிந்தது.

அந்த நேரத்தில் பக்கத்து வீட்டு இராசாத்தியக்கா -

'அடியேய் இராசலட்சுமி நாங்க மடுவால வவுனியா போகப் போறம் நீயும் வாரியா?' வேறு வழி தெரியாமல் தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, எந்தவிதமான வீட்டுப் பொருட்களும் எடுக்காமல் பயணமாகிவிட்டாள். எப்படியோ தனது தகப்பனினதும், கணவனினதும் படத்தை எடுத்துக்கொண்டாள். இரவிரவாக நடந்துசென்று, இவர்கள் அதிகாலை ஒரு இராணுவ முகாமினைச் சென்றடைந்தனர். இவர்களுடன் இருபது குடும்பம் சென்றது. அங்கு அனைவரையும் சோதனை செய்த பின்னரே, வவுனியாவுக்கு அனுப்பிவைத்தனர். பெரிய லொறியில் ஏற்றி அனைவரையும் வவுனியா பூந்தோட்டம் அகதி முகாமில் இறக்கிவிட்டனர்.

அங்கு சென்றதும் திருமணமா காத ஆண்கள், பெண்கள், திருமணமான ஆண்கள், பெண்கள் எனத் தரம்பிரித்து பொலிஸ் அட்டையில் பதிந்தனர். 'யாறும் வெளியால் போவதுனா நமக்கிட்ட பாசு எடுத்துப்புட்டு போவேணும்' என்று கூறினான் ஒரு பொலிஸ் அதிகாரி. அதுவரை இவர்களுக்கு பாஸ் என்றால் என்னவென்று தெரியாது. பின்னர் வந்த இருபது குடும்பத்தையும் ஒரு மண்டபத்தைக் காட்டி அதில் இருக்கச் சொன்னார்கள்.

> "...இராசலட்சுமி ஒருகணம் கண்களை அங்குமிங்கும் திருப்பித் திருப்பிப் பார்க்கிறாள். குழாய்க் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற வித்தியாசம் இல்லாமல் வரிசை வரிசையாக நிற்கின்றனர். இது தண்ணீர் எடுப்பதற்கு ஓரளவு பொருந்தும். இதே நிலைதான் மலசலகூடத்திலும்..."

மண்டப மோசாட்டுக்காக நிலத்துக்கு மட்டும் 'சீமெந்து' பூசியிருந்தன. ஆனால், ஏனையவை எல்லாம் துப்புரவு இல்லாத மாட்டுப்பட்டிபோல இருந்தது. இராசலட்சுமி ஒரு கணம் கண்களை அங்குமிங்கும் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றாள். குழாய்க் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற வித்தியாசம் இல்லாமல் வரிசை வரிசையாக நிற்கின்றனர். இது தண்ணீர் எடுப்பதற்கு ஓரளவு பொருந்தும். இதே நிலைதான் மலசலகூடத்திலும். இது எவ்வளவு சாத்தியமாகும்.

'இன்னும் ஒரு பக்கம் செத்தவீடு, வேறொரு பக்கம் கலியாண வீடு, இன்னொரு பக்கம் பிறந்தநாள் வீடு, பிறிதொரு பக்கம் சாமத்தியவீடு, இன்னுமொரு பக்கம் ஒருநாள் கொழும்பிப் பாஸுக்கு சனக்கூட்டம், இன்னுமொரு பக்கம் எதிர்காலம் பற்றிய சிந்தனையும் இல்லாத இளைஞர்களின் ஆட்டமும், பாட்டமும். இன்னுமொரு பக்கம் ஏதோ வாழ்க்கையை வெறுத்தினைப்போல சில ஜீவன்கள், கூட்டம் கூட்டமாக இருந்து, புதிதாக வந்திறங்கிய எங்களைப் பார்த்து இரகசியம் கதைக்கின்றனர்.

இன்னுமொரு பக்கம் குடும்பப் பிரச்சினை, காதற் பிரச்சினை, வேறொரு பக்கம் காதாற்கேட்க முடியாத உரத்த பேச்சுக்கள், முறையற்ற திருமணங்கள், பாலியல் தொடர்புகள்....' இவற்றையெல்லாம் பார்த்ததும், பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு திரும்பவும் மாங்குளத்துக்கே ஓடிவிட்டால் என்ன என்று அவள் மனம் நினைத்தது.

எப்படியோ ஒரு வருடம் அகதிமுகாமில் வாழ்க்கை சென்றுவிட்டது. நிரோஜாவும் அங்கு சென்றதும் விஜயன் என்பவனைக் காதலித்துத் திருமணம் செய்துவிட்டாள். போகப் போகத்தான தெரிந்தது அவன் கசிப்படி மன்னன் என்று. எவளவோ முயன்றும் நிரோஜா வினால் விஜயனைத் திருத்த முடியவில்லை.

அவளின் வாழ்க்கையும் அதோ கெதிதான். நிரோஜா இப்போதெல்லாம் ஒரு கையில் குழந்தையுடன், முகாமின் கூட்டத்துடன் தானும் அமர்ந்திருப்பாள். விஜயன் குடி மட்டுமல்லாமல், வேறு பல பெண்களுடனும் தொடர்பு வைத்திருந்தான். அங்கு முகாம் காவலுக்கு இருந்த பொலிஸ் இதையெல்லாம் கண்டும் காணாத மாதிரி இருந்தது. இது தமிழ் சமூகம் அல்லவா?

ஒரு தினம்.....

'ஏய் ஓடு, ஏய் ஓடு...' என்று முகாமில் இருந்த அனைத்து மக்களையும் பொலிஸார் அடித்துக் கலைத்தனர். இராசலட்சுமியுடன் வந்தவர்களுக்கு என்னத்துக்கென்று தெரியாமற் திகைத்தனர். 'புள்ளங்கள எல்லாத்தையும் எங்கேயோ போகச் சொல்றாங்க, பொலிஸ் இந்தா கலைக்கிறாங்க. வா போவம்' என்று தனது இரண்டு மகன்மாரையும் கூட்டிக்கொண்டு வெளியில் சென்றாள் இராசலட்சுமி.

வவுனியா பூந்தோட்ட முகாமில் ஆறு மாதத்துக்கு ஒருக்காவோ, ஒரு வருடத்துக்கு ஒருக்காவோ இராணுவ சுற்றிவளைப்பு நடக்கும் என்று இவர்களுக்கு அதுவரை தெரியாது. யாரும் சொன்னது மில்லை. இதுவே அவர்களின் முதல் அனுபவம்.

உச்சி வெய்யிலில் அனைவரையும் நிக்கவைத்தனர். சிறிதுநேரத்தில் ஆண்கள் வேறு, பெண்கள் வேறாகப் பிரிந்தனர். திடீரென்று ஒரு லொறியில் வந்த இராணுவமும், தலையாட்டியும் ஒவ்வொருவராக முன்னால் செல்லும்படி கூறினார்.

அனைவரும் சென்று விட்டார்கள். ராமைப் பார்த்து தலையாட்டி தலையாட்டியதும், எதுவும் அறியாத அப்பாவி ராம் கைதுசெய்யப்பட்டான். அடியும் உதையும் மாறிமாறி விழுகின்றது. இதைக்கண்ட இராசலட்சுமி ஓடிவருகிறாள். ராம் லொறியில் ஏற்றப்பட்டு, கண்கட்டிக்கொண்டு செல்லப்பட்டான். அவனுக்கு என்ன நடந்ததென்றும் இன்னுமே தெரியவில்லை. அப்போது எங்கே போனது வெளிநாட்டு நிறுவனங்கள்.

சுற்றியிருந்த சனக்கூட்டம் மெதுவாகக் கலைகின்றது. இவளோ மயக்கமருந்து ஏற்றியவளைப்போல, வார்த்தைகளைத் தடுமாறிமாறிக் கதைக்கின்றாள். அலெக்ஸ் மெதுவாக இராசலட்சுமியின் அருகில் வருகிறான். நிரோஜா இதையெல்லாம் கண்டு, மயங்கி சுய அறிவில்லாமல் கிடந்தாள்.

"அம்மா ஏதொவொரு கால் சொத்தியாகப் பொறந்ததால் என்ன விட்டு வைச்சாங்க. இல்லாட்டி எம்மா அண்ணாவுக்கு நடந்த கதிதான்யெனக்கும்" என்றான் அலெக்ஸ்.

இப்போது சமாதான ஒப்பந்தம் வந்து, அவரவர் தங்கட வீடுகளுக்குத் திரும்புகின்றனர். விஜயனும், இரண்டு பிள்ளைகளை நிரோஜாவிடம் கொடுத்துவிட்டு இறந்துவிட்டான். தனிக் குடித்தனம் சென்ற அவளும், தாயுடன் சேர்ந்துவிட்டாள்.

இராசலட்சுமியும் மீண்டும் தனது ஊருக்கு வருகின்றாள். ஏதோ தான் பழகிய வானொலி திருத்தும் வேலையை வைத்தே, அலெக்ஸ் தனது அம்மாவையும், அக்காவையும், அக்காவின் இரண்டு பிள்ளைகளையும் பார்க்கின்றான். இப்படி எத்தனை குடும்பங்கள் இருக்கும் இந்த நாட்டில்?

இவர்கள் வாழ்ந்த ஊர் முதல் மாதிரி இயற்கையான காட்சிக ளுடன் இருக்கவில்லை. பட்ட மரங்களும், எரிந்து இடிந்த வீடுகளும், பற்றைக்காடுகளும், பாழடைந்த வீடுகளில் மனித எலும்புக்கூடுகளும், மெலிந்த தோற்றத்துடன் ஒருகால், இரண்டு கால் இழந்த ஆடுகளும், மாடுகளும் வயல்வெளிகளில் மிதிவெடிகளும், இடிந்து விழுந்த கோயில்களும், இடிந்த கடைகளும், கூரையில்லாத பாடசாலையும், பச்சைக் கம்பளத்தைப்போல செழித்திருந்த வயல்வெளி வெறும் புழுதித் தரையாக இருந்ததுடன், அந்த ஊரே பாழடைந்த சுடுகாடாகக் காட்சியளித்தது.

இதையெல்லாம் பார்த்த இராசலட்சுமி திகைத்து நின்றாள். அவ்வேளை, சில பறவைகள் கீ... கீ... கீ... என்று கத்திக் கொண்டு, அவர்கள் தற்காலிமாக அமைத்த குடிசை வீட்டின் மேலாகப் பறந்து சென்றன. "ஆகா...! ஆகா...! எம்மைப்போல செழிப் பைத்தேடி அழைகின்றனவோ இந்தப் பறவைகள்" என்று தனது மனசுக்குள் நினைத்துக் கொண்டு, "வுந்த ஊர் செழிப்பது எப்போ...?" எங்கட வாழ்க்கை செழிப்பது எப்போ...?' என்று அவள் அரைக்கோபுரத்துடன் காட்சியளிக்கும் மாவடி விநாயகரிடம் வேண்டுகின்றாள்.

## அரசியல் நோக்கு

# இலங்கை இனப்பிரச்சினை ஒரு முக்கோண விவகாரம்

**சிறி. இந்திரகுமார்**

**சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தீவிரமாக உழைத்து வருவதாகக் கூறினாலும், உண்மை யதார்த்தம் என்னவென்றால், இந்த நாடுகள் தத்தமது தேச பாதுகாப்பிற்கான புவிசார் அரசியல் மற்றும் இராணுவத் தளத்தை விஸ்தரிப்பதற்கும், மேற்குலக சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துவதற்கும் முயற்சி செய்கிறார்கள் என்பதே உண்மை.**

இலங்கையின் அரசியல் விவகாரம் இப்போது அதன் எல்லைகளையெல்லாம் தாண்டி, சர்வதேசத்தின் முக்கியதொரு விவகாரமாகி விட்டது.

அதாவது, அமெரிக்காவின் உலகமயமாகல் கொள்கையைப் போல, இலங்கையின் அரசியல் விவகாரம் சர்வதேச மயமாகிவிட்டது. இன்றைய நிலையில் முக்கிய இருதரப்புக்களான அரசோ - புலிகளோ தனித்து எத்தகைய தீர்மானங்களையும் எடுக்கமுடியாது என்றளவுக்கு இந்த விவகாரத்தைத் தீர்மானிக்கும் அதிகாரபலத்தை, சர்வதேசம் கையகப்படுத்த நினைக்கிறது.

இலங்கையின் எல்லா அரசியல் மையங்களின் விருப்புக்களையும் மீறி கொள்கை, கோட்பாடுகளைத் தாண்டி, சர்வதேச வலைப் பொறி ஒன்றுக்குள் இலங்கை முற்றாகச் சிக்கியிருக்கிறது என்பதே மெய்.

இலங்கைத் தீவின் இறைமையைப் பெரிதாக வலியுறுத்திய இலங்கையின் ஆட்சி பீடங்கள், தமது தேசிய அரசியலின் இறைமையை சர்வதேச நாடுகளின் உள்ளரசுக் கொள்கைகளை அப்படியே வெளிப்படுத்தும்

வேண்டுமெனக் கருதுகின்றன.

இதன் விளைவாக, இலங்கை விவகாரத்தில் அதிதீவிரம் காட்டும் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் வெவ்வேறு கோணங்களில் இலங்கையின் பிரச்சினையை கையாளுகின்றன.

இதில் ஜப்பானும், நோர்வேயும் - இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் விருப்புகளை அப்படியே பிரதிபலிக்கும் பிம்பங்களாகவே செயற்படுகின்றன.

இதில் இலங்கை விவகாரத்தில் இந்த நாடுகள் - சாம, பேத, தான, தண்டம் எனத் தங்களின் எல்லா முயற்சிகளையும் செயற்படுத்துகின்றன.

இதில் நோர்வேயைப் பொறுத்த வரை சாமம் என்று சொல்லப்படுகின்ற மென்மையான அணுகு முறையினையும், தானம் என்று சொல்லப்படுகின்ற நிதிமூல உதவிகளை

இனவாதிகள் எனச் சொல்லக்கூடிய ஜே.வி.பி., பிக்குகள் முன்னணி மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகள் மேற்கொண்ட போராட்டங்கள், ஊர்வலங்கள் என்பன கணிசமான அளவு வெற்றி பெற்றமை இதன் அடிப்படையிலேயே நோக்கவேண்டும்.

இந்த வகையில், இன்று இலங்கை ஒரு மரபுசார் அரசு என்ற வகையில் அதனைப் பாதுகாப்பது, மரபுசார் அரசிற்கு உதவுவது என்ற நோக்கில் அமெரிக்காவின் கொள்கை

ஆனால், யதார்த்தத்தில் அரசு, புலிகளுக்கிடையில் தீவிர யுத்தம் நடைபெற்றவேளை, களத்தில் எவ்வாறு தனித் தனித்தரப்பாக மோதினார்களோ, அவ்வாறே இந்தப் பேச்சு முயற்சியிலும் தீர்மானிக்கும் வல்லமையைக் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகையதொரு தீர்மானமே பேச்சின் பலன்களைப் பலமாக நிலை நிறுத்தும் மாறாக சர்வதேசத்தின் விருப்புகளையெல்லாம் உள்வாங்கி, ஒரு கூட்டு சாம்பாராக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு விரும்புவது, ஒரு போதும் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க வழிசெய்யப் போவதில்லை.

இனப்பிரச்சினை தீர்வுக்கு உலக அனுபவங்களையோ, உலகத் தீர்வுகளையோ திணிப்பதற்குப் பதிலாக, இலங்கையின் யதார்த்தப் புறநிலையைக் கவனத்தில் கொண்டு, களத்தில் நிறுத்தும் போதே தீர்வு என்பது இலங்கையில் சாத்தியமாகும்.

உண்மையில், இன்றுள்ள நிலையில் இராணுவரீதியில் பலம் பொருந்திய தமது வல்லமையைக் காட்டிய புலிகள், இரண்டு வருட கால சமாதான நீட்சிப்பில் தமிழ் மக்கள் மீது சுமத்த முனைந்த எல்லாப் பொறிகளையும் செயலிழக்க வைத்துவிட்டார்கள்.

அந்த வகையில்தான் வன்னியிலிருந்து நகர்த்தப்படும் ஒவ் வொரு தீர்மானங்களும், எதிர்கால அரசியல் இலட்சியத்துக்கோ, தமிழர்களின் உரிமைகளுக்கோ பழுதில்லாமல் நகர்த்தப்படுகின்றன. இந்த முயற்சி இது வரை தமிழ் மக்களுக்கு அனுகூலங்களையே பெற்றுக் கொடுத்துள்ளன.

இந்த வகையில் தென்னிலங்கை இருப்புக் கட்சிகளால் இதுவரையும் தமிழ் மக்களுக்கான தீர்வாக எத்தகைய உருப்படியான தீர்வையும் முன்வைக்காத நிலையில் தமிழீழத் தனி அரசிற்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேசத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சமஷ்டி அடிப்படையிலான மாற்றுத் தீர்வு ஒன்றுக்கு முன்வந்துள்ளது.

ஆனால் இந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை எட்ட முன்னர் போரின் வடுக்களைச் சுமந்த தமிழ் மக்களின் போரின் சுமைக்கு



கண்ணாடியாக இலங்கையைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்துப் பார்த்து நிற்கின்றன.

கடந்த இரண்டு வருடகாலமாக நீளும் இலங்கையின் சமாதான முயற்சி, தற்பொழுது ஒரு முடக்கு நிலையிலிருக்கிறது. அது ஆரம்பத்தில் கொண்டிருந்த வேகம் தற்போது இல்லை.

இந்த விவகாரம் புலிகளால் சமர்ப்பிக்கப் படவுள்ள இடைக்கால நிர்வாக திட்ட வரைபையடுத்து, மீளவும் ஒரு சர்வதேச விழிப்புக்கும், வேகத்திற்கும் உள்ளாகப் போகிறது.

இதேநேரம் சமாதான முயற்சிகள் தற்போது முடங்கிப் போய்க் கிடப்பதற்கு சர்வதேசத்தின் அதீத தலையீடுகளும், நிலைமைகளுக்குப் பொருந்தாத அழுத்தப் பிரயோகங்களும் ஒருகாரணி.

இருபது வருடகாலம் இரத்தம் சிந்திப் போராடிய ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தை தங்கள் இராஜதந்திர அரசியல் கொள்கை, பாதுகாப்பு மற்றும் வர்த்தக நலன்களின் விஸ்தரிப்புக்காக பலியிட நினைப்பதன் விளைவும், தற்போது பேச்சுக்கள் முடங்கிக் கிடப்பதில் மறைந்திருக்கும் புறக்காரணிகளில் ஒன்றாகும்.

ஆனால், தமிழர்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தை மழுங்கடித்து விடுவதற்காக, பேரண்ட பேரரசுகளுடன் தென்னிலங்கை இருப்புக்கட்சிகள் கைகோர்த்துள்ளமையும் தெரிகின்றது.

இதில் இலங்கையின் தற்போதைய அரசு மையம்- ஜனாதிபதி சந்திரிகாவினாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் வெவ்வேறாகப் பிளவுபட்டிருப்பதால், அது தனித்துப் பேரண்ட பேரரசுகளோடு மட்டுமல்லாது, பிராந்திய வல்லரசுகளோடும் மறைதீவிர தூண்டலுக்குள் உள்ளாகியுள்ளன.

இதில் பேரண்ட பேரரசு என்று சொல்லக்கூடிய அமெரிக்கா, இலங்கை மையம் கொண்டுள்ள ஆசிய பிராந்தியத்தின் அரசியல் விவகாரங்களில் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ள அதேவேளை, தனது நட்பு நாடான ஜப்பானை, முழுமையாக இலங்கை விவகாரத்தில் பயன்படுத்தத் தொடங்கி விட்டது.

இப்போது இலங்கையின் விவகாரம் - சர்வதேச நாடுகளுக்கிடையில் வழமையாக கையாளுகின்ற பலம் மூலம் கட்டுப்படுத்தல், நிதி மூலம் கட்டுப்படுத்தல், இராஜ தந்திர அழுத்தங்கள்மூலம் கட்டுப்படுத்தல் என்ற அதன் அதிகார பிரயோகங்களுக்கு உட்பட்டுள்ளது.

இந்த சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தீவிரமாக உழைத்து வருவதாகக் கூறினாலும், நடைமுறை யதார்த்தம் என்னவென்றால், தத்தமது தேசபாதுகாப்பிற்கான புவிசார் அரசியல் மற்றும் இராணுவத் தளத்தை விஸ்தரிப் பதற்கும், மேற்குலக சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துவதற்கும் முயற்சி செய்கிறார்கள் என்பதே உண்மை.

இன்றைய தென்னாசிய நாடுகளில் பரந்து கிடக்கும் கனியவளங்கள் முற்றாக அந்த நாடுகளின் வர்த்தக வளர்ச்சிக்கு அவசியமானதாக இந்த நாடுகள் கருதுகின்றன. இதைவிட, மிக முக்கியமாக இந்த நாடுகள் கருதுவதெல்லாம், மேற்குலகின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால், ஆசிய பிராந்தியத்திலுள்ள மோதல்களை வேரறுக்க

ஜப்பானும், தண்டம் என்று சொல்லக் கூடிய அழுத்துகின்ற பாணியை அமெரிக்காவும் கையாண்டு வருகின்றன.

ஆனால், இந்த சாம, பேத, தான, தண்டத்திற்குள் சிக்கி, தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மழுங்கிவிடாது பாதுகாக்க வேண்டிய வரலாற்றுக் கடமை இன்று தமிழர் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உண்மையில் சொல்லப் போனால், தமிழ்மக்களின் இரண்டு தசாப்த கால போராட்டத்தில் இப்போது தான் தீவிர சர்வதேசப் பொறியொன்று விடுதலைப் போராடடத்திற்கு விரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறியிலிருந்து மீள வேண்டியது அவசியம்.

மாறிவிட்ட உலக ஒழுங்கும், சர்வதேச நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மாத்திரமன்றி, இன்று பரந்து விரிந்திருக்கும் எல்லா விடுதலைப் போராட்ட அமைப்புக்களிற்கும் பாதகமாகவே இருக்கின்றன.

இன்று தனித்த பேரண்ட பேரரசாகத் திகழும் அமெரிக்காவும், அதன் அனுசரணை நாடுகளும் இன்று மரபுசார் அரசுகளைப் பாதுகாப்பதிலும், அவற்றின் நெருக்கடிகளுக்குக் கைகொடுப்பவையாகவுமே மாறி விட்டன. இதன் விளைவு, இன்று விடுதலைப் போராட்டங்கள் தனித்துவிடப்பட்டதான ஒரு நிலை தோன்றியுள்ளது.

இந்தப் புதிய கொள்கை மாற்றத்திற்கு முன்னர் விடுதலைப் போராட்டங்களுக்கு - ஏதாவதொரு வகையில் சில நாடுகள் தங்கள் அனுசரணையை வழங்கி வந்தன.

ஆனால், இன்று பயங்கரவாதம் என்ற பொதுநிலைப்பாட்டிலிருந்து கொண்டு, இந்த நாடுகள் எல்லா விவகாரங்களையும் கையாள முனைகின்றன.

இதன் பலன் இன்று ரணில் தலைமையிலான இலங்கை அரசிற்குக் கிடைத்துள்ளது.

இந்தச் சர்வதேச நாடுகளின் இராணுவ வர்த்தக கொள்கைப் பரப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த ரணில் வைத்திருக்கும் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை, தமிழர் தலைமை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளமையையே கடந்த சில மாதங்களாக, புலிகளின் வன்னித்தலைமை மையத்திலிருந்து நகர்த்தப்படும் அரசியல் அணுகுமுறைகள் தெளிவுபடுத்துகின்றன.

ஆனால், ஒரு வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசின் அணுகுமுறைக்குக் கிடைத்த தோல்வியே சமாதான முயற்சி முன்னெடுக்க முடியாத கட்டத்தை அடைந்துள்ளமை.

இதேவேளை, வெளியாரின் தலையீட்டை அதிகளவில் இலங்கைத் தீவுக்குள் ரணில் தலைமையிலான அரசு மேற்கொண்டு விட்டது என்ற குற்றச்சாட்டின் எதிர்வினைகள், தென்னிலங்கையில் இப்போது தெளிவாகத் தெளிவுபடத் தொடங்கியுள்ளன.

அண்மையில் தென்னிலங்கையில் தீவிர வகுப்பாளர்களின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது.

ஜப்பானின் நடவடிக்கையோ இரண்டாம் உலகப் போரின்போது மேற்கொண்ட தாக்குதலின்போது, அந்த நாட்டின் தாக்குதலின் போது இலங்கை பாதிப்புக்குள்ளான தன் பின்னர், இப்போது நேரடியாக ஜப்பானின் நடவடிக்கைகள் இலங்கையில் தீவிரம் பெற்றுள்ளது.

இவையெல்லாம் இந்த சர்வதேச நாடுகள் தென்னாசியாவை மேற்குலக வர்த்தகமயமாக்கத்திற்கான ஒரு பயன் கருவியாக பயன்படுத்தும், இராஜதந்திர வலுப்படுத்தலுக்காக மேற்குலகம் அரங்கேற்றும் நாடகமே.

ஜப்பானுக்கு விடுதலையளித்த போது - அமெரிக்கா பரிசளித்த அமைதிசாசனத்தின் பிரகாரம், ஜப்பான் போருக்குச் செல்லக் கூடாது அதற்கான ஆயுதங்களைச் செய்யக்கூடாது என்ற ஜப்பானின் போர்க் குணத்திற்கு இடப்பட்டிருக்கும் கை விலங்கு போன்று, புலிகளுக்கும் இந்த இரண்டு வருட காலத்தில் இட நினைத்த கைவிலங்கு யாவும் தமிழர் தலைமையின் முன் தோற்றுப் போயுள்ளது.

புலிகளின் பங்களிப்புகள் ஏதுமின்றியே புலிகளால் நிராகரிக்கப்பட்ட ரோக்கியோ மாநாட்டில் சில பிரகடனங்களை வெளிப்படுத்தி, புலிகளைக் கட்டுப்படுத்த முனைந்த இராஜதந்திர போர் வியூகம் புஷ்வாணமாகிப் போய் விட்டது.

எப்படியென்றால், ரோக்கியோ மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்ட தீர்மானங்களில் ஒன்று ஆயுதபலத்தைக் குறைப்பது, படை வீரர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற கருத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த வகையில் பலம்பொருந்திய புலிகளின் விடுதலைப்போராட்டத்தை பலவீனமாக்க நினைக்கும் இந்த நாடுகள் மறுக்கப்படும் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் முனைப்பு காட்டவில்லை என்பது வேதனையே.

இலங்கையின் சமாதான விவகாரத்தில் - இலங்கை அரசு நடந்து கொள்கின்ற முறை தர்க்கரீதியில் ஒரு முரனகையாகவுள்ளது.

இன்று இலங்கை விவகாரம் அரசு, புலிகள், சர்வதேசம் என்ற முத்தரப்பினைக் கொண்ட முக்கோண விவகாரமாகியுள்ளது.

இதில் இலங்கை அரசிற்கு அதிக உதவிகளையும், ஆதரவையும் சர்வதேச சமூகம் வழங்குவதன் மூலம் அரசும், சர்வதேசமும் ஒரு தரப்பாகவும், புலிகள் தனித்த ஒரு தரப்பாகவும் என்ற ஒரு காட்சி நிலை தோன்றியுள்ளது.

கிடைக்கும் பரிகாரங்களை தென்னிலங்கை மக்களின் நிவாரணமாக மாற்றுவதும் தென்னிலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கு பயன்படுத்துவதும் எத்தகைய விளைவுகளைத் தரும் என்பதைச் சிந்திக்க வேண் டும். தீர்வின் எல்லைகளை எட்டி விட வேண்டும் என்பதற்காக தமிழ்மக்களின் உரிமைகளை புறந்தள்ளி விடக் கூடிய நிலைமையினை தோற்றுவிக்கக் கூடாது.

இந்த வகையில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் பல்வேறு நாடுகளின் நகரங்களிலும் நடைபெற்று பல்வேறு தீர்மானங்களும் இணக்கப்பாடுகளும் எட்டிய போதும் தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைச் சுற்றி முட்கம்பிவேலி இடப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையில் எத்தகைய முன்னேற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

அத்தோடு தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புக்கென உருவாக்கப்பட்ட உப குழுக்களும் எந்தவிதமான செயற்திட்டங்களையும் முன்னெடுக்காமலேயே செயல் இழந்து விட்ட நிலையில் புலிகள் இடைக்கால நிர்வாக கட்டமைப்பொன்றின் தேவையை வலியுறுத்துவதை தென்னிலங்கை இனவாதிகளும் சிங்கள மக்களும் எதிர்ப்பை தெரிவிப்பதானது தமிழ் மக்களுக்கான தீர்வு எத்தகையது என்பதை சிங்களதேசம் எப்போதுமே இனங்கண்டு கொள்ளாது என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

ஆனால் இலங்கையில் மீண்டுமொரு யுத்தம் தவிர்க்கப்பட வேண்டுமானால் இலங்கையின் பொருளாதார மையங்கள் பாதுக்கப்படவேண்டுமானால் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைச் செலவுகள் மலைஏறாது தவிர்க்கப்பட வேண்டுமானால் தமிழ் மக்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இதனை சர்வதேச சமூகமும் புரிந்து கொண்டு தமிழ்மக்கள் நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசிற்கும் சம அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும். அப்போதே சர்வதேசத்தின் விருப்புக்களையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

அந்த வகையில் தமிழ் மக்களின் தலைமையான விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் சர்வதேசத்தின் முன் தமிழ் மக்களுக்கான தற்காலிக தீர்வாக இடைக்கால நிர்வாக திட்டவரை பின் நகலை முன் வைக்க இருக்கிறது. ✧

# ஐ.நா. கூட்டத் தொடரும், அமெரிக்க - தென்னாசிய தலைமைகளின் அரசியல் வியூகங்களும் ...

நியூயோர்க்கில் நடந்து முடிந்த ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடர் - உலகத் தலைவர்களின் அரசியல் வியூகங்களைப் படம் பிடித்துக் காட்டியது. அதிலும் ஐரோப்பிய - அமெரிக்கத் தலைவர்களுக்கு நிகராகத் தெற்காசியத் தலைவர் விளங்கியது ஊடகங்களுக்கே பரபரப்பாக அமைந்திருந்தது. வறுமை, பொருளாதாரம், சுமை, போர், வன்முறை என்பன பேசப்பட்டாலும், பயங்கர



வாதம் ஐ.நா.மறுசீரமைப்புப் பற்றிய உரை - மேற்கு நாட்டுத் தலைவர்களைப்போல், தெற்காசியத் தலைவர்களின் உரைகளிலும் பிரதான இடம் வகுத்தது. இந்தக் கட்டுரை ஈராக் தொடர்பான - அமெரிக்கக் கொள்கைகளில் ஏற்பட்டுவரும் நெருக்கடியையும், இந்தியா, பாகிஸ்தான், இலங்கைத் தலைவர்களின் உரைகளின் பினனாலுள்ள அரசியல் உள்நோக்கங்களையும் அலசுவதாக உள்ளது.

### ஈரான் நிலவரம்

போருக்குப் பிந்திய அரசியல் நிர்வாக - அபிவிருத்தி கட்டமைப்புக்கள் - அமெரிக்க சார்புடைய ஊடகங்களில் குறிப்பிடுவது போல, எந்தவித முன்னேற்றத்தையும் பெரிதாகக் கொண்டிருக்கவில்லை. மிக மோசமான வாழ்க்கை முறை மைக்குள் ஈராக் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். வறுமை, போஷாக்கின்மை, அமைதி யின்மை என்பவற்றுக்கப்பால் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்முறைகள், கலாசார சீரழிவுகள் எனப் பல நெருக்கடிகளை அமெரிக்க - பிரித்தானிய இராணுவத்தினரால் அம்மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

திட்டமிட்ட அழிப்புகள், சுரண்டல்கள், அரசியல் பழி வாங்கல்கள், சூறையாடல்கள் முற்றாக அம்மக்களை நெருக் கடிக்குள் தள்ளியுள்ளது. அதன் விளைவுகள் அமெரிக்க - .பிரிட்டிஷ் படைகளைத் தாக்குவதற்கான திட்டமிடல்களை அம்மக்களே முன்னின்று நிகழ்த்துகின்ற அரசியலுக்கு வழி வகுக்கின்றது. ஈராக் மக்கள் - அமெரிக்கப் படைகளை அழித்தொழிக்கும் போராட்டத்தில் ஈடுபட வழிவகுத்துள்ள சூழல் - அமெரிக்க வல்லாதிக்க அரசியல் போக்கில் சிறு சறுக்கல்களை உருவாக்கியுள்ளது.

அமெரிக்க நலன் விரும்பியான ஜோசப்ஞை கூறுவது போல, ஈராக் போருக்குப் பின்பு, அமெரிக்கா ஒரு **'Empire'** ஆக மாறுகின்றது என்ற எண்ணம் பிசகத் தொடங்கியுள்ளது.

### வில்லியம் புஷ்

அத்தகைய பிசகல் இரண்டு பரிமாணத்தில் நிகழலாம் என, அமெரிக்க எதிர்ப்பு வாதிகளின் உரையாடல்கள் தெரியப்படுத்துகின்றன. ஒன்று - அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பதனாலோ அல்லது அமெரிக்காவுக்கு அதிக அமெரிக்கப் படைகளின் உடல்களை அனுப்புவதனாலோ ஏற்படப்போவதில்லை.

மாறாக, அமெரிக்கா - ஈராக் மீது ஏற்படுத்திவரும் அரசியற் கொள்கைகளின் பலவீனங்கள், சுரண்டல்கள் தன்மையில் காணப்படும் போலித்தனங்களின் அம்மலப்படுத்தல்கள் முழுமையான பேரரசின் பலவீனத்தை காட்டுவதனூடாக ஏற்படமுடியும். இது மட்டுமன்றி இஸ்ரேலிய - பலஸ்தீன அரசியலில் ஏற்பட்டு வரும் தோல்விகள், வளைகுடா மட்டுமன்றி, இஸ்லாமிய உலகம் முழுவதும் அமெரிக்க எதிர்ப்பு வாதம் தீவிரமாகப் பரவுகின்ற நிலை அபாயமானதாகவே விளங்குகின்றது.

அமெரிக்க அதிகாரிகளும், இராணுவமும், ஈராக்கைக்கைப் பற்றி, பின்னர் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புக்களில் காட்டிய அசமந்தப்போக்கு, முழு உலகத்திலும் பேசப்படும் பலவீன அரசியலாக மாறுகின்றது.

இரண்டாவது - வில்லியம் புஷின் ஆட்சிக்காலத்துக்கான அடுத்த கட்டத்தேர்தல் - 2004 ஆம் ஆண்டில் ஏற்படவுள்ள ஆட்சி மாற்றம், ஜனநாயக்கட்சிக்கு வாய்ப்பினைக் கொடுக்கலாம். ஏனெனில் , வில்லியம் புஷின் ஈராக் கொள்கை பலமாக ஜனநாயக்கட்சியால் மட்டுமன்றி, அமெரிக்க மக்களாலும், அவர்களின் தலைமைகளாலும் விமர்சிக்கப்படுகின்றன. அத்துடன், ஐ.நாடு பொதுச் செயலாளரின் அண்மைய உரையில் - புஷின் ஈராக் பற்றிய கொள்கைளைப் பெரியளவில் கண்டித்துள்ளார். இது அமெரிக்க மக்களுக்கும், அதன் புத்திஜீவிகளுக்கும்



பெரும் அவமானமாகவே அமையும்.

அதுமட்டுமல்ல, புஷ் ஈராக் கைத் தக்க வைக்கப் போட்ட 'பன்னாட்டுப்படை' என்ற திட் டமும், ஏறக்குறையத் தோற்றுப் போய் விட்டதென்றே கூறலாம். இதனால், 15 ஆயிரம் அமெரிக்கப் படைகளை மேலதிகமா ஈராக் அனுப்பும் கொள்கை பற்றி, புஷ் தற்போது ஆராய்ந்து வருகின்றார். ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்தபோது, நிகழ்ந்த கலந்துரையாடலில்- புஷ் அந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார். எனவே, இத்தகைய நெருக்கடியைத் தாண்டி, புஷ் மீளவும் தெரிவு செய்யப்படுவது 60 சதவீதம் கடினமானது. அப்போது ஏற்படப்போகும் மாறுதல், அமெரிக்கப் பேரரசுக்கான இலக்கின் தீவிரத்தன்மையைக் குறைக்கலாம்.

எனவே, புஷ் ஈராக் கொள்கையை மாற்றவேண்டும் அல்லது அடுத்த தடவை ஆட்சி யைப் பிடிப்பது சாத்தியப்படாது. எதுவானாலும், அது புஷ்ஷுக்கு தோல்வியானது. அது தந்தை ஜோர்ஜ் புஷ்ஷின் நிலையை- மகன் வில்லியம் புஷ் சந்திக்க உள்ளார்.

### வாஜ்பாய்

வாஜ்பாயின் நியுயோர்க் விஜயமும், அவரது ஐ.நா. உரையும் - இரண்டு பிரதான நோக்கத்தைக் கொண்டது. ஒன்று - பாகிஸ்தானையும், அதன் எல்லையைக் கடந்த பயங்கரவாதத்தையும் உலகத்துக்கு மீளவும் அம்பலப்படுத்துவது. அதனூடாக பாகிஸ்தானை உலக ஆதரவு சக்திகளிடமிருந்து அந்நியப்படுத்துவது, இத்தகைய கோணத்தில் தொடங்கிய வாஜ்பாயின் பிரதான உரையை, பாகிஸ்தானிடமிருந்து எதிர்நோக்கும் அபாயங்களையும் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

முஷராப் என்ற தனிச் சக்தியைவிட, அவருக்கு ஆதரவும், பக்கபலமுமாயுள்ள அமெரிக்காவையும், அவர் கண்டிக்கீத் தவறவில்லை. வில்லியம் புஷ்ஷைச் சந்தித்த வாஜ்பாய் - ஐ.நா.உரையைத் திரும்பக் கூறியதுபோல், பாகிஸ் தானைப் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டதுடன், புஷ் அவற்றை ஏற்றுக் கொண்டதாகவும் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார். எப்படி உலகம் பயங்கரவாதத்தைக் கண்டிக்கின்றதோ, அப்படியே வாஜ்பேய் - பாகிஸ்தானை விரட்டும் அரசியலை நிகழ்த்தியுள்ளார்.

இரண்டாவது - ஈராக்கில் பணிபுரிய, இந்தியப் படைகளை அனுப்பும் பிரச்சினையை பாகிஸ்தான் ஊடாகவே வாஜ்பாய் - புஷ்ஷுக்கு விளக்கி யுள்ளார். அதாவது, பாகிஸ்தானின் பயங்கரவாதத்தால் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் இந்தியாவை, பாதுகாக்க இராணுவம் அதிகம் தேவையெனக் கூறி, அதனாலேயே ஈராக்குக்கு - இந்தியப் படைகளை அனுப்பமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

இது ஒருவகை நொண்டிச் சாட்டு என்றே கூறலாம். மாறாக, பாகிஸ்தானால் தான் இந்தியா- அமெரிக்காவுக்கு உதவமுடியாதுள்ளது என்ற இராஜதந்திர அரசியலையும் கலந்து, வாஜ்பாய் - புஷ்ஷுக்கு விளக்கியுள்ளார். முட்டாள்தனமான தற்கொலை அரசியலை மேற்கொள்ள விரும்பாத வாஜ்பாய் மிக நாகரிகமாகவும் தந்திரமாகவும், அதனை அமெரிக்க ஆட்சியாளருக்கு எடுத்துக் கூறியுள்ளார். யதார்த்தமாக இந்தியாவின் நிலையை உலகம் ஏற்றுக் கொள்ளும் என்பதுடன், இதன் பின்னான இராணுவ அர



சியல் விளைவுகளையும் பாகிஸ்தான் எதிர் கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

### முஷராப்

முஷராப்பின் காஷ்மீர் தொடர்பான உரையாடல்- இந்தியாவுடன் ஒப்பிடும்போது, எடுபடவில்லை. மாறாக முஷராப் கூறியதைவிட, வாஜ்பாய் கூறிய ஜனநாயகத் தேர்தல் என்ற காஷ்மீர் சுலோகம், மேற்கு நாட்டு தலைவர்களிடம் நிறையவே எடுபட்டிருந்தது. காஷ்மீர் பற்றியும், அதில் பாகிஸ் தானுக்குள்ள உரிமை பற்றியும், முஷராப் கூறினாலும், அதன் தாக்கம் ஊடகங்களையோ, தலைவர்களையோ பாதிக்க வில்லை.

ஆனால், அமெரிக்க அதிபரைச் சந்தித்த முஷராப்- தனது நியாயங்களைக் கூறியதுடன், அமெரிக்காவுடனான உறவைப் பலப்படுத்துவதிலும், பரஸ்பரம் இருநாட்டு உறவுகளின் அடிப் படைகளையும் விளங்கக் கூடியதாக அமைந்திருந்தது.

> இலங்கை பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவுக்கு - உள்நாட்டு அரசியல் பிரச்சினை, பிராந்திய அரசியல் நெருக்கடி, உலக அரசியல் நெருக்கடி என்று ஏகப்பட்ட பிரச்சினைகள். ஜனாதிபதி சந்திரிகாவுடனான போட்டியில் வெற்றிபெற்று, ஐ.நா.வுக்குச் சென்றாலும், வட - கிழக்கு அரசியலைக் கையாளும் பலத்தைக் கொடுத்த சக்திகளைத் திருப்திப்படுத்தும் போக்கை அவர் ஐ.நா.வில் காட்டவில்லை. மாறாக, அவர்களது உதவிகளுக்கல்லாம் ஒரு நன்றியுடன் முடித்துவிட்டார்.

முஷராப் - இந்தியாவை முறியடிக்கப் போட்ட திட்டம் பெரியளவில் வெற்றிபெறவில்லை. ஆனாலும், பிறநாடுகளுடன் நெருக்கமான உறவு களையும், வர்த்தக, பொருளாதார உடன்பாடுகளையும் எட்ட பல நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார். முஷராப்பின் ரஷ்யத் தலைவர்களுடனான சந்திப்பு சாத்தியப்படாது போனாலும், வாஜ்பாய்- ரஷ்யாவுக்கு அரசமுறைப் பயணம் ஒன்றை உடனடியாக மேற்கொள்ளப்போவதாக, இந் திய வெளிவிவகார அலுவலகம் அறிவித்துள்ளது. அதுவும் நியூயோர்க் விஜயத்தை முடித்த ஒரு சில மணிநேரத்திலேயே, இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

கே.ரீ.கணேசலிங்கம்

### ரணில் வீக்கிரமசிங்க

இலங்கை பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவுக்கு - உள்நாட்டு அரசியல் பிரச்சினை, பிராந்திய அரசியல் நெருக்கடி, உலக அரசியல் நெருக்கடி என்று ஏகப்பட்ட பிரச்சினைகள். ஜனாதிபதி சந்திரிகாவுடனான போட்டியில் வெற்றிபெற்று, ஐ.நா.வுக்குச் சென்றாலும், வட - கிழக்கு அரசியலைக் கையாளும் பலத்தைக் கொடுத்த சக்திகளைத் திருப்திப் படுத்தும் போக்கை அவர் ஐ.நா.வில் காட்ட வில்லை.

மாறாக, அவர்களது உதவிகளுக்கல் லாம் ஒரு நன்றியுடன் முடித்துவிட்டார். ஆனால், இந்தியப் பிரதமர் உரையில் - குறிப்பிட்ட ஐ.நா. மறுசீரமைப்புப் பற்றி இலங்கைப் பிரதமர் அதிக கவனமும், முக்கியத்துவமும் தனதுரையில் கொடுத்திருந்தார். அது ஒருவகையில், இந்திய சார்புநிலையை, தான் தக்க வைத்திருக்கின்றேன் என்று காட்டுவதற்கான இராஜ தந்திரத்தைப் புலப்படுத்துவ தாகவே இருக்கலாம்.

ஏனெனில், ஜே.வி.பி என்ற அமைப்பில் - தீவிர அரசியல் இந்திய ஆசீர்வாதத்துடன் தான் அரங்கேறுகின்றது என்பதும், அதன் முயற்சியாக சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டு சாத்தியப்படலாம் என்ற எண்ணமும், ரணிலிடம் இருந்திருக் கலாம். இதனை முறியடிக்கவும், தனது அரசியல் சாதுரியத்தை தெற்காசிய தலைமைக்குள்ளால் உலகத்துக்குக் காட்டுவது போன்ற நிலையையும் எடுக்க முயன்றிருக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்க- இந்தியாவுடன் பொருளாதார, வர்த்தக உறவை மேம்படுத்த இரு குழுக்களை நியமிக்க உடன் பட்டிருப்பதுடன், வாஜ்பாயுடனான உரையாடலின் போது- பொருளாதார அபிவிருத்திக்கான



வழிவகைகளைப் பற்றிக் கலந்து ரையாடியுள்ளார். அதேநேரம் அமெரிக்காவுடன் மேற்கொள்ளவுள்ள சுதந்திர வர்த்தக ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றியும், ஏனைய நாட்டுத் தலைவர்களுடன் வர்த்தகம், பொருளாதாரம் என்ற அடிப்படையில் உரையாடல்களை நிகழ்த்தியுள்ளார். இதன்பின்னால், இலங்கையின் பொருளாதார சுபீட்சம் என்பதுடன், ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலும் அடங்கியுள்ளது. தென்னிலங்கையில் தனக்கு எதிரான சக்திகளுக்கு முறியடிக்கவும் வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுவரும் சமாதான அரசியல் சூழலை, தமக்குச் சாதமாகப் பயன்படுத்த உதவவுமே, பொருளாதார உதவிகளும், உலக நாடுகளின் வருகையும் என்பதை ரணில் விக்கிரம சிங்க விளங்கிக் கொள்ளாத வரல்ல. அவர் அந்த இலக்கை அடைவதன் வாயிலாக, முழு இலங்கையையும் ஐக்கியப்படுத் துவதுடன், எதிர்கால ஆட்சியாளனாகத் திகழலாம் என்ற நம்பிக்கையுடனேயே செயற்படுகிறார். அதனை விளங்கவைக்கும் ஓரம்சமே ஐ.நாட்டில் ஜனாதிபதிக்குப் பதிலாக பிரதமரின் உரை சாத்தியப்பட்டது.

அந்தளவுக்குச் செல்வாக்குடைய சக்தியான, மேற்கு நாடுகள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க விளங்குகிறார். இதில் இந்தியாவைக் கையாளுவதே, அவரது ஐ.நா. மறுசீரமைப்பு என்ற கருத்தாகும். வாஜ்பாய்கூட, ஆரம்பத்தில் ஐ.நாவின் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை என்ற கோரிக்கையைக் கொண்டிருந்தாலும், பாகிஸ்தானைக் கையாளுகின்ற நிலையையே முதன்மைப்படுத்தியிருந்தார்.

எனவே, அவர் காட்டாத கரிசனையையும், முக்கியத்து வத்தையும் இலங்கை பிரதமர் காட்டியது, இந்தியா - பொறுத்த அவரது அளவீட்டின் பிரதிபலிப்பாகும். ரணில் விக்கிரமசிங்க மேற்கில் நிரந்தர நண்பன். இந்தியாவின் தற்காலிக கூட்டாளி, இதனையே அவர் தொடர்ந்தும் கடைப்பிடிக்க விரும்புகிறார். முழு உலகநாடுகளின் சந்தையாக இலங்கையை மாற்றுவதும், அதன் விளைவாக ஏற்படும் பொருளாதார சுபீட்சத்தைக் கொண்டு, தென்னிலங்கை அரசியலில் நிரந்திர இடத்தைப் பிடிப்பதும், தமிழர்களின் தாயகப் போராட்டத்தையும், மக்களையும் பொருளாதார போட்டிக்கூடாகத் தகர்ப்பதையே, தற்போதைய கொள்கையாகக் கொண்டு இயங்குகின்றார்.

முடிவாக, ஐ.நா. கூட்டத் தொடர் - புஷின் எதிர்பார்க் கையை மறுதலித்துள்ளது. 'பன்னாட்டுக் கூட்டுப்படை' என்ற அரசியல் பொறியும், ஈராக் தொடர்பான கொள்கையும் கோபி அனான் உட்பட பலரால் விமர்சிக்கப்பட்டுள்ளதும், பெரும் நெருக்கடியாக அவருக்கு ஏற்பட்டுள்ளது. தென்னாசியத் தலைவர்கள் தமக்குள் எழுந்துள்ள முரண்பாட்டை அம்பலப்படுத்தியதுடன், அதற் கான அரசியல் தளத்தை உலக நாடுகளுடன் இணைந்து உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் வாஜ்பாயும், ரணில் விக்கிரமசிங்கவும் - முஷாரப்புடன் ஒப்பிடும்போது, சற்றுத் தூக்கலான நிலையிலேயே காணப்படுகின்றனர்.

# இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நமது ஈழநாடு நாளிதழுக்கு நல்வாழ்த்துக்கள்

## இனிதே மண்ணில் வாழ்ந்திடுவாய்

வயது ஒன்றினை நீயடைந்து
வளரும் அழகினை நாம்கண்டு
மகிழ்வு கெண்டோம் நமது
ஈழநாடே !
பொலிவுறு தோற்றங்கள் நிறைவுறவே
பெறுமதியோடு எம்கையில் தினமும்
புதுமைகள் தருவாய் நமது
ஈழநாடே நீ!
எட்டுத் திக்கும் புகழ்கொண்டு
எழுதும் வல்லமைத் திறனோடு
என்றும் திகழ்வாய் நமது
ஈழநாடே நீ!
ஆற்றல் மிக்க சிறுவர்களை
அறிந்து அவர்கள் ஆக்கங்களை
அகிலம் உணர்த்திடும் நமது
ஈழநாடே நீ!
சிநேகிதம் மலர்ந்திட மகளீரின்
சிநேகிதியாக சேவைகள் புரியும்
சிறப்பால் உயர்வாய் நமது
ஈழநாடே நீ!
உலக அரங்கில் விளையாட்டின்
உணர்வை தெரிந்து கொள்வதற்கு
உதவும் உத்தமன் நமது
ஈழநாடே நீ!
அறிவியல் சமயம் விஞ்ஞானம்
அமைவுற விருந்தினர் பக்கம்
அனைத்தும் வழங்கும் நமது
ஈழநாடே நீ!
என்றும் நல்லவை தந்திடுவாய்
எதிலும் முதன்மை பெற்றிடுவாய்
இனிதே மண்ணில் வாழ்ந்திடுவாய்
நமது ஈழநாடே நீ!

- அரியாலையூர் -
சி.சிவதாசன்.

## வாழ்க நம் ஈழநாடே....

செய்திகள் சொல் நாளும்
தினமும் எம் வாசல் வந்து
சேர்ந்திடும் ஈழநாடே ..... நீ
செய்யும் நற் சேவையாலே
தீந்தமிழ் வாழும் ... நாளும்
திசைகளின் குரலாய் வந்து
திகைப்புற வைப்பாய் வாழ்க...

ஆண் டெதன்று கடந்தாய் வாழ்க.
ஆயிரமாயிரமாய்
ஆண்டுகள் காண்பாய் வாழ்க...
நீண்டிடும் யுகங்கள் தோறும்
நின்புகழ் தொடரவேண்டும்
ஆண்ட நம் பரம்பரையின்
அழிவுறாப் பெருமையெல்லாம்
மீண்டும் உன் சேவையாலே
மிளிர்ந்தெழ வேண்டும்.

சி. கவியுகன்.
தொண்டமானாறு.

ஈழநாடு நமது நாடு
இனிய எங்கள் தாயின் நாடு
ஈழநாடு நமது ஏடு
இனிய தாய்த்தமிழின் ஏடு.

செய்தி சொல்லி நிற்பாய்
நல்ல சேவை செய்து நிற்பாய்
உள்ளம் உவகை கொள்ளும்
உயர்ந்த கதைகள் கூறி வைப்பாய்

அரிய உண்மை சொல்வாய்
அகில மேன்மை சொல்வாய்
பெரிய பெரிய விஷயம் யாவும்
பெருமையோடு பகிர்வாய்

கலைகள் பற்றி நாளும் நல்ல
விபரம் சொல்லிச் செல்வாய்
கவிதை பாடி காலந்தோறும்
கண்களிலே நிலைப்பாய்

உலகம் உந்தன் தாளில்
உருளும் தன்மை பார்ப்போம்
உலவும் பார்வை முழுதும்
ஊரின் நிலைமை தெரியும்

வாழ்க ஈழநாடே
வளர்க ஈழநாடே
உயர்க ஈழநாடே
நமது ஈழநாடே.

க.திருச்செம்பியன்
கிளிநொச்சி.

## தேசியத்தின் குரலாய் ஈழநாடே வாழ்க!

தேசியத்தின் நாளேடே ஈழநாடே வாழ்க!
தேமதுரத் தமிலொலியே ஈழநாடே வாழ்க!
ஆசியாவின் முன்னோடி நாளேடே ஈழநரடே வாழ்க!
ஆசிகள் பெற்று தாயகத்தில் வளரும் ஈழநாடே வாழ்க!
வேடிக்கை கதைகள் பேசாத வெண்ணிலவே ஈழநாடே வாழ்க!
விடிவுக்கு துணை நிற்கும் வெற்றிப்படைப்பே ஈழநாடே வாழ்க!
வாடிக்கை பேணுகின்ற வசந்தமே ஈழநாடே வாழ்க!
வரலாறு எழுகின்ற நாளேடே ஈழநாடே வாழ்க!
கோடிக்கணக்காக விரியப்போகும் கூரவனே ஈழநாடே வாழ்க!
கோரிக்கை பரப்பி ஓங்கிடும் ஈழநாடே வாழ்க!
தேடிப் படித்தாலும் தெவிட்டாத இன்பம் தரும் ஈழடே வாழ்க!
தேசத்தின் கண்ணாக விளங்கும் ஈழநாடே வாழ்க!
நாடுவோர் உள்ளம் கவர்ந்திடும் ஈழநாடே வாழ்க!
நாட்டுக்கு சேவை ஆற்றிடும் ஈழநாடே வாழ்க!
தேடுவோர் பொருளை கொடுத்திடும் ஈழநாடே வாழ்க!
தேவைகள் அறிந்து சேவைகள் ஆற்றிடும் ஈழநாடே வாழ்க!
ஓராண்டு கடந்து காலடி பதிக்கும் ஈழநாடே வாழ்க!
உன்னால் இங்கு வெற்றி கிடைக்கு உறுதி ஈழநாடே வாழ்க!

**கவிமாமணி. காரை எம்.பி.அருளானந்தன்**






## வாழ்க்கைப் புத்தகம்



ஒழுங்கு படுத்தப்பட முடியாதவாறு
சிதைந்துபோன எனது வாழ்க்கைப் புத்தகத்தின்
ஒவ்வொரு பக்கங்களையும்
தேடி எடுத்ததேன்
அந்தோ ஆச்சரியம்
ஏனெனில் ...
என் தேச மக்களின் வாழ்க்கையும்
எனது புத்தகத்தின் பிரதிகளாகவே
மொத்தத்தில்
கருவறையில் நானிருக்கையில்
என் தேசத்தில் பொருளாதாரத்தடை
பசியால் நான் அழுத கண்ணீர்
என் தாயின் கண்களால்
வடிந்தது உண்மை
நான் பிறந்ததன் பின்
என் தேசப் பஞ்சம்
என் தாயின் முலையில்
பாலூற விடவில்லை
நான் நடக்கத் தொடங்கியதும்
ஒரேயடியாய்....
செம்மணிதாண்டி நடக்கவைத்தது போர்
நான் படிக்கத் தொடங்குகையில்
என் பாடசாலை மரத்தடியாய் இருந்ததுண்மை
அமைதியாய்...
நான் சுதந்திரமாய்....
நிம்மதியாய் இருதற்கு.
அன்று கழித்த இளமைக் காலத்தில்
எந்தப் பக்கங்களிலும்
சிறு தகவல்கூட இல்லை.
இன்றைய நாட்களில்
சுவரோரமாய் ஒட்டிய
போஸ்ரர்களிலும்
கதவோரமாய் சாத்திய
கரும் பலகைகளிலும்
சமாதானம்... நிம்மதி
எதை எதையோ எழுதுகிறார்கள்
ஆனாலும்....
போஸ்ரர்கள் கிழிக்கப்படுவதும்
கரும் பலகைகளில் எழுதியவை
அவ்வப்போது அழிக்கப்படுவதும்
வழமையான நிகழ்வாகிவிட்டது
யாராகிலும் அச்சுக்கோர்த்து
புத்தகமாக்க முயலவேயில்லை
காத்திருப்புக்கள் நிஜயமாகிவிட்டதால்
எனது புத்தகத்தையே
பிரதிகளாக்க உள்ளேன்.

- இரா.காயத்திரி.

# விழிப்புடன் இருப்போம்



ஜோசப் கிருஷ்ணா

பல விதமான வசதியீனங்களுக்குளாகியிருந்த காலமே, இன்றைய இளம் யாழப்பாணத்து விளையாட்டு வீரர்களுக்கு நிரம்பப் பரிச்சயமான காலமென்பது எல்லோருமே உணர்ந்து கொண்டதொரு விடயம். அந்த வசதி வாய்ப்புக்கள் மிகக்குறைந்த 95 இற்கு முற்பட்ட காலத்தில், யாழ். குடாநாட்டிற்கு வெளியே சென்று, தமது திறமையைக் காட்டும் அல்லது அடுத்தகட்டம் நோக்கிச் செல்லும் வாய்ப்பும், வசதியும் இல்லாமல் இருந்ததேயொழிய, திறமையில் எவ்வித குறையும் இருக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தின்பின் 96 ஆம் ஆண்டில் - யாழ். குடாநாட்டுக்குள் மீளக்குடியேறிய பின்னர், எல்லாமே சுலபம் என்றதொரு பாவனை எல்லாத் துறைகளிலும் காட்டப்பட முயறசிகள் செய்யப்பட்டன. ஆனால், மிகவும் கசப்பான நிகழ்வுகளாக தென்னிலங்கைக்கு அல்லது திருமலைக்கு எல்லா மட்டங்களிலும், குறிப்பாகப் பாடசாலை மட்டங்களில் விளையாட்டு நிகழ்வுகளுக்குச் செல்லச் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம், அர்த்தமற்ற, ஆனால் திட்டமிட்ட போக்குவரத்துச் சிக்கல்களால், அந்த வாய்ப்புக்கள் இல்லாது ஒழிக்கப்பட்டன. இக்கால கட்டத்தில் - விளையாட்டு வரர்களுக்கு ஏற்பட்ட தடைகள், தாம தங்கள் எம்மை எப்படி நோகாமல், வீழ்த்தலாம் என்பதற்கு நல்ல உதாரணமாகத் திகழந்தன எனக் கொள்ளலாம்.

இதன் பின்னர் - புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின், யாழ்ப்பாணப் பல்துறை விளையாட்டு வீரர்களும், வவுனியாவிற்கு அப்பால் தென்னிலங்கைக்கு மற்றும் கிழக்குப் பகுதிக்குச் சென்று விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் நிலையொன்று ஏற்பட்டது.

அதேபோல, இன்னொரு வேடிக்கையும் நடந்தது. யாழ்ப்பாணத்து விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் யாழ்.மண்ணின் விளையாட்டின் உயர்வு பற்றி தென்னிலங்கையில் திடீரென்று ஒரு ஞானோதயம் உண்டாயிற்று.

இந்தத் திடீர் அக்கறையால், பல தரப்பால் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யமுற்பட்டார்கள். இன்னொருவகையில் கூறுவதாயின், A-9 பாதை திறக்கப்பட்டதும், ஏதோ வெல்லாம் யாழ்ப்பாணத்தில் வந்து குவிந்ததுபோலவே, இந்த விளை யாட்டு வீரர்களும், உத்தியோகத்தர் களும் வந்தனர். ஆனால், அன்றிருந்த நிலையை இன்று காணமுடியவில்லை. எல்லாம் ஓய்ந்துபோனதொரு நிலையே காணப்படுகிறது. இருந்தும் மழைவிட்டும் தூவானம் விடாத கதையாக இடையிடையே குடாநாட்டின் விளையாட்டுத்துறை வளர்ச்சி பற்றியும், அதனூடு மக்களை மகிழச்சிப்படுத்தவும் ஏன் சமாதானத்தைக் கொண்டு வருவதாகவும், கதைகள் வருகின்றன, போகின்றன.

யாழ்ப்பாணத்தில் 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவை நடததுவதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றபோது, அது ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறும் என்று கூறப்பட்டு, வேலைகள் முடக்கிவிடப்பட்டன. இதே காலப்பகுதியில்- இந்த விளையாட்டுப் போட்டியை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதன் உள்நோக்கம் உயரியவர்களால் சரியாக எடுத்துக்காட்டப் பட்டபோது, உடனே ஒரு பாதுகாப்பாகப் பின்போடும் முயற்சிபோல, செப்ரெம்பரில் தேசியப் போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முக்கியமாகக் கூறப்பட்ட காரணங்களில் ஒன்று- ஓகஸ்டில் விளையாட்டு விழாவை நடாத்தினால், அதேகாலத்தில் பாரீஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கையின் முதன்மை நட்சத்திரங்களைச் சந்திக்கும் வாய்ப்பு, யாழ். மக்களுக்கு இல்லாமற்போகும் என்பதாகும். இது "மீசையில் மண்படாத" கதை என்பது எல்லோருக்கும் தெரியும். அதோடு "காதில பூவைக்கிற கதை" என்பதும் புரியும். ஏனெனில், பாரிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஓகஸ்டில் நடைபெறும் எனபது, ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே கதைக்கப்பட்ட விடயம். இதனை நோக்கும்போது, தென்னிலங்கை எம்மை எப்படி ஏமாற்ற முயற்சிக்கிறது. தனக குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறது என்பது தெளிவாக விளங்கும். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களுக்கு இதுவொரு உதாரணம் மட்டுமே. மேற்கண்டவை போன்ற பல விடயங்களுக்குப் பல்வேறு விளையாட்டுத்துறை சார்ந்தோரால், எந்தளவுக்கு நியாயபூர்வமான எதிர்ப்புக் காட்டப்பட்டது என்பது புரியாத ஒன்றாக இருக்கிறது அல்லது கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப நடவடிக்கையெடுப்போம் என்று தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்களோ தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க, தற்போதைய சூழ்நிலை தென் னிலங்கையிலிருந்தும் சில வசதிகளை, அனுபவங்களை, வாய்ப்புக்களைத் தரும் என்பதிலும் உண்மையுண்டு. அப்படியாயின், அவை எந்தளவிற்கு எமது பல்துறை விளயாட்டு வீரர்களை வந்தடைந்திருக்கின்றன. இவற்றின் மூலம், விளையாட்டுத்துறைகளில் காணப்பட்ட ஏறுமுகங்கள் என்ன வென்பதையெல்லாம் அறிந்து கொள்வதிலும், யாழ்ப்பாணத்து மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

பொதுவாக, எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்ற எட்டு மணித்தியால வேலை மற்றும் கொடுக்கப்பட்ட வேலையை மட்டும் செய்வது என்று ஒரு விடயம் உண்டு. யாழ்ப்பாணத்தின் விளையாட் டுத்துறை வளர்ச்சி பற்றிக் கதைப்பவர்கள், இதற்கப்பால் சென்று சிந்தித்தால் மட்டுமே எம்மண்ணின் விளையாட்டுத் துறையை வளர்க்கமுடியும். இதற்குத் தேவை விளையாட்டுத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், அதிகாரிகளின் புதிய சிந்தனை, புதிய நோக்கு, அர்ப்பணிப்பு இவற்றைக் கைக்கொண்டால் மட்டுமே, ஒரு ஏற்றத்தை யாழ்ப்பாண விளையாட்டுத் துறையில் காணமுடியும். அப்படி இல்லாவிட்டால் போனோம், கலந் தோம், திரும்பிவந்தோம் என்ற வாய்ப்பாடாகத்தான் எல்லாம் முடியும். உண்மையில், விளையாட்டுத்துறைகளின் வளர்ச்சியில் அக்கறை கொணடவர்கள் என்ற வகையில், தமிழீழ விளையாட்டுத்துறையினரின் சிந்தனைப் போக்கு வித்தியாசமானதாக, வெற்றிக் கனியைக் கொடுப்பதாகவுள்ளது. இதற்கு ஒரு உதாரணமாக - லண்டன் மாநகர் சென்று வந்த தாயக வலைப் பந்தாட்டச் சுற்றுலாக் குழுவினரின் சாதனைக ளைக் குறிப்பிடலாம். அதோடுகூட, அதில் அங்கம்வகித்த சராசரி குடும்பங்களைச் சேர்ந்த திறமைமிக்க வராங்கனைகளின் தெரிவையும் குறிப்பிடலாம்.



யாழ்.குடாநாட்டு விளையாட்டுத் துறைகள் பற்றிச் சிந்திக்கும்போது, மைதானங்களில் ஏற்படும் கலவரங்கள் மற்றும் கழகங்கள், அணிகளிடையே ஏற்படும் முரண்பாடுகள் எல்லாவற்றுக்கும் மேலாக யாரைக் கவிழ்த்தாவது, தான் பதவிகளையும், பதவியையும் பெற முயற்சிக் கின்ற ஒரு சிலரின் சிறுமைத்தனம் போன்றவை பற்றியும் சிந்திக்கத் தோன்றுகிறது. விளையாட்டுக்கள் எவை, எவற்றை யெல்லாம் இல்லா தொழித்து, எவற்றை எம்மிடம் உருவாக்க வேண்டுமோ, அவை மறுவளமாக நடைபெறுவது போன்ற உணர்வே ஏற்படுகின்றது. சில சம்பவங்களை நோக்கும்போது, சிலகழங்களுக்கு, மைதானங்களுக்கு கௌவரம் நிறைந்தவர்கள் போவதற்குத் தயங்கு கின்ற நிலை காணப்படுவதை எடுத்துக் காட்ட வேண்டும். விளையாட்டு மைதானங்களில் நிகழ்வுகள் முடிவடைந்து வீரர்களும், பார்வையாளர்களும் ஒரு திருப்தியை அடைந்திருக்க வேண்டும். மகிழ்வான மனநிலை ஏற்பட்டிருக்க வேண்டும். சிறப்பான நடத்தை மாற்றம ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று துரதிர்ஷ்டவசமாக வெறுப்பும், காழ்ப்பும், கோபமும், அதிருப்தியும் கொண்டவர்களாவே அநேகமான நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் திரும்புவதைக் காண முடிகின்றது. இதற்கு வீரர்கள், பார்வையாளர்களை மட்டும் எழுந்தமானமாகக் குறைகூறுவது ஒரு தலைப்பட்சக் கருத்தாகவே இருக்கமுடியும். ஏற்பாட்டாளர்கள், ஒழுங்கமைப்பாளர்களின் சிரத்தை, திறமை, விளையாட்டுக்களைக் கொண்டு நடத்துபவர்களின் துறைசார்ந்த புலமை என்பனவும் கருத்திலெடுக்கப்பட வேண்டும். இவையெல்லாம் ஒரே நேர் கோட்டில் விழும்போதுதான், சர்ச்சைகள், அதிருப்திகள் மிகக் குறைந்து கொண்டுபோகும் நிலையை எட்டமுடியும். இல்லாவிட்டால், இவற்றின் வளர்ச்சி எதிர்காலப் பள்ளிச் சிறார்களின் மனதிலும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, பிழையே சரி என்ற உரு வாக்கத்திற்கு இட்டுச்செல்லும் நிலைமை உருவாகிவிடும்.

இந்தவகையில், விளையாட்டுத் துறை தொடர்பில் பத்திரிகைகளில் கருத்தைப் பகிர்ந்துகொள்பவர்கள் குறைவாக இருப்பதையும் இணைத்துப்பார்க்கலாம். தேசிய, சர்வதேச விளையாட்டுத்துறைகள் பற்றி எழுதவும் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவற்றைப் பிரசுரிக்கும் வாய்ப்புக்கள் நிறையவுண்டு. இதேவேளை, விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டும்.

சகலமட்டத்திலும் உள்ளவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்த பலர் நம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்களின் விளையாட்டு சார்ந்த எழுத்துத் துறைப் பங்களிப்பின்மூலம், இலை மறை காயாக இருக்கும். மிகப்பலரின் திறமைகளை வெளிச்சத்துக்குக் கொணடு வரலாம்.

அதுமட்டுமன்றி, பரவலாகக் கருத்துக்கள் பிரசுரிக்கப்படும் நிலையில் - அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், இயல்பாகக் குறையும் நிலை உருவாகும். ஏனெனில், பேனாவின் நியாயபூர்வமான கருத்து மிகக் கூர்மையானது. எனவே, இத்துறையிலும் விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும். தவறுகள், குற்றங்களல்ல என்ற சிந்தனையுடன் எழுதத் தொடங்கினால், அது ஆரோக்கிய மான விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பது நிச்சயம்.

எனவே, யாழ்ப்பாணக் குடா நாட்டின் விளையாட்டுத்துறையை உண்மையாக வளர்க்க முயற்சிப்ப வர்கள் யார், விளையாட்டுத் துறையை வைத்துக்கொண்டு யாழ்.மக்களிடம் அரசியல், பொருளாதார நலன்களை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, ஒரு மாயைக்குள் எங்களை வைத்து, சமாதானத்துடன் விளையாடிக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதை, நாங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது விளையாட்டுத்துறையின் - எமது சிறார்களின், வீரர்களின், வீராங்கனைகளின் உயர்வு பற்றிய உண்மையான கரிசனை எங்களிடம் மட்டுமே இருக்கும், மாற்றானிடமல்ல. இதைப் புரிந்து கொள்ளவோம். ❖

"நமது ஈழநாடு" முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில்.....




## காலம் எப்போ வரும்....?

கருமேகக் கூட்டங்களை
இந்த மரம்
வீசிக்கலைக்கிறது...!

மரத்தின் ஓரக்கிளைகளில்
ஒடுங்கி ஒதுங்கிக்கொண்டிருக்கும்
பறவைக் குஞ்சுகளை
உதிர்கின்ற இலைகள்
போர்த்திக் கொள்கின்றன...

உறைவிடம் தேடி
ஓடிவரும் பறவைகளுக்கும்
அடைக்கலம் கொடுக்கிறது.

மின்னல் வெட்டுகிறது
இடியிடிக்கிறது
பூமியின் ஆச்சரியக் குறியாய்
இந்தத் தனிமரம் மட்டும் இன்னல்களைத்
தாங்கி நிற்கிறது.

மழை பெய்து
குஞ்சுகள் சாகக்கூடும் என்பதால் - தன்
வயிற்றின் விழுப்புண்களைக் குடைந்து
பறவைகள் பதுங்கிக்கொள்ள
பக்குவம் தேடி வைத்திருக்கிறது

வர்ணபகவான் வக்கிரத்தோடு
மூசுகிறான் பலமாக....
கோவர்த்தன மலைகூட
நெற்றிக்கண்ணைத் திறக்க மறுக்கிறது

இலைகள், கிளைகள்,
பூக்கள், பிஞ்சுகள்,
காய்கனிகள் எல்லாமே - போராடி
மரணத்துக்குள் உதிர்ந்து விழுகின்றன.

மரத்தின் வேர்கள்
வலிதாங்காமல் பூமிக்கடியில்
முனகி அழுகிறது....!

பறவைக் குஞ்சு குருமன்கள்
ஒன்றிரண்டு மடிய
மற்றையவை எல்லாம் - வேறு
புகலிடம் தேடிப் பறக்கின்றன...

நீண்டவருடங்களின் பின்
பாலைவனமாகிப்போன தேசத்தில்
பட்டமரமாய்
வாழ்வு மறுதலித்து
உதிரங்களை இழந்து
நிர்வாணமாகி நிற்கிறது
இந்தப் பெரு விருட்சம்...!

இப்போதெல்லாம் அவ்விடத்தில்
பயங்கரப் பேய்பிடித்தாற் போல
வெளவால்கள் மட்டும்
தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்க
கொடிய வல்லூறுகள்
வலயம் போட்டு சுற்றிச் சுற்றி அலறுகின்றன.
தனது ஆதிக்க வலயமென
விழியில் வெறிகொண்டு நிற்கின்றன

சொந்தக் கூடுகளுக்கு
திரும்ப முடியாமல்
வறண்டுபோன வாழ்க்கையில்
மீண்டும் மீண்டும் பிறாண்டி
புழுப்பிடிக்கும் முயற்சியில்
பறவைகள் தோற்றுக்கொண்டிருக்கின்றன....

ஐந்து தடவை
குரல் கொடுத்து முடிந்தாயிற்று
இப்போது புதிய இறகுகள் முளைக்க
புதிய பரிமாணத்தோடு
சொந்தக் கூடு திரும்ப - சிறகுகளை
விரித்துக்காட்டுகிறது பறவைகள்
இன்னும் தடையகலவில்லை......!

வானத்தில்
தடையின்றிப் பறக்கவும்
மண்ணில்
காலாற நடந்து கதைபேசவும்
கோவைப் பழம்
பறித்துண்டு விளையாடவும்
சொந்தக் கூடுகளில்
உறவாடி மகிழவும்
காலம் எப்போது வரும்...?

- மு.சுதேசிகன்.



# பத்திரிகைத்துறை ஒரு கூட்டுமுயற்சியே...

உலகிலேயே எல்லா மக்களாலும் குறைந்த விலையில் விரும்பக்கூடிய தகவல் தொடர்பு சாதனம் என்றால், அது பத்திரிகைதான். படித்தவர்கள்முதல் பாமர மக்கள்வரை எல்லோராலும் விளங்கக்கூடிய ஒரு சிறந்த பண்பு இதில் காணப்படுகின்றது. ஒரு பத்திரிகையின் வளர்சசி - ஒரு தனிமனிதனின் கைகளில் தங்கவில்லை. பலருடைய கூட்டுமுயற்சியே பத்திரிகையாகும்.

**செய்தி -**

புலமையும், உருவாக்கும் திறனும் கொண்ட பத்திரிகையாளன் பல்வேறுபட்ட சுவைகளைக் கொண்ட வாசகர்களைத் திருப்திப் படுத்தக் கூடியதான முறையில் கருத்துக் களை வெளிப்படுத்துவான்.

நாளாந்த செய்திகளைத் தெரிவிப்பதோடு மாத்திரமன்றி, குறிப்பாக - உள்ளூர், தேசிய, சர்வதேச செய்திகளே குறிப்பிடப்படுகிறது. சமூகத்துடன் நன்கு இணைந்து, அவர்களது பிரச்சினையும், அதற்கான தீர்வுகளையும் காண்பதற்கு முயற்சி செய்வர். பொதுமக்களின் சேவை பத்திரிகைத்துறையில் முக்கிய பங்காகக் கணிக்கப்படுகிறது.

வெற்றிகரமான செய்திப் பத்திரிகை - சமூகத்தின் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டதாகச் செயற்படும்.

**பத்திரிகைகள் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகள் -**

- உண்மைகளை உண்மையான வழிகளில் தெரிவித்தல்.
- பொதுமக்களின் நன்மைகளுக்காகக் கடமையாற்றுதல்.
- சரியான முறையில் சேவை செய்தல்.
- சுதந்திரமாகச் சேவையாற்றுதல்.
- இணைந்து செயற்படுதல்.

**தகவல் தொழில்நுட்பம் -**

இன்று பத்திரிகைகள் தகவல் சேகரிப்புத் துறையில் நவீன தொழில்நுட்பத்தைப் பாவிக் கின்றார்கள். தகவல்களைச் சேகரித்தல், பின் அவற்றை எழுத்துருவிற்குக் கொண்டு வருதல், பல்வேறு வடிவங்களில் வாசகர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. அச்சிடுவதில் கூட மின்னியல் முறை கையாளப்படுகின்றது. பத்திரிகையொன்றில், தகவல் தொழில்நுட்பப் பகுதி - கணினி தொடர்பான தொழில்நுட்பத்தைக் கையாள்கின்றது. பல்வேறுபட்ட சேவைகளை, குறிப்பாக - பிரசுரித்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்துதல், கணக்குகளைச் சரிபார்த்தல் ஆகியவற்றைக் கையாள்கின்றது.

வெற்றிகரமான தகவல் தொழில்நுட்பத்தில் புலமைமிக்கவர்கள் தகவல்களைக் கையாள்வதிலும், மக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதிலும் திறமைமிக்கவர்களாகக் காணப்புடுவர். பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், சிந்தனைகளைப் பகுப்பாய்வதிலும், நல்மக்கள் தொடர்பாற்றல் கொண்டவர்களாகவும் காணப் படுவர்.

**மனிதவளம்**

மனிதவளம் தொடர்பான அங்கத்தவர்கள்- திறமைமிக்கவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவிபுரிவார்கள். வேலையாட்களின் முழுத் திறமையும் வெளிக்கொண்டு வரக்கூடிய முறையில் பயிற்சி கொடுப்பார்கள், அவர்களின் கூடிய வேலைப்பளுவையும், தனிப்பட்டமுறையில் அவர்களின் பொறுப்புக்களையும் சம நிலையில் வைத்திருப்பதற்கு மனிதவளம் தொடர்பான அங்கத்தவர்கள் அதனைக் கவனித்துக் கொள்வார்கள்.

வெற்றிகரமான மனிதவளம் தொடர்பான அங்கத்தவர்கள் - வலுவான மனிதர்களிடையேயான உறவிலும், மனிதர்களுடன் தொடர்பு கொள்வதிலும் மிகுந்த ஆற்றல் உடையவர்களாகக் காணப்படுவார்கள்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர்களாகவும், ஒரு நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருப் பார்கள்.

பத்திரிகைத்துறையில் மனிதவளமுடையவர்கள், வேலைக்கு ஆட்களைத் தேர்தெடுப்பதிலும், தொழிலாளர் நலன்களை நிர்வகிப்பதிலும், நஷ்டஈடுகள் வழங்குவதிலும் தம்மை வெளிப்படுத்திக்கொள்வார்கள்.

**நிதி -**

உண்மையில் பத்திரிகையின் வளர்ச்சி, அதனுடைய விற்பனையிலும் தங்கியிருக்கிறது. நல்ல விற்பனை என்று சொல்லும் பொழுது, அது மக்களால் கொடுக்கப்படும் பத்திரிகைக்கான அங்கீகாரமாகும். இதுதான் ஒரு உத்வேகமாகவும் காணப்படுகிறது. நிதியானது, பத்திரிகையில் உட்கட்டமைப்பிலிருந்து, வெளிக்கட்டமைப்புவரை சிறப்பாகக் கையாளப்படுதல் வேண்டும். இதற்கு அங்கே காணப்படுகின்ற கணக்குப் பதிவுநர், கணக்காளர், காசாளர் ஆகியோர் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

**வியாபார நிலையங்களான -**

**விற்பனைப் பிரதிநிதிகள்,**

**சிறு விற்பனைப் பிரதிநிதி -**

பத்திரிகை விநியோகம் என்பது - அச்சிட்ட பத்திரிகைகளை வாசகர்களின் கைகளில் கிடைக்கச்செய்வதோடு முடிவதில்லை. சந்தைப்படுத்தல் முதலிடத்தைப் பெறுகின்றது. அச்சிடும் பத்திரிகைகளின் எண்ணிக்கையை உயர்த்தமுயல்வதுகூட, பத்திரிகை விநியோகத்தின் பகுதியாகின்றது. எவ்வளவு பத்திரிகைகள் பிரசுரிக்கவேண்டும், எங்கு அவற்றை விற்பனைக்கு வைக்கவேண்டும், வாசககர்களைக்கவர்வதற்கு என்ன மாற்றங்களைப் பத்திரிகையில் செய்யவேண்டும் என்பதை யெல்லாம் அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

வெற்றிகரமான எல்லாப் பத்திரிகை விநி

**ஆங்கில மூலம் - தமிழில்**
**சுதர்சன்**

யோகஸ்தர்களும், வாசகர்களின் எண்ணங்களை நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றங்களை மையமாகக்கொண்டு, தமது தொழிலை மாற்றத் தெரிந்தவர்கள், நல்ல தலைமைத்துவமும், தொடர்புத்துறையில் புலமையும் கொண்டவர்கள், பகுப்பாய்ந்து பார்க்கும் மனநிலையும் கொண்டவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

**விளம்பரம் -**

தொலைக்காட்சி, கணினி வலை, வானொலி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, செய்திப் பத்திரிகை விளம்பரத்திற்கு அரிய சாதனமாகவே கணிக்கப்படுகின்றது.

பத்திரிகை விளம்பரங்கள் - பல்வேறுபட்ட அமைப்புகள், வடிவங்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

சிறுவிளம்பரங்கள், படங்களுடன் கூடிய பொருட்களின் விளம்பரங்கள், ஏற்கனவே அச்சிடப்பட்ட செய்தியை உள்ளடக்கிய விளம்பரங்கள் சிலவாகும்.

விளம்பரங்களை உருவாக்குவதற்கு பொறுப்பாக உள்ளவர்கள் அவற்றை உருவாக்கி, விற்பனை செய்வதன்மூலமும், விளம்பர பிரசாரங்கள் செய்வதன்மூலமும், தேவைப்படுபவர்களுக்கு விளம்பரங்கள் சென்றடைவதற்கு உதவிபுரிபவர்கள், வெற்றிகரமாக விளம்பரங்களை விற்பனை செய்பவர்கள் - கற்பனை வளமும், ஆற்றலும், தன்னிச்சையாக ஒன்றை ஆரம்பிக்கும் திறனும் கொண்டவர்களாக இருத்தல்வேண்டும். எதற்கும் தயாரான மனப்போக்கும், தொடர்பு சாதனங்கள், கணினி தொடர்பான ஆழ்ந்த புலமையும் கொண்டவராகவும் இருத்தல்வேண்டும். பத்திரிகை - விளம்பரத்துறையின் பகுதிகளாகக் கணிக்கப்படுகின்றது.

**சந்தையை விருத்தி செய்தல் -**

பல பத்திரிகைகள் மத்தியில் - தனது பத்திரிகைக்குச் செல்வாக்கை விற்பனைச் சந்தையில் தேடிக்கொள்வதென்பது, பத்திரிகைக்குச் சவாலாக அமைந்துள்ளது.

இதனால், தமது வாசகர்கள் எதை விரும்புகின்றார்கள் என்பதை ஆய்வுசெய்தல், எப்படிப் பொருட்களுக்கு விளம்பரங்களைச் செய்துகொள்வதென்பது பத்திரிகை ஒன்றிற்குச் சவாலாகவே அமைந்துள்ளது.

வெற்றிகரமான சந்தை வாய்ப்பைத் தேடிக் கொண்டவர்கள் எல்லோரும், நல்ல பகுப்பாய்ந்து அறியும் சிந்தனை கொண்டவர்களாகவும், தொடர்புகளை வைத்துக் கொள்வதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் காணப்படுவர்.

**அச்சீடல் பணி -**

நல்ல எழுத்து வன்மை, வெளிப்படுத்தும் திறன், கணினி அறிவு கொண்டவர்களாகவும் காணபபடுவர். பத்திரிகை ஒன்றை அச்சிடுவது, பத்திரிகையில் சிறிய பகுதியான வேலை. அச்சிடுவதற்கு முன்பும், பின்பும் பல வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. பத்திரிகைத் தாள் நல்ல நிலையில் இருப்பதைப் பார்த்துக் கொள்ளவேண்டும். பத்திரிகைத் தாளின் நிறம் உரிய நேரத்தில் வெளியில் அனுப்புவதற்கேற்ற முறையில் அவை கட்டுகளாக்கப்படுதலும் முக்கியமாகும்.

வாகனங்கள் உரிய நேரத்தில் வந்து சேருதலும் அவசியமாகும். படங்கள் எடுப்பதற்காக கமராவை நல்ல முறையில் வைத்திருத்தல், பக்கங்கள் தயாரித்தல், எழுத்துக்களை உருவாக்கும் தட்டுக்களைத் தயார் செய்தல், வேலையாட்களுக்கு உகந்த வேலை செய்யும் சூழலை உருவாக்கி, நல்லமுறையில் வேலையைக் கொண்டுசெலலும் தன்மை.

**சூழலை உருவாக்குவதில் உற்பத்தியின் பங்கு -**

பத்திரிகையின் உற்பத்தித்துறையில் நாட்டம் மிக்கவர்கள், அது தொடர்பான தொழில்நுட்பத்தில் அதிக நாட்டம் மிக்கவர்களாக இருப்பார்கள். குழுவில் இணைந்து செயற்படும் திறமைமிக்கவர்களாகக் காணப்படுவார்கள். உரியநேரத்தில் வேலையை முடிக்கும் ஆற்றலும் கொண்டிருப்பார்கள்.

பத்திரிகை ஸ்தாபனத்தின் அடிமட்ட ஊழியர்கள்முதல் மேல்மட்ட ஊழியர்கள்வரையான எல்லோரும் ஒரு ஐக்கியத்துடன் சேவையாற்றும்பொழுது, பத்திரிகையின் தரம் உயரும். அதேவேளை, பத்திரிகை வாசிப்பவர்களுடைய இரசனைத்தன்மை அதிகரிக்கும். இதன்மூலம் பத்திரிகை மட்டுமல்ல, மக்களும் பத்திரிகைமூலம் தங்களுடைய வாசிப்புத்திறமையையும், அறிவையும் விருத்தி செய்வார்கள் என்பதில் மறுபேச்சு இல்லை. ✸

---

# புலம் பெயர்ந்த ஒருவனிடமிருந்து

**சர்வேஸ்வரா**

அன்புத் தம்பிக்கு,

**ஊ**ரில் யாரோ சொன்னார்களாம் சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றில்லையென. எவரின் கதை இது. புலம்பெயர்ந்து மேல் நாட்டில் வாழ்ந்தாலும், எம் ஈழத்து சிந்தனை எமக்கில் லையா? எப்போது தாய் மண்ணை முத்தமிடுவோம் எனத் துடிக்கின்றோம். அதற்கு வழியின்றித் தானே தினம் தவிக்கின்றோம்.

ஆர்ப்பரிக்கும் கடலலையின் ஓசையும், காலம் தவறாது ஒலிக்கும் ஊர்க்கோயில் மணியோசையும் கேட்டு எத்தனை நாளாச்சுது. ஓலைக் குடிசையின் முன்னிருந்து, நிலா வெளிச்சத்தில் நீண்டநேரம் கதைபேசி மகிழ்ந்தது நினைவை விட்டு இன்னும் போகவில்லையே!

பொல்லாத போரின்போது, எல்லாவற்றையும் இழந்து விட்டோமே. இன்னும் இழப்பதற்கு இருப்பது எம்மோடு உயிர் மட்டுந்தானே. உறங்கும் பகைவர்களுக்கு அதையும் கொடுத்து விட்டால், என்னாவது எதிர்காலம். ஊனமுற்ற ஒரு சமுதாயம் உருவாகிவிடுமோ!

பேருக்காய் நாமும் ஒரு தரம் ஊருக்கு வந்துபோக விரும்பவில்லை. யாருக்குப் பயந்து ஓடிப்போனோமோ, அவர்கள் இன்னும் ஊருக்குள் தானாமே!

சாவகச்சேரி சல்லடையாகிப் போனதாய் சாந்தி வந்து சொன்னாள். பல்குழல், பாடசாலை, கோயில், குளம் எங்கும் பாடாய்ப்படுத்தி விட்ட தாமே. ஆனாலும், எம் தமிழர் மீண்டும் எழுப்பத் தொடங்கி விட்டாராமே, புதியதொரு நகரை.

அம்மாவின் கைகளால் அள்ளித் தந்த அன்னத்தைக் கவ்வித் தின்றபொழுதுகளை, கட்டையிலே போகும்வரை மறக்கமுடியுமா? பனந்தோப்பு வெளி[illegible]ளும், பச்சைப்பசேலென்ற வயல்வெளிகளும், அவற்றிடையே தவழ்ந்துவரும் தென்றல் காற்றும் எம் மேனி தீண்டி எத்தனை நாளாச்சுது!

ஆலடிப் பிள்ளையார் கோயிலும், அரச மரத்தடி நண்பர்கள் கூட்டமும் இதயத்தைவிட்டு இன்னுமே அகலவில்லை. கிளித்தட்டு விளையாடிய திடலும், கிட்டிப்புல் அடித்த மாந்தோப்பு வெளியும் மனதைவிட்டு அகன்றிடுமோ!

ஊருக்கு வருவதற்கு உண்மையில் விருப்பமில்லைத்தான். உயர்பாதுகாப்பு வலயங்கள், தடைமுகாம்கள் என, சமாதான காலத்திலும் சாத்தான்களின் ஆட்சியாமே!

'நெல் விளைந்த பூமியெல் லாம், செல்விழுந்து பள்ளமாகிப் போனதாமே.' மிதிவெடிகள், கண்ணிவெடிகள் எனக் கண்டகண்ட இடமெல்லாம் புதைத்துள்ளார்களாமே. கேட்கவே மனது தாங்கவே மாட்டேன் என்கிறது.

இதுதானே எதிரிக்குப் பிடிக்காத விடயம். வெட்ட வெட்ட நாம் தழைக்க, அவன் வெட்டிக்கொண்டுதானே இருப்பான். வடக்கையும், கிழக்கையும் தந்துவிட்டால், தமிழன் வானத்தில் பறக்கும் வித்தை கண்டுவிடுவான் என, அவர்களுக்கு உள்ளூரப் பயமாம். உண்மைதானே அது.

தம்பி, உருக்குலைந்து போய்விட்டதாமே எம் ஊர் அழகு. 'ஹலோ' என, 'கிலோ' விலே வரும் காசைக் கண்டபடி செலவிழிக்கின்றா ளாம் கனகு. கண்ணன் வந்து சொன்னான். குட்டிப் பிள்ளை யார் அன்று மழைக்கு ஒரு தட்டி கூட இல்லாமல் இருந்தது. இன்று கோயில் கட்டி குடமுழுக்குக் கண்டுவிட்ட தாமே! உண்மைதானா?

திருவிழாக்கள் அனைத் திலும் இன்னிசை இரவுகளாமே! பட்டினசபை அன்று கட்டித் தந்த வாசகசாலை - இன்று பற்றை மண்டியுள்ளதாமே! எங்கிருந்து வந்தோம் நாம் என்னும் மந்திரத்தை மறந்து விட்டோமா?

யாழ்ப்பாணம் இன்று கல்வியிலே பின்னே போய் விட்டதாமே, நம்பமுடியவில்லையே. கொட்டும் குண்டு மழைக்கு மத்தியிலும், குப்பி விளக்கொளியிலும், கூவிவரும் கிபிர் ஓசைக்கு மத்தியிலும் படைத்தானே. அன்று எம் தம்பி பல சாதனைகள். இன்று என்னவாகிப்போச்சு எல்லா வற்றிக்கும்.

வீட்டுக்கு வீடு இன்று விஞ்ஞானத்தின் விந்தைகள் வியாபித்து விட்டதாமே! படுக்கைவிட்டு எழுந்தது முதல், இனிப் பாடையில் போகும்வரை கடைசித் தம்பி கான்போனுடன் தானே திரிகிறானாம்! குட்டிப் பையனாக நாம் ஊர் பிரியும்போது இருந்தவன், இன்று கட்டுக்கடங்காத காளையாகக் கட்டைக் களிசானோடு அலைகிறானாமே!

நல்லூர்த் திருவிழாவிலே நாறிப்போய்க் கிடந்ததாமே எம் தமிழர் பண்பாடு. நம்பாமல் தான் கேட்கிறேன். நம் தமிழர் மண்ணிலா நாலு இஞ்சி உடுப்போடு நங்கைகள் நடமாடுகிறார்கள்?

இங்கிருந்து வந்தவர்கள், எங்கள் ஊருக்குள்ளும் புகுத்திவிட்டார்களாமே தம்முடைய உடை, கலாசாரத்தை எம் ஊர் இனி உருப்பட்ட மாதிரித்தான். குதி உயர்ந்த செருப்போடும், கூலிங் கிளாசோடும், குட்டைப் பாவாடையில், ஒரு வெட்டோடும் சுற்றித் திரிகிறாளாமே அயல்வீட்டு மாலினி. அவளைப் பார்த்து, இனி எம் தங்கை அபர்ணா அலைந்தாலும் ஆச்சிரியப் படுவதற்கில்லை. உங்குள்ள சமூகம் என்ன ஒன்றும் தெரியாததா? வந்ததையும் காவிக்கொள்ள, தீயதை வடிகட்டத் தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்களாமே பன்னாடைகள்போல்.

தம்பி, இங்கும் ஒரே இயந்திர வாழ்க்கைதான். சத்தம் போட்டுக் கதைத்தால், 'சாள்ஸ்' பொலிஸுக்குப் போன் பண்ணிவிடுவான். அதிகாலை நான் வீட்டுக்கு வர, அண்ணி புறப்பட்டுவிடுவாள் வேலைக்கு. அப்பாவையும், அம்மாவையும் ஒன்றாகக் காணமுடியாமல், பிள்ளைகள் பரிதாபம். என்ன செய்வது. ஓடியோடி உழைத்தால் தானே, ஊருக்கு அனுப்பலாம், கண்டபடி செலவழிக்க.

கல்லறையில் துயிலும் காவிய நாயகர்கள் அமைத்திட்ட சமாதானத்தில் சத்தியமாய் எமக்கும் பற்றுண்டு. மேலைத் தேசத்தவன் திருப்பி அனுப்பிவிடுவான் என்பதற் காய், நம் மண்ணில் சமாதானம் வராமல் இருப்பதா? பாரிஸ், ரோக்கியோ, தாய்லாந்து என வீசும் சமாதான காற்று, எம்மையும் அள்ளி வரும் நம் மண்ணிற்கு விரைவில், அதுவரையும் அச்சை மாற்றாமல் எம் மண்ணைக் காத்திருப்பாயோ அன்புத் தம்பி.

*அன்பு அண்ணன்*
*சுதந்திரன்.*

அகவை ஒன்றை நிறைவு செய்யும் தமிழர் தாயக முன்னோடி நாளிதழுக்கு எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**பாடசாலை உபகரணங்கள், அலுவலக காதிதாதிகள், திருமண அழைப்பிதழ்கள், அச்சுப்பதித்தலுக்கான மூலப்பொருட்களான இரசாயனப் பொருட்கள், மை வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்**

நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

# PAPER HOUSE



300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 5343

இணை நிறுவனம்

## SINGAMM INDUSTRIES

290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2783

(சி.1612)

# Power Court Health Care Centre

**N.M.M.V.Road, Nelliady.**



- டொக்டர்களின் ஆலோசனைக்கு அமைவாக உடற்பயிற்சிகளை மேற்கொள்ளவா!
- உடல் ஆரோக்கியத்தை எப்போதும் உச்சநிலையில் வைத்துக்கொள்ளவா!
- கட்டழகை மெருகூட்டிக் கொள்ளவா!
- உடல் வலிமையை அதிகரித்துக் கொள்ளவா!

**கவலையை விடுங்கள் பயிற்றப்பட்ட உடற் பயிற்சியாளர்களின் மேற்பார்வையில் அதி நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடன் உங்கள் பவர் கோட் தேகாரோக்கிய கவனிப்பு மையம்.**

(சி.1593)

**தொடர்புகளுக்கு:**
பவர் கோட் தேகாரோக்கிய கவனிப்பு மையம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. (இலங்கை வங்கிக்கு அருகாமை) T.P.0777 - 570288.

**நமது ஈழநாடு நாளிதழ் நீண்ட காலங்கள் ஒளி வீச**

**எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.**

வன்னி மண்ணில் புதிய அலை.

# வசீகரன் கூரைத் தகடுகள் தயாரிப்புத் தொழிலகம்

பரந்தன் சாலை,
முரசுமோட்டை.

கூரைத் தகடுகள் பெற எங்கும் அலையத் தேவையில்லை.
உங்களுக்காக உங்கள் அருகில் இதோ உதயம் - வசீகரன் கூரைத் தகடுகள்
கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் இடிந்துபோன

## உங்கள்

- வாழ்விடங்கள்
- பாடசாலைகள்
- அலுவலகங்கள்
- வர்த்தக நிலையங்கள்
- வணக்கத் தலங்கள்

எவையானாலும் மீளப்புனரமைத்துக் கொள்ள
உங்கள் அருகில் உற்றதுணை.

கூரைத் தகடுகள், கற்கள் என்பவற்றைப் பெற ஒரே இடம்

## வசீகரன் கூரைத் தகடுகள் தயாரிப்புத் தொழிலகம்

- தரமானவை
- உறுதியானவை
- பாதுகாப்பானவை

விலையோ குறைவு!
சுவாத்தியத்திற்கு ஏற்றவை!!
எடுத்துச் செல்வதும் சுலபம்!!!

இன்று பரபரப்பாக வன்னி மண்ணில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
நீங்கள் வசீகரன் கூரைத் தகடுகள் என்று கேட்டு வாங்குங்கள்.

(சி.1590)

EXCELLENT COMPUTER EDUCATION @ AFFORDABLE PRICE

# யாழ் நகரில்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

GV

## GLOBAL VILLAGE
## COMPUTER EDUCATION

*(A unit of Soverign Infotech Pvt. Ltd)*

குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரமிக்க சான்றிதழ் !!!

GV

**தரமான கணனி கல்வியுடன் சர்வதேச தரமுள்ள சான்றிதழ்**

**சிறப்பு சலுகைகள்**

- சர்வதேச தரமிக்க சான்றிதழ்
- தரமிக்க இலவச கைநூல்கள்
- இலகு கட்டணமுறை
- வசதிக்கேற்ற நேர ஒழுங்கு
- பயனுள்ள முறையில் செயன்முறைகள்
- சிறந்த கணனி கூடம் மற்றும் நூலகம்

**பெற்றோர்களே!**
உங்கள் பிள்ளைகள் சவால் மிக்க கணிணியுலகில் வெற்றி காண GV உடன் இணையுங்கள்.

தமிழ்நாடு எங்கும் 142 கிளைகளை கொண்டு வெற்றிகரமாக இயங்கும் ஒரே கல்வியகம்

**COURSES**

HARDWARE Engineering
JAVA
HTML & DHTML

OAC - OFFICE AUTOMATION COURSE
DOA - DIPLOMA IN OFFICE AUTOMATION
DTP - DESKTOP PUBLISHING

தொடர்புகட்கு : IN College of Computer Studies
**GLOBAL VILLAGE COMPUTER EDUCATION**
**302/1,** நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, (தபால் நிலையத்துக்கு அருகில்)
யாழ்ப்பாணம்

| CORPORATE HEAD OFFICE BRANCH | BRANCH | FRANCHISEE |
|---|---|---|
| 19/2, FARM ROAD, COLOMBO-15 | 116, SEA STREET, NEGOMBO 031-35955, 38645 | 365, TRINCO RD, BATTICALOA |

காலத்தின் கலங்கரை விளக்காக விளங்கும்
ஆண்டு இதழ் மலர வாழ்த்துகின்றோம்.

# Smart Prints

**Off Set Printing, Screen Printing,**
**Computer Graphics Designing,**
**Color Separation & Scanning.**

திருமண அழைப்பிதழ், வாழ்த்து மடல்கள், சஞ்சிகை, புத்தகங்கள்.
அறிக்கைகள் மற்றும் அனைத்து வகையான வேலைகளுக்கும்

## Smart Prints (Pvt.) Limited.
**சிமாட் பிறின்ட்ஸ் (பிரைவெட்) லிமிட்ட**

All kinds of Print Solution Centre

717, K.K.S Road,
Jaffna.

717, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அகவை இரண்டில் காலடி பதிக்கும்
தமிழர் தாயக முன்னோடி நாளிதழே
காண்க பலநூறு அகவைகள். தமிழர் திருநாட்டில்
உன்னை வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கிறோம்




யாழ் நகரிலும்......







சுன்னாகத்திலும்......

## என்றுமில்லாத விலைக்கழிவில்

**SAMSUNG, NOKIA**

வகை கையடக்கத் தொலைபேசிகள்

உங்கள் கைளில் தவழ்ந்திட இதோ எம்மிடம்

- **SIM Card, Kit Card**
- தொலைபேசியின் ஏனைய பாகங்கள் (பற்றறி, பற்றறி சார்ஜ்கள், கவர்கள்)
- மேசைத் தொலைபேசிகள்

## இவற்றுடன்

- அன்ரனா பொருத்துதல், தொலைபேசி திருத்துதல் போன்ற சேவைகளும்

இவையாவற்றையும் உங்களுக்குத் தர நாங்கள் தயார். இதனைப் பெற்றுக்கொள்ள நீங்கள் தயாரா?

அவ்வாறாயின் நீங்கள் நாடுங்கள்.

**குமரன் கூல் பார்**
பெருமாள் கோயில் முன்வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**The Phone Shop**
கே.கே.எஸ்.வீதி,
(சுன்னாகம் நவீன சந்தை).





## அகவை ஒன்றைக்காணும் "நமது ஈழநாட்டுக்கு" எமது வாழ்த்துக்கள்

நிலா பதிப்பகத்தின் புதிய சேவைகளாக பின்வரும் சேவைகள் அறிமுகமாகின்றன.

- HOT EMBOSSING MACHINE சேவை
- FOLDING AND BINDING சேவை
- DIGITAL IMAGING MACHINE வர்ணம் பிரித்தல் சேவை

தமிழீழப் பகுதியில் முதல் முதலாய் இச்சேவைகளை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

- நாட்குறிப்பு அட்டைகளில், வாழ்த்து மடல்களில், அழைப்பிதழ்களில் **Hot Embossing** செய்து கொள்ள
- போஸ்ரல், கலண்டர்கள், பத்திரிகைகள், புத்தக அட்டைகள், வாழ்த்து மடல்கள் ஆகியவற்றிற்கான புகைப்படங்களையும் அச்சமைப்புகளையும் வர்னம் பிரித்தல் **(Colour Separation)** சேவை
- புத்தகங்களை நவீன இயந்திரங்கள் மூலம் கட்டுதல், மடித்தல் சேவைகள்





ஒக்ரோபர் 15 முதல் ஆரம்பமாகின்றன
நீங்களும் எங்கள்
வாடிக்கையாளர்களாகுங்கள்.

# நிலா பதிப்பகம்




புகையிரத நிலைய வீதி
(வைத்தியசாலை பின்பாக)
கிளிநொச்சி.



EXPOAIR
your friend in the skies....
எக்ஸ்போ எயார்



"நமது ஈழநாடு"
என்றும் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

EXPOAIR
your friend in the skies...

வான்வெளியில் உங்கள் நண்பன்
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமானசேவை...
Head Office: No 464, Galle Road, Colombo - 03.
T.P: 074 512666 (3Lines) Fax: 074 514700
Wellawatte Office: No 296 A/1, Galle Road, Colombo - 06.
T.P: 01 2360290 / 01 2360291.
Jaffna Office : No. 1E, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3891 / 021 222 6297 / 0712 348888 / 0712 349999
Fax: 021 2226297
E.mail : Jaffna @ expoavi.com.

(ச.1493)

ஆசியாவில் நம்பர் 1 சீமெந்து

| | | |
|---|---|---|
| SLS - | 107 | அங்கீகாரம் பெற்றது |
| ISO - | 8002 | தரம் பெற்றது |
| BSS - | 12-1991 | தரத்திற்கு அமைவானது |

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சீமெந்து ஏக
இறக்குமதியாளர்
ஈஸ்வரபவான் & கொம்பனி

ராம்கோ சீமெந்து

T.P. 021 - 222 - 2350
(ச.1518)

RAMCO CEMENT

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நமது ஈழநாட்டிற்கு எமது நல் வாழ்த்துக்கள்.

காந்தா
ரண்
கினும்



மகளிருக்கு மட்டுமே

அறிமுகம்:
இலங்கைப் பெண்கள் இந்த நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். அவ்வாறே முறையான சேமிப்பில் அவர்கள் காட்டுகின்ற ஆர்வம், எமது தேசிய சேமிப்பில் அதிக வளர்ச்சி வீதத்தை கொண்டுள்ளது. தற்போதைய அபிவிருத்திச் செயற்பாடுகளில் அவர்களது அர்ப்பணிப்பை கௌரவிக்கும் முகமாக. சிறந்தவொரு கடன் திட்டத்தை உள்ளடக்கியதாக இந்த காந்தா ரண் கினும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.



அவசரப்
பணத்தேவையின்
போது

ரண் சுரெக்கும்
இலங்கை வங்கியின் தங்க நகை
அடைவுச் சேவை
ஒரு பவுனுக்கு குறைந்த
வட்டியில் கூடிய தொகை

BANK OF CEYLON இலங்கை வங்கி

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்